KALKI 19.10.2003 ரூ.6.00

# கல்கி

இரண்டு புத்தகங்கள்




## "லேட்டஸ்டா வருவேன்!"

-விஜய்


POTHYS
வாழ்வின் இனிமையான
நேரங்களில் இணைந்திருக்கும்
சுபமங்கள பட்டுகள்
போத்தீஸ்
அழகிய ஜவுளிகளின் ஆலயம்
உஸ்மான் ரோடு, தி.நகர்,
சென்னை-17. ☎ 2431 0901

# உள்ளே…

10-12

**புள்ளி ராஜாவுக்கு புத்தி வருமா?**

நீ…நீண்ட நாளைக்குப் பிறகு 'செம்பியன்' எழுதும் புத்தம் புதிய பகுதி ஆரம்பம்!

52

**"கலைஞர் மேடையில் தரம் தாழ்ந்த பேச்சு"**

ஜெயமோகன் விளாசல்

58-59

**இந்திரகுமாரிக்கு 2வது இன்னிங்ஸ்?**

ஷாப்பிங் சிறப்பிதழுக்காக அலைந்து திரிந்தவர்கள்:

பாஸு, அனு, ஸ்ரீநிவாஸன், ஆர். லலிதா, ஜி.எஸ்.எஸ், மௌலி

படங்கள்: ஸ்ரீஹரி, யோகா. மீடியா ராமு



# கல்கி

19.10.2003

# ஆஹா! ரூ.50,000 பரிசு!

**திருச்சி வாசகர்களுக்காக மட்டுமே**
**கல்கி**
**வழங்கும் கலக்கல் குவிஸ் போட்டி**

ரூ.50,000 மெகா பரிசைப் பெற நீங்கள் செய்ய வேண்டியது ரொம்ப ரொம்ப 'சிம்பிள்'!

கீழேயுள்ள கூப்பனில் இடம் பெற்றுள்ள கேள்விகளுக்குப் பதில் எழுதி வைத்துக் கொள்ளுங்கள். அடுத்து வரும் 26 அக்டோபர் மற்றும் 2, 9 நவம்பர் இதழ்களிலும் இதே போன்று குவிஸ் கூப்பன்கள் இடம் பெறும். ஆறாவது வார இறுதியில் ஆறு கூப்பன்களையும் நிரப்பி, உங்கள்




ஆஹா! ரூ.50,000 பரிசு!

## திருச்சி குவிஸ் போட்டி கூப்பன் - 3

1. திருச்சி மாவட்டத்தில் காவிரிக்குக் குறுக்கே கரிகால் சோழன் கட்டிய அணை ..........................................

2. மலைக்கோட்டையின் கீழ்ப் பகுதியில் 'ராபர்ட் ......................................' வாழ்ந்த வீடு இப்போது தூய ஜோசப் கல்லூரியின் ஒரு பகுதியாக விளங்குகிறது.

3. திருச்சிக்கும் மணப்பாறைக்கும் நடுவே, சமீபத்தில் மறைந்த பிரபல எழுத்தாளர் பெயரில் உள்ள ஊர் ..........................................

4. '.................................. வைஸ்யா வங்கி' ஒரு பிரபல வங்கி. (ஊர்ப் பெயரை நிரப்பவும்)

5. மலைக்கோட்டையில் அடிவாரத்தில் உள்ள பிள்ளையாரின் பெயர் ..................................



பெயர், விலாசத்துடன் எங்களுக்கு அனுப்ப வேண்டும்.

- அனைத்துக் கேள்விகளுக்கும் சரியான பதில்கள் எழுதிய திருச்சி மாவட்ட கல்கி வாசகர் ஒரு வருக்கு ரூ.50,000 பரிசு வழங்கப்படும்.
- ஒருவருக்கு மேற்பட்ட வாசகர்கள் சரியான பதிலை எழுதியிருந்தால், இருக்கவே இருக் கிறது குலுக்கல் முறை.
- ஆறுதல் பரிசுகளாக, நூற்றாண்டு கண்ட முதல் தமிழ்ப் புத்தக நிறுவனமான அல்லயன்ஸ் கம்பெனி, சென்னை, வழங்கும் ரூ.85/- மதிப்புள்ள 'சோ' எழுதிய 'எங்கே பிராமணன்?' புத்தகம் - 120 நபர்களுக்கு.
- உறையின் மீது 'ஆஹா! ரூ. 50,000 (திருச்சி)' என்று குறிப்பிட வேண்டும்.
- போட்டி தொடர்பாக விசாரணைகள் அனு மதிக்கப்படமாட்டாது.
- இந்தப் போட்டி திருச்சி மாவட்ட கல்கி வாசகர்களுக்கு மட்டுமே.
- ஆசிரியரின் தீர்ப்பே இறுதியானது.


**கல்கி**

பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக பரதன் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடுபவர் :
கி.ராஜேந்திரன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 97

ஆசிரியர் :
சீதா ரவி

ஆசிரியர் குழு :
செ. ஏக்நாத் ராஜ்
அனுராதா சேகர்
ஆர்.சி. ஜெயந்தன்

வடிவமைப்பு :
எஸ். ஸ்டீஃபன்
பி.ஆர். ராஜன்

தொலைபேசி :
22345622, 23, 24
தொலைநகல் :
044 - 22345621

மின்னஞ்சல் :
ஆசிரியர் குழு :
kalki@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com
கல்கி இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.330/-
ஆறு மாதம் : ரூ.165/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 62 யுஎஸ். டாலர்
இலங்கை : ரூ.2000/-

**Bharathan Publications Private Limited,**
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 097.

ஒவ்வொரு இதழும் உங்கள் மேன்மைக்கு




‘லேட்டஸ்ட்டா வருவேன்’னு விஜய் சொன்னதாக் கேள்விப்பட்டு, ‘அப்படிச் சொன்னவர் நம்ம சூப்பர் ஸ்டார் தானே? இவரு ஏன் அதே டயலாக்கைச் சொல்றாரு? விசாரிக்கட வேண்டியதுதான்’ என்று ‘திருமலை’ படத்தில் விஜய்யைச் சந்திக்கப் போனால், அவரது பர்சனல் காஸ்ட்யூமர் ராஜேந்திரன்

# "லேட்டஸ்ட்டா வருவேன்!"

கண்ணில் பட்டார்.

'சைடில் ஏதாவது மேட்டர் தேறுமே' என்று ஹீரோவின் காஸ்ட்யூம்களை எங்கே ஷாப்பிங் செய்தீர்கள் என்று கேட்டோம்.

''காஸ்ட்யூமர்தானேன்னு அலட்சியமா நினைக்காமல் படத்தோட முழுக் கதையையும் சொன்னீங்கன்னா, உடைகளை வாங்கவும், தயார் பண்ணவும் உதவியா இருக்கும்னு சொன்னேன். 'நீங்க கேட்கலேன்னாலும், நான் முழுக் கதையையும் சொல்லித்தான் திருவேன்னு ஒரு ஹீரோவுக்குச் சொல்ற அக்கறையோடு டைரக்டர் ரமணா சொன்னார். கதைப்படி ரொம்ப முரட்டுத்தனமும், முன்கோபமும் கொண்ட மெக்கானிக். பேசிக்கிட்டு இருக்கும்போதே பட்டுன்னு கைநீட்டுற குணமுள்ள இளைஞன். இதுக்கு விஜய்யின் தோற்றம் ரொம்ப ரஃப்பாகத் தெரியணும்னு முடிவு பண்ணினோம். வழக்கமான ப்ளூ, பிளாக் கலர்லே வரும் ஜீன்ஸ் இல்லாமல், ஃபேட் அவுட் ஜீன்ஸ் சரின்னு பட்டது. அப்புறம் எப்போதும் பட்டன் போடாமல் சட்டையைத் திறந்து வைச்சிருக்கணும். அதுக்குக் கலர் கலரான காட்டன் ஷர்ட்ஸ். உள்ளே கட் பனியன். அப்புறம் காலுக்கு ஸ்போர்ட்ஸ் ஷூ.

சென்னை பாண்டிபஜார்லேயே பதினைஞ்சு கலர்லே ஃபேட் அவுட் ஜீன்ஸ் கிடைச்சது. எல்வீஸ், பைகர், லீ, பிளையிங் மெஷின்னு எண்ணூறு ரூபாயிலேர்ந்து இரண்டாயிரத்து ஐந்நூறு வரைக்கும் விலை. ஜீன்ஸ் மட்டுமே ஒரு லட்சத்துக்கு வாங்கினேன். பல ஜீன்ஸ்களை நானே ஃபேட் அவுட் பண்ணினேன். ஆழ்வார்பேட்டையிலேயும் வாங்கினேன். கட் பனியன், காட்டன் ஷர்ட்ஸ் இரண்டையும் புரசைவாக்கத்துலே வாங்கினேன்.

எனக்கு ரொம்ப சவாலா இருந்தது பாடல் காட்சிக்கான உடைகள்தான். ஒரு பாட்டுக்கு லுங்கி, கட்டம் போட்ட சட்டை மட்டும்தான். இதுக்கு மொத்தமே இருநூறு ரூபாதான் செலவாச்சு. ஒரு பாட்டுக்கு முழுக்க கறுப்பு ஜீன்ஸ், கறுப்பு சட்டை. இதுக்கும் செலவு குறைவுதான். ஆனால் இரண்டு பாடல்களுக்கு மொத்தம் பத்து டிரஸ் சேன்ஞ். இதுக்கு இரண்டு லட்சம் செலவாச்சு. எத்தனை செலவு பண்ணினாலும், இப்போவெல்லாம் காஸ்ட்யூம் பர்சேஸ் பண்ண மும்பை போறதில்லே... சென்னையிலேயே எல்லாம் கிடைக்குது'' என்றார்.

ஒரு வழியாக விஜய் வந்தார். ''என்னங்க விஜய், ஒரு லட்சத்துக்கு ஜீன்ஸாமே?'' என்றோம்.

''எனக்கு இளம் ரசிகைகள் அதிகம். லேட்டஸ்டா வந்தாதானே பாஸ் நல்லாயிருக்கும்'' என்றார் விஜய்.

இதுதான் லேட்டஸ்டா? ஏதோ அரசியல் மேட்டர்னு இல்ல நினைச்சோம்!

- ஸ்ரீ



# வட்டமேஜை

## சாயாவுடன் ஹாயா!

✉ 'திருச்சி சிறப்பிதழை, முன்னாள் திருச்சி மாவட்டக்காரனான நான் மிகவும் ரசித்துப் படித்தேன். நான் படித்த காலத்தில் சுரேஷ் குமார் போன்ற வழிகாட்டிகள் இல்லையே என்ற ஏக்கப் பெருமூச்சு வந்தது.

சென்னை - 61, ஆர். நாகராஜன்.




✉ சாயா சிங் திருச்சியைப் புகழ்ந்ததைப் படித்ததும், 'சொர்க்கமே என்றாலும் அது நம்மூருப் போல வருமா' என்று அவருடன் சேர்ந்து ஹாயாகப் பாடத் தோன்றியது.

ஈரோடு, சாந்தி கல்யாண்

✉ 'பாய்ஸ்' படம் பற்றி பிரசாத், ரெங்க பிரசாத் ஆகியோர் சொன்னவை என்ன என்று தெரியாவிட்டால், 'எங்கள் தலைசுக்கு நூறாக' வெடித்து விடும்! அநியாயமாக அந்தப் பழிக்கு ஆளாகாமல் 'காதில் விழுந்தவை' பாணியிலாவது வெளியிடுங்க, ப்ளீஸ்...

சென்னை - 26, ச. இராசன்.

✉ 'வரம் தந்த தேவதை', 'ஏக்கம்' மற்றும் 'சின்னவனும் பெரியவனும்' என மூன்று சிறுகதைகளும் சிறப்பாக இருந்தன. அதிலும் கயிலை மு. வேடியப்பன் எழுதிய 'சின்னவனும் பெரியவனும்', பழைய சிறுகதையுலக பிரும்மாக்களின் தரத்தை எட்டியுள்ளது.

தஞ்சாவூர், ஜி. ராமதாஸ்

✉ 'ஏக்கம்' சிறுகதையில் வறுமை போர்த்திய இளமைக்கு ஊக்கம் தந்து எழுதிய ஆனந்த்ராகவின் நடையில், அற்புதக் கலை ஆக்கம் ஒளிர்ந்தது.

நாகமலை,
ப.கா. மணிமொழியன்

✉ கயிலை மு. வேடியப்பனின் 'சின்னவனும் பெரியவனும்' சிறுகதையில் அன்புக்கு அடிமையான பெரியவனின் பண்புள்ளம் பரவசப்படுத்தியது!

சென்னை - 116, எஸ். மைக்கேல்

✉ ரஜினியின் 'கல்யாணப் பரிசு' என்பதைவிட 'அன்புக்கு நான் அடிமை' பரிசுன்னு சொல்லியிருந்தா, இன்னும் சிறப்பாக இருந்திருக்கும்.

சென்னை - 39, சுகந்தி நாராயணன்

✉ சுருங்கச் சொல்லி நிறைய விளங்க வைத்த தாமரையின் கார்ட்டூன்கள் மூன்றும் நச். முஷாரப் கார்ட்டூன் ரியலி சூப்பர்!

சிதம்பரம் - 2, ஸ்ரீவித்யா காளிதாஸ்

✉ நீரில் மிதக்கும் நிலா', 'மடி மீது தலை வைத்து...' தொடர்களை கல்கியில் தந்த சுபாவின் 'நான் வேண்டுமா?'வை வேண்டும்... வேண்டும் எனக் கூறி வரவேற்கிறோம்!'

பொன்மலை, ஆர். பிரகாஷ்.

# புள்ளிராஜாவுக்கு புத்தி வருமா?



ரொம்ப வருஷங்களுக்கு முன்னால் நான் தியேட்டருக்குப் போய் சினிமா பார்த்துக் கொண்டிருந்த அந்தக் காலத்தில் "Baby's Day out" என்று ஆங்கில சினிமா பார்த்தேன். ஒரு பணக்காரரின் ஒரே வாரிசை, பங்களாவிலிருந்து மூன்று கேடிகள் கடத்திக் கொண்டு போய் விடுகிறார்கள். வேறெதற்கு? பணம் கறக்கத்தான். போலீஸ் பல இடங்களில் தேடி வருகையில், 'சாமானியர் வாழும் ஒரு பகுதிக்கு (நம்ம ஊர்ல சேரின்னு சொல்லுவாங்க) குழந்தையின் தாயை, செல்வச் சீமாட்டியை - அழைத்துப் போகிறார்கள். அங்கு ஒரு ஃபிளாட்டில் ஐந்தாறு குழந்தைகளுக்கு இடையில் ஒரு பாப்பாவைக் காண்பிக்கிறார்கள். ஆர்வத்துடன் வரும் சீமாட்டி ஏமாற்றத்துடன் தலையசைக்கிறாள். பிறகு பரம ஏழையான அந்த 'இல்லத்தரசி'யைப் பார்த்து, "அம்மா, உன் குழந்தைகள் எல்லாமே ரொம்ப அழகு" என்று அன்புடன் சொல்கிறாள். அந்த ஏழையும் தன்மானத்தை விட்டுக் கொடுக்காமல், ''ஆமாம், என் குழந்தைகள் பற்றி எனக்கு ரொம்பப் பெருமை" என்று பதில் சொல்கிறாள். பணத்துடன் பண்பாடு இழைய, ஏழைமையுடன் சுய மரியாதை கலக்க, அந்தக் காட்சியில் உணர்ச்சி பொங்கும். வாழ்க்கைத் தரமும் கல்வித் தரமும் உயர்ந்தால், குடும்பக் கட்டுப்பாடு தன்னால் வரும். தரித்திரமும் அறியாமையும் உள்ள இடத்தில் எத்தகைய பிரசாரமும் எடுபடாது.

★★★

குடும்பக் கட்டுப்பாடு பிரசாரம் தீவிரமாகத் தொடங்கிய தருணத்தில் ராஜாஜி சொன்னார் : "மனிதன் தன் செயல்களின் பலனை அனுபவித்தே தீர வேண்டும். இன்பம் வேண்டும், ஆனால் அதன் பின் விளைவான பொறுப்புக்கள் கூடாது என்ற திட்டம், துன்மார்க்கத்தில் மனிதனைச் செலுத்தி துயரங்களை அதிகரிக்கும்." மக்கள் தொகை கட்டுப்பாடு அத்தியாவசியமானது என்ற நோக்கில் ராஜாஜியின் கருத்தை யாருமே அன்று ஏற்கவில்லை.

★★★

புதிய பகுதி ஆரம்பம்




எய்ட்ஸ் எங்கும் பரவத் தொடங்கிய தருணத்தில் அமெரிக்காவில் பாதிப்பு ரொம்ப இருக்கும் என்று கருதப்பட்டது. உடனே அரசு விழித்துக் கொண்டு ஒரு கலாசாரப் புரட்சிக்கு வித்திட்டது. மனம் போன போக்கில் வாழலாம் என்ற நிலைமாற, குடும்ப வாழ்க்கையின் சிறப்பு வலியுறுத்தப்பட்டது. இதற்கு ஏற்ப ஏராளமான திரைக்கதைகள் எழுதப்பட்டு படமாயின. எய்ட்ஸ் பாதிப்புக்கு உள்ளானவர்களை ஒதுக்கி வைக்கத் தேவையில்லை, அவர்களுக்கும் எல்லோரையும்போல் வாழ உரிமை உண்டு என்று உணர்த்தும் பல திரைப்படங்களும் உருவாகி பெரு வெற்றியைப் பெற்றன. பள்ளிகளில் பாதுகாப்பான செக்ஸ் பற்றி விரசமின்றி விஞ்ஞான ரீதியாக எடுத்துரைக்கப்பட்டது. அதே நேரத்தில், ''உங்கள் கணவருக்கு நீங்கள் தரக்கூடிய மிகப் பெரிய பரிசு உங்கள் கன்னித்தன்மைதான்'' என்ற பிரசாரம் மேற்கொள்ளப்பட்டது.


★★★

சென்னையில் மூலைக்கு மூலை இன்று விளம்பரப் பலகைகளில் காணப்படும் வாசகம் "புள்ளி ராஜா, குடி போதையில் ஆணுறை அணிய மறந்து போவாரோ?" என்பதுதான். இதன்மூலம் புள்ளி ராஜா என்ன சொல்கிறார்? குடிப்பதில் தவறில்லை; விபசாரியிடம் போவதும் தப்பில்லை; ஆனால் ஆணுறை அணிய மறந்து போனால்தான் பெருங்குற்றம்! இத்தகைய பிரசாரத்தால் இந்த சமுதாயம் உருப்படவா செய்யும்?

★★★

தினமணியில் சமீபச் செய்தி : ஒரு பெண்ணின் வயிற்றுப் பகுதியிலிருந்து கின்னஸ் சாதனை படைக்கத்தக்க பிரும்மாண்டமான கட்டியை வெட்டி எடுத்து, டாக்டர்கள் சாதனை புரிந்தார்கள். நல்ல வேளையாக அந்தக் கட்டி புற்று நோய் கண்டது அல்லவாம்! டாக்டர் மேலும் சொல்கிறார் : "குடும்பக் கட்டுப்பாடு கருதி தினம் தினம் மாத்திரை விழுங்கும் பெண்களுக்கு

செம்பியன்




இதுபோன்ற கட்டிகள் தோன்றுவது சகஜம்!". சர்வ சாதாரணமாகிவிட்ட இது போன்ற கட்டிகளை எத்தனை சர்ஜன்கள், எத்தனை பெண்களின் வயிறுகளிலிருந்து, எத்தனை ஊர்களில், எத்தனை ஆஸ்பத்திரிகளில் ஆபரேஷன் செய்து நீக்கியிருக்கிறார்கள்? புள்ளி விவரம் உண்டா?

***

இப்போது இரண்டாவது பாராவில் ராஜாஜியின் கருத்தை இன்னொரு தடவை படித்துப் பாருங்களேன்!

***

எதிர்காலத்தில் மருந்துகளை வாய் மூலம் உட்கொண்டு குடலில் கிரகித்து ரத்தத்தில் கலக்கச் செய்ய மாட்டோம். நுண்ணிய, கண்ணுக்கும் புலனாகாத கோளங்களுக்குள் மருந்துத் துளிகள் சிறைப்பட்டிருக்கும். நீராவி பிடிப்பதுபோல் மூக்கு வழியே போய் நுரையீரலை அடையும். அங்கு மேல் பூச்சு கரைய, மருந்துத் துகள்கள் நேரடியாக ரத்தத்தில் கலக்கும். இதன்மூலம் மருந்து துரிதமாக வேலை செய்யத் தொடங்கும், பக்க விளைவுகள் இராது என்கிறார்கள். விஞ்ஞானிகளுக்கு வணக்கத்துடன் கூறிக் கொள்வது என்னவெனில், செயலுக்கு எதிர்ச் செயல் என்பது இயற்கை. எந்த விஞ்ஞானியாலும் இந்த நியதியை மாற்ற முடியாது.

***

டாக்டரின் அறைக்குள் நுழைந்த ஒருவன், "டாக்டர், நான் நோயாளி இல்லை; அவனுடைய குளோன். தவறுதலா எனக்கு ஆபரேஷன் பண்ணிடப் போறீங்க" என்றான், முன்னெச்சரிக்கையாக.


"கவலைப்படாதீங்க; நோயாளி ஏற்கெனவே தியேட்டருக்குப் போயாச்சு, ஆபரேஷன் நடந்துக்கிட்டிருக்கு" என்றார் டாக்டர்.

"அதெப்படி டாக்டர்? நீங்க இங்கதானே இருக்கீங்க?"

"என்னோட குளோனை நான்னு நினைச்சு நோயாளி ஏமாந்தா, அதுக்கு நான் எப்படிப் பொறுப்பாளியாக முடியும்?" என்று கேட்டார் டாக்டர்!

படம் : மீடியா ராமு


Precious Jewellery
for your
Precious Taste...
DEEPAVALI
SPECIAL
SALE
15 - 10 - 03 to 23 - 10 - 03
SWARNALAYA
S
Jewellery
Gold, Diamond, Ruby, Emerald
and Blue Safire Jewellery Collections...
New No. 5, Venkatnarayana Road, (Opp to T.Nagar Club)
T.Nagar, Chennai - 600 017. Tel : 52125353, 52125454. Fax : 52124747
e-mail : asukumaran@eth.net www.swarnalayajewellery.com




## நீதித்துறையைக் காப்பாற்றுங்கள்!

நாளிதழைப் பார்த்தால், ஒரு பக்கம் மாயாவதி முழங்குகிறார் : ''ஊழலாவது, நானாவது, பண்ணுவதாவது!" எல்லாம் என் பெயரைக் கெடுப்பதற்காக எதிர்க் கட்சிகள் செய்யும் சதி... அவர்களைத் தோற்கடித்து நான் மீண்டும் முதல்வராகிறேனா இல்லையா பாருங்கள்!" முதல்வராக இருந்த காலத்தில் பல கோடி பெறுமானமுள்ள சொத்துக்களைக் குவித்ததாகக் குற்றம் சாட்டப்பட்டவர் துணிந்து பேசுகிற பேச்சு இது!

சட்டிஸ்கர் முதல்வர் ஜோகி மற்றொரு பக்கம் முழங்குகிறார் : "நான் ஒன்றும் தப்பு செய்யவில்லை. என் மீது குற்றம் சாட்டியுள்ள சி.பி.ஐ.தான் அரசியல் நிர்ப்பந்தங்கள் காரணமாகப் பொய் வழக்கு ஜோடிக்கிறது. இதற்காக நான் ஏன் ராஜினாமா செய்ய வேண்டும்?"

தமிழகத்து இந்திரகுமாரிக்குத் தாம் புடைவை - வேஷ்டி ஊழல் வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டது குறித்து ஒரே எக்களிப்பு! "கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் ஊழலே நடக்கவில்லை என்பது இதன்மூலம் நிரூபண மாகியிருக்கிறது" என்கிறார்! இத்தனைக்கும், போதுமான ஆதாரங்கள் இல்லாததால்தான் இந்திரகுமாரி 'அண்டு கம்பெனி' விடுதலையானார்கள். 'வழக்கு ஜோடனையை அரசுத் தரப்பு வேண்டுமென்றே சொதப்பிவிட்டது' என நீதிபதியால் சுட்டிக் காட்டத்தான் முடிகிறதேயொழிய, நீதியை நிலைநாட்ட அந்த நீதிமன்றத்தால் எதுவும் செய்யமுடியவில்லை!

பாப்ரி மசூதி தகர்ப்பு வழக்கில் முரளி மனோகர் ஜோஷி பேரில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டால் அவர் மறுமுறையீடு செய்து அதற்குத்




கல்கி




2003 அக்டோபர் 19
சுபானு ஐப்பசி 2
மலர் : 62
இதழ் : 12


தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.




தற்காலிகத் தடை உத்தரவு கோருகிறார். கோரிக்கை நிறைவேற்றவும் படுகிறது!

தமிழக முதல்வர் ஜெயலலிதா கடந்த ஆட்சியின்போது முறைகேடாகச் சொத்து சேர்த்தற்காகப் போடப்பட்ட வழக்கு, தமிழகத்தில் நடைபெற்றால், நியாயம் கிடைக்காது என வேறு மாநில நீதி மன்றத்துக்கு வழக்கை மாற்றுமாறு மனு செய்யப்பட்டிருக்கிறது.

டான்ஸி நிலபேர வழக்கில் தீர்ப்பு ஒத்திவைக்கப்பட்டு ஓர் ஆண்டு ஆகியும், உச்சநீதிமன்றம் மௌனம் காக்கிறது.

குஜராத்தில் பெஸ்ட் பேக்கரி வழக்கில் ஆளுங்கட்சி தலையிட்டு, சாட்சிகளை மிரட்டிப் பணிய வைத்ததால், அவ்வழக்கை மீண்டும் நடத்த வேண்டும் என்று மனித உரிமை கமிஷன் மனு செய்ய, உச்சநீதிமன்றம் அம்மனுவை ஏற்று மறு விசாரணைக்கு ஆணையிட்டதோடு விசாரணையை மேற்பார்வையும் செய்கிறது.

கோத்ரா ரயில் எரிப்பு வழக்கிலும் பா.ஜ.க. ஆட்சியாளர்கள் தங்கள் கட்சிக்காரர்களுக்குச் சாதகமாக சாட்சி சொல்லும்படி மிரட்டுவதாகப் புகார் எழுந்திருக்கிறது. அவ்வழக்கை வேறு மாநிலத்துக்கு மாற்றும்படி கோரிக்கையும் எழுந்திருக்கிறது.

இந்தச் சம்பவங்களையெல்லாம் பார்க்கும்போது, நம் நாட்டில் நீதி பரிபாலனம் என்பதே மிகப் பெரிய கேள்விக் குறியாகியிருப்பது புரிகிறது.

காரணம் என்ன..? பதவிக்கு வரும் அரசியல்வாதிகளுள் பெரும்பாலானவர்கள் ஊழல் பேர்வழிகளாகவே இருக்கிறார்கள். தங்கள் பழைய, புதிய ஊழல்கள் அம்பலப்பட்டுப் போகாமல் காக்க, அவர்கள் முதலில் நீதித் துறை நியமனங்களில் புகுந்து விளையாடுகிறார்கள். அரசுத் தரப்பு வழக்குரைஞர்களாக, தங்களிடம் விச்வாசமுள்ள கட்சிக்காரர்களை நியமிக்கிறார்கள். இந்தக் கட்சி வக்கீல்களும் 'செஞ்சோற்றுக் கடன்' கருதி, செய்யக்கூடாத அதர்மங்களைச் செய்யத் துணிகிறார்கள்.

நீதிபதிகள் நியமனத்திலும் இதே போன்ற அரசியல் நோக்கு புகுந்து விளையாடுகிறது.

நீதிமன்றங்களையும் நீதித் துறையையும் எளிதில் விமர்சிக்க முடியாதபடி பல கட்டுப்பாடுகள் உள்ளன. சட்டமன்றத்தைப் போல, இத்துறையும் சுதந்திரமாகவும் பாரபட்சமின்றியும் இயங்க வேண்டும் என்ற




நோக்கில்தான் இக்கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

இவற்றையே சாதகமாக்கிக் கொண்டு, அரசியல்வாதிகள் நீதித் துறையை வளைக்கவும் விலைக்கு வாங்கவும் செய்யும் முயற்சிகள் நாளுக்கு நாள் மலிந்துகொண்டே வருகின்றன.

மக்கள் ஆதரவு பெற்று ஆட்சிக்கு வரும் ஒருவர், மக்களுக்கு இழைக்கக் கூடிய மிகப் பெரிய துரோகம் இது. ஊழலைக் கூட மன்னித்து ஓர் அரசியல்வாதிக்கு மறுவாய்ப்புத் தரலாம். ஆனால், நீதித் துறையையும் புலனாய்வு அமைப்புகளையும், தங்களுக்கு அடிமைச் சேவகம் பண்ணவைக்கிற அரசியல்வாதிகளை மன்னிக்கவே முடியாது. தங்கள் சௌகரியத்துக்காகவும், தங்கள் ஆட்சிக்காலம் நீடிக்க வேண்டும் என்பதற்காகவும் சுயநல நோக்கில், இவர்கள் சில வழக்குரைஞர்களையோ, நீதிபதிகளையோ, காவல் துறையினரையோ விலைக்கு வாங்க முயலும்போது ஒட்டுமொத்த நீதித் துறையும் காவல் துறையும் தார்மிக பலமிழந்து கலகலத்துப் போகிறது.

இந்த நாட்டில் சராசரி மக்களுக்கு இனி பாதுகாப்புக் கிடைக்காது ; நீதி கிடைக்காது என்ற அவநம்பிக்கை ஏற்படுகிறது.

'அரசியல் துறையைச் சீரழித்துச் சாக்கடையாக்கியது போதும் ; நீதித் துறையையும் நீர்த்துப் போகவிடாதீர்கள் ; மக்களை முட்டாளாக்காதீர்கள்' என்று நாம் அரசியல்வாதிகளைக் கரம் குவித்துக் கேட்டுக் கொள்ளலாம். அவர்கள் செவி சாய்த்துக் கேட்பார்கள் என்று நம்புவது கடினம்தான். மறுபக்கம், வாக்காளர்களின் கையிலுள்ள வோட்டுச் சீட்டு என்ற ஆயுதம் வலுவானது. அதனிடத்தில் நம்பிக்கை கொள்ளலாம். நீதியின் செயல்பாட்டில் குறிக்கிடுவோரை நிர்தாட்சண்யமாக ஒதுக்கித் தள்ளுங்கள் என்று வாக்காளர்களுக்கு நினைவூட்டலாம். ஆனால், நம் நாட்டில் வாக்காளர்களும் அறியாமையில் உழன்று கொண்டிருக்கிறார்கள். படித்தவர்கள்கூட வேட்பாளர் நேர்மையானவரா என்று பாராமல், அதற்கு அப்பாற்பட்ட வேறு காரணங்களுக்காக அவருக்கு வோட்டுப் போடுகிறார்கள்.

இத்தகைய சூழலில் அரசியல்வாதிகளின் சூழ்ச்சிகளிலிருந்து தங்களைத் தாங்களே காப்பாற்றிக் கொண்டு, நீதித் துறையையும் காப்பாற்றும் பெரும் பொறுப்பு நீதிபதிகளுக்குத்தான் இருக்கிறது. நாடாளுமன்ற, சட்டமன்ற அரசியல்வாதிகளும் அதிகார வர்க்கத்தைச் சேர்ந்த அதிகாரிகளும் அடைந்துள்ள தார்மிக வீழ்ச்சி, நீதித் துறையையும் பற்றிவிட்டால் இந்த நாட்டுக்கு விமோசனமே கிடையாது. ●

# ஒட்டவே ஒட்டாதா! உஷார்!

சென்னை புரசைவாக்கம், அண்ணாநகர் பகுதிகளில் பிளாட்பாரத்திலே குவியல் குவியலாக நான்ஸ்டிக் பாத்திரங்கள் ஐம்பதுக்கும் நூறுக்கும் கூவிக் கூவி விற்கப்படுவதும் ''குடும்ப ஆரோக்கியத்தை விளையாட்டா எடுத்துக்கலாமா?'' என்று பெண்கள் வாங்கி வாங்கிக் குவிப்பதும் சர்வ சாதாரணமான காட்சி.

''நான்ஸ்டிக் குக்வேரைப் பயன்படுத்துவது உடல்நலத்துக்கு அவசியம்தான். ஆனால் தேர்வு செய்யும்போது கவனம் தேவை. போலியான நான்ஸ்டிக் பாத்திரங்களால் உடல்நலக்கேடு உண்டாகலாம்'' என்று எச்சரிக்கிறார் ட்யூ பாண்ட் (இந்தியா) நிறுவனத்தின் மார்க்கெட்டிங் மேனேஜர் ஆர். பிரகாஷ்.

'''டி.டி.கே, பிரெஸ்டிஜ், காஞ்சன், ஓ.கே, திராலி போன்ற நிறுவனங்கள் மட்டுமே ஒரிஜினல் டெஃப்லான் கோட்டிங் கொண்ட சமையலறைப் பாத்திரங்களைத் தயாரிக்கிறார்கள். அமெரிக்காவின் எஃப். டி.ஏ தரச் சான்றிதழ் பெற்றுள்ள இந்த டெஃப்லான் ரசாயனப் பூச்சு, ஊறு விளைவிக்காது, உருகாது, நம்பகமானது. நீடித்து உழைக்கும். நீலநிற டெஃப்லான் சீல் இல்லை என்றால் அது போலியானது என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள்'' என்றதோடு, நான்ஸ்டிக் பாத்திரங்களைப் பராமரிப்பது எப்படி என டிப்ஸு‍ம் தந்தார்.

- நான்ஸ்டிக் பாத்திரங்களை வாங்கியதுமே, முதலில பதப்படுத்த வேண்டும். இரண்டு ஸ்பூன் எண்ணெய் விட்டு, உட்புறமாகப் பூசி, மிதமான சூட்டில் பயன்படுத்தவும்.
- எக்காரணம் கொண்டும் வெறும் பாத்திரத்தைப் புகைய விடக் கூடாது.
- சமைத்து முடித்ததும் அப்படியே எண்ணெய்ப் பசையுடன் விட்டு விடக் கூடாது. சிறிது சோப் கலந்த நீரில் ஸ்பான்ஞ் வைத்துக் கழுவி, உடனே துடைக்கவும்.
- டெஃப்லான் செலக்ட் பாத்திரங்களாக இருந்தால் இரும்புக் கரண்டியும், டெஃப்லான் கிளாஸிக் பாத்திரங்களாக இருந்தால், பிளாஸ்டிக், மரக் கரண்டியும் பயன்படுத்தலாம்.

ஃப்ரையிங் பேன் தவிர, கடாய், சாஸ் பேன், இட்லி, பணியாரத் தட்டு, ஹண்டி பேன், பிரியாணி சட்டி, உருளி என ஏகப்பட்ட நான்ஸ்டிக் பாத்திரங்கள் வந்திருக்கின்றன. தீபாவளி பட்ஜெட்டுடன் சேர்த்துக்குங்க!





# நீங்கள் கேட்டவை-தராசு

● ரு. கணேசன், மறைமலைநகர்.

? 'கூட்டணியைவிட எங்களுக்குக் கொள்கையே பெரிது! என்ற கருணாநிதியின் கொள்கைப் பிடிப்பு குறித்து...?

! காங்கிரஸ் அரசனை நம்பவும் முடியவில்லை; கூட்டணி புருஷனைக் கைவிடவும் மனமில்லை. கோரிக்கை கொள்கையெல்லாம் அரசனுக்குத் தரும் சிக்னல்கள்தான்.

● எம். சம்பத், வேலாயுதம்பாளையம்.

? ஜெ. மீதான டான்சி வழக்கு விசாரணை முடிந்து ஓராண்டு நிறைவடைந்தும் தீர்ப்புக் கூறாத உச்சநீதி மன்றத்தின் செயலற்ற நிலையை 'நீதியின் தோல்வி' என்று கூறலாமா?

! இப்போதைக்கு, நீதியின் மௌனம் என்று கூறலாம்.

● கே.கே. வெங்கடேசன், சென்னை - 37.

? இரவில் நன்றாகத் தூங்க நல்ல வழி கூறுங்களேன்...?

! நாற்பது நிமிஷம் விறுவிறுப்பான நடை; தூய்மையான வாழ்க்கை. முன்னது உடல் ஆரோக்கியத்துக்கு; பின்னது மன ஆரோக்கியத்துக்கு. அப்புறம் தூக்கம் வராமல் போய் விடுமா என்ன?

● ஜோ. ஜெயக்குமார், நாட்டரசன் கோட்டை.

? கூவத்தை தேம்ஸ் நதி போல் மாற்ற



• டான்சியும் திடமும்!

• 'பிரார்த்தனை'யும் பயனும்!





• அரசனும் புருஷனும்...!



• சொன்னதும் மறந்ததும்...!

# கூட்டணியைக் காட்டிலும் கொள்கை பெரிதாமே..?

முடிவு செய்துள்ளாராமே ஜெயலலிதா?

! ஏற்கெனவே பலர் முயன்று தோற்ற திட்டம். எச்சரிக்கையின்றி இறங்கினால் நாறிவிடக் கூடும்.

● **அ. தாஜ்மஜீத், திருமயம்.**

***? நடைபெற்று முடிந்த இடைத்தேர்தலில் காங்கிரஸுக்குப் பலத்த தோல்வி ஏற்பட்டுள்ளதே, வருங்காலம் எப்படியிருக்கும்...?***

! அடுத்து வரவிருக்கும் நான்கு மாநிலத் தேர்தல்கள் பிரும்மப் பிரயத்தனமாக இருக்கும்; உட்கட்சிப் பூசல்களைத் தட்டிக் கொட்டிச் சரியாக்கிக் கொள்ளாவிட்டால், பின்னர் வரவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில் மேலும் பல இடிகள், அடிகள்...

● **ஆர்.எஸ். மணி, கோவை - 41.**

***? சொந்தக் குரலில் பேசும் நடிக நடிகையர்கூட தங்களது டப்பிங்கைத் தனியாக ஒலிப்பதிவு செய்வது எதற்காக...?***

! நடிக்கும்போது வெவ்வேறு நிலைக்களன்களில் வெவ்வேறு ஒலி அமைப்பு இருக்கும். ஒலிப்பதிவு சீராக அமையாது. டப்பிங் ஸ்டுடியோவில் குரல் கொடுக்கும்போது பிற இடையூறுகள் இன்றி ஒலி அழகாகப் பதிவாகும்.



• தெய்வமும் தேசமும்!

● **இரா. கல்யாண சுந்தரம், அனுப்பானடி.**

***? மழை வேண்டி பறவைகள், மிருகங்கள் உட்பட 18 ஜோடிகளுக்குத் திருமணம் செய்து வைத்தது பலனளித்ததா?***

! ஓ, பலனளித்ததே! அக்டோபர் 2 தினமணி நடுப்பக்கத்தில் வெளியான இந்திரா பார்த்தசாரதியின் கடுமையான நையாண்டிக் கட்டுரையை அச்சம்பவம் தூண்டியது உருப்படியான பயன்தானே!

● **எஸ். மகேஷ், நாக்பூர் - 10.**

***? லதா மங்கேஷ்கர் 75...?***

! இவரது மழைக் கம்பிக் குரலுக்கு வயது இன்னமும் பதினேழுதான் ஐயா! அதைக் கொண்டாடுவோம்.

**❒ ரூ. 100 பரிசு பெறுபவர்**
**ச. குமரன்,**
**அப்துல்லாபுரம்,**
**(முழு முகவரி தேவை)**

● **நகை ஜி. மகராஜன், கடமலைக்குண்டு**

***? 'மக்களின் உணர்ச்சி வெளிப்பாடு வேகமாக இருந்தால், அது கடவுளின் கோரிக்கையை எதிரொலிப்பதாகும் என்கிறாரே ஜோஷி...?***

! உணர்ச்சி வெளிப்பாடு என்பது எப்போதுமே சரியான கருத்தாக இருந்துவிடாது. சிந்தித்து, மக்களை நல்வழியில் நடத்திச் செல்லத்தான் தலைவர்கள் தேவை. மக்களுடன் சேர்ந்து உணர்ச்சி வசப்பட்டு காரியம் செய்வதற்கு



• தமிழும் மழையும்!

அல்ல... இதில் கடவுளை வேறு தம் பக்கத்துக்கு இழுத்துக் கொள்வது ஏமாற்று வேலை.

● **ப. ராமகிருஷ்ணன், காயக்காடு ★**

***? என்கவுண்டர் முறையை போலீஸார் பயன்படுத்துவதால் தமிழ்நாடு அமைதிப் பூங்காவாகி விடுமா...?***

! ஆகி விடாது. என்கவுண்டரில் கொல்லப்படும் அளவுக்கு வளரும் ரௌடிகள், மேலும் உருவாவதைத் தடுத்து நிறுத்த கல்வி, வேலை வாய்ப்புகள் தோற்றுவித்து, புனர்வாழ்வு அளிக்க வேண்டும். அமைதிக்கான வாய்ப்பு அது மட்டுமே.

● **வீ. தேவராக, திருச்சி - 13.**

***? தமிழகம் முழுதும் கோயில்களில் தமிழில்***

குடமுழுக்குச் செய்தால் மழை பெய்யும் என்று குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் பேசியிருக் கிறாரே...?


! வடகிழக்குப் பருவமழை கொட்டித் தீர்த்தால் பொன்னம்பல அடிகள் தமது கருத்தை வாபஸ் பெறுவாரா...? இறைவனை மழைக்காக பிரார்த்திப்பது வேறு; அதில் 'கண்டிஷன்' போடுவது வேறு.




● குரலும் கொண்டாட்டமும்!

● கே. கணபதி, சென்னை - 11.

? பகுத்தறிவுக் கொள்கை கொண்ட திராவிடக் கட்சிகளுள் ஒன்றான அ.தி.மு.க. வைச் சேர்ந்த சபாநாயகர் காளிமுத்து, பதினெட்டு விலங்கு வகைகளுக்குத் 'திரு மணம்' செய்விக்கப்பட்டபோது முன்னிலை வகித்தாராமே?



● சாக்கும் போக்கும்!



● கடவுளும் கோரிக்கையும்!

! புத்தக வெளியீடு என்று கூறிவிட்டு இப்படி யெல்லாம் பண்ணி விட்டார்கள் என்று வருத்தப்பட்டிருக்கிறார் சபாநாயகர். ஆனால், அதை ஏற்க முடியவில்லை. நாம் எதற்கு அழைக்கப்படுகிறோம்; அழைப்பவர் யார் என்பதையெல்லாம் சரியாக ஆராயா மல் அவர் ஒப்புதல் அளித்திருக்கக் கூடாது.

● லெ.நா. சிவகுமார், சென்னை - 33.

? 'வாழும் காந்தியாக, பெரியாராக, அண்ணாவாக, எம்.ஜி.ஆர் ஆகத் திகழ் கிறார் புரட்சித் தலைவி. அவர் எங்கள் குல விளக்கு' என தமிழக தொழில்துறை அமைச்சர் கே. பாண்டுரங்கன் பேசியது குறித்து...

! தொழிலமைச்சரின் தொழில் என்னவென்று புரிந்துவிட்டதல்லவா...?

● ப. ஜெயப்பிரகாஷ், சர்க்கார்பதி.

? 'தமிழ்நாட்டில் நாற்பது ஆண்டு வரலாறு கலைஞர் மு. கருணாநிதி அவர்களால் உருவானது' என்ற அன்பழகன் கூற்றுக்கு மறுப்பேதும் உண்டா?

! சரித்திரம் சிலரை உரு வாக்குகிறது; சிலர் சரித் திரத்தை உருவாக்கு கிறார்கள். கருணாநிதிக்கு இரண்டிலும் பங்கு உண்டு. இதற்கு மேலே கூறுவது ஆபத்து. அன்பழகன் கூற்றுப் படி நாற்பது ஆண்டுகளில் நடந்த தவறு களும் பின்னடைவுகளும்கூட கருணா நிதியால் ஏற்பட்டவை என்று ஆகி விடும்.

● ஆர். ராமசுப்ரமணியர், திருவாரூர்.

? புதிய தமிழகம் கிருஷ்ணசாமி 'மக்கள் தணிக்கைக் குழு' ஆரம்பிக்கப் போவதாக அறிவித்துள்ளாரே...?

! அதைவிட மக்கள் ரசனையை வளர்க்க குழு அமைத்துப் பாடுபட்டால் பலன் இருக்கும். Think positive.

● ச. குமரன், அப்துல்லாபுரம் ❐

? மக்களிடையே தெய்வ பக்தி உள்ள அளவுக்கு தேச பக்தி இல்லாதது ஏன்...?

! தெய்வ பக்திக்கும் தேச பக்திக்கும் வித்தியாசமில்லை என்று உணர்த்தியவர் பாரதி. பாரதமாதாவை சக்தி வடிவமாகப் பார்த்தார். அந்த மகா கவியின் தேச பக்திப் பாடல்களைப் பள்ளிகளில் உற்சாகமாகப் பாட குழந்தைகளுக்குக் கற்றுத் தந்தால், எதிர்காலத்தில் குமரன் எழுப்பிய கேள்வி புதுப்பிக்கப்படாது.

● ஆ. அருண்ராஜ், தாரமங்கலம்.

? இனி தமிழ்நாட்டில் தண்ணீர்ப் பஞ்சம் வராதல்லவா...?

! மழை நீர் சேமிப்பை இப்படி ஒரு கேள்வி கேட்டுக் கிண்டலடிக்கக் கூடாது. மழை நீர் சேமிப்பு நிலத்தடி நீரை வளப்படுத்த உதவும் நல்ல திட்டம். ஆனால், வீட்டுக் கூரை மேல் விழும் நீரை நிலத்தடிக்குப் பாய்ச்சுவதுடன் மழை நீர் சேமிப்பு முடிந்து போய் விடாது என்பதை முதல்வர் புரிந்து கொள்ளாதது துரதிர்ஷ்டமே.

★ ரூ. 50 பரிசு பெறுபவர்:
ப. ராமகிருஷ்ணன், காயக்காடு,
ஆவணத்தாங்கோட்டை - 614 624
அறந்தாங்கி தாலுகா
புதுக்கோட்டை மாவட்டம்.

# அடாணா, வந்தனா, சஹானா, ஷோபனா!

'All roads lead to Rome' என்று சொலவடை உண்டு. அதை உல்டா செய்து 'திசை யெட்டிலிருந்தும் தி.நகர் நோக்கி' என்று சொல்லலாம் போலிருக்கிறது.

தீபாவளி நெருங்க நெருங்க தி.நகர் உஸ்மான் சாலையில் கும்பமேளாவே குடிபெயர்ந்து வந்துவிடும் போலிருக்கிறது. அந்தக் கூட்டத்துக்குள் புகுந்து ஷாப்பிங் செய்துவிட்டு வருவது என்பது ஒரு அசகாய சூரத்தனம் தான். நம்மவர்கள் அதில் கரை கண்டு விட்டார்கள். அதிலும் குறிப்பாக நண்டு, சிண்டுகளுடன் நமது தாய்மார்கள் புடைவைக் கடைக்குள் புகுந்து, அவர்களுக்கு எந்த டேமேஜும் இல்லாமல் வருவது கின்னஸ் ரெகார்ட். இந்த தீபாவளிக்கு என்ன விசேஷம்! நம் பங்குக்கு நான்கு கடைக்குள் ஃபினையிங் விஸிட் அடித்தோம்.



இந்த வருடம் நல்லி சில்க்ஸ் அறிமுகப்படுத்தியுள்ள மூன்று புதிய புடைவை ரகங்கள் : சஹானா, வந்தனா, அடாணா! சஹானாவும், அடாணாவும் பிரபல ராகங்கள் என்பது நமக்குத் தெரியும். வந்தனா? "அதுவும் ராகம்தான். எம்.எம். தண்டபாணி தேசிகர், வந்தனா ராகத்தில் 'அவையறிந்து..' என்று பாடியிருக்கிறாரே... தெரியாதோ உமக்கு?" என்று நமக்கு இசை போதித்தார் கவுன்டர் ஸேல்ஸ் மேன். கடை முதலாளி குப்புசாமி செட்டியார் தான் இசைப்பிரியர் என்றால், அவரது கடைச் சிப்பந்தி கூட அசத்துகிறாரே என்று நாம் வியந்து நின்றபோது.



சஹானாவின் பெருமைகளைப் பட்டியலிட்டார் அவர். "ஆந்திராவில் கட்வால் என்றொரு இடம் இருக்கிறது. அங்கு தயாரிக்கப்படும் சேலைகள் காஞ்சிபுரம் சேலைகள் போன்று பிரபலம். கட்டம், கோடுகள், பாரம்பரிய பார்டர், புட்டா என்று காட்டனில் போட்டு 'கட்வால்' நெசவாளர்கள் பிரமிப்பூட்டுவார்கள். அதையே காஞ்சிபுரம் பட்டுப் புடைவைப் பாணியில் கொண்டு வந்துவிட்டோம். கட்வால் காஞ்சிபுரமாகிவிட்டது. ஜரிகை பார்டரும், புட்டாவும் அழகுக்கு அழகூட்டுகின்றன." என்றார் சேல்ஸ்மேன். நமக்கு அவர் விவரித்துக் கொண்டிருந்த போதே, மற்றொரு 'னா'வை அங்கு பார்த்தோம். அட! இவர் மகாநதி ஷோபனா அல்லவா! (நோ போட்டோ ப்ளீஸ்!). சஹானா, வந்தனா, அடாணாவில் மூழ்கி செலக்ட் செய்வதில் பிஸியாகிவிட்டார் ஷோபனா! இந்த மூன்று ரகங்களும் 2200 ரூபாயிருந்து 6000 ரூபாய் வரை இருக்கின்றன. "மற்ற கடைகளைப் போய் குறுகிய வாசலாக வைத்து 'மகா கூட்டம்', என்று ஃபிலிம் காட்டாமல், "தாராளமாக வாசல் வைத்து எவ்வளவு கூட்டம் என்றாலும் நெருக்கடி இல்லாமல் பார்த்துக் கொள்கிறோம்" என்கிறார்கள் நல்லி சில்க்ஸ் நிறுவனத்தார்.





அப்படியே குறுக்கே கடந்து 'போத்தீஸ் ராஜா' என்ன சொல்கிறார் என்று விசாரித்தோம். இந்த தீபாவளிக்குப் புதுமையான முறையில் எப்படி விளம்பரம் செய்யலாம் என்று நாங்களும் எங்கள் விளம்பரக்காரர்களும் மண்டையைப் போட்டு உடைத்துக் கொண்டோம். 'போத்தீஸ் ராஜா' கற்பனையில் உதித்துவிட்டார். ஐந்நூறு ரூபாய்க்கு மேல் வாங்குபவர்களுக்கு இந்தப் பரிசு, ஆயிரம் ரூபாய்க்கு மேல் வாங்குபவர்களுக்கு இந்தப் பரிசு என்று நாங்கள் கொடுப்பதால் என்ன கிக் இருக்கிறது? அந்தப் பரிசுகளையே நமது போத்தீஸ் ராஜா கொடுப்பது போல் விளம்பரப்படுத்தினால் நல்ல ஆஃபராக இருக்குமே! ஆனால் எங்களிடம் வருபவர்களுக்கு ஒரு சின்ன வேண்டுகோள். கடைக்குள் வந்து போத்தீஸ் ராஜாவைத் தேட வேண்டாம். ஏனென்றால் நகரில் ஆங்காங்கே மக்களை போத்தீஸுக்கு அழைப்பதில் பிஸியாக இருக்கிறார் அவர். இடப் பற்றாக்குறை காரணமாக அவரது உருவ பொம்மையை கடைக்குள் வைக்க முடியவில்லை" என்கிறார் போத்தீஸ் ரமேஷ். ரமேஷின் உடன் பிறப்பு ஒருவரின் உண்மையான பெயரும் போத்தி ராஜா தானம். இவர்கள் போத்தீஸ் ராஜாவை களத்தில் இறக்கிவிட்ட நேரம், எய்ட்ஸ் சொசைட்டிகாரர்கள் 'புள்ளி ராஜாவையும்' போட்டுக் கலக்க, கொஞ்ச நாள் ஒரே குழப்பம். இப்போது தெளிவாகிவிட்டார்கள் மக்கள் என்பதற்கு போத்தீ







* குமரன் ஸ்டோர்ஸ் - உஷா செந்தில்நாதன்

தரத்தை விஞ்ஞான முறையில் சோதித்தே விற்பனைக்கு அனுப்புகிறார்கள். நிறைய செலவு செய்து அதற்கான மிஷினை வைத்திருக்கிறார்கள். ஆனால் மக்களே நேரடியாகச் சென்று அந்த மிஷினில் சோதிக்க இப்போது வசதியில்லை. பட்டுக்கு புகழ்பெற்றுவிட்ட பாரம்பரிய மான கடைகளுடன் போட்டி போடுவது அவ்வளவு சுலபமான விஷயமா என்ன?

இப்போது நீங்கள் கடைசியாகப் படித்த வரியைச் சொன்னவர் ஐந்து மாடி



* ''செலக்ஷன் சூப்பர்!''

ஸில் கூடும் கூட்டமே காட்சி!

பெரும்பாலான தி.நகர் கடைகளில் 'வாங்க.. வாங்க'' என்று வெற்றிலைப் பாக்கு வைத்தால், சென்னை சில்க்ஸ் காரர்கள் கும்பலை வெளியி லேயே நிற்க வைத்து சொர்க்க வாசல் போன்று கதவைத் திறந்து அவ்வப்போது உள்ளே விடுகிறார் கள். அவர்கள் என்ன செய்வார்கள்? சென்னை சில்க்ஸில் ரெடிமேட் மற்றும் சிந்தடிக் சேலைகள் வாங்க கூட்டம் முட்டி மோதுகிறது. டெலிவரி செக்ஷனில் நாம் வாங்கிய துணி மாறாமல் உள்ளே கவரில் இருக்கிறதா என்று மனது பக் பக்கென்று அடித்துக் கொள்கிறது. அந்த வியர்வைக் கடலில் ''அம்மா... எங்கம்மா... இருக்கே?'' என்று இரண்டடி தூரத்தில் இருக்கும் அம்மாவைப் பார்க்க முடியாமல் தேடு கிறான் சிறுவன். இது போன்று பல குட் டீஸ்கள் கூட்டத்தில் தோய்த்து எடுக்கப் படுகிறார்கள். ''மஞ்சள் சட்டை போட்ட சிறுவன் காணவில்லை'' என்று அறிவிக்கும் வகையில் திருவிழாக் கூட்டம்! ஆனால் பட்டு செக்ஷனில் மட்டும் கொஞ்சம் இலேசாகக் காற்று வாங்கிக் கொள்ளலாம். இத்தனைக்கும் பட்டுப் புடைவைகளின்

குமரன் ஸ்டோர்ஸ் ஸீனியர் மானேஜர் குமார். ''இந்த சினிமாப் படங்கள் மற்றும் தொலைக்காட்சி ஸீரியல்களின் பெயர் களை வைத்துப் புடைவைகளை விற்பது மலிவான வியாபாரம். நாங்கள் அப்படிச் செய்வதில்லை'' என்கிறார் அவர். இந்த வருடம் சைபர் டையிங் சாரீஸ் என்ற ரகத்தை அறிமுகப்படுத்தியிருக்கிறார்கள் இவர்கள். ''அது மட்டுமல்ல ஸார். கண்ணைக் கவரும் டிசைன்களில் சிந்தடிக் ரகங்களும் உண்டு'' என்கிறார் அவர். பல வருடங்களாக இந்தக் கடையின் கஸ்டமராக இருக்கிறார் உஷா செந்தில் நாதன். ''முகம் சுளிக்காமல் பல ரகங்களை எடுத்துப் போடும் ஸேல்ஸ்மேன்கள். ஏராள மான ரகங்கள். அதைவிட, நம்மீது யாரும் உரசாத வண்ணம், நின்று செலக்ட் செய் யும் வகையில் இட நெருக்கடி இல்லாத சூழல்.. இதற்காகத்தான் நான் இங்கு




## வளையோசை
## கல... கல...


என்னதான் ஏ.ஸி. ஷோரூம் களில் ஷாப்பிங் செய்தாலும், நடைபாதைக் கடைகளில் ஷாப்பிங் செய்வது நம் ரத்தத்தில் கலந்துவிட்ட ஒன்று. அதிலும் குறிப்பாக ஸ்டிக்கர் பொட்டுக்கள், வளையல் கடைகளில் ஏகக் கூட்டம். பாண்டி பஜார் நடை பாதையில் கண்ணாடி வளையல் கடை போட்டிருக்கும் நாகராஜ் ரொம்பவே சந்தோஷமாக இருக் கிறார். ஒரு பக்கம் தங்க வளையல் மோகம் அதிகரிக்க, மற்றொரு பக்கம் கண்ணாடி வளையல் போன்றே பிளாஸ்டிக் போலிகள் வந்து அசத்த, "கண்ணாடி வளையல்களுக்கு இன்னமும் கிராக்கி இருக்கிறதா ஐயா?" என்ற நாம் பரிதாபமாகக் கேட்க, "ஆடி மாதம் தவிர மற்ற எல்லா மாதங்களிலும் விற்பனை உண்டு ஸார்" என்கிறார் நாகராஜ். ஆடி மாதத்திலும் கூட அம்மனுக்கு சாத்த சிவப்பு, பச்சை கண்ணாடி வளையல்கள் வாங்குவார்களாம் என்று சொல்லும் நாக ராஜ், டஜன் இரண்டு ரூபாயிலிருந்து இருபத்தைந்து ரூபாய் வரை வளையல்கள் விற்கிறார்.

வருகிறேன்!" என்றவர் ஒரு ஷிபான் புடை வையைத் தோளில் சாய்த்துப் பிடித்தார். விலை விசாரித்தால் ஐயாயிரமாம். "ஆளை விடு... ஜூட்" என்று இடத்தைக் காலி செய்தோம்.

"பட்டு, விந்தடிக், ரெடிமேட் ரகங்கள் எல்லாம் ஒரு பக்கம் இருக்கட்டும். நாங்கள் விற்பது மிகவும் முக்கியமான சமாசாரம். கவனத்தை இப்படித் திருப்புங்கள்" என்று நுங்கம்பாக்கம் காதர் நவாஸ்கான் சாலையி லிருந்து ஒரு குரல் கேட்கிறது. "அது 'படா' ஏரியாவாச்சே" என்று நாம் கலங்கி நிற்கும் போது, 'நீங்க நினைப்பது காரில் வரும் வாடிக்கையாளருக்கு மட்டுமல்ல. எல்லா வயதினருக்கும் எல்லாத் தரப்பினருக்கும் ஏற்ற சரக்குகளை வைத்திருக்கிறோம்" என் கிறார் 'கடற்கன்னி' பெண்கள், சிறுமிகள் உள்ளாடைகள் உலகத்தை நடத்தி வரும் பூர்ணிமா. நாயுடு ஹாலின் இளைய தலை முறை இவர். ரூபாய் அறுபதிலிருந்து இரண் டாயிரம் ரூபாய் வரை இங்கே பெண்களுக் கான உள்ளாடைகள் (அடி ஆத்தி!) விற் பனைக்கு இருக்கின்றனவாம். "உள்ளாடை கள் செலக்ஷன் என்பது போகிற போக்கில் அலட்சியமாகச் செய்துவிட்டுப் போவ தல்ல. பெரிய ஆராய்ச்சிக் கட்டுரை தயா ரிக்கும் அளவுக்கு இங்கே விஷயம் இருக் கிறதாக்கும்" என்கிறார் பூர்ணிமா! யாருக் காவது பி.ஹெச்டி. செய்ய ஆசை இருக் கிறதா...! உதவுவதற்கு பூர்ணிமா தயாராக இருக்கிறார்.

- ஸ்ரீஸ்ரீ

படங்கள் : மீடியா ராமு



* போத்தீஸ் ராஜா கொடுக்கிறார் பரிசு!



தீபாவளியை
கொண்டாடுங்கள்
உங்கள்
ஸ்ரீ வசந்த்ராவுடன்
ஸ்ரீ வசந்த்ரா டெக்ஸ்டைல்ஸ்



# சிவகாமியின் சபதம்

முப்பத்து மூன்றாம் அத்தியாயம்

## மந்திராலோசனை

வாதாபிப் பெரும் போரில் பல்லவ சைனியம் மகத்தான வெற்றியடைந்து ஒரு வார காலம் ஆயிற்று.

வாதாபிக் கோட்டையின் பிரதான வாசலுக்கு எதிரில் சற்றுத் தூரத்தில் பிரம்மாண்டமான ரிஷபக் கொடி வானளாவி உயர்ந்து கம்பீரமாகக் காற்றிலே பறந்து கொண்டிருந்தது.

அதனடியில் இருந்த கூடாரத்திற்குள்ளே மாமல்லரின் மந்திராலோசனை சபை கூடியிருந்தது.

மாமல்லரைச் சுற்றிலும் வீற்றிருந்த மந்திரிமார்களின் முகங்களில் மாபெரும் போரில் வெற்றி பெற்ற பெருமித உணர்ச்சியோடு சிறிது கவலைக்கு அறிகுறியும் காணப்பட்டது.

மாமல்லரின் வீர சௌந்தரிய வதனத்திலோ அச் சமயம் எள்ளும் கொள்ளும் வெடித்துக் கொண்டிருந்தது!

மந்திராலோசனை சபையில் ஏதோ அபிப்பிராய பேதம் ஏற்பட்டுக் காரசாரமான விவாதம் நடந்திருக்க வேண்டும் என்று தோன்றியது.

அது வாஸ்தவந்தான்; அபிப்பிராய பேதத்துக்குக் காரணமாயிருந்தது வாதாபி நகரப் பிரமுகர்களிடமிருந்து வந்த சரணாகதி ஓலையேயாகும்.

**அமரர் கல்கி**

**போ**ர்க்களத்திலிருந்து திரும்பி வந்ததும் பல்லவ சைனியம் இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டது. ஒரு பகுதியைக் கிழக்கேயிருந்து வந்து கொண்டிருந்த வேங்கிப் படையைத் தாக்குவதற்கு வசதியாக இரண்டு காத தூரம் கிழக்கே கொண்டு போய் நிறுத்தி வைத்தார்கள். இன்னொரு பகுதி சைனியத்தைக் கொண்டு வாதாபிக் கோட்டையைத் தாக்கிக் கைப்பற்றுவதற்கு ஆயத்தம் செய்தார்கள்.

கோட்டையைத் தாக்கும் விஷயத்தில் மாமல்லர் மிகவும் ஆத்திரம் கொண்டிருந்தார். பெரும் போரில் வெற்றி பெற்றுத் திரும்பிய வீரர்களுக்கு இளைப்பாற அவகாசம் கொடுப்பதற்குக்கூட அவர் விரும்பவில்லை. சேனாபதியையும் மற்றவர்களையும் ரொம்பவும் துரிதப்படுத்தினார். தாமே குதிரை மீதேறி கோட்டையைச் சுற்றி வந்து ஆங்காங்கே இருந்த வீரர்களை உற்சாகப்படுத்தினார். ஒரே மூச்சில் அகழியைக் கடப்பது எப்படி, கோட்டை மதில் மீது தாவி ஏறுவது எப்படி, அங்கே காவல் இருக்கக் கூடிய சளுக்க வீரர்கள் மீது ஈட்டியை எறிந்து கொல்வது எப்படி, கோட்டைக்குள் புகுந்ததும் அவர்கள் செய்ய வேண்டிய காரியங்கள் என்னென்ன ஆகிய விஷயங்களைப் பற்றி மாமல்ல சக்கரவர்த்தி தாமே அந்த வீரர்களுக்கு விவரமாகக் கூறினார். மாமல்லரின் இத்தகைய நடவடிக்கைகளைக் குறித்துச் சேனாபதி பரஞ்சோதி கோபமும் வருத்தமும் அடைந்து, "இந்தக் காரியங்களையெல்லாம் என்னிடம் விட்டு விடக் கூடாதா? என்னிடம் தங்களுக்கு அவ்வளவு நம்பிக்கை இல்லையா?" என்று கேட்கும்படி நேர்ந்தது.

மாமல்லர் இப்படிக் கோட்டைத் தாக்குதலை ஆரம்பிக்கும் விஷயத்தில் அவசரப்பட்டதற்குக் காரணம், எங்கே தாக்க ஆரம்பிப்பதற்கு முன்னால் கோட்டைக்குள்ளிருந்து சமாதானத் தூது வந்து விடுமோ என்ற பயந்தான். அவர் பயந்தபடியே உண்மையில் நடந்து விட்டது. மறுநாள் கோட்டைத் தாக்குதலை ஆரம்பிக்கலாம் என்று தீர்மானிக்கப்பட்டிருந்த சமயத்தில் கோட்டை முன்வாசலில் சமாதான வெள்ளைக் கொடி தூக்கப்பட்டது. நூலேணி வழியாக இருவர் இறங்கி வந்தார்கள். சேனாபதி பரஞ்சோதியிடம் தாங்கள் கொண்டு வந்த ஓலைகள் இரண்டையும் சமர்ப்பித்து விட்டுத் திரும்பினார்கள்.

அந்த ஓலைகள் இரண்டில் ஒன்று கோட்டைத் தலைவன் தளபதி பீமசேனன், சக்கரவர்த்திக்கு எழுதிக் கொண்டது. வாதாபி நகரப் பிரமுகர்கள் கூடி யோசித்துக் கோட்டையை எதிர்ப்பில்லாமல் காஞ்சிச் சக்கரவர்த்தியிடம் ஒப்படைத்து விடுவதென்று தீர்மானித்திருப்பதாகவும், வாதாபி அரண்மனைகளிலுள்ள சகல செல்வங்களையும் கோட்டைக்குள்ளே இருக்கும் யானைப் படை குதிரைப் படைகளையும் மாமல்ல சக்கரவர்த்திக்குச் சமர்ப்பித்து விட இணங்குவதாகவும், இன்னும் அவர் விதிக்கும் மற்ற எல்லா நிபந்தனைகளுக்கும் உட்படச் சம்மதிப்பதாகவும் அந்த ஓலையில் எழுதியிருந்தது. மாமல்ல சக்கரவர்த்தி கருணை கூர்ந்து கோட்டையைத் தாக்காமலிருக்க வேண்டுமென்றும், நகரமாந்தர்களையும், அவர்களுடைய வீடு வாசல் சொத்து சுதந்திரங்களையும் காப்பாற்றிக் கொடுத்து அருள வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டிருந்தது. மேற்படி சமாதானக் கோரிக்கையை மாமல்ல சக்கரவர்த்தி ஒப்புக் கொள்ளக் கருணை கூர்ந்தால், கோட்டைக் காவல் தலைவனாகிய தளபதி பீமசேனன் தன் கீழேயுள்ள எல்லா வீரர்களுடனும் சரணாகதியடையச் சித்தமாயிருப்பதாகத் தெரிவித்து ஓலையை முடித்திருந்தான்.

**மே**ற்படி சமாதான ஓலையைப் பற்றி எந்தவிதத்திலும் சந்தேகப்படு



வதற்கு இடம் இருக்கவில்லை. உண்மையும் அப்படித்தான். கோட்டை வாசல்களின் உச்சி மண்டபங்களில் நின்று கவனித்த வாதாபிவாசிகள், பல்லவ சைனியத்துக்கும் சளுக்க சைனியத்துக்கும் நடந்த பெரும் போரைப் பற்றியும் அதன் முடிவைப் பற்றியும் ஒருவாறு தெரிந்து கொண்டார்கள். போரில் பல்லவ சைனியம் வெற்றி பெற்றது ஸ்பஷ்டமாகத் தெரிந்துவிட்டது. அதன் பயனாக வாதாபி மக்களிடையே பெரும் பீதி உண்டாகிப் பரவிற்று. வீதிகளிலும் வீடுகளிலும் ஓலமும் புலம்பலும் எழுந்தன. கோட்டைக் காவலுக்கு அவசியமான வீரர்களோ யுத்த தளவாடங்களோ இல்லையென்பதும், முற்றுகை நீடிக்கும் பட்சத்தில், அதைச் சமாளிப்பதற்கு வேண்டிய உணவுப் பொருள் நகருக்குள் சேமித்து வைக்கப்படவில்லையென்பதும் எல்லாருக்கும் தெரிந்திருந்தன. ஒரு மாதம் முற்றுகை நீடிக்கும் பட்சத்தில் நகர மக்கள் பட்டினி கிடக்கும்படி நேரிடும். சத்துரு படைகள் கோட்டையைத் தாக்கி ஜயித்து உள்ளே பிரவேசித்தால், அப்போது அவ் வீரர்களிடம் ஜனங்கள் எவ்வித கருணையையும் எதிர்பார்க்க முடியாது. இலட்சக்கணக்கான ஸ்திரீகளும், குழந்தைகளும், வயோதிகர்களும் அதோ கதியடையும்படி நேரிடும்.

இதையெல்லாம் யோசித்து வேறு வழியில்லையென்று கண்டதன் பேரில் தான், வாதாபி நகரப் பிரமுகர்களும் கோட்டைக் காவலன் பீமசேனனும் மேற்கண்டவாறு சமாதான ஓலை அனுப்பினார்கள்.

அதன்பேரில் யோசித்து முடிவு செய்வதற்கு மாமல்லர் மந்திராலோசனை சபை கூட்டினார். இந்த மந்திராலோசனை சபையில் மாமல்லர் சிறிதும் பொறுமையின்றி, ஆத்திரப்பட்டு எரிந்து விழுந்ததைப் போல் அதற்குமுன் எப்போதும் நடந்து கொண்டது கிடையாது. ஓலையைப் பார்க்கும்போதே அவருக்குக் கோபம் கோபமாய் வந்தது. எல்லாரும் கேட்கும்படி ஓலை படிக்கப் பட்ட போது மாமல்லரின் கண்களில் தணல் பறந்தது.

எந்தக் காரணத்தினாலோ அந்தச் சமாதானக் கோரிக்கை சக்கரவர்த்திக்குப் பிடிக்கவில்லையென்பது அவருடைய முகபாவத்திலிருந்தும், பேச்சு வார்த்தைகளிலிருந்தும் அங்கிருந்த மற்றவர்களுக்கு நன்றாய்த் தெரிந்தது.

எனினும், சக்கரவர்த்தி அந்த ஓலை விஷயமாக அவர்களுடைய அபிப்பிராயத்தைக் கேட்டபோது, தங்கள் மனத்தில் பட்டதை ஒவ்வொருவரும் உள்ளது உள்ளபடி சொன்னார்கள். அதாவது, சரணாகதியை ஒப்புக் கொண்டு நகரத்தையும் நகர மக்களையும் காப்பாற்ற வேண்டியதுதான் என்று சொன்னார்கள்.

சக்கரவர்த்தியின் கோபம் மேலும் மேலும் அதிகமாகி வந்தது. ஒவ்வொருவரும் சமாதானத்துக்கு அநுகூலமாக அபிப்பிராயம் சொல்லி வந்தபோது மாமல்லர், "அப்படியா?" "ஓஹோ!" என்று பரிகாசக் குரலில் சொல்லிக் கொண்டு வந்தார். சேனாதிபதி பரஞ்சோதியும் இலங்கை மானவன்மரும் மட்டும் அபிப்பிராயம் சொல்லாமலிருந்தார்கள்.

"நீங்கள் ஏன் ஒன்றும் சொல்லாமல் சும்மா நிற்கிறீர்கள்? சேனாதிபதி! உங்களுடைய அபிப்பிராயம் என்ன?" என்று மாமல்லர் குறிப்பிட்டுக் கேட்டார்.

"பிரபு! நானும் சண்டையை நிறுத்த வேண்டும் என்றுதான் அபிப்பிராயப்படுகிறேன். குற்றமற்ற ஜனங்களைக் கஷ்டப்படுத்துவதில் என்ன பிரயோசனம்? மேலும் சரணாகதி அடைவதாக அவர்கள் சக்கரவர்த்தியிடம் உயிர்ப் பிச்சைக் கேட்கும்போது வேறு என்ன செய்ய முடியும்?" என்றார் பரஞ்சோதி.

"சேனாதிபதி! என்ன சொல்கிறீர்? நீர் கூடவா இப்படியெல்லாம் தர்ம நியாயம் பேச ஆரம்பித்து விட்டீர்? புலிகேசி நம்



நாட்டில் செய்த அக்கிரமங்களை எல்லாம் மறந்து விட்டீரா? இந்த நகரத்தை நாம் எரித்துச் சாம்பலாக்க வேண்டிய அவசியம் இருக்கிறதென்று உமக்குத் தெரியாதா? தெரிந்திருந்துமா இப்படிப் பேசுகிறீர்? திடீரென்று உங்களுக்கெல்லாம் என்ன வந்துவிட்டது? யுத்தம் போதும் போதும் என்று ஆகிவிட்டதா? இரத்தத்தைக் கண்டு பயந்து விட்டீர்களா? உயிர் மேலும் உடைமை மேலும் ஆசை வந்து விட்டதா? மானவன்மரே! நீர் ஒருவராவது என்னுடைய கட்சியில் இருக்கிறீரா? அல்லது நீரும் இந்தப் புத்த பகவானுடைய பரமானந்த சிஷ்யர்களுடன் சேர்ந்து சாத்விகத்தை மேற்கொண்டு அஹிம்சாவாதியாகி விட்டீரா?'' என்று தீச்சுடர் போன்ற வார்த்தைகளை மாமல்லர் பொழிந்தார்.

மாமல்லருடைய மனப்போக்கை மானவன்மார் நன்கு உணர்ந்திருந்தார். சிவகாமிக்கு மாமல்லர் கொடுத்திருந்த வாக்குறுதியை எந்தவிதத்திலும் நிறைவேற்ற விரும்புகிறார் என்பதையும், சமாதானக் கோரிக்கையை ஒப்புக் கொண்டால் மேற்படி வாக்குறுதியை நிறைவேற்ற முடியாதென்பதையும் அவர் உணர்ந்திருந்தார். உண்மையில் சேனாதிபதி பரஞ்சோதி சமாதானத்துக்குச் சாதகமாக அபிப்பிராயம் சொன்னது மானவன்மருக்கு மிக்க வியப்பையளித்தது.

சமாதானத்துக்கு இணங்கிவிட்டால், கோட்டைத் தாக்குதலுக்கென்று மானவன்மர் விசேஷப் பயிற்சி அளித்திருந்த யானைப் படையை உபயோகப்படுத்துவதற்குச் சந்தர்ப்பமே இல்லாமல் போய்விடும் என்பது ஒரு பக்கம் அவர் மனத்தில் கிடந்தது.

இந்த நிலைமையில் மானவன்மர், "பிரபு! பல்லவ நாட்டு வீர தளபதிகள் எல்லாரும் ஒருவித அபிப்பிராயம் சொல்லியிருக்கும்போது வேறு அபிப்பிராயம் கூற எனக்குத் தயக்கமாயிருக்கிறது. அதிலும் சேனாதிபதி யாருக்கு மாறாக எதுவும் சொல்ல நான் விரும்பவில்லை!'' என்றார்.

மாமல்லர் அதிகாரத்தொனியில், "மானவன்மரே! எல்லாரும் ஒரே அபிப்பிராயத்தையே தெரிவிக்க வேண்டுமென்றிருந்தால், இந்த மந்திராலோசனை சபை கூட வேண்டியதில்லை. இங்கே எல்லாரும் தங்கள் தங்கள் அபிப்பிராயத்தைத் தைரியமாகக் கூறலாம். யாருக்கும் அஞ்ச வேண்டியதில்லை!'' என்று கர்ஜித்தார்.

"பிரபு! தாங்கள் ஆக்ஞாபிப்பதால் சொல்கிறேன். இந்தச் சமாதானக் கோரிக்கையை ஒப்புக் கொள்ளக் கூடாது என்று எனக்குத் தோன்றுகிறது. செய்கிற பாதகத்தையெல்லாம் செய்துவிட்டு அப்புறம் சரணாகதி அடைந்துவிட்டால் போதுமா?'' என்பதற்குள் சேனாதிபதி பரஞ்சோதி குறுக்கிட்டு, "வாதாபி நகர ஜனங்கள் என்ன பாதகத்தைச் செய்தார்கள்? பாதகன் புலிகேசி செய்த காரியத்திற்கு அவர்களை எப்படிப் பொறுப்பாக்க முடியும்?'' என்று கேட்டார்.

அதற்கு மானவன்மர், "சேனாதிபதி இவ்விதம் சொல்வது எனக்கு மிக்க வியப்பாயிருக்கிறது. புலிகேசி செய்த அக்கிரமங்களையெல்லாம் இந்த ஜனங்கள் பார்த்துச் சந்தோஷப்பட்டுக் கொண்டுதானே இருந்தார்கள்? அந்த அக்கிரமங்களைத் தடுப்பதற்கு இவர்கள் எந்த விதத்திலாவது முயன்றார்களா? பாதகன் புலிகேசிக்குப் பலம் அளித்ததெல்லாம் இவர்கள்தானே? புலிகேசி கொள்ளையடித்துக் கொண்டு வந்த பொருள்களையெல்லாம் பகிர்ந்து அநுபவித்தது இவர்கள்தானே? புலிகேசி சிறைப்பிடித்துக் கொண்டு வந்த ஆண்களையும் பெண்களையும் அடிமை கொண்டு வேலை வாங்கியது இவர்கள்தானே? ஆயனச் சிற்பியாரின் குமாரியை இந்த நகரின் நாற்சந்தியில் நடனமாடச் சொல்லிப் பார்த்து, இந்த






''திடீரென்று
உங்களுக்கெல்லாம் என்ன
வந்துவிட்டது? யுத்தம் போதும்
போதும் என்று ஆகி விட்டதா?
இரத்தத்தைக் கண்டு பயந்து
விட்டீர்களா? உயிர் மேலும்
உடைமை மேலும் ஆசை வந்து
விட்டதா? மானவன்மரே! நீர்
ஒருவராவது என்னுடைய
கட்சியில் இருக்கிறீரா?
அல்லது நீரும் இந்தப் புத்த
பகவானுடைய பரமானந்த
சிஷ்யர்களுடன் சேர்ந்து
சாத்விகத்தை மேற்கொண்டு
அஹிம்சாவாதியாகி
விட்டீரா?''

## அருள்வாக்கு

நீண்ட கால பொது நம்பிக்கைபடி, கவி மரபுப்படி (Poetic tradition படி) - தாய் மீன் தன் கண்ணால் முட்டையைப் பார்த்துப் பார்த்தே குஞ்சு பொரித்து விடும், அப்புறமும் தன் கண் பார்வையாலேயே அதற்குப் பசியாற்றிப் போஷித்துவிடும். தாய் மீனானது இப்படி திருஷ்டியாலேயே சிசு ரக்ஷணை பண்ணி விடுகிறது என்பது ஐதிஹ்யம் (ஐதீகம்) ரூபத்தில் மட்டுமில்லாமல், திருஷ்டி மாத்திரத்தால் குழந்தைகளை ரக்ஷிக்கிற குணத்தாலும் அம்பாளின் நேத்திரம் மீனாக இருக்கிறது. அம்பாளின் குழந்தைகள் யார்? எல்லாருந்தான்; எல்லாமுந்தான். ஈச்ரவனைக்கூட அவள் குழந்தைதான் என்று ஒரு பாவத்தில், தத்வார்த்தமாகச் சொல்லியிருக்கிறது. புல் பூண்டிலிருந்து ஆரம்பித்து பிரம்மாதிகள் வரை, எல்லாரையும் தன் கடாக்ஷ அம்ருதத்தால் நனைத்து நனைத்தே உய்விக்கிற பரம கருணையுள்ள லோக ஜனனிதான் மீனாக்ஷி. மீன் போல் ரூபமுள்ள அவளுடைய கண்ணின் திருஷ்டி பட்ட மாத்திரத்தில், மீன் குஞ்சுக்குத் தாயாரின் திருஷ்டியாலேயே வயிறு நிறைந்து விடுகிற மாதிரி, நம் மனஸ் நிறைந்து விடுகிறது. அவளுடைய கடாக்ஷமே ஞானப் பாலாக உயிரை, அறிவை வளர்த்து, உய்வித்து விடுகிறது.



"அநிமேஷா" - 'கண்ணைக் கொட்டாமல்' என்று 'ஸௌந்தர்ய லஹரீ' ச்லோகத்தில் மீனைப் பற்றிச் சொல்லியிருக்கிறது. மீனாக்ஷியும் கண்ணைக் கொட்டுவதில்லை. கொட்டினால் அந்த fraction of a second இல் (விநாடித் துளியில்) தன் கடாக்ஷாம்ருதம் குழந்தைகளுக்கு இல்லாமல் போய் விடுமோ என்பதால் எப்போதும் விழிப்போடு லோகத்தை ரக்ஷித்துக் கொண்டிருக்கிறாள்.

**- ஜகத்குரு காஞ்சி காமகோடி**
**ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி**
**சங்கராச்சார்ய சுவாமிகள்**

நகர மக்கள் பல்லவ சாம்ராஜ்யத்தையே அவமதித்து அழியாவசைக்கு ஆளாக்கவில்லையா? இதையெல்லாம் நமது வீர சேனாதிபதி மறந்து விட்டாரா?" என்று மானவன்மர் கூறியபோது, மாமல்லரின் பார்வை கூரிய வாளைப் போல் சேனாதிபதி பரஞ்சோதியின் மீது பாய்ந்தது.

அப்போது சேனாதிபதி பரஞ்சோதி, "பல்லவேந்திரா! மானவன்மருக்கு ஞாபகம் இருக்கும் விஷயம் எனக்கு ஞாபகம் இல்லாமல் போய் விடாது. அதைப் பற்றித் தங்களிடம் தனியாகப் பிரஸ்தாபிக்க வேண்டுமென்று இருந்தேன். ஆனால், மானவன்மர் சிவகாமி தேவியைப் பற்றிப் பேச்சு எடுத்து விட்டபடியால் நானும் இப்போதே சொல்லி விடுகிறேன். சமாதான ஓலை கொண்டு வந்த தூதர்கள் இன்னோர் ஓலை எனக்குத் தனியாகக் கொண்டு வந்தார்கள். சிவகாமிதேவி எழுதிய அந்த ஓலை இதோ இருக்கிறது. தயவு செய்து பார்த்தருள வேண்டும்!" என்று சொல்லித் தமது வாளின் உறையிலிருந்து ஓலை ஒன்றை எடுத்துச் சக்கரவர்த்தியிடம் கொடுத்தார்.

பல்லவேந்திரர் அந்த ஓலையைப் படித்தபோது ஏற்கெனவே சிவந்திருந்த அவருடைய கண்கள், இன்னும் அதிகமாகச் சிவந்து தணற்பிழம்புகளாகத் தோன்றின. அளவு மீறிய கோபத்தினால் ஓலையைப் பிடித்திருந்த அவருடைய கைகள் நடுங்கின.

படித்து முடித்ததும் அந்தப் பனை ஓலைச் சுருளைச் சக்கரவர்த்தி தம் இரு கரங்களினாலும் கிழித்துப் போட யத்தனித்தார்.

அப்போது சேனாதிபதி குறுக்கிட்டு, "பல்லவேந்திரா! ஓலை என்னுடையது. கருணை கூர்ந்து திருப்பிக் கொடுத்தருள வேண்டும்!" என்றார்.

(தொடரும்)




* 'கொஞ்சிப் பேசலாம்' - படத்தில் ஸ்ரீ

# மீண்டும் மூவர்



* 'சூரி' - விக்னேஷ், உமா

அப்பா தயாரிப்பாளர், மூத்த மகன் இயக்குனர், இளைய மகன் கதாநாயகன் என்பதாகக் களமிறங்கி, வெற்றி வாகை சூடி வரும் மூவர் கூட்டணிதான் கோடம்பாக்கத்தில் லேட்டஸ்ட். இந்த வரிசையில் தயாரிப்பாளர்



■ 'உனக்கு பதினெட்டு, எனக்கு இருபது'

ஏ.எம். ரத்னத்தின் மூத்த மகன் ஜோதி கிருஷ்ணா, தந்தையின் தயாரிப்பில் 'உனக்கு பதினெட்டு, எனக்கு இருபது' படத்தை இயக்கி முடித்துவிட்டார். இந்தப் படத்தை வெளியிடும்முன், இவரது தம்பி ரவிகிருஷ்ணாவைக் கதாநாயகனாகக் கொண்டு இயக்கும் படத்தைத் தொடங்கப் போகிறாராம். நல்லது... 'உனக்குப் பதினெட்டு எனக்கு இருபது' படம் எப்படியாம்?

# கூட்டணி!

"இந்தப் படத்தை இயக்க ஆரம்பிக்கும்போது எனக்கு இருபது வயசுங்க! இப்போ இருபத்து இரண்டு. ஒவ்வொரு ஷாட், சீனையும் பார்த்துப் பார்த்து எடுத்ததுலே எனக்கு இளமை கூடி இருக்கு! அவ்வளவு இளமை பொங்கும் கதை. ஆபாசம் துளிகூடக் கிடையாது" என்கிறார் அமெரிக்காவில் சினிமா படித்து இயக்க வந்திருக்கும் இவர். இதே படத்தை 'நீ மனசு நாக்கு தெலுசு' என்று தெலுங்கிலும் எடுத்திருக்கிறார்களாம். அதன் பாடல்கள் அத்தனையையும் எழுதி இருப்பவர் தயாரிப்பாளர் ஏ.எம். ரத்னம்.

கல்லூரிப் பேராசிரியர்கள் சினிமா இயக்க வரும் காலம் இது. லயோலா கல்லூரியின் மக்கள் பண்பாட்டுத் தொடர்பகத்தில் பேராசிரியராகப் பணிபுரிந்து வரும் இரா. காளீஸ்வரன், 'கொஞ்சிப் பேசலாம்' படத்தை கிட்டத்தட்ட இயக்கி முடித்துவிட்டார். மதுரை, நெல்லை, விருதுநகர் ஆகிய மூன்று மாவட்ட மக்களுக்கு இடையில் இருந்து வரும் இசைரீதியான தொடர்பைச் சொல்லும் கதை.

"இதை அப்பாவுக்கும் மகளுக்கும் இடையில் நடக்கும் உணர்ச்சிப் போராட்டமாக எடுத்திருக்கிறேன்" என்கிறார். அப்பா யார்? ராஜ்கிரண். மகள்? கன்னட தேசத்திலிருந்து தமிழ் பேசியபடி வந்திருக்கும் ஸ்ரீ. இசை? இளையராஜா.

இயக்குனர் காளீஸ்வரன் இதுவரை நூற்றி ஐம்பது குறும்படங்களை இயக்கி இருக்கிறார். அதில் ஐம்பத்தைந்து படங்கள், உள்நாட்டு, சர்வதேச விருதுகளைக் குவித்திருக்கின்றன.

"சூரி' படம்தான் என் கனவு, வாழ்க்கை எல்லாமே. கிட்டத்தட்ட மூன்று வருட காலமாக இதற்காகத் தவமிருந்து வருகிறேன். இந்தப் படத்திற்காக எழுபத்து ஏழு முறை மொட்டை அடித்துக் கொண்டிருக்கிறேன்" என்று அதிர வைக்கிறார், படத்தின் நாயகன் விக்னேஷ். நடிகர் விஜயகுமார் தயாரிக்க, செல்வன் இயக்கும் இந்தப் படத்தின் கதையைப் பற்றிச் சிலாகித்துப் பேசுகிறார்கள் கோடம்பாக்கத்தில்

- ரவுண்ட்ஸ்பாய்

உலகத்தை வெல்ல வேண்டுமானால், இதயங்களை வெல்ல வேண்டும். இதயங்களை வெல்ல, மிக எளிய வழி மற்றவர்களின் மொழியில் பேச வேண்டும். தெலுங்கு மொழிக்காரரிடம் தெலுங்கில் ஓரிரு சொற்களை பேசிப் பாருங்கள். அவர் முகம் மலர்ந்துவிடும். மலையாளியிடம் மலையாளத்தில் பேசினால், சாதாரணமாக மற்றவர் செய்யத் தயங்கும் உதவிகளை, மனமுவந்து செய்து விடுவார். "தாய் கை உணவிற்கும் தாய்மொழிக்கும் அலாதி ருசி" என்று கூறுவர். நம் தாய்மொழியை மற்றவர் பேசும் போது நம்மையறியாமல் நம் மனதில் அவர்களுக்கும் இடம் கொடுத்து விடுகிறோம்.

## அஞ்சல் வழியில் ஹிந்தியில் பேசக் கற்போமா?

உலக வரலாற்றை நோக்கினால், மிகப் பெரிய சாதனையாளர்கள் அனைவருமே அதிக மொழிகள் அறிந்தவர்களாக இருந்திருக்கின்றனர். விக்ரமாதித்யனுக்கு பறவைகள் பேசும் மொழிகள் கூடத் தெரிந்திருந்ததாம். உலக அழகி எனப் போற்றப் படும் கிளியோபாட்ரா இந்திய மொழிகள் கூட அறிந்திருந்தாராம். கேரள மாநிலத்திலிருந்து இறக்குமதியாகும் வாசனைப் பொருட்களை, மலையாள மொழியில் பேரம் பேசி வாங்குவாராம்.

மாமன்னன் அலெக்ஸாண்டர் நம் நாட்டை அடைந்த போது, நம் அரசர்களுடன் சமஸ்கிருதத்தில் பேசினாராம். அவ்வளவு தூரம் ஏன்? நமது முன்னாள் பிரதம மந்திரி 17 மொழிகள் அறிந்தவர். ஏன்! நமது முதலமைச்சர் கன்னடம், தெலுங்கு, தமிழ், ஹிந்தி, ஆங்கிலம், மலையாளம் என்று அனைத்து மொழிகளிலும் புலமை பெற்றவராயிற்றே!

இவ்வளவு மொழிகள் அறிந்து கொள்வது இருக்கட்டும். இந்தியா முழுவதையும் சுற்றிவர ஹிந்தி அறிந்திருப்பது அவசியம். தமிழ்நாட்டைத் தாண்டி கூடூரில் காலை வைத்ததுமே, ஹிந்தி பேசுவது அத்தியாவசியமாக உள்ளது. தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் மிகவும் புத்திசாலிகள். தொலைநோக்குடையவர்கள். பல திறமைகள் இருந்தும் ஹிந்தி தெரியாத காரணத்தால், பல சூழ்நிலைகளில் தன் திறமைகளை வெளிக்காட்ட முடியாமல், முதல் இடத்திற்கு வருவதற்கான அனைத்துத் தகுதிகள் இருந்தும், ஹிந்தி மொழி தெரியாத காரணத்தால் தொலைவிலேயே இருந்து விடுகிறார்கள்.

தமிழ் மொழியிலும் ஹிந்தியிலும் பொதுவான சொற்கள் 5000க்கும் மேற்பட்டு உள்ளன. அகரவரிசை தமிழில் எப்படி அமைந்துள்ளதோ, அதே வரிசையில்தான் ஹிந்தியிலும் அமைந்துள்ளது. எனவே தமிழ் மொழி அறிந்தவர்கள் ஹிந்தியை மிக எளிதில் கற்றுக் கொள்ள முடியும்.

இவற்றையெல்லாம் மனதில் கொண்டு பாரத ஸ்டேட் பாங்கு அதிகாரிகள் சங்க பயிற்சி மையம், பேச்சு மொழி ஹிந்தி அஞ்சல் வழிக் கல்வியை நடத்தி வருகிறது.

இம் மையத்தின் தலைவரும், பாரத ஸ்டேட் பாங்கு அதிகாரிகள் சங்கத்தின் பொதுச் செயலாளரும், SBOA பள்ளிகளின் தாளாளரும் (Correspondent) ஆன திரு. K. பார்த்தசாரதி, இப் பயிற்சி பற்றி விவரங்களைக் கூறினார்.

### DIPLOMA IN CONVERSATIONAL HINDI

(பேச்சு மொழி இந்தி டிப்ளமோ பயிற்சிக்கான விபரங்கள்)

1. இப் பயிற்சியில் மொழி ஆர்வமுடைய எவரும் சேரலாம் (பள்ளிச் சிறுவர் முதல் ரிடையர் ஆனவர் வரை)

2. இது ஆங்கிலம் மூலமாகவும் தமிழ் மூலமாகவும் நடத்தப்படுகிறது.

3. அஞ்சல் வழியில் நடத்தப்படுவதால் எங்கிருந்தபடியும் சுலபமாகப் படிக்கலாம்.

4. • இரு வழித் தொடர்பு• (TWO WAY COMMUNICATION) இப் பயிற்சியின் சிறப்பு அம்சமாகும். அதாவது ஒவ்வொரு மாதமும்




**26.7.03 அன்று நடந்த ஏழாவது பட்டமளிப்பு விழா (L.R) Dr. S. Vijaya - Course Director; Sri M.K.Chaturredi, G.M-10B, Shri D.S. Rishabadas, Director, Shri K. Parthasarathy - Executive Director Shri S. Krishnamurthy, (GM, SBI, Shri S. Gurumurthy C.A.) Leading Coloumist, Shri. M. Dharmarajan, Shri S. Subbiah, Finance Director, Dr. S. Subramanian.**

முதல் வாரத்தில் பாடங்கள் கூரியர்/POST மூலம் அனுப்பப்படும். ஒவ்வொரு பாடத்தின் இறுதியிலும் பயிற்சிகள் இருக்கும். இப் பயிற்சிகளைப் பூர்த்தி செய்து அனுப்ப வேண்டும்.

5. ஒவ்வொரு மாதமும் (இறுதி ஞாயிற்றுக் கிழமையில்) ஒரு நேர்முக வகுப்பு நடத்தப்படுகின்றது. இவ் வகுப்புகளில் அந்த மாதம் அனுப்பிய பாடங்கள் விளக்கப்படுவதுடன், இந்தி மொழியில் உரையாட (மதிய உணவுடன்) பயிற்சியும் அளிக்கப்படுகின்றது.

6. நேர்முக வகுப்புகளுக்கு வர முடியாதவர்களுக்கு உதவியாக மொழி விளக்க மேம்பாட்டு மையங்கள் திருச்சி, கோவை, மதுரை, தில்லி, ஹைதராபாத், மும்பை, ராஜஸ்தான் போன்ற இடங்களில் உள்ளன.

7. அகர உச்சரிப்பிலிருந்து பலவகை சூழ்நிலைகளில் பேசும் பயிற்சிகளைக் கொண்ட இரட்டை ஒலிநாடாக்கள் (TWIN CASSETTES) வெளியிடப்பட்டுள்ளன. இவற்றுடன் வழங்கப்படும் துணை நூலைப் படித்தவண்ணம், ஒலிநாடாக்களைக் கேட்டால், மிக விரைவில் மொழியைக் கற்றுக் கொள்ளலாம். இந்த ஒலி நாடாக்களைப் பெற விரும்புபவர்கள் ரூ. 150/-க்கான டிமாண்ட் டிராப்ட் SBIOA INSTITUTE. CHENNAI என்ற பெயரில் எடுத்து தனியாக அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

8. பயிற்சியில் தேறியவர்களுக்கு வருடா வருடம் நடக்கும் பட்டமளிப்பு விழாவில் 'DIPLOMA IN CONVERSATIONAL HINDI' சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன. இப் பட்டமளிப்பு விழாவில் இதுவரை, ஆற்காடு இளவரசர், முன்னாள் பிரதமர் சந்திரசேகர், மறைந்த பாரத ரத்னா சி. சுப்ரமணியம். டாக்டர் கிரண்பேடி, ஐ.பி.எஸ்., பாரத ஸ்டேட் வங்கியின் தலைமைப் பொது மேலாளர் திரு. R.C. ஷர்மா, அருட்செல்வர் Dr. N. மஹாலிங்கம், திரு. எஸ். குருமூர்த்தி (Chartered Accountant and Eminent Columinist) போன்றவர்கள் முக்கிய விருந்தினராக உரை நிகழ்த்தியுள்ளனர்.

9. பயிற்சிக் காலம் ஆறு மாதம் (ஜனவரி முதல் ஜூன் வரை ஜூலை முதல் டிசம்பர் வரை) அடுத்த வகுப்பு ஜனவரி 2004ல் துவங்க உள்ளது.

10. பயிற்சிக் கட்டணம் ரூ. 500/- (நேர்முகப் பயிற்சி, தேர்வுக் கட்டணம் உட்பட)

ஜனவரி 2004ல் துவங்கவிருக்கும் பயிற்சியில் சேர விரும்புபவர்கள் ரூ. 100க்கான டிமாண்ட் டிராப்ட் SBIOA INSTITUTE, CHENNAI என்ற பெயரில் எடுத்து சுயவிலாச மிட்ட, தபால் தலையுடன் (ரூ. 10) கூடிய உறையுடன் கீழ்கண்ட முகவரிக்கு எழுதவும். உறையின் மேல் English Medium/Tamil Medium என்று பயிற்சி மொழியைக் குறிப்பிடவும். (இந்த ரூ. 100/- பயிற்சிக் கட்டணத்திலிருந்து கழித்துக் கொள்ளப்படும்.)

**The Executive Director,**
**SBIOA Institute,**
**229, N.S.C. Bose Road,**
**P.B. No. 1279,**
**Chennai - 600 001.**
**Phone : 044-25340226**

# கடைத்தெரு கலாட்டா!

என் கணவரும் நானும் ஹனிமூனுக்கு பெங்களூர் போயிருந்தோம். மெஜஸ்டிக் ஏரியாவைச் சுற்றி, இறுதிக்கட்ட ஷாப்பிங் செய்துவிட்டு, பகல் இரண்டரை மணிக்குப் புறப்படும் பிருந்தாவன் ரயிலைப் பிடிப்பதாக பிளான்!

செருப்புகள், ஸ்வெட்டர், டீ-ஷர்ட், சிறு அலங்கார விளக்குகள் என ஏகப்பட்ட பொருள்களை வாங்கி பைகளை நிரப்பிக் கொண்டு, 'காமத்' ஹோட்டலில் சாப்பிட்டுவிட்டு, ரயில்வே ஸ்டேஷனுக்கு வந்தோம்.

வண்டி கிளம்ப பதினைந்து நிமிடம் இருக்கும்போது, ஒரு உருப்படி கணக்கில் உதைத்தது. அதுவும் என் கணவர், எனக்காக ஆசை ஆசையாகப் பார்த்து வாங்கிய உல்லன் ஷால் இருந்த பார்ஸல் மிஸ்ஸிங்!

"இரு... ஒரே நிமிஷத்தில் வந்துடறேன்" என்று ரயிலை விட்டுக் குதித்து ஓட ஆரம்பித்துவிட்டார்.

"போனால் போகுதுங்க. ரயில் கிளம்பிடும்" என்று நான் பதறியதை அவர் கண்டு கொள்ளவே இல்லை.

அவர் கிளம்பிப் போனதும், தற்செயலாகக் குனிந்து பார்க்கிறேன். சீட்டுக்கு அடியில் பவ்யமாய் கிடந்தது அந்தப் பழிகார பார்ஸல். என் பல்ஸ் ஏகத்துக்கு எகிற... ஐந்து பத்து என நிமிடங்கள் கரைந்தோடின. வண்டி கிளம்பி விட்டது.

நல்லவேளை... பக்கத்தில் இருந்த தம்பதியிடம் என் நிலைமையை விளக்கி, அவர்களிடமிருந்த செல்ஃபோனை வாங்கி, என் கணவரின் செல்லுக்குத் தொடர்பு கொண்டேன்.

"டோன்ட் வொர்ரீ! நான் டாக்ஸி பிடித்து அடுத்த ஸ்டேஷனில் வந்து ஏறிக் கொள்கிறேன்" என்று சமாதானப்படுத்தினார்.

என்னிடம் ஒற்றைக் காசு இல்லை.



'கடைத் தெருவில் நடந்த கலாட்டா' பற்றி எழுதி அனுப்பும்படி கேட்டிருந்தோம். பெருமளவில் கலந்து கொண்டு சிறப்பித்தவர்கள் பெண்கள்! பரிசு பெற்ற சம்பவங்களை எழுதியவர்களும் பெண்கள்! இதிலிருந்து சகலமானவர்களும் அறிவது என்னவென்றால்...

பெண்கள், ஷாப்பிங்கின் கண்கள்!

மகளிர் ஆசை, கடைத் தெருவின் கலாட்டா ஓசை!

இனி, வாசகிகளின் ஷாப்பிங் அனுபவங்கள் நீங்கள் ரசிக்க...



டிக்கெட் பரிசோதகர் வேறு வந்து எதிரே நின்று முறைக்கிறார். எனக்கு பயத்தில் அழுகையே வந்துவிட்டது. நல்லவேளை. பக்கத்தில் இருந்த தம்பதி எடுத்துச் சொல்லி, ஏதோ காப்பாற்றினார்கள்.

என் கணவர் எப்படியோ டாக்ஸி பிடித்து அடுத்த ஸ்டேஷனில் வந்து ஏறிக் கொண்டார், என்றாலும் எனக்கு வயிற்றைக் கலக்கிவிட்டது.

"ஸாரிடா!" என்று பல முறை மன்னிப்புக் கேட்டுக் கொண்டவர், "இதை உங்க வீட்டில் யார் கிட்டேயும் சொல்லி என் மானத்தை வாங்கிடாதே! பெண்ணைப் பொறுப்பா பார்த்துக்கத் தெரியாதவன்னு நினைச்சுடப் போறாங்க" என்று ரொம்பக் கெஞ்சினார். நானும் சத்திய சொரூபியாக, 'சரி' என்றேன்.

இரண்டு நாட்கள் கழித்து, நானும் என் கணவரும், தியாகராய நகருக்கு ஷாப்பிங் போயிருந்தோம். கூடவே என் பெற்றோரும் தங்கைகளும் வந்திருந்தனர். "கிரெடிட் கார்டுகளைத் தேய்த்துத் தேய்த்து, ஏதேதோ வாங்கி, மாப்பிள்ளை குவிக்கிறாரே'' என்று என் அம்மா கவலைப்படத் துவங்கும் அளவுக்கு ஷாப்பிங் உற்சாகம் கரை புரண்டது.

கடைசியாக மின்சார ரயிலில் ஏற ஸ்டேஷனுக்கு வந்தோம். எல்லாரையும் ஏற்றிவிட்டு, இவர் நிற்க, வண்டி அறிவிப்புக் கூட இல்லாமல் கிளம்பிவிட்டது. என் அப்பா, ''மாப்பிள்ளை... மாப்பிள்ளை'' என்று கத்த, என் தங்கைகளோ "மாமா... ஏறுங்க.. மாமா" என்று அலற... எப்படியோ தடுக்கி, கிடுக்கி பெட்டிக்குள் ஏறிவிட்டார்.

"ஐயையோ! என்னங்க! பெங்களூர்லே தான் பிருந்தாவன் வண்டியைக் கோட்டை விட்டீங்கன்னா, இங்கே லோக்கல் டிரெயினையும் மிஸ் பண்ணணுமா? இவ்வளவு விளையாட்டுத்தனமாவா இருக்கிறது?'' என்று யாரோ சத்தம் போட்டு கோபிக்கும் குரல் கேட்டுப் பின்னால் திரும்பினால்...

பிருந்தாவனில் எங்களுக்கு உதவிய தம்பதி! பாவம்.. மூடி மூடி மறைச்ச ரகசியம். மாம்பலம் ரயில் நிலையத்தில் மளுக்கென்று மடை திறந்து மல்லாந்து விட்டது.

அடுத்த வாரம் முழுக்க என் கணவர்



அமெரிக்காவிலிருந்து வந்திருந்த என் மகள் மற்றும் பேரக் குழந்தைகளுடன், சென்னையின் மிகப் பெரிய ஜவுளிக் கடைக்குப் போனேன். என் மகள் உமா, ஷாப்பிங் ஜோதியில் கலந்துவிட, பேரன்கள், அர்ஜுன், ரோஹித் இருவரையும் மேய்க்கும் வேலையில் நான் பிஸியாகிப் போனேன். இரட்டைவால் குரங்குகள்! வீட்டிலிருந்தே கொண்டு வந்திருந்த பொம்மைகளை வைத்துக் கொண்டும், ஓடிப் பிடித்தும் விளையாட ஆரம்பித்தார்கள். இலேசாக ஆரம்பித்த கலாட்டா, வலுத்து தீவிரமடைந்ததும், கடை சிப்பந்திகள் "இங்கெல்லாம் விளையாடக் கூடாது" என்று மிரட்டினார்கள். "பாட்டி... வாங்க போகலாம். தே ஆர் ரூட்" என்று அடம் பிடித்து விட்டார்கள். அந்த ரோஷ சிகாமணிகளைச் சமாதானப்படுத்தி, உட்கார வைத்து 'அத்திரிமாக்கு கொழுக்கட்டை' கதையை, ரீல்ரீலாக நீட்டிக் கொண்டிருந்தேன். கதை முடியவும், என் மகள் உமா வந்து சேரவும் சரியாக இருந்தது. கடையின் உரிமையாளர் எங்களை நெருங்கி, "வெளி நாட்டில் வளரும் குழந்தைகளா? ரொம்ப கெட்டிக்காரக் குழந்தைகள்" என்று பேரன்

அப்செட்! "ஷாப்பிங்கும் புளித்ததடி! ரயிலும் வெறுத்ததடி சகியே" என்று மூடு அவுட் ஆகிக் கிடந்தவரை, பழையபடி மாற்ற, ரொம்பவே சிரமப்பட்டேன். அந்தக் கதையை அடுத்தப் போட்டியில் எழுதுகிறேன்.

- ஆர். சுசீலா



இருபது வருஷங்களுக்கு முன் நடந்த கதை! கோயமுத்தூர் ராஜ வீதியிலுள்ள ஒரு கடையில் ஜவுளி எடுக்கப் போயிருந்தேன். ஜமக்களைக் கொஞ்சினார்.

"அங்கிள்... எங்க அமெரிக்காவுலே எங்களை மாதிரி குழந்தைகள் ஜாலியாக விளையாடறதுக்குன்னே சில்ரன்ஸ் ப்ளே பார்க் இருக்கும். உங்க கடையிலும் வைச்சா, இன்னும் வியாபாரம் ஜோரா நடக்குமே!" என்றான் அர்ஜுன் சட்டென்று.

கடைக்காரருக்கு அந்த யோசனை பிடித்துப் போயிருக்க வேண்டும். கை நிறைய சாக்லேட்டுகள் கொடுத்து அனுப்பி வைத்தார்.

"அம்மா... ஐ லைக் தி ஷாப்! தே ஆர் ஃப்ரெண்ட்லி. ஆனால் பாட்டிக்குத்தான் போரடிச்சுடுச்சு" என்று ரிகார்டை அப்படியே மாற்றிப் போட்டார்கள். அட வாண்டுகளா!

- பத்மா வெங்கட்ராமன்

கோவையின் பிரபல ஜவுளிக் கடை அது. தீபாவளிக்குத் துணி வாங்கப் போயிருந்தேன். நான் சென்ற அன்று மாலை விஜயதசமி என்பதால், கடைக்குள்ளே பூஜை நடந்து கொண்டிருந்தது.

"யாராவது சுவாமிப் பாட்டு பாடுங்களேன்" என்று குருக்கள் குரல் கொடுக்க, "அம்மா... நீங்க பாடுங்க..." என்று கடைப் பெண்மணிகள் என்னைத் தூண்டி விட்டனர்.

அழகான அலங்காரம், தெய்வீகச் சூழல், பக்தி உணர்வு எல்லாம் கலந்த பரவசம், என்னை மூழ்கடிக்க, துர்கா, லக்ஷ்மி, சரஸ்வதியைப் போற்றும் பாடலைப் பாடினேன். எல்லோரும் கைதட்டிப் பாராட்டினார்கள். அத்தோடு அந்தச் சம்பவத்தை மறந்தே விட்டேன்.

தீபாவளிக்கு இரு நாட்கள் முன்னதாக, ஒரு கார் எங்கள் வீட்டுக்கு வந்தது. அந்தக் கடை உரிமையாளர் ஒரு தாம்பாளத்தில் பூ, பழம், புடைவை, ரவிக்கையோடு இறங்கினார்.

"நீங்கள் ஆத்மார்த்தமாகப் பாடிய

காளத்தில் அமர்ந்து, மஞ்சள் நிறத்தில் அரக்கு பார்டர் வைத்த பட்டுப் புடைவை ஒன்றை நான் செலக்ட் செய்து முடிக்கவும், ஒன்றரை வயதுப் பெண் குழந்தை ஒன்று, ''அம்மா...அம்மா... தூத்தி... தூத்தி'' என மழலை பேசியபடி என் கழுத்தைக் கட்டிக் கொண்டது. அந்த நிமிடத்தில் ஓராயிரம் உணர்வுகள் சுழலெடுத்து மூழ்கடித்தது!

''இது என் குழந்தை இல்லை...'' என்று நான் பதைத்து மறுத்தபோது, கடைக்காரர் கொஞ்சமாவது பதைக்க வேண்டுமே!

''ஏம்மா, குழந்தையைப் பாருங்க! துறு துறுன்னு ரோஜாச் செண்டு மாதிரி இருக்கு! அம்மானு ஆசையா ஒட்டிக்கிச்சு! உங்க அட்ரஸைக் கொடுத்துட்டு, குழந்தையைக் கூட்டிட்டுப் போங்க... யாராவது தேடி வந்தா, உங்க வீட்டுக்கு அனுப்பறோம்'' என்று கூலாகச் சொல்லி விட்டு, வியாபாரத்தைத் தொடர்ந்தார். நான் செய்வதறியாது தவித்துக் கொண்டிருந்தபோது,

'லீலாராம் ஷிவாராம்' கடையில் வேலை செய்யும் என் உறவினர் அங்கு தற்செயலாக வந்தார். ''என்னம்மா இது...? எட்டு மாசம் முன்னேதானே உனக்குக் கல்யாணமே ஆச்சு! அதெப்படி அதுக்குள்ளே குழந்தை!'' என்றார்.

''காற்று வாங்கப் போனேன். ஒரு கவிதை வாங்கி வந்தேன்னுதானே பாட்டிருக்கு... நான் மஞ்சள், சேலை வாங்கப் போனேன். ஒரு மழலை வாங்கி வந்தேன்னு மாத்திப் பாடலாம் அண்ணே'' என்று சொல்லி விளக்கம் தந்தேன். அதற்குள் குழந்தையின் நிஜப் பெற்றோரே பதற்றத்துடன் அங்கு வந்து சேர, குழந்தை ஒரிஜினல் அம்மாவிடம் தாவிப் போனது.

என்னைப் போலவே நிறம், உடல்வாகு, புடைவை, கண்ணாடி அணிந்திருந்தாள் அந்தப் பெண்.

''அம்மா... தூத்தி... தூத்தி...'' என்று சிரித்த குழந்தையை, அந்தத் தாய் ஆனந்தக் கண்ணீருடன் முத்தமிட்டு அணைத்துக் கொண்டாள்.

பயம், பதற்றம், குழப்பம், பரிதவிப்பு என ஏதேதோ வாட்டி எடுக்க, உறைந்து போயிருந்த நானும் சிரித்தேன். இப்போது அந்த மஞ்சள் புடைவை நிறமிழந்து பழசாகிவிட்டது. ஆனால் அந்த மழலையின் முகமும், அழுத்தமான அணைப்பும் அப்படியே பசுமையாக இருக்கிறது.

- சாந்தா நாராயணன்

வேளை, எந்த வருடமும் இல்லாத அளவுக்கு வியாபாரம் உயர்ந்து விட்டது. உங்கள் பிரார்த்தனை எங்களுக்கு வரமாக அமைந்துவிட்டது'' என்றார் நன்றியுடன்.

மகிழ்ச்சி நிரம்பிய ஷாப்பிங் அனுபவம்தானே!

-பி.பத்மா இருமலை



## அமரர் கல்கி நினைவு இளமைச் சிறுகதைப் போட்டியில் பிரசுரத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட சிறுகதை

# விதை

அம்மை ரொம்ப சந்தோஷம் காட்டினாள். ரொம்ப நாளுக்குப் பிறகு... (நான் என்ன நாள்... ஏழெட்டு வருஷங்களுக்குப் பிறகு அல்லவா?) நான் கிராமத்திற்கு வரச் சம்மதித்திருக்கிறேன். கல்லூரிப் படிப்பு முடிந்த பின் ஒருதரம் போனதைத் தவிர கடைசியாக அப்பா சாவுக்குத்தான் போயிருந்தேன். அதன்பின் எனக்குக் கல்யாணம் ஆனபோது. மகன் பிறந்தபோதெல்லாம் அம்மைதான் சென்னைக்கு வந்து மருமகளை... பேரனைப் பார்த்துப் பார்த்துப் போனாள்.


ஆறு வயது மகன் கவீனுக்குப் பாட்டி என்றால் அத்தனை பிரியம். என்னுடைய இளமைக் குறும்புகளைச் சொல்லக் கேட்பதில் அதி சுவாரஸ்யம் அவனுக்கு.

"நிஜமாவா? கோபம் வந்தா கிணற்றிலா போய் ஒளிந்து கொள்வார்டாடி!"

"உங்கப்பனுக்குக் கூட்டாளிமாரு அதியம். அதிலேயும் அந்த 'முடி வெட்டி கோவிந்தன் மவன்' கூட, சேர்ந்தான்னா, ஒரு நிலைக்கு நிக்க மாட்டான். நின்ன படிக்கு ஆருட்டயும் சொல்லாம கன்யா வரிக்குக் (கன்னியா குமரி)கூட சைக்கிளு சமட்டிப் போயிருவான். அந்தில அவுக அப்பாரு சத்தம் போட்டா இவனுக்குக் கோவம் வந்துரும். ஒடனே கெணத்துல குதிச்சு ஒளிஞ்சு இருப்பான். பொறவு, அவரு டார்ச்சையும் நான் சிம்மிணி வெளக்கையும் எடுத்துக்கிட்டு கிணத்தடியிலே 'கண்ணே மணியே'ன்னு சமாதானப்படுத்தணும்."

"அப்புறம்?"

"பொறவு என்ன பொறவு. மகராசன் சமாதானமாயி பைய்ய மேலேறி வருவாரு. புள்ள மேல வந்ததும்தான் தாமசம், அவுக அப்பாரு அவனைத் தூக்கிப் போட்டு வெளுப்பாருல்ல..."



# புதிது

ஐஷ்வர்யன்



"என்ன அம்மை... இந்த ஊரிலேயே பெரிய குடும்பம் நம்மளதுதான். நம்ம அப்பாருதான் மொத மொதல்ல பட்டணம் பார்த்தவரு. மோட்டார் சைக்கிள் வெச்சிருக்கறவரு... ஆனா நீ வடிச்ச காதும், வெற்றிலை வாயுமா ஒட்டு மொத்த பட்டிக்காடா இருக்கியே..."

அப்போதும் அம்மைக்குச் சிரிப்புத்தான்.

"எலே மக்கா, நான் படிக்காத தக்குறி தானே... உங்க ரெண்டு பேரையும் 'ராசா... ராசகுமாரா'ன்னு கொண்டாடு இல்லே. அது போறும்ல எனக்கு."

அதனால்தான் இத்தனை காலம் மறந்திருந்த என் பால்ய சினேகிதன் முருகனின் நினைவுகூட அடிக்கடி என்னை ஆக்கிரமிக்கத் துவங்கியுள்ளது. எங்கள் ஊர் நாவிதன் மகன். அம்மையின் பாஷையில் அந்த 'முடி வெட்டி கோவிந்தன் மகன்'. எட்டாம் வகுப்பு வரை என்னோடு படித்தவன். எனக்கு இணையாக படிப்பில் சிறப்பாய் விளங்கியதாலா, இல்லை என் ரசனையோடு ஒத்துப் போனதாலா தெரியவில்லை. ரொம்ப நெருங்கிய தோஸ்தாகி விட்டான்.

**மா**சம் பிறந்ததும் 'ஒண்ணாம் தேதி கை நீட்டம்' என்று காலையிலேயே கோவிந்தன் வந்து விடுவார். அப்பாருக்கு வெட்டி முடித்ததும் என் முறை.

கோவிந்தன் கத்திரியை கையில் எடுத்தாரா, இல்லை ஒன்றிரண்டு இழையை வெட்டவே ஆரம்பித்து விட்டாரா நினைவில்லை. தண்ணீர் காய்ச்சிக் கொண்டிருந்த அம்மா கூப்பாடே போட்டாள்.

"வாண்டாம்... அவனுக்குத் தலையிலே முடி அதியம் இல்லியே. இப்பம் என்ன அவசரம்?"

கோவிந்தன் குழப்பத்தோடு மலங்க மலங்க விழித்தார். சனமாய்ச் சொன்னார்.

"இல்லம்மா, ஒருபாடு வளந்திருக்கி. கட்டையா வாண்டாம்னா நான் லேசா வெட்டி பாக்கேன்."

அம்மை மூர்க்கமாகச் சொன்னாள்.

"நீரு அவருக்கு மட்டும் வெட்டினா போதும். இவன் இனி டவுனுல போய் வெட்டிப்பான்."

கோவிந்தன் முகம் வாடியே கத்திப் பெட்டியை எடுத்துப் போனார். அவர் முருகனிடம் ஏதாவது சொன்னதாலா, இல்லை ஊர் பள்ளியில் முருகன் எட்டாவதோடு நின்றுவிட, நான் மட்டும் மேலே படிக்க டவுனுக்குப் போனதாலா... எதனாலோ அந்த பழைய அன்னியோன்னியம் குறைந்து போய் பார்த்தால் சிரிக்கிற நட்பையே முருகன் தர ஆரம்பித்தான். இடையில் அவன் பாத்திர வியாபாரம் செய்ய, கேரளாவுக்கு வேறு போகவே அந்த பால்ய சினேகம் கிட்டதட்ட காணாமல் போனது போலத்தான்.

**அ**டுத்தவருடம்தான் அப்பாரு தவறிப் போனார். அப்போதுதான் மறுபடி முருகனைச் சந்தித்தேன். அந்தச் சோக நேரத்தில் அவனைப் பார்த்தது ஆசுவாசம் தந்தாலும், அப்போதும் அம்மையின் குறுக்கீடால் ஒரு கசப்பு அனுபவம். கண்ணில் நீரோடும் கையில் கத்தியோடும் என்னை

நெருங்கிய கோவிந்தன், காரியத்தைத் துவக்க முடியாமல் தவித்தார்.

தலைக்கருகே முருகனின் கத்தி வருமுன்னரே அம்மையின் கூப்பாடு துரத்தியது.

"ஆரு முருகனா வெட்டப் போறான்... ஏன் கோவிந்தனாருக்குக் கனியாதோ?"

"இல்லம்மா... முருகனும் தொழில் படிச்சாச்சு..."



"புதுசா படிச்சவன் என் மவன் தலையக் கீறி ரத்தம் பாக்கவா? நீரு செஞ்சா போரும்."

எரிச்சல் மண்டியது. இழவு நேரத்திலுமா இப்படி மனிதர்களை நாட்டாமை பண்ணுவது?

புறப்படு முன்பாக அம்மையிடம் நான் பட்டணத்தில் குடியிருக்கும் வீட்டு ஓனர் மகளைக் காதலிப்பதைச் சொன்னபோது பெரிய சலனம் தட்டுப்படவில்லை.

"மவனுக்குப் புடிச்சதுன்னா இந்த அம்மைக்கு சந்தோசம்தான்.ம்... ஒனக்கு எங்க வசதிப்படுதோ அங்க வச்சு கல்யாணம் எடு. அம்மை கண்டிப்பா வருவேன்."

அம்மை வந்தாள். சென்னையின் நாகரிக மனிதர்களாம் என் மனைவி குடும்பத்தினருக்கு முதலில் காட்சிப் பொருளாய், கேலிக்குறியீடாகத் தெரிந்தாலும் போகப் போக அம்மையின் அன்பிலும் பொறுமையிலும் அசந்து போய்விட்டார்கள். இந்த முறை வந்தவள், எங்களையும் ஊருக்கு அழைத்துப் புறப்படுகிற தினத்தில் மொத்த குடியிருப்பையும் கலகலக்க வைத்து விட்டாள். பயணத்திற்கு முன்பாக மகனுக்கும் எனக்கும் சிகைதிருத்தம் செய்துகொள்ளப் போய்வந்தபோது தாமதமாகிவிட்டது. காம்பவுண்ட் வாசலிலேயே அம்மை!

"புள்ளையையும் கூட்டிட்டு இது என்ன போக்கு?"

"சலூன்லே ஒரே கூட்டம்."

"அதுக்குன்னு செல்லம்போல வெட்டாம பாதியிலே புள்ளையைக் கூட்டிட்டு வந்துட்டியே."

பேரனின் தலையைத் தடவி அடர்த்தி பார்த்தாள்.

"ஓம் பேரனுக்கு 'மஷ்ரூம் கட்'தான் வேணுமாம்."

"இந்த நாய்க் குடை வெட்டுக்கா அம்பது?"

அருகே நின்றிருந்த எல்லோரும் வாய் விட்டுச் சிரிக்கையிலும் 'மஷ்ரூம் - காளானுக்கு எங்க ஊர் பாஷையில் நாய்க்குடை என்று அத்தனை சரியாக அம்மை ஒப்பிட்டுச் சொன்ன விசித்திரத்தை வியந்து நின்றேன். ஆனாலும் மேலே வந்ததும் மறக்காமல் கேட்டேன்.

"இப்ப முருகன்தானா ஊராருக்கு வெட்டுறது?"

"பின்னே வேற யாரு? நம்ம ஊருல அப்பன் தொழில்தானே புள்ளைக்கும் வருது? ஆனா அந்த நாசமாப் போன ஊர்க்காரனுவள நம்பி ஒரு பலனுமில்லியே. ரொம்ப சிரமப்படறான்."

மனசுக்கு வலித்தது. நண்பன் பவிசாக வாழுகிறானாக்கும் என்று அவன் நினைக்கலாம். அவனுக்குத் தெரியுமா என் அவஸ்தைகள்! ஒரு வருடத்தில் வாடகைக்கு எடுத்த இருபதுக்கு பதினைந்தடி கடையைத் தவிர, எல்லா அலுவலக உபகரணங்களையும் விற்றுத்தான் கடையையும், நடத்தி வந்த பத்திரிகையையும் மூட வேண்டிய நிலைமை. கடை இருந்த அந்தச் சாலையில் புது பேருந்துவளாகம் வருவதை ஒட்டி பரபரப்பாகிவிடவே கடையை விட மனமின்றி, வெறுமனே வாடகை கொடுத்து வந்தேன். ஆறு மாதங்களுக்கும் மேலாக!

இந்த இறுக்க நிலையில் அம்மை வந்த போதுதான் முதன்முதலாக மனைவியே

விருப்பம் காட்டினாள், கிராமத்திலே போய் ஒரு வாரம் இருந்துவர.

**வீ**டு போய்ச் சேர்ந்து நானும் சுஷீலும் ஆசை தீர கிணற்று நீர் இறைத்துக் குளித்து முடிக்கு முன்னரே வாசலில் முருகனைப் பார்த்ததுமே, எனக்கும் கண்கள் நிறைந்து விட்டன.

"வாடா, ஏன் அங்கேயே நின்னுட்டு? நானே உன்னைத் தேடி வரத்தான் இருக்கேன்."

"உன் புளுவை எல்லாம் நான் நம்ப மாட்டேன். இப்பம் நான் பாக்க வந்தது உன்னை இல்ல. உன் புள்ளை வந்திருக்கானாமே. அது அறிஞ்சதும் வாய்க்கால்ல பாதி குளியல்ல இருந்து ஓடோடி வந்திருக்கேன். புள்ளையைக் கண்ணுல காட்டுப்பா."

"சுஷீல், மோனே சுஷீல்."

"இது யார் தெரியுமா? டாடியோட ஸ்கூல் டேஸ் பெஸ்ட் ப்ரண்ட் மிஸ்டர் முருகன்."

சொல்லி முடிக்கு முன்னரே... முருகன் பாய்ந்து சுஷீலைத் தூக்கி அணைத்தான். கன்னத்திலும் நெற்றியிலும் நிறைய முத்த மிட்டான். அம்மை தரும் முத்தங்களால் கிராமத்துப் பாசம் சுஷீலுக்குப் பரிச்சயமாகி இருக்கவே, தடுக்காமல் வெட்கத்தோடே அத்தனை முத்தங்களையும் சுவீகரித்தான்.

இருட்டுப் பூனை விழிகளாய் முருகன் கண்ணிலே பாசமும் நேசமும் மினுமினுத்துச் சுடர் விட,

"உன் பிள்ளையைப் பார்த்தா அந்தக் காலத்திலே உன்னைப் பார்த்தது போலவே இருக்கு. புள்ளையைப் பார்த்துப் பார்த்து கொதி தீரலையே. அம்மை, புள்ளைக்கு உப்பும் மொளவும் சுத்திப் போடுங்கம்மா..." என்று உள் நோக்கிக் கூவினான்.

"ஆரு முருகனா... போக்கத்த பயலே, ஒன் கண்ணு பட்டா புள்ளைக்கு திருஷ்டி வரப் போவுது... நீ அவனுக்குச் சித்தப்பா முறையில்லடா ஆவும்."

வெற்றிலை வாயை முந்தானையால் துடைத்தவாறே வாசலுக்கு வந்தாள் அம்மை.

"இப்பம் சொன்ன வார்த்தை சத்யம்னா நான் ஒன்னு கேப்பேன். அம்மை தட்டாம சம்மதிக்கணும்."

"கேளுலே..."

"அம்மை, உங்க பேரனுக்குப் பட்டணத்



"நிதி நிலைமை மோசமாக உள்ளது- நம் மாமன்னர் தீபாவளி இனாம் கேட்டு வீடு வீடாக வர உத்தேசித்துள்ளார். அவ்வமயம் அள்ளி வழங்கும்படி குடிமக்களைக் கேட்டுக் கொள்கிறோதம்!" - வசந்தி வள்ளுவன்

திலே பெரிய பெரிய கடையிலெல்லாம் போய் முடி வெட்டுவீங்கதான். ஆனா இந்த செல்லப் புள்ளைக்கு என் கையால ஒருக்கா முடி வெட்ட நீங்க சம்மதிக்கணும்."

"அம்புட்டுதானே? வெட்டேன்."

"அம்மை... நேத்தைக்குத்தானே முடி வெட்டுனது..."

அம்மை லட்சியம் செய்யவில்லை.

"இப்பம் கையிலே கத்தியும் கத்திரியும் இருக்கா?"

"இதோ ரெண்டே நிமிசத்திலே எடுத்து வாரேன்" முருகன் பாய்ந்து வெளியேறினான்.

"என்ன அம்மை இது? புள்ளையை ஆசையா பாக்க வந்தவனைப் போய்.. ச்சே ச்சே, உன்னை எனக்கு மனசிலாக்கவே முடியலை. அன்னைக்கு அப்பாரு சாவுக்கு முருகனை என் தலையிலே கத்தி வைக்கவே விடலை. அது மட்டுமா, சின்ன வயசிலே ஒரு தரம் எனக்கு முடி வெட்டத் துவங்கின கோவிந்தனையே பாதியிலே வெரட்டுனே... இப்பம் என்னடான்னா?"

"அட, அதெல்லாம் இப்பவும் ஒனக்கு ஓர்மையிலே இருக்கா...? நல்ல கதைதான் போ!"

"லேய்... என்னதான் ஊருக்கும் நமக்கும் முடிவெட்டி கோவிந்தன், நாசுவன் ஆனாலும் முருகனுக்கு அவன் தகப்பன்தானே... தன் அப்பாரு தன் கூட்டாளி உனக்கு முடி வெட்டறதைப் பார்த்தா அவக மனசு சங்கடப்படும்லே? அன்னைக்கு நீ வூட்டுக்குப் பின்னால கோவிந்தன் கிட்ட தலையைக் கொடுற நேரம், உன்னைப் பார்க்க முருகன் வந்ததை நான் பார்த்துட்டேன். அதனாலத்தான் கோவிந்தனை



## அருளின் கீற்று!

✉ பதினாறு வாரங்கள் போனதே தெரியவில்லை. அன்பின் ஊற்றாக அருளுரைகள் வழங்கிய ஸ்ரீஸ்ரீ ரவிசங்கரும் அருவியென தொகுத்த சாருகேசியும் வணக்கத்திற்குரியவர்கள்!
நெய்வேலி, எஸ். ஸ்ரீகாந்த்.

✉ ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர்ஜியின் அருளுரைகளைப் படித்து வந்தபோது, நீண்ட நாட்களாக மனத்திற்குப் பாரமாக இருந்து வந்த சுமைகள் அகன்றன. அது அன்பின் ஊற்று மட்டுமல்ல; அருளின் கீற்றும்கூட!
சென்னை - 81, கே.என். பாலகிருஷ்ணன்.

✉ 'அன்பின் ஊற்று' - மிகச் சிறந்த தலைப்பு. குருஜியின் மறுபக்கத்தை ஒரு பக்கத்திலும், வாழ்க்கைக்கான நல்வழியை வகுக்கும் அருளுரையை ஒரு பக்கத்திலும் புதிய முறையில் தொகுத்து அசத்தி விட்டீர்கள்.
சென்னை - 61, என். சுஜாதா.

• நம்மில் உள்ள திவ்ய சக்திகளைத் தூண்டவும், ஆன்ம உணர்வுக்குப் புத்துயிர் அளிக்கவும் பயிற்சி தந்து நற்பணி செய்து விட்டீர்கள்.
சென்னை - 73, கே.வி. ராமன்.

அதட்டி விரட்டி வுட்டேன். பாக்குறதுக்கே வுடாதவ, ஒன் ப்ரண்டு கையால உனக்கு மொட்டை போட உடுவேனா?"

அதிர்ந்து போனேன். உலகம் தெரியாத அம்மைக்கு, இந்த அளவு மனித உள்ளம் புரிகிற ஆத்மாவா?

"நீ கேக்கலாம். இப்பம் மட்டும் பேரனுக்கு வெட்டச் சொல்லலாமான்னு:? ஏன் சொன்னேன்? இப்பம் அதுதான் முருகனுக்குத் தொழிலுன்னு ஆனாலும், அவன் இன்னைக்குப் பேரனுக்கு முடிவெட்டக் கேட்டதுக்குக் காரணமே... காசு இல்லடா.. ஏக்கமும் பாசமும்தான்..."

"என்னம்மை சொல்லுறே?"

"ஆமாம்டா, நீ இப்பம் வளந்து வலுதாயி போனாலும், முருகனுக்கு மட்டும் நீ அதே எட்டாங்கிளாஸ் கூட்டாளிதான். உன் மவன் உருவத்திலே அவன் உன்னைத் தாண்டா பாக்குதான். அது மட்டுமில்லாம, அவனுக்குன்னு ஒரு புள்ளை இன்னும் பொறக்காத ஏக்கவும் உண்டும்தானே...? அதான் ஒரு தகப்பனாத்தான் ஆசைப் பட்டுக் கேட்டான். நானும் சம்மதிச்சேன்."

"அடடா, முருகன் பாவம்மா."

"வெறும் வாயால சொன்னாப் போதாது. நீ போய் காத்துக் கெடந்தியே அந்த பட்டணத்து முடி வெட்டுக் கடை... அங்க ஒரு வேலை வாங்கிக் கொடுத்தா அவன் வயிறார சாப்பிடவாவது செய்வானே."

சாட்டையடித்தாற் போலிருந்தது. அந்த க்ஷணத்தில்தான் மின்னலாய் அந்தக் காட்சி! சென்னையின் அதி பிரமாண்ட பேருந்து நிலைய வளாகம் இருக்கும் புதுச் சாலையில் என் கடை. அது முழுக்க நவீனப் படுத்தப்படுகிறது. மொத்தமும் குளிரூட்டவும் படுகிறது. இருபதுக்குப் பதினைந்தில் ஒரே சமயத்தில் ஏழு நாற்காலிகள் வரை சாத்தியமாகிறது. அத்தனையிலும் வாடிக்கையாளர்கள். சிருடைச் சிப்பந்திகள் அனைவரும் அசுர வேகத்தில் பணியாற்ற, தலைமை பீடத்தில் தொழில் செம்மையாய்த் தெரிந்த என் முருகன்!

மனசில் கண்டதை அம்மையிடம் ஆர்வமாய் அவசரமாய்ச் சொன்னேன். மனைவி அதிர்ந்தாள்.

"இரும்புக்கடை வைக்கவே கூச்சப்பட்ட நீங்க, பார்பர் ஷாப் வைக்கப் போறீங்களா?"

"நிச்சயமாக... 'மனிதர்கள் எல்லாரும் சமம்'னு எங்கப்பாரு எனக்குச் சொல்லிக் கொடுத்ததாலே மனத்தளவில் நான் மிக ஆரோக்யமா செழிப்பா இருக்கேன். அது மாதிரி 'தொழில்கள் எல்லாம் சமம்'னு என் புள்ளைக்கு நான் சொல்லிக் கொடுத்தா? நாளைக்கு அவன் ஒரு பிரபல தொழிலதிபரா உருவாகலாம்தானே?"

அம்மை அருகே வந்து சிரித்தாள். ரொம்ப காலத்துக்குப் பிறகு என்னைச் சிறுவனாக பாவித்து, இழுத்து வெற்றிலைச் சாறு நிறைந்த ஈர முத்தம் பதிக்க... சுஷில் துள்ளித் துள்ளி கை கொட்டிச் சிரித்தான். நாணத்தை மறைத்து முகம் திருப்பி நான் வாசலையே பார்த்திருந்தேன். என் புது பிஸினஸின் வொர்க்கிங் பார்ட்னருக்காக! ○


Tasty !
Tasty !!
MILKA
WONDER CAKE
Six Wonderful Taste...


DIWALI
Special Arrivals
தீபாவளி
கோலாகலம்
Upto 20% off
Only at
NARAYANA pearls & gems
Purasaiwalkam
Polki Sets, Kundan Sets, Korean jewellery, Coral Flower Sets, Golden Oxidised, Devdas, Theva Sets, 2gm Gold Kadas, Bangles and Necklaces, Real Stone Necklace Sets and Malas, Temple Jewellery, Silver - Platinum Jewellery.
Cut and bring this ad and get a surprise gift
All major credit cards accepted
Open on all Sundays 11 a.m - 8 p.m
NARMADA pearls & gems
Waikiki Complex Doveton Signal Purasaiwalkam
Chennai - 7. Ph:25328011, 26400414

# கலைஞர் மேடையில் தரம் தாழ்ந்த பேச்சு!

**-ஜெயமோகன்**



ஓரே மூச்சில் எட்டு நூல்களை வெளியிட்டிருக்கிறார் ஜெயமோகன். அவற்றில் ஏழு விமர்சன நூல்கள். ஒன்று நாவல்.

"இலக்கிய விமர்சனம் என்றாலே சலிப்பூட்டும் ஆய்வுகள் மாதிரிதான் இருக்கிறது. ரீடபிலாக இல்லை.

இன்றைக்கு எல்லாப் படைப்பாளர்களின் நூல்களும் கிடைக்கின்றன. முழுத்தொகுப்புகள்கூட வந்திருக்கின்றன. இதை வாசகனின் கவனத்துக்குக் கொண்டு வர வேண்டியிருக்கிறது. அதற்கு அவனை கவர்கிற மாதிரி எழுதப்படும் விமர்சனம் தேவை. எனது விமர்சன நூல்களின் சிறப்பம்சம் இதுதான்'' என்கிற ஜெயமோகன், இலக்கிய முன்னோடிகளான இருபது படைப்பாளர்கள் குறித்த விமர்சனங்களை ஏழு நூல்களில் எழுதியிருக்கிறார். இன்னும் பதினைந்து பேரைப் பற்றி அடுத்த வருடம் எழுத இருக்கிறாராம்!

**க**லைஞர் முன்னிலையில் நடந்த இளையபாரதியின் புத்தக வெளியீட்டு விழா பற்றி ஒரு விமர்சனத்தை முன் வைத்திருக்கிறார் இவர்.

"நவீன இலக்கியத்தின் முக்கியமான விழுமியம் என்ன? நாம் எதை நம்புகிறோமோ அதை உண்மையிலேயே சார்ந்து நிற்பது. அதற்காக வாழ்வது. அந்த நம்பிக்கை மிதமிஞ்சிப் போய் நாம் ஒருவரையொருவர் கடுமையாகத் தாக்கிக் கொள்வதும் உண்டு. நமது நம்பிக்கைகளே நமக்குப் பெரிதாக உள்ளன. நட்பு அல்ல; புகழ் அல்ல. வாழ்க்கையில் வெற்றி என்று கருதப்படும் எவையுமே அல்ல. நமது ஆதர்ஸ புருஷர்கள் மகத்தான தோல்விகளை அடைந்தவர்கள்தான்.

"இளையபாரதி என்பவரது நூல் வெளியீட்டு விழாவில் நான் அதிகமாக மதிக்கும் இலக்கியப் படைப்பாளியான வண்ணதாசன், அங்கு பேசிய பிற திராவிட இயக்க பேச்சாளர்களைவிட அதிகமாக கருணாநிதியைத் துதித்துப் பேசினார். கவிஞர் கலாப்ரியா, மு. கருணாநிதியை தன் ஆதர்ஸ எழுத்தாளராகவும், தன்னுடைய வழிகாட்டியாகவும் சொல்லி, புகழ் மொழிகளை அடுக்கினார். இவர்களை விடக் கீழிறங்கி, கவிஞர் ஞானக் கூத்தன், பிரதமர் வாஜ்பாயி, மு. கருணாநிதி ஆகியோரைத் தொட்டபோது தன்னுடைய கரங்களில் ஓர் அதிர்வு ஏற்பட்டது என்று சொன்னார்.

கருத்து வேறுபாடுகள் இருந்தாலும் எனக்கு எப்போதும் முற்போக்கு எழுத்தாளர்கள் மீது ஆழமான நம்பிக்கை உண்டு. ஆனால் பா. கிருஷ்ண குமாரும், வேல. ராமமூர்த்தியும் பேசிய சொற்கள் என்னைக் கூச வைத்தன. அந்த மேடையில் அவர்கள் அப்படி பேச வேண்டிய அவசியமே இல்லை.

இந்தப் படைப்பாளிகள் இப்படிச் சமரசம் செய்யும்போது, அடுத்த தலைமுறையினரைப் பற்றி யோசிக்க வேண்டும். அடுத்த தலைமுறையினர், இவர்களைப் பின்பற்றுவார்கள் என்று நான் எண்ணவில்லை. இளமையில் எப்படியோ லட்சியவாதம் சார்ந்த ஒரு வேகத்துக்கு ஆளாகித்தான எழுத வருகிறார்கள். அவர்களுக்குச் சமரசங்கள் நிச்சயம் சலிப்பையே தரும். அவர்கள் கண்முன் இவர்கள் சரிவடைவது பற்றித்தான் எனக்கு வருத்தம். அந்த வருத்தத்தைத்தான் எனது புத்தக வெளியீட்டு விழா மேடையில் நான் வெளிப்படுத்தினேன்."

- ஏக்ஜி



# ஷாப்பிங் சைகாலஜி

அதென்ன, எப்போதும் புடைவைக் கடைகளிலும் நகைக் கடைகளிலும் மகாமகக் கூட்டம்? ஷாப்பிங் என்றாலே ஏன் மக்களுக்கு - முக்கியமாகப் பெண்களுக்கு - வற்றாத ஆர்வமும் ஆனந்தமும்? மனவியல் மருத்துவர் டாக்டர் ராதா ஷங்கரிடம் கேட்டோம்.

“பெரும்பாலும் பண்டிகைகளை முன்னிட்டுதான் ஷாப்பிங் நடைபெறுகிறது. பண்டிகையின் கோலாகலங்களை நினைவுபடுத்துவதால் ஷாப்பிங் என்பதே ஓர் இன்பமான அனுபவமாகிறது.

பெண்களுக்கு ஷாப்பிங் என்பது தேவைக்காக மட்டும் அல்ல. ‘ஃபீல் குட்’ அனுபவத்துக்காகத்தான். ஷாப்பிங் அவர்களுக்கு இனிப்பதற்குக் காரணம், வாங்கும் பொருள்களை வேறு உணர்வுபூர்வமான விஷயங்களின் குறியீடுகளாகக் கொள்வதுதான். “என் கணவர் அதிகம் சம்பாதிக்கிறார். அவர் என்மீது அன்பு வைத்திருக்கிறார். இவற்றின் குறியீடுதான் இந்த ஷாப்பிங்” எனும் உணர்வு அவர்களுக்கு ஏற்படுகிறது. தவிர, ஒரு பொருளை வாங்கத் தீர்மானித்து அதை வாங்கிவிடும்போது, சாதனை செய்த திருப்தியும் ஏற்படுகிறது.

இதுபோன்ற சென்டிமென்ட்டுகள் இல்லாமல் ஒரு பொருளை வாங்கும்போது, அந்தத் திருப்தி வெகு வேகமாகவே ஆவியாகிவிடுகிறது. அதைவிடச் சிறந்த பொருளை யாராவது வைத்திருந்தால் இந்தத் திருப்தி மறைவதோடு, அந்தச் சிறந்த பொருளை வாங்கிவிட வேண்டும் என்ற ஏக்கம் மனத்தில் தோன்றி, அதுதான் மனத்தில் நிற்கிறது.

அதற்காக ஆண்களுக்கு ஷாப்பிங்கில் கொஞ்சமும் ஈடுபாடில்லை என்று கூறுவது சரியல்ல. எந்த மாதிரிப் பொருள்களை வாங்குகிறார்கள் என்பதில்தான் அவர்கள் மாறுபடுகிறார்கள். இல்லையென்றால், பதவி உயர்வு பெற்று மேலே மேலே போகும்போது, எதற்காக மாருதி 800லிருந்து வேறுவித கார்களை அவர்கள் மாற்றிக் கொள்ள வேண்டும்?

பெரும்பாலும் ஆண்கள் தங்கள் கௌரவத்தைக் குறிப்பதற்காக உடை, கார் போன்ற விஷயங்களில் மாற்றங்களை விரும்புகிறார்களே தவிர, பெண்களிடம் இருக்கும் சென்டிமென்ட் காரணங்கள் அவர்களுக்கு இருப்பதில்லை.

பெண்கள் பரவலாக வேலைக்குச் செல்வதும் ஷாப்பிங் அதிகமாகிக் கொண்டு வருவதற்கு ஒரு காரணமாகிறது. தன் சம்பாத்தியத்தில் பொருள்களை வாங்குவதை ஒருவித சாதனையாக நினைக்கிறாள் பெண்.

ஷாப்பிங் என்னும்போது விளம்பரங்களின் பங்கைக் குறிப்பிட்டே ஆக வேண்டும். மனிதனின் மனத்தில் உறங்கிக் கிடக்கும் ஆசைகளை இவை தட்டியெழுப்புகின்றன.

படம் : **யோகா**



# துணையெழுத்து 12

குழந்தைகள் கை ஆட்டாது
கூட்ஸ் ரயிலில் இருந்து
கொடியசைத்துப் போகிறான்
கடைசிப்பெட்டியில் கார்டு

என்னுடைய 'பட்டாம்பூச்சி விற்பவன்' கவிதைத் தொகுப்பில் நான் எழுதிய கவிதை இது. இன்றைக்கும் ஏதோ ஓர் ஊரில் ஓடிக் கொண்டிருக்கும் ரயிலுக்கு, எங்கோ சில சிறுவர்கள் கையாட்டி வழியனுப்பிக் கொண்டிருப்பார்கள். ரயில் எஞ்சின் டிரைவர்களின் டைரிக் குறிப்பு முழுக்க குழந்தைகளின் கையாட்டல்களே நிறைந்திருக்கும். பால்யத்தின் கரையில் நின்றபடி நாம் கையாட்டிய ரயில் பெட்டிகள், இன்னமும் நமக்குள் குலுங்கிக் கொண்



டிருக்கின்றன; அதனால்தான் எந்த வயதில் பார்த்தாலும் ரயில் பெட்டிகள் ஆச்சரியங்களுடன் காத்திருக்கின்றன.

ரயில் வண்டி கரும்புகையுடன் கிராமங்களின் வயல் வெளிகளுக்கு நடுவே வருவதைப் பார்த்து, ராட்சச மிருகம் வருகிறது என்று மிரண்டு ஓடி ஒளிந்த முன்னோர்களின் சங்கிலித் தொடர்கள் நாம். ரயில் ஒரு யானைக் கூட்டமாக இருக்கிறது. நெளியும் பாம்பாக இருக்கிறது; களைக்கும் குதிரையாக இருக்கிறது; இப்போதுதான் பிறந்து மெல்லச் சிணுங்கும் குழந்தையாக இருக்கிறது. அழகான பெண்கள் ஒவ்வொரு கோணத்திலும் ஒவ்வொரு மாதிரி இருப்பது போல, ரயிலும் ஒவ்வொரு பார்வைக்கும் ஒவ்வொரு வடிவம் கொள்கிறது. சிவபெருமானுக்கு அடுத்ததாக நெற்றிக் கண்ணுடன் அலைவது ரயில் வண்டி மட்டுமே. ரயில் வண்டி நகர்ந்து செல்லும் ஆயிரம் ஜன்னல் வீடு.

எனக்கே எனக்கென்று ஒரு ரயில் வண்டி. எந்தப் பயணியையும் ஏற்ற மாட்டேன். அதனால்தான் கூட்ஸ் ரயில் என் தேர்வாக இருந்தது. ரயில் பெட்டிகள் முழுக்க எனக்கே சொந்தம். நான் கொடி ஆட்டும்போது டிரைவர் போகலாம். கடைசிப் பெட்டியில் நின்றபடி இந்தப் பிரபஞ்சத்தை மந்தகாசமான புன்னகையுடன் கடந்து கொண்டிருப்பேன். வழிகள்தோறும் தோன்றும் சிறுவர்களின் மகிழ்ச்சி ததும்பும் கண்களைச் சேமித்து வைத்துக் கொள்வேன். சிக்னலுக்குக் காத்திருக்கும் நேரங்களில் ரயிலை விட்டிறங்கி தண்டவாளப் பூக்களில் வந்தமரும் மஞ்சள் நிற வண்ணத்துப் பூச்சிகளைப் பிடிக்கச் சென்று விடுவேன். பௌர்ணமி இரவுகளில் என்னுடன் நிலாவும் ஓடிவர, தனித்த நிமிடங்களை கதை பேசியபடி கழிப்போம்.

அப்போதெல்லாம் கடைக்கு, விளையாட என்று எங்கு சென்றாலும் ரயில் வண்டி மாதிரி வளைந்து நெளிந்து சத்தமிட்டுக் கொண்டேதான் செல்வோம். எனக்கு முன்னால் ஏழெட்டுச் சிறுவர்கள் பெட்டிகளாக ஓடிக் கொண்டிருக்க, நான் கடைசிப் பெட்டியில் நின்றபடி கலர் பேப்பரில், அல்லது காய வைத்த இடத்திலிருந்து திருடிய ரிப்பனில் கொடியசைப்பேன். பள்ளிக்கூடத்தில் மணியடிக்கும் வாட்ச்மேனிடம் தாஜா செய்து,




# நா.முத்துக்குமார்


காலை மணியை மட்டும் நான்தான் அடிப்பேன். காலைச் சூரியனின் மஞ்சள் வெளிச்சம் பள்ளிக்கூடத்து அசோக மரங்களைத் தாண்டி மணியின் மீது விழும். எங்கள் பள்ளியில் ஒரு தண்டவாளத் துண்டே மணியாக இருந்தது. இரும்புச் சங்கிலியால் கட்டித் தொங்க விடப்பட்டிருந்த தண்டவாளத் துண்டில் சுத்தியலால் தட்ட, மணியோசை எழும். சூரிய ஒளி பட்டு, தண்டவாளம் தங்கமாக மின்னும். நான் மானசீக கார்டாக மாறி மணியடித்துக் கொடியசைப்பேன். காலத்தின் காற்று திசை மாறி அடிக்க இப்போது தண்டவாளத்து ஓரங்களில் பட்டாம் பூச்சி பிடிப்பதை விட்டு விட்டு, பாடலுக்கான வார்த்தைகளைப் பிடித்துக் கொண்டிருக்கிறேன்.

எங்கள் கிராமத்திலிருந்து கொஞ்சம் தள்ளி நத்தப்பேட்டை என்கிற கிராமத்தில் ரயில் நிலையம் இருந்தது. சுற்றிலும் வயல்வெளிகளில் கொக்குகள் பூத்திருக்க, தூரத்தில் சத்தமிட்டு அவற்றைத் துரத்தியபடி கரிப்புகையைக் கக்கிக் கொண்டு பாஸஞ்சர் ரயில் வரும். காலையில் ஒன்று, மாலையில் ஒன்று என்று இரண்டே ரயில்கள் தான். சில சமயம் பகலில் ஒன்றிரண்டு கூட்ஸ் ரயில்கள் போகும். வயல் வெளிகளை ஒட்டிய நெருஞ்சி முள் காடுகளில் நாங்கள் கிரிக்கெட் விளையாடுவோம். ரயில் வரும் திசையில் அடிக்கப்படும் பந்தைப் பொறுக்க நான்தான் ஓடுவேன். விளையாட்டு முடிந்து தண்டவாளத்தில் அமர்ந்து ஓய்வெடுப்போம். இளஞ்சூடு உடலில் பரவ தண்டவாளம் சக்கரங்களின் பாரத்தை சொல்லிப் புலம்பிக் கொண்டிருக்கும்.

சில நாட்களில் சேவலுக்கு முன்பாகவே கருக்கலில் எழுந்து, முதல் ரயில் வருவதற்கு முன்பாக தண்டவாளத்தில் தவமிருப்போம். செவ்வக வடிவத்திலிருக்கும் மூன்று பைசா நாணயத்தை தண்டவாளத்தின் மீது வைத்து விட்டு, ரயில் வருவதற்காகக் காத்திருப்போம். சக்கரம் உரசிய மந்திர நொடியில் எங்கள் காசு தங்கமாகிவிடும் அல்லது சக்கரத்திற்குள் சிக்கி ரயில் கவிழ்ந்து விடும், அல்லது செவ்வக வடிவம் தட்டையாக மாறி டாலர் செய்யப் பயன்படும், என எங்கள் எதிர்பார்ப்பின் பலவித சாத்தியங்களையும் பொய்யாக்கி ரயில் கடந்து போன பின் மூன்று பைசா காணாமல் போயிருக்கும். ஒரு காசு தவிட்டு பிஸ்கட்டில், மூன்று பிஸ்கட்டுகளை இழந்த சோகத்தில் ரயில் நிலைய சிமெண்ட் பெஞ்சில் படுத்து உறங்கி விடுவோம்.

எல்லா ரயில் நிலையங்களுக்கும் ஒரே விதமான தோற்றம் தருவது சிமெண்ட் பெஞ்சுகளே, எலும்பைப் போல் காரை பெயர்ந்து கம்பிகள் வெளித் தெரிய, சிமெண்ட் பெஞ்சுகள் ரயில் நிலையங்களின் சூழலை ரம்மியமாக்குகின்றன. பூவரச மரங்களிலிருந்து உதிரும்





ஒரு மனிதன் தன்னையே கண்டு கொள்ளக் கூடிய நிலைமைக்கு வந்தால் தன்னுடைய வாழ்க்கை முழுவதற்கும் பெருந்தன்மையுடன் வாழ்வதற்கான மாளிகை கிடைத்து விட்டதாக உணர்வான்.

– ஜேம்ஸ் மிச்சனர்

தகவல்: புத்தனாம்பட்டி சி. மணி

---

பூக்களுக்கு இடம் கொடுத்தபடி கொய்யாப் பழ வியாபாரிகளின் கூடை வாசனைக்காகவும்; எப்போதாவது வந்தமரும் பயணிகளின் புளியோதரைப் பொட்டல வாசனைக்காகவும், காக்கைகளுடன் காத்திருக்கின்றன, சிமெண்ட் பெஞ்சுகள். மாலை நேரத்தில் சிமெண்ட் பெஞ்சில் அமர்ந்தபடி அரட்டையடிக்க, ஸ்டேஷன் மாஸ்டர் அனுமதியோடு வயதானவர்கள் சிலரும் வருவதுண்டு. இது தவிர ஆடு மாடு மேய்க்கும் சிறுவர் சிறுமிகள் நிலைய ஊழியர்களின் அதட்டலுக்கு ஒளிந்து தாயம் ஆடவும், கல்லாங்காய் ஆடவும், சிமெண்ட் பெஞ்சு சௌகரியம் செய்து கொடுத்திருந்தது. சிமெண்ட் பெஞ்சுகளின் பார்வையில் ரயில் என்பது வெவ்வேறு ஆட்களின் ஒற்றைக் குரல்.

பின்னோக்கி ஓடும் காட்சிப் படிமங்கள் வழியாக ரயிலின் ஜன்னல்கள் நம்மைக் கடந்த காலத்திற்கு அழைத்துச் செல்கின்றன. ரயிலின் ஜன்னல் கம்பிகளின் உறைந்து போயிருக்கும் கண்ணீர்த் துளிகளில், பிரிவின் வலி முட்டைக்குள்ளிருந்து கண் விழித்து வெளிவரும் குஞ்சுகள் ஈரப் பிசுப்பிசுப்போடு வருவதைப் போல, அதிகாலையில் விழித்து அடுத்த நிலையத்தில் இறங்குபவரைத் தன் கருவறையின் இரும்பு வாசனையோடு வழியனுப்புகிறது ரயில். தண்டவாளக் கட்டைகளின் இடைவெளிகளில் வழியனுப்புதலின் வெற்றிடம். கரி படிந்த இருக்கைகளிலிருந்து எழ மறுக்கிறது. ரயில் சிநேகங்களின் தற்காலிகத் தோழமை. கிராமத்தில் ரயில் பெட்டிகள் ஒரு விருந்தாளி வந்து போவதைப் போல கௌரவமாக வந்து போகின்றன.

மாநகரத்தில் ரயில் வண்டிகள் சதா காலமும் பரபரப்புடன் ஓடிக் கொண்டிருக்கின்றன. ராட்சச உலோகப் பாம்பொன்றை மின் கழுகு இழுத்து வருவதைப் போல, மின்சார ரயில்கள் மாநகரத்தை வலம் வருகின்றன. அலுவலக நேரங்களில் படிக்கட்டில் வியர்வை வழிய தொங்கிக் கொண்டிருக்கும் பயணிகளுடன், கர்ப்பிணிப் பெண்ணின் வலியைப் போலப் பார்க்கையில் மனத்தில் ஏதோ ஒரு வெறுமை குடிகொண்டு விடுகிறது. மின்சார கம்பங்கள் அருகில் வராதே என்று எச்சரிக்கின்றன. தினம் ஒரு மரணம் மாநகரத்துத் தண்டவாளங்களில் வெள்ளைத் துணி போர்த்தி படுத்திருக்கிறது. ஆயினும் மாநகரத்து ரயில் வண்டிகளை உயிர்ப்பித்துக் கொண்டிருப்பது ஹார்மோனியத்துடன் பாடிக் கொண்டு வரும் பார்வையற்ற சகோதரர்களே. மெல்ல இருள் கசியும் அந்திப் பொழுதில் "கடவுள் மனிதனாகப் பிறக்க வேண்டும்" என்றோ "பிறக்கும் போதும் அழுகின்றான்" என்றோ, சுருதி சேராத குரலில் ஹார்மோனியக் கட்டைகள் ரீங்கரிக்க, ஒவ்வொரு பெட்டியாக ஏறி இறங்கும் பார்வையற்றவர்களும், அவர்கள் தட்டில் விழும் சில்லறைகளுமே மாநகரத்தில் இன்னமும் ஈரமிருக்கிறது என்பதற்குச் சாட்சிகளாக இருக்கின்றன.

பல திசைகளிலிருந்து பிரிந்து வந்து மாநகரத்தில் தண்டவாளங்கள் ஒன்று சேருகின்றன. அதன் மெல்லிய உடம்பின் மேல் தங்கமாகும் எதிர்பார்ப்புடன் எந்தச் சில்லறைகளும் இல்லை. முகம் நசுங்கிய பிளாஸ்டிக் குவளைகளே மட்கிப் போகாமல் புன்னகைக்கின்றன. லெவல் கிராசிங்கில் புத்தக மூட்டையுடன் கேட்டிற்குப் பின்னால் குழந்தைகள் ஆட்டோவில் அடுக்கப்பட்டிருக்க, குழந்தைகள் கையாட்டாத கூட்ஸ் ரயிலிலிருந்து கொடியசைத்துப் போகிறான் கடைசிப் பெட்டியில் கார்டு.

(தொடரும்)

# புக் பேங்க்




**தேவார வைப்புத்தலங்கள் - பு.மா. ஜெய செந்தில் நாதன்**

"பால் பாயசம் பருகும்போது பால்ய நினைவு வரும்" என்பார்கள். மனதுக்கு இனிமையூட்டும் ஒன்றைக் காணும்போதும், சுவைக்கும்போதும் அதே போல மனம் லயித்த மற்றொன்று நினைவுக்கு வருவது இயல்பு. பக்தியோடு, தமிழையும் வளர்த்த நாயன்மார்களும் அடியார்களும், ஒரு தலத்தைப் பாடும்போது, அதேபோல மனங் கவர்ந்த மற்றொரு தலத்தையும் சேர்த்து வைத்துப் பாடுதல் மரபு. அப்படி வைக்கப் பட்ட 'வைப்புத் தலங்களின்' திரட்டு. ஆன் மிகமும் சரித்திரமும் இணைந்த தொகுப்பு.

**வர்த்தமானன் பதிப்பகம், 40, சரோஜினி தெரு, தி.நகர், சென்னை - 17. விலை ரூ.180**

**இலங்கையிற் தொல்லியலாய்வுகளும் திராவிடக் கலாசாரமும் - தனபாக்கியம் குணபாலசிங்கம்**

இராமாயணக் காலந்தொட்டே தொடர்ந்து இன்றுவரை தமிழகத்துடன் எல்லாவற்றிலும் பிணைந்தது ஈழம். வரலாறு, கலை, இலக்கியம், போராட்டம் என ஈழத்தின் அத்தனையிலும் தமிழகத்தின் தாக்கங்கள் பல. அரசியல் நோக்கங்கள் பின்பு மாறியதால் வந்த உறவுத் தேக்கங்களும் பல. பழம்பிணைப்புகளை ஆராய்ந்து பார்த்தால் போர் ஓய்ந்து போகும். தீராதன தீரும், சேராதன ஒன்று சேரும். அந்த அரிய பணியைச் செய்யும் ஆராய்ச்சி நூல்.

**மணிமேகலை பிரசுரம், 7, தணிகாசலம் தெரு, தி.நகர், சென்னை - 17. விலை ரூ.100**

**புகழ் பெற்ற மகான்களின் கதைகள் - ஆர்.வி.பதி**

இவர்போல யாரென்று ஊர் சொல்ல வாழ்ந்தவர்கள். பின்னர் எவர் வந்து பார்த்தாலும் பெயர் சொல்ல வைத்தவர்கள். அல்லவையும் நல்லவையும் பகுத்து தெளிவாய்ச் சொல்லிவிட்டுப் போனவர்கள். அத்தகைய ஞானியரையும், மகான்களையும் பற்றிய நூல்.

**அறிவாலயம், 32/7, கௌடியாமடம் சாலை, சென்னை - 4. விலை ரூ.60/-**

**தூணிலும் இருப்பான் - பா. ராகவன்**

கடத்தல் நாயகன் இதில் கதா நாயகன். கதை துரத்துகிற வேகம், அசந்தால் படிப்பவரைக் கடத்தி விடும் போலிருக்கிறது. உழைப்புக்கும் உண்மைக்கும் அஞ்சி ஊரை விட்டு வந்தவன், பிழையான தொழிலையே பிழைப்பாகக் கொள்கிறான். ஆபத்துகளில் பிழைத்து வருபவன் இறுதியில் அனாயாசமாக மடிந்து போகிறான். அறிவு கொஞ்சம் அதிகமாயிருக்கும் ஓர் அயோக்கியனின் அதிவேகக் கதை. விறுவிறுப்பு!

**சபரி, 28, டேங்க் பண்ட் ரோடு, நுங்கம்பாக்கம், சென்னை - 34. விலை ரூ.55/-**

**பூமத்திய வேர்கள் - த. அரவிந்தன்**

சந்தங்களற்ற சத்தங்களைக் கொண்டு வரைந்த உரை நடைக் கவிதைகள். புதுக் கவிதை என்றாலே புரட்சி பற்றிப் பேச வேண்டும், அநீதியைச் சாட வேண்டும், அநியாயங்களைப் பாட வேண்டும். அதே வரிசையில் அடுத்த தொகுப்பு.

(இந்த உரைநடைக் கவிஞர்களுக்கெல்லாம் ஏனோ உலகின் அவலங்கள் மட்டுமே தெரிகின்றன!)

**செம்மொழி பதிப்பகம், எச்.31, த.நா.வீட்டுவசதி வாரியக் குடியிருப்பு, சென்னை - 99. விலை ரூ.40/-**

- விஷ்வக்

இலவச வேட்டி, சேலை மற்றும் பள்ளிச்சீருடை ஊழல் வழக்கில் ''அரசுத் தரப்பில் குற்றம் நிரூபிக்கப்படவில்லை'' என்று கூறி, முன்னாள் அமைச்சர் இந்திரகுமாரியை விடுதலை செய்திருக்கிறார் தனி நீதிமன்ற நீதிபதி. அவருடன் சேர்ந்து குற்றம் சாட்டப்பட்ட ஐந்து பேரும் விடுதலையாகி இருக்கிறார்கள்.

ஜெயலலிதா அரசின் முந்தைய ஆட்சிக் காலத்தில் (1991-96) சமூக நலத்துறை அமைச்சராக இருந்தவர்



• கைது கலவரம்!

# இந்திரகுமாரிக்கு இரண்டாவது இன்னிங்ஸ்?

இந்திரகுமாரி. கிட்டத்தட்ட 11,25,200 வேட்டிகளும், 12,56,400 சேலைகளும் பள்ளிச் சீருடைகளுக்கான வெள்ளைத் துணி வாங்குவதிலும்தான் ஊழல், என்று குற்றம் சாட்டப்பட்டது. இந்த ஊழல் காரணமாக தமிழ்நாடு டெக்ஸ்டைஸ் நிறுவனத்துக்கு பதினொரு கோடி ரூபாய் நஷ்டம் ஏற்பட்டது. "யார் பாக்கெட்டுக்கு இந்த பதினோரு கோடி ரூபாய் போயிருக்கக் கூடும்?'' என்பதை விசாரிக்க வேண்டிய பொறுப்பு குற்றப்பிரிவு போலீஸுக்கு இருந்தது. தனது 272 பக்கத் தீர்ப்பில் "குற்றப்பிரிவு போலீஸ் தங்களது விசாரணையைச் சரியாகச் செய்யவில்லை. அதன் காரணமாகவே அரசுத் தரப்பில், குற்றத்தை நிரூபிக்க முடியவில்லை" என்று சொல்லியிருக்கிறார் நீதிபதி. மாவட்ட சமூக நலத்துறை அதிகாரிகளும், தொழில் கூட்டுறவு அதிகாரிகளும் அரசு உத்தரவுகளை மதிக்காமல் செயல்பட்டிருக்கிறார்கள் என்றும் சொல்லியிருக்கிறார் நீதிபதி.

விடுதலை செய்யப்பட்டவுடன் முகம் நிறைய புன்னகையுடன் தனி நீதிமன்றத்தை விட்டு வெளி வந்த இந்திரகுமாரி அம்மாவின் (முந்தைய) அரசு ஊழலில்லாத அரசு என்று நிரூபிக்கப்பட்டிருப்பதாகவும் அரசியலில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் அம்மாவுக்கு என்றென்றும் விசுவாசமாக இருக்கப் போவதாகவும் சொல்லியிருக்கிறார். 1996ல் அ.இ.அ.தி.மு.க ஆட்சி முடிவுற்றதும், அடுத்து வந்த தி.மு.க ஆட்சியில் ஊழல் குற்றத்துக்காக முதலில் கைது செய்யப்பட்டவர் இந்திரகுமாரிதான். வேலூர் சிறையில் அவர் இருந்தபோது அவரது கணவரான பாபு, "என் மனைவி இனி அரசியலில் ஈடுபட மாட்டார்'' என்று அறிக்கை விட்டார். அப்படி அவர் அறிக்கை விட்டதற்குக் காரணம், இந்திரகுமாரி கைது செய்யப்பட்டபோது அதைக் கண்டித்து ஜெ. அறிக்கை விடாததுதான்.

இந்திரகுமாரிக்குச் சொந்த ஊர் வாணியம்பாடிக்கு அருகிலுள்ள வல்லக்குட்டை என்றாலும், பிறந்தது, படித்தது, வளர்ந்தது எல்லாம் சென்னையில்தான். படிக்கும்போதே பேச்சுக்கலையை வளர்த்துக் கொண்டார். ஒருமுறை கண்ணதாசன் அவர் படித்த பள்ளிக்கூடத்திற்கு வந்த போது "நீ சிறந்த பேச்சாளராக வருவாய்" என்று பாராட்டி விட்டுப் போனாராம். இந்திரகுமாரியின் அப்பா ராமசாமி முதலியார், ஒரு காங்கிரஸ் தியாகி. விடுதலைப் போராட்டத்தில் ஆறு வருடங்கள் சிறையில் இருந்தவர். 1972ல்

எம்.ஜி.ஆர் கட்சி துவக்கியபோதே அதில் தம்மை இணைத்துக் கொண்டார் இந்திர குமாரி. திண்டுக்கல், பாண்டிச்சேரி ஆகிய இடங்களில் நடைபெற்ற இடைத்தேர்தல் களில், சிறப்பாக பணியாற்றியதற்காக எம்.ஜி.ஆர் கையால் மோதிரம் பரிசு பெற்றிருக்கிறார். தமிழகம் முழுவதும் பட்டி தொட்டியெங்கும் கட்சி மேடைகளில் முழங்கியிருக்கிறார். 1974ம் வருடம் ராமநாதபுரம் அருகில் உள்ள திருச்சுழி என்ற இடத்தில் இவர் பேசிக் கொண் டிருந்தபோது, மேடையை நோக்கி சர மாரியாகக் கற்கள் வீசப்பட்டன. அப் போதுபட்ட அடியின் தழும்பு வலது மணிக்கட்டில் இருக்கிறது. இவரது படிப்பை கவனித்துக் கொண்டதும் எம்.ஜி.ஆர்தான். மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் புலவர் படிப்பு, தில்லிப் பல்கலைக் கழகத்தில் பி.காம் (ஆனர்ஸ்) முடித்திருக் கிறார். "சட்டம் படிக்கவில்லையே' என்ற வருத்தம் உண்டு இவருக்கு. எம்.ஜி.ஆர் மீது அப்படி பக்தியாக இருந்த இவர், ஒருமுறை கட்சியை விட்டு விலகி காங்கிரஸில் சேர்ந்து விட்டார். அதற்குக் காரணம், கட்சிக்காரர்களை எம்.ஜி.ஆர் பச்சை குத்திக் கொள்ளச் சொன்னதுதான்". பச்சை குத்திக் கொள்வது ஒரு மூட நம்பிக்கை என்று அப்போது அறிக்கை விட்டார். பின்னர் தாயுள்ளத்துடன் கட்சியில் மீண்டும் சேர்த்துக் கொண்டார் எம்.ஜி.ஆர்.

எம்.ஜி.ஆர் ஒருமுறை கட்சிக்காரர்கள் ஜெயலலிதாவோடு தொடர்பு கொள்ளக் கூடாது என்று அறிக்கை விட்டார். ஆனால் இந்திரகுமாரி அப்போதும் ஜெ.யுடன் நெருங்கியிருந்தார். இந்த விசுவாசத்தின் காரணமாக, ஆட்சிப் பொறுப்புக்கு வந்த வுடன் இந்திரகுமாரிக்கு சமூக நல அமைச் சர் பதவியைக் கொடுத்தார் ஜெயலலிதா. 1991-96ல் நலிவுற்ற கோயில்களுக்காக ஜெயலலிதா நிதி திரட்டியபோது அவரிடம் கொட்டிக் குவித்தவர் இந்திரகுமாரி. சமூக நலத்துறையை சசிகலா நலத் துறையாக மாற்றுகிறார், என்ற குற்றச்சாட்டும் அப் போது அவர் மீது கூறப்பட்டது. 1991ம் ஆண்டு வரை வடபழனி கோயிலின் பின்புறத்தில் சிறிய வாடகை வீட்டில் வசித்து வந்தார் இந்திரகுமாரி. அப்போது மேடைப் பேச்சுக்களின் மூலம் கிடைத்த வருமானம்தான். வாங்கிய கடனை திருப்பிக் கொடுப்பதில் ஏற்பட்ட பிரச்னை காரணமாக, இவர் மீது வழக்குகளும் அப்போது போடப்பட்டன. ஒரே மகன். அவருக்கும் கல்யாணம் செய்து கொடுத்து விட்டார்.

"இந்திரகுமாரி விடுதலை செய்யப் பட்டவுடன் அரசுத் தரப்பு வழக்கறிஞர் கிருஷ்ணமூர்த்தி "இது அப்பீல் செய் வதற்குச் சிறந்த வழக்கு. அப்பீல் மூலம் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு தண் டனை வாங்கித் தர முடியும்" என்று சொல்லியிருக்கிறார். அப்பீல் விஷயத்தில் இப்போதைய அரசின் எண்ண ஓட்டம் என்ன என்பது இதுவரை தெரியவில்லை. இந்திரகுமாரிக்கு அரசியலில் இரண்டாவது இன்னிங்ஸ் கொடுப்பது ஜெ. கையில்தான் இருக்கிறது.

ஆடுவதற்கு அவர் தயார்தான். விடுதலை என்பது நாடகத்தின் இடைவேளை, அப்பீல் என்பது அடுத்த காட்சி" என்று கருத்து சொல்லியிருக்கிறார் கலைஞர்! அ.இ.அ.தி.மு.க ஆட்சியில் ஊழல் வழக்கு களில் போலீஸார் காட்டும் மெத்தன மும், சாட்சிகள் அடிக்கும் பல்டிகளும், கலைஞரை அது போலச் சொல்ல வைத் திருக்கின்றன.


- கௌசி

படம் : மீடியா ராமு


• விடுதலைப் புன்னகை!




# நடக்குமென்பார்; நடக்கும்!




**மேஷம் :** எதிர்ப்புகள் மறையும். புதியவர்கள் அறிமுகம் கிடைக்கும். புதிய வேலை முயற்சிகளில் இருப்பவர்களுக்குப் பலன் உண்டு. கடன் தொல்லை குறையும். வழக்கு விவகாரங்கள்ல உங்களுக்கு சாதகமா தீர்ப்பு வரும். கலைத் துறையைச் சேர்ந்தவங்களுக்கு முன்னேற்றம் உண்டு.



**ரிஷபம் :** தெளிவான மனநிலை மனத்தில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். முக்கியமானவர்களின் ஆதரவு தேடி வரும். கொடுக்கல் வாங்கல் கை கொடுக்கும். கணவன் மனைவி ஒற்றுமை அதிகரிக்கும். சொத்து சம்பந்தமாக இருந்து வந்த பிரச்னை தீர வாய்ப்பிருக்கு.




**மிதுனம் :** இந்த வாரம் வெற்றி மீது வெற்றி வந்து உங்களைச் சேரும். மனசுல மகிழ்ச்சி இருந்துட்டே இருக்கும். மத்தவங்க புகழ்ற மாதிரி நிறைய காரியங்கள் பண்ணுவீங்க. அலுவலகத்தில் அதிர்ஷ்டம் காத்திருக்கு. குடும்பத்தில் கல்யாணம் ஆகாதவங்களுக்கு அதுக்கான வாய்ப்பு தேடி வரும்.




**கடகம் :** இதுவரை டென்ஷன் பண்ணிட்டிருந்த பண நெருக்கடி இப்போது விலகும். புதிய முயற்சிகள் கைகொடுக்கும். பண நடமாட்டத்துக்குப் பஞ்சமில்லை. இயந்திரம், இண்டஸ்ட்ரீஸ், கமிஷன் கான்ட்ராக்ட்ஸ் துறைகள்ல உள்ளவங்களுக்கு லாபம் உண்டு. குடும்பத்தில் ஒற்றுமை நிலவும். சிலர் வீடு கட்ட, வாங்க வாய்ப்பிருக்கு.




**சிம்மம் :** உற்சாக மனநிலை, துணிவு, தன்னம்பிக்கை, தெய்வீக ஈடுபாடு ஆகியவை அதிகரிக்கும். அலுவலகத்தில் ஒற்றுமை நிலவும். உயரதிகாரிகளின் பாராட்டுக் கிடைக்கும். புதிய வேலை முயற்சிகளில் வெற்றியுண்டு. சட்டம், காவல் இராணுவம், துறைகளைச் சேர்ந்தவங்களுக்கு முன்னேற்றம் கிடைக்கும். குடும்பத்தில் சுபமங்கள காரியம் நடக்க வாய்ப்பிருக்கு.



**கன்னி :** மனசுல மகிழ்ச்சி நிலவும். தாமதமான காரியங்கள் இப்ப நடக்கும். வெளிநாட்டிலிருந்து உறவினர்கள் வர வாய்ப்பிருக்கு. அலுவலகத்தில் உற்சாகமான மனநிலை ஏற்படும். சிலருக்கு இடமாற்றம், பதவி உயர்வு கிடைக்க வாய்ப்பிருக்கு. இதுவரை இருந்து வந்த பொருளாதாரச் சிக்கல்கள் மறையும்.




**துலாம்** : இதுவரை தாமதமான எல்லாக் காரியங்களிலும் முன்னேற்றம் ஏற்படும். பழைய கடன் தொல்லைகள் மறையும். அலுவலகத்தில் சின்னச் சின்ன குறுக்கீடுகள், பிரச்னைகள் ஏற்படலாம். பணவசதி தாராளமா கிடைக்கும். பழைய கடன் தொல்லைகள் குறையும். எதிர்பார்த்த நல்ல செய்தி வந்து சேரும்.




விருச்சிக ராசிக்காரரான விவேக்குக்கு எதிரிகள் ஓடிப் போயிடுவாங்களாம்.



**விருச்சிகம்** : எடுத்த காரியத்தில் வெற்றி கிடைக்கும். எதிர்ப்புகள் மறையும். எதிரிகள் ஓடிப் போயிடுவாங்க. வேலை விஷயமா சிலர் வெளிநாடு போக வாய்ப்பிருக்கு. புதிய முயற்சிகள்ல வெற்றி உண்டு. கலைத் துறையைச் சேர்ந்தவங்களுக்கு பெயர், புகழ் கூடும். பெண்களுக்கு இது மகிழ்ச்சியான வாரம்.




**தனுசு** : தெய்வ பலம் அதிகரிக்கும். முக்கியமானவங்க ஆதரவு கிடைக்கும். இதன்மூலம் நன்மை உண்டு. அலுவலகத்தில் அதிர்ஷ்டம் அடிக்கப் போகுது. மேலதிகாரிகளின் பாராட்டுக் கிடைக்கும். புதிய உத்தியோக முயற்சிகள் வெற்றி தரும். பண நடமாட்டத்துக்குப் பஞ்சமில்லை. கல்யாணம் ஆகாதவங்களுக்கு அதுக்கான வாய்ப்பு தேடி வரும்.



**மகரம்** : எல்லாவிதமான எதிர்ப்புகளும் இந்த வாரம் காணாமப் போயிருக்கும். திட்டமிட்டபடி எல்லாக் காரியங்களிலும் வெற்றி கிடைக்கும். வெளியூர் / வெளிநாடு போக வாய்ப்பிருக்கு. வியாபாரிகளுக்கு இதுவரை இருந்து வந்த சிக்கல்கள் மறையும். குடும்பத்தில் குதூகலமான சூழ்நிலை நிலவும். செலவு கட்டுக்கடங்காது. அடக்கி வாசிக்கவும்.



**கும்பம்** : பண வசதி தாராளமா கிடைக்கும். மறைமுக நேர்முக எதிர்ப்புகள் மறையும். புதிய முயற்சிகள்ல வெற்றி உண்டு. அரசு மூலமாக எதிர்பார்த்த உதவி கிடைக்கும். கடன் தொல்லை குறையும். சுபகாரிய நிகழ்ச்சிகள் குடும்பத்தில் நிகழ வாய்ப்பிருக்கிறது. பெண்களுக்கு சந்தோஷமான வாரம்.



**மீனம்** : மனசுல துணிவும், தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். எடுத்த காரியங்கள் திட்டமிட்டபடி நிறைவேறும். அலுவலகத்தில் சின்னச் சின்ன பிரச்னைகள் ஏற்பட்டு விலகும். எதிர்பார்த்த நிதி உதவி கிடைக்கும். கலைத் துறையைச் சேர்ந்தவங்களுக்கு முன்னேற்றம் உண்டு.

**அக்னி சர்மா பக்கம்**

**அக்டோபர் 15 முதல் 21 வரை**

12

'பிராமணனின் வலது கையில் எவ்வாறு அக்னி இருக்க முடியும்...?' என்று கேள்வி எழுப்பியவரை அழகிய சிங்கர் பார்த்துக் கேட்டார்.

'வீடு பக்கத்திலே இருக்கிறதா...?"

"இருக்கிறது..."

"போய் ஒரு தீப்பெட்டியைக் கொண்டு வா அங்கேயிருந்து."

அவர் போய்த் தீப்பெட்டி கொண்டு வந்தார்.

தீப்பெட்டியைக் கையிலே வாங்கி, இதிலே அக்னி இருக்கிறதா?" என்று கேட்டார் அழகியசிங்கர்.

"இருக்கு..."

"இருக்கு என்றால் காட்டு பார்ப்போம்..."

அவரிடமிருந்த தீப்பெட்டியை வாங்கி குச்சியை எடுத்து உரசிக் காட்டினார் அந்த மனிதர்.

"காட்டு என்றதும் உடனே உன்னால் காட்ட முடிந்ததோ...? ஒரு குச்சி எடுத்துக் கிழினீர். அப்புறம்தானே நெருப்பு கிடைத்தது? அந்த மாதிரி பிராமணன் - நித்ய அக்னிஹோத்ரம் பண்ணிக் கொண்டிருந்தானானால், அவன் கையிலே அக்னி இருக்கும் என்றுதான் நான் சொன்னேன். அக்னிஹோத்ரம் என்பது குச்சியைக் கிழுகிற மாதிரியான கர்மா. அக்னி சம்பந்தத்தோடு இருக்கிறான் பிராமணன். அக்னி காரியத்தைப் பண்ணிக் கொண்டேயிருக்க வேண்டும். கிருஹத்தில் அக்னி ஜொலித்துக் கொண்டே இருக்க வேண்டும்.

நான்கு நாள் அக்னிஹோத்ரம் பண்ணிவிட்டு, ஐந்தாம் நாள் எடுத்து வைத்து விட்டுப் போய்விடக் கூடாது. கடைசி வரைக்கும் - பிராணன் போகிற வரையிலும், பிராதஹ் காலம் அக்னிஹோத்திரம் பண்ணி,

## முக்கூர் லக்ஷ்மிநரசிம்மாச்சார்யார்


ராத்திரியும் பண்ண வேண்டும். அந்த அக்னி அப்படியே அணையாது இருக்கும்.

சின்ன வயதிலிருந்தே ஒருத்தர் அக்னிஹோத்ரம் பண்ணிக் கொண்டிருக்கிறார். ஒருநாள் மத்தியானம் ஒரு மணிக்குத் திடீரென்று பிராண வியோகம் ஏற்பட்டுப் போய்விட்டது. ஐம்பது வயது ஆகிறது... இவரால் காக்கப்பட்டு அக்னியானது இருந்து கொண்டிருக்கிறது.

இவரால் காக்கப்பட்ட அக்னியைக் கொண்டே இவருக்குப் பிரேத சம்ஸ்காரம் பண்ணலாம். நூதனமாக ஓர் அக்னியைக் கொண்டு வரத் தேவையில்லை. இப்படி ஒரு ஸம்ஸ்காரம் நடப்பதற்குக் கொடுத்து வைத்திருக்க வேண்டாமோ!

அந்த மாதிரி மகான்கள் இந்த பாரத தேசத்திலே பூர்வ காலத்திலே இருந்தார்கள். நித்யாக்னிஹோத்ரிகள். இவர்கள் ஊரைவிட்டே வெளியில் போக முடியாது. இரண்டு காலமும் கிருஹத்திலே தவறாமல் அக்னி ஹோத்திரம் பண்ணுகிறவர்கள் எந்த ஊருக்குப் போக முடியும்...?

அக்னிஹோத்ரி என்று பசுவுக்கும் ஒரு பெயர் உண்டு. பசுவை கிருஹத்திலே வைத்திருப்பவர்கள், அதை விட்டுவிட்டு எந்த ஊருக்குப் போக முடியும்...? எங்கேயும் அனாவசியமாகப் போக முடியாது. வீணான காரியத்திலே ஈடுபட முடியாது. கர்மானுஷ்டானத்திலே, 'ஏகாந்தமான உயர்ந்த ரீதியிலே இருக்கலாம். கர்மானுஷ்டானத்திலே பற்றுடைய வர்களாக இருந்தார்கள் அந்தக் காலத்தில். அப்படிப்பட்ட, உயர்ந்ததாக இருக்கும்படியான மகா யக்ஞாதிகள் பண்ணுவதற்கு, அரணி மதனம் பண்ணி காருகபத்யத்திலே அக்னிப் பிரதிஷ்டை பண்ணி, ஆகவமனீயம், தக்ஷிணாக்னி, மூன்றும் ஏற்படுத்த வேண்டும்.



இதன் பிறகு நித்யம் கிருஹஸ்தாசிரமத்திலே ஔபாஸனம் என்ற கர்மாவும் உண்டு. இப்போது மாதிரி, சிரார்த்தத்தன்று மட்டும் அதைப் பண்ணுவது கிடையாது. தினமும் அதிகாலையில் ஔபாஸனம் பண்ணுவார்கள்.

இப்போது எல்லார் கிருஹத்திலும் சிரார்த்தம் நடக்கிறது. சிரார்த்தத்தன்று மட்டும் ஔபாஸனம் நடக்கிறது. நித்யம் ஔபாஸனம் நடப்பதில்லை. அதனால் ஒரு மந்திரம் தனியே சொல்லி, மற்ற நாளில் ஔபாஸனம் பண்ணாததற்கு தோஷம் ஏற்பட்டிருக்கும் அல்லவா...? அந்த தோஷம் போவதற்காக, பரிகார மந்திரத்துடன் கொஞ்சம் ஹிரண்ய தானமும் பண்ணி விடுகிறோம்.

ஔபாஸனம் என்பது நித்யம் பண்ண வேண்டியது. பத்னி பக்கத்திலே இருக்க வேண்டும். அவள் கையிலே அரிசியைக் கொடுக்க வேண்டும். அவளிடமிருந்து பெற்று ஹோமம் பண்ண வேண்டும். - இது நித்ய கடமை. ஆனால் நித்யம் நம்மால் பண்ண முடிகிறதா...?

வைச்வதேவம் என்கிற கர்மாவை நாம் நித்யம் பண்ண வேண்டும். ஏனென்றால் நித்யம் நாம் காய்கறிகளைக் கத்தியால் நறுக்கி விடுகிறோம், அரிவாள்மணையில் திருத்துகிறோம். கிருஹத்திலே கல்யாணம் நடக்கிறதா...? மாவிலைகளைக் கொண்டு வந்து கட்டுகிறோம். வாழை மரத்தை வெட்டி வந்து இரண்டு பக்கமும் கட்டுகிறோம்.

இந்த மாதிரி தாவர வர்க்கங்களுக்கெல்லாம் தவிர்க்க முடியாத ஹிம்ஸை பண்ணுகிறோம்.

பகவானுக்கு எதிரிலே தேங்காயை உடைக்கிறோம் - அப்படியே கத்தியால் வெட்டுகிறோம். அப்படி வெட்டக் கூடாது. வேறு இடத்திலே போய்த்தான் உடைக்க வேண்டும் - கையிலே வைத்துக் கொண்டு அவனெதிரிலே கொடுவாளால் உடைக்கக் கூடாது.

ஆனாலும் இது போன்ற சிலவற்றைப் பண்ணித்தான் ஆக வேண்டியிருக்கிறது. தவிர்க்க முடியவில்லையே!

இதற்காகத்தான் வைச்வதேவம் பண்ணுவது. அதை அக்னியிலேயும் பண்ணலாம், தீர்த்தத்திலேயும் பண்ணலாம். அதற்கான உபதேசத்தைப் பெற்றுக் கொண்டு, நித்யம் பண்ண வேண்டும். 'வைச்வதேவாந்தம் கர்மா' என்று நித்யகர்மானுஷ்டானம் இந்த வைச்வதேவத்தோடுதான் முடிகிறது. அதற்குப் பிறகுதான் சாப்பிட வேண்டும். அப்போது யாராவது அதிதிகள் வருகிறார்களா, என்று பார்த்துவிட்டுத்தான் சாப்பிட வேண்டும்.

> ''டாக்டர் அண்ணனும் வக்கீல் தம்பியும் ஒற்றுமையா தொழில் செய்றாங்க.''
>
> ''எப்படி?''
>
> ''அண்ணன் 'உயிர்' விஷயத்தையும் தம்பி 'உயில்' விஷயத்தையும் கவனிச்சுக்கறாங்க!''
>
> — வசந்தி வள்ளுவன்

வைச்வதேவம் என்கிற கர்மாவினால் என்ன போகிறது...? காய்கறிகளை நறுக்குவது, மரத்தை வெட்டுவது போன்ற செயல்களின் விளைவுகள்... போகும். நாம் படுத்துக் கொண்டிருக்கிறபோது உடம்பைப் போட்டுப் புரட்டுகிறோம். அப்போது எத்தனையோ சின்னச் சின்ன ஜந்துக்களெல்லாம் மாண்டு போகின்றன. நடந்து போகிறபோது எத்தனை சின்னச் சின்ன ஜந்துக்கள் மிதிபடுகின்றன...!

இதனால்தான் சன்னியாசிகள் சாதுர்மாஸ்ய சங்கல்பம் பண்ணிக் கொண்டு நான்கு மாதங்களுக்கு வெளியே போகாமலே இருக்கிறார்கள். ஏனென்றால் நம்மைக் காட்டிலும் அவர்களுக்கு தர்மம் அதிகம். வெளியிலே சஞ்சாரம் பண்ணினால், இந்த மாதிரி சின்னப் பிராணிகளெல்லாம் மாண்டு போய்விடுமல்லவா...? அதனால் அவர்கள் நான்கு மாதங்கள் ஓரிடத்திலே இருக்க வேண்டும் என்கிறது சாஸ்திரம். இது சன்னியாச தர்மம்.

இல்லற தர்மம் காக்க ஒருவர் வைச்வதேவம் பண்ணிக் கொண்டிருந்தார். புரோடாசம் என்று அரிசி - நெய் கொண்டு தயாரிக்கும் பதார்த்தம் பண்ண வேண்டும் அதற்கு. அதைக் கையிலே தடவினால் நல்ல சுவாசனை வரும் - ரொம்ப மணக்கும்! பூனை ஒன்று, சரியாக அந்தச் சமயம் வரும்... இவர் கண்ணை மூடிக் கொண்டு மந்திரத்தைச் சொல்கிறபோது, பூனை புரோடாசத்தை எடுத்துக் கொண்டு போய்விடும்! இந்த மாதிரி இரண்டு மூன்று நாள் ஏமாந்து போய்விட்டார். அப்புறம் ரொம்ப ஜாக்கிரதையாக புரோடாசத்தை மடியிலேயே



வைத்துக் கொண்டார்.

பூனைக்கு இருக்கிற சாமர்த்தியத்தைப் பாருங்கள்...! அது என்றைக்காவது ஒரு பசுவுக்குப் புல்லை வாங்கிப் போட்டிருக்கிறதா? போட்டதில்லை! பசு இருக்கிற இடமாவது அதற்குத் தெரியுமா...? தெரியாது! ஆனால் நித்யம் பால் குடிக்காத நாளே இல்லை அது! அதற்குப் பசுவும் தெரியாது; புல்லும் போட்டது கிடையாது! ஆனால் அது பால் குடிக்காத நாளே இல்லை! வெறுமே இருக்குமா அது? ஒரு வீடு இல்லையென்றால் இன்னொரு வீடு... ஆகையினாலே அதற்கு எங்கேயோ ஓர் இடத்திலே பால் கிடைத்துவிடுகிறது. கிருஷி (யாத்திரை) பண்ணிக் கொண்டேயிருக்கிறதல்லவா? நாமும் கிருஷி பண்ணிக் கொண்டேயிருந்தால் என்றைக்காவது ஒருநாள் நற்கதி கிடைக்கும்! ஒன்றுமே பண்ணாமல் உட்கார்ந்திருந்தால் என்ன கிடைக்கும்...? ஆகவே பூனையைப் பார்த்துத் தெரிந்து கொள் என்றார்கள்!

பூனை இப்படி சரியாகப் புரோடாச வாசனைக்கு வந்து விடும்... வந்தவுடனே இவர் என்ன பண்ணுவார்... தடியால் அதைத் துரத்தி, வாசல் வரைக்கும் கொண்டு விட்டுவிட்டு, அப்புறம் வந்து ஔபாஸன கர்மாவைத் தொடர்ந்து பண்ணுவார்.

இவர் காலம் ஆகிவிட்டது. மாண்டு போய்விட்டார். அப்புறம் இவர் பிள்ளையுடைய காலம் வந்தது... பிள்ளையின் காலத்திலும் பூனை சரியாகப் பன்னிரண்டு மணிக்கு வரும். அவரும் தடியாலே துரத்தி வாசல், வரையில் கொண்டு விட்டுவிட்டு வருவார். ஒருநாள் அவர் கிருஹத்துக்கு அதிதி ஒருவர் வந்தார். "அப்பா! பூனை சாதுவான பிராணி ஆயிற்றே...? அதை ஏன் துரத்தி வாசல் வரைக்கும் கொண்டு விடுகிறாய்...?" என்று கேட்டார்.

இவர் தர்க்கம் படித்தவர். இவர் சொல்கிறார். "என் அப்பா இருந்தாரே, அவர் மிகவும் சாதுவானவர். இந்தப் பூனையும் சாதுதான். அப்பா என்ன பண்ணினார்...? மத்தியானம் பன்னிரண்டு மணிக்கு இந்தப் பூனை வரும்... இந்தப் பூனையை தினமும் ஓட்டிக் கொண்டிருந்தார்... என் அப்பா பண்ணிய காரியத்தைத்தான் நான் விடாமல் பண்ணுகிறேன்..." என்றார்!

வைச்வதேவம் என்கிற கர்மாவுக்குத் தடையாக இருந்ததால் பூனையை ஓட்டினார் அப்பா. பிள்ளையோ, வைச்வதேவத்தை விட்டுவிட்டான். பூனையை ஓட்டுவதை மட்டும் 'என் அப்பா பண்ணினார்' என்று விடாமல் பண்ணுகிறான்!

வைச்வதேவம் போன்ற கர்மாக்களால் பாபங்களெல்லாம் போகிறது. நித்யம் சந்தியாவந்தனம் பண்ணினால், நம்மை அறியாமல் செய்கிற பாவங்களும் போகிறது. சாப்பிடக் கூடாத பதார்த்தங்களைச் சாப்பிடுவதால் விளையும் பாபங்கள் போகிறது.

இதற்குத்தான் வைச்வதேவம் முதலான கர்மாக்கள் சொல்லப்பட்டிருக்கிறது.

இப்படி ஔபாஸனாக்னி ஒரு பக்கம். ஒரு பக்கம் காருகபத்யம், ஒரு பக்கம் ஆகவனீயம். ஒரு பக்கம் தக்ஷிணாக்னி. நான்கு பக்கமும் நான்கு அக்னி குண்டங்கள். மேலேயிருந்து சூரியன் தகிக்கிறான் - ஐந்தாவது அக்னியாக. இந்த ஐந்து அக்னிகளுக்கும் மத்தியிலே நின்றுகொண்டு, ஒரு காலைத் தூக்கி மேலே வைத்துக் கொண்டு, எம்பெருமானை - மேலாகாசத்திலே இருக்கிறவனை - இந்த ஐந்து அக்னிகளுக்கு நடுவிலே நின்று கொண்டு தியானம் பண்ண வேண்டும். பஞ்சாக்னி வித்யா என்று பெயர் இதற்கு.

கஷ்டமான நிலை இது. இப்படிப்பட்ட நிலையிலே பகவான், பரமாத்மா எழுந்தருளியிருக்கிறான் - காருகபத்யத்திலே இருக்கிறான். ஆகவனீயத்தில்... எல்லாவற்றிலும் எழுந்தருளியிருக்கிறான். சூரியனிலும் இருக்கிறான் என்கிற காரணத்தினாலேதான், 'ஐந்துமைந்தும் ஐந்துமாய்' என்றார் ஆழ்வார்.

அது மட்டுமல்ல, 'இரண்டு மூன்று ஏழுமாறும் எட்டுமாய்...' **அவன்** இருக்கிறான். இதுவும் பகவத் ஸ்வரூபம்தான்.


(வளரும்)

# ஜில்லு மல்லு

—கதிர்



ஏய், துணிக்கடையா? இல்ல திருப்பதி தேவஸ்தானமா?
பண்டிகைன்னா சும்மாவா?
சார் கொஞ்சம் உடம்பை அசைங்க. காக்கா உக்காருது பாருங்க.
கூட்டத்தைப் பாத்தா தீபாவளிக்கு துணி எடுத்து பொங்கலுக்குத்தான் போட முடியும் போலிருக்கு
பையனைக் கொஞ்ச நேரம் தூக்கிவச்சுக்க முடியுமா?
ஏம்பா இப்படித் தள்ளற?
இதான் சார்... தீபாவளி சிறப்புத் தள்ளுபடி.
அப்பா... ஒரு வழியா துணி எடுத்தாச்சு!
அச்சச்சோ... என்னோட வளையல், செயினெல்லாம் எவனோ அடிச்சிட்டாண்டா...
அம்பது ரூபாய் துணி எடுக்க... இப்படி... அஞ்சு பவுன் நகையத் தொலைச்சிட்டியே...
என்னதான் இருந்தாலும் ஒரு ஆம்பள அளவுக்கு பொண்ணுக்கு உஷார் பத்தாது.
அஞ்சு பவுனா... அஞ்சு ரூபாய்கூடத் தேறாது.... எல்லாம் கவரிங்.
கொஞ்சம் கீழ பாருடா
ஆஹா... பஜாருல உஜாரா இல்லன்னா நிஜார கழட்டிடுவாங்கன்றது இதுதானா?



அழகின் தோற்றம்
ஒவ்வொரு
பட்டு இழையிலும்.
குமரன்
சில்க்ஸ்
பட்டு கனவுகள் 1955 முதல்
12, நாகேஸ்வரன் சாலை,
(பனகல் பார்க் எதிரில்)
தியாகராய நகர், சென்னை - 17.
போன் : 24343544, 24343727, 24343757.
Website : www.kumaransilks.com
e-mail : kumaransilks@vsnl.com
ஒரே விலாசம், ஒரே ஒரு குமரன் சில்க்ஸ்.


எவரையும் கவரும்
எழில் மிகு
பட்டு சேலை
அணிவரிசைகள்...
சாரதா'ஸ்
முகூர்த்தப்பட்டு புடவைகளுக்கு அதிர்ஷ்டமான இடம்
45, என்.எஸ்.பி. ரோடு, திருச்சி-2 போன்:2702077
பில்டிங், 827, மவுண்ட்ரோடு, சென்னை-2. போன்: 28521177.







என் குழந்தைதான் எனக்கு ஒப்பற்ற செல்வம். அவன் என்னையே நம்பியிருப்பதால், கொஞ்சம் கவலைப்படுவது இயற்கைதான். பெரும்பாலான தாய்மார்கள், 'அவனுக்கு சரியான ஊட்டசத்து கிடைக்கிறதா, சரியான முறையில் வளர்ச்சி இருக்கிறதா?' என்றெல்லாம் கவலைப்படுகிறார்கள். ஆனால் எனக்கு அந்த கவலை இல்லை. ஏனெனில், ஃபாரெக்ஸ் இருக்கிறதே!

ஃபாரெக்ஸை எளிதில் தயார் செய்ய முடியும். எனவே, குழந்தைக்கு பசி எடுத்தவுடனேயே ஊட்டலாம். அதுமட்டுமா? ஃபாரெக்ஸ் ஒரு விசேஷ முறையில் தயாரிக்கப் படுவதால் எளிதில் செரிக்கக் கூடியது. மற்றும், பால், கோதுமை, அரிசி, பழங்கள் மற்றும் காய்கறிகளின் இயற்கையான நற்குணங்கள் அதிசிறப்பாக அப்படியே இருக்கும். மேலும், ஃபாரெக்ஸ் என் குழந்தைக்கு புரோட்டீன்ஸ், கார்போஹைட்ரேட்ஸ், விட்டமின்ஸ் மற்றும் மினரல்ஸின் சரியான கலவை அடங்கிய சமச்சீர் ஊட்டசத்து அளிக்கிறது. எனவே, என் குழந்தையின் சரியான வளர்ச்சிக்கு வீட்டில் தயார் செய்த ஆகாரங்களுடன், நான் நம்புவது ஃபாரெக்ஸைதான்.

எனவே, 50 ஆண்டுகளுக்கும் மேலாக, பல தலைமுறைகளாக தாய்மார்கள் ஃபாரெக்ஸை நம்புவதில் ஆச்சரியம் இல்லை. ஒவ்வொரு முறையும் என் குழந்தை சிரிக்கும் போது, 'நன்றி, ஃபாரெக்ஸ் அம்மா!' என்று கூறுவது போல் இருக்கும்.



**ஃபாரெக்ஸ்®**

**வளர்ச்சிக்கு சிறந்த வழி**

6 ருசிகரமான சுவைகளில்



ரைஸ், வீட், வீட் வெஜிடபிள், வீட் மிக்ஸ்டு ஃப்ரூட்ஸ், வீட் ஆப்பிள்    வீட் எக்

இலவச குழந்தை பராமரிப்பு புத்தகத்திற்கு, குழந்தையின் பெயர்/பிறந்த தேதியுடன் எங்களுக்கு எழுதுங்கள்: ஹைன்ஸ் இண்டியா பி. லிட். த. பெ. எண் : 1907, மும்பை - 400 001.

IMPORTANT NOTICE: MOTHER'S MILK IS BEST FOR YOUR BABY, INFANT FOOD SHALL BE INTRODUCED ONLY AFTER 4 MONTHS OF AGE.

महत्वपूर्ण सूचना: माँ का दूध आपके बच्चे के लिये सर्वोत्तम है. ४ महीने के बाद ही उसे शिशु आहार देना शुरू करें.

CONTRACT/FRX/24/79/TM

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 " Registered No. TN / PMG (CCR) 572 / 03 - 05 "
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 358 " Registered as a Newspaper in Srilanka

KALKI 19.10.2003
இதழுடன் இலவச இணைப்பு




பட்டு சேலைகளில் இதுவரை நீங்கள் பார்த்திராத எழில் ரகங்கள் சாரதா'ஸில் மட்டுமே...
சாரதா'ஸ்
முகூர்த்தப்பட்டு புடவைகளுக்கு அதிர்ஷ்டமான இடம்
45, என்.எஸ்.பி. ரோடு, திருச்சி-2 போன்:2702077
தன்பில்டிங், 827, மவுண்ட் ரோடு, சென்னை-2. போன்: 2852177.







# வைச்சாச்சு வெற்றித் திலகம்!

"புடைவைக்கு மாறிட்டாங்களாமே!"

இரண்டு பெண்கள் சேர்ந்தால் போச்சு! சலிக்காமல் நாயுடு ஹால் பற்றித் தான் பேச்சு!

"நாயுடு ஹால்ல இந்தத் தீபாவளிக்கு புடைவைப் பெருங்கடலையே விரிச்சிருக்கீங்களாமே!" என்று உரிமையாளர் அரவிந்திடமே கேட்டோம்.

"இந்தியாவில் தயாராகும் அத்தனை ரக சேலைகளையும் ஒரே இடத்தில் அள்ளிக் குவித்தால் என்ன என்று தோன்றியது. ஒரு தளம் முழுக்க அடுக்கிவிட்டோம். கல்லூரிக்கு ஜீன்ஸ் அணிந்து போகும் இளம் பெண், ஒரு விசேஷம் என்றால் புடைவை கட்டத்தான் விரும்புகிறாள். ஜீன்ஸ் கேஷுவலாகவும், புடைவை ஸ்பெஷல் டிரஸ்ஸாகவும் மாறிவிட்டதாகக் கணித்தோம். எங்கள் யூகம் தப்பாகவில்லை. பெண்கள் வெற்றித் திலகமிட்டு வாழ்த்திவிட்டார்கள்" என்றார்.


வெற்றியை முன்கூட்டியே யூகித்தோ என்னவோ, நாயுடு ஹாலின் புதிய வியாபாரச் சின்னத்திலும் மங்களமாய் ஒரு திலகம்!



# குழந்தை பெற முக்கூட்டு மருத்துவம்

"குழந்தை பேறு இல்லாத தம்பதியரில், குறைபாடு கணவனிடம் இருந்தாலும் சரி, மனைவியிடம் இருந்தாலும் சரி, அவர்களை இயற்கையாகவே குழந்தை பேற்றுக்கு தகுதி உள்ளவர்களாக ஆக்கும் - பக்கவிளைவுகள் இல்லாத சிகிச்சை. நாங்கள் கடைப்பிடிக்கும் 'ஹோமியோபதி - சித்திர - ஆயுர்வேதம்' என்ற முக்கூட்டு மருத்துவ முறையாகும்" என்று கூறுகிறார். 'நவீன வைத்தியாலயா' என்ற பெயரில் திருவண்ணாமலை மாவட்டம் வந்தவாசியில் பிராமணர் தெருவிலும், சென்னை வடபழனியில் 100 அடி சாலையில், கவுரி சங்கர் திருமண மண்டபம் எதிரிலும் சிகிச்சை நிலையங்கள் நடத்திவரும் டாக்டர் ஏ. அர்ஜுனா.

"கடந்த 43 ஆண்டுகளுக்கும் மேலான என் மருத்துவ அனுபவத்தில் ஆயிரக்கணக்கான



• உயிரணு உற்பத்தி ஆகியும், கருக்குழாய் அடைப்பு நீங்கியும் முக்கூட்டு சிகிச்சையால் 20.8.03-ல் குழந்தை பெற்ற விழுப்புரம் மாவட்டம் செஞ்சியைச் சேர்ந்த முருகன் - தமிழரசி தம்பதியர். டாக்டர் அர்ஜுனாவுடன் உள்ளார்கள்.

தம்பதியர்களுக்கு சிகிச்சை அளித்திருக்கிறேன்.

என்னிடம் வரும் தம்பதியரிடம் சிகிச்சைத் தொடங்கும் முன் கணவனின் உயிரணு உற்பத்தி சரியாக இருக்கிறதா என்பதைக் கண்டறிய விந்துப் பரிசோதனை செய்யச் சொல்வோம். அதில் குறைபாடு இருந்தால் எங்களது முக்கூட்டு மருந்துகள் மூலம் சரியாகும் வரை அவர்களுக்குச் சில கட்டுப்பாடுகளுடன் சிகிச்சை அளித்து, உயிரணுக்கள் உற்பத்தி செய்து அணுக்களின் எண்ணிக்கை - உயிரோட்டத்தை அதிகரிக்கச் செய்து கருத்தரிக்கச் செய்கிறோம்.

**ஆண் மலட்டுத்தன்மைக்கான காரணங்கள் :**

ஆண்களுக்கு இளம் வயதிலேயே புட்டாளம்மை வந்தாலும், அம்மை வந்திருந்தாலும், மஞ்சள் காமாலை, டைபாய்டு ஜுரத்தால் பாதிக்கப்பட்டிருந்தாலும், விதைகளில் அடிபட்டிருந்தாலும், வெப்பம் அதிகமுள்ள இடங்களில் வேலை செய்வதாலும், இந்திரிய நரம்புகள் இல்லாமல் பிறந்திருந்தாலும், அவர்களால் புத்திர பாக்கியம் அடைய முடியாத நிலை உள்ளது. அவர்களுக்கு எங்கள் முக்கூட்டு மருத்துவ சிகிச்சையால் உயிரணு உற்பத்தி செய்து புத்திரபாக்கியம் அடையச் செய்ய முடியும்.

**பெண் மலட்டுத்தன்மை காரணங்கள் :**

கருப்பை வளர்ச்சியே இல்லாமல் இருக்கும் பெண்களின் கர்ப்பப் பையை வளர்ச்சியடையச் செய்கிறோம். சில பெண்களுக்கு வீட்டு விலக்கு ஒழுங்கில்லாமல் இருக்கும். அதை ஒழுங்குபடுத்துகிறோம். சில பெண்களுக்கு மாதந்தோறும் வீட்டு விலக்கின்போது சூதக வயிற்றுவலி வரும். இதனால் கருத்தரிக்க வாய்ப்பில்லாமல் போகும். இந்தக் குறையையும் எங்கள் முக்கூட்டு மருந்துகளால் குறைபாடுகளை நீக்கி கருத்தரிக்கச் செய்கிறோம்.

சில பெண்களுக்கு கருமுட்டை உற்பத்தி இருக்காது. எங்கள் முக்கூட்டு மருத்துவத்தால் கருமுட்டை உண்டாக்கி, கருவுறச் செய்கிறோம். இத்தகையவர்களை ஸ்கேன் மூலம் பரிசோதிக்கச் செய்து, கருமுட்டை உற்பத்தி நிலையை அறிந்து கருத்தரிக்கச் செய்கிறோம்.

பெண்களுக்குள்ள பிரதான பெரிய பிரச்சினை, கருக்குழாயில் சதை அடைப்பு ஏற்படுவது. அதை முக்கூட்டு மருந்துகளால் கரைத்து அடைப்பை நீக்கி விடுகிறோம்.

**முக்கூட்டு மருத்துவத்தின் மகிமையால் குழந்தை பெற்ற தம்பதிகள்**

கோவையில் ஸ்டாஃப் நர்ஸாக இருக்கும் சுபலட்சுமி ராமகிருஷ்ணன் தம்பதியருக்கு குழந்தை பிறக்கச் செய்துள்ளோம்.

லண்டனில் கலாரஞ்சிதம் - இந்திரேஸ்வரன் தம்பதியர் முக்கூட்டு மருந்தால் கருத்தரித்து குழந்தை பெற்றுள்ளார்கள்.

பாண்டிச்சேரி மடுவக்கரை லட்சுமி - கணேசன் தம்பதியருக்கு பெண் குழந்தை பிறந்

# ஷாப்பிங் புது மொழிகள்!

பழசு : அழுதாலும் பிள்ளை அவள்தானே பெற வேண்டும்?

புதுசு : புடைவைகளாகவே வாங்கித் தந்தாலும் புருஷன்தானே துவைத்தாக வேண்டும்?

பழசு : சட்டியிலிருந்தால்தானே அகப்பையில் வரும்?

புதுசு : பர்ஸில் இருந்தால்தானே பீரோவில் வரும்?

பழசு : தானம் கொடுத்த மாட்டைப் பல்லைப் பிடித்துப் பார்க்காதே

புதுசு : தள்ளுபடியில் வாங்கிய துணிக்கு, தரம் பார்க்காதே!

பழசு : கல்யாணம் பண்ணிப்பார்; வீட்டைக் கட்டிப்பார்.

புதுசு : கிரெடிட் கார்டு வாங்கிப்பார்; கடனாளி ஆகிப்பார்.

பழசு : ஆனை வரும் பின்னே, மணியோசை வரும் முன்னே

புதுசு : பத்தாயிரம் ரூபாய் பட்டுப்புடைவை வரும் பின்னே, அதற்கு இலவசமாக கொடுத்த பத்து ரூபாய் துண்டு வரும் முன்னே

பழசு : ஆலை இல்லா ஊருக்கு



இலுப்பைப் பூ சர்க்கரை.
புதுசு : ஃபாஸ்ட் ஃபுட் கடை இல்லா ஊருக்கு, ஆயாக் கடை அதிசயம்.



பழசு : வெண்கலக் கடையில் யானை புகுந்தாற்போல
புதுசு : நகைக் கடைக்குள் பெண்டாட்டி நுழைந்தாற்போல



பழசு : அடி உதவுவதுபோல அண்ணன் தம்பி உதவுவார்களா?
புதுசு : இலவச இணைப்பு உதவுவதுபோல தள்ளுபடி உதவுமா?



பழசு : அழுதபிள்ளை பால் குடிக்கும்.
புதுசு : அடம்பிடிக்கும் பெண்டாட்டியே அட்டிகை வாங்கிக் கொள்ள முடியும்.



பழசு : சர்க்கரை என்றால் தித்திக்குமா?
புதுசு : கவரிங் நகை கருத்தைக் கவருமா?



பழசு : கடைத் தேங்காயை எடுத்து வழிப் பிள்ளையாருக்கு உடைக்காதே
புதுசு : புருஷனின் பாண்ட், ஷர்ட்டைப் போட்டு புதுப் பாத்திரம் வாங்காதே.

என்.கே. பாலசுப்ரமணியன்





# கலைஞருக்கு வைரமுத்து! ஸ்டாலினுக்கு இளையபாரதியா?

"நான் இங்கே இன்று பகிரங்கமாக அறிவிக்கிறேன். இளையபாரதி திராவிட இயக்க இலக்கியவாதி; திராவிட இயக்க எழுத்தாளர், திராவிட இயக்கக் கவிஞர்... இவரை அறிமுகப்படுத்துகிறேன் என்று சொல்ல மாட்டேன்; அரங்கேற்றுகிறேன் என்று சொல்ல மாட்டேன். நாம் அனைவரும் இந்த வாலிபனை, கவிஞனை ஏற்றுக் கொண்டோம் என்று பிரகடனப் படுத்துகிறோம்'' - இளையபாரதியின் ஏழு நூல்கள் வெளியீட்டு விழாவில் கலைஞர் பேசியது இது. இளைய பாரதிக்குக் கலைஞர் மேல் காதல் என்பது அனைவருக்கும் தெரிந்ததுதான். ஆனால் திராவிட இயக்க அங்கத்தினராக அவருக்குக் கலைஞர் ஞானஸ்நானம் செய்வித்தது இளையபாரதிக்கே கூட இன்ப அதிர்ச்சி கொடுத்திருக்கும்.

அன்று கலைஞர் அரங்கத்தில் உட்கார இடம் தேட வேண்டியதாகி விட்டது. புது மற்றும் மரபுக் கவிஞர்களின் சந்திப்பு முனையாக அன்று மாறி விட்டது கலைஞர் அரங்கம். ஏழு நூல்கள் என்பது பிரமிக்கத்தக்க ஒரு விஷயம் என்றாலும், இதில் ஓரிரு நூல்கள் முன்னமே வெளியிடப் பட்டிருக்கின்றன என்று நம்மிடம் கிசுகிசுத்தார் எழுத்தாள நண்பர் ஒருவர். குறிப்பாக 'மரணத்தின் நட்சத்திரங்கள்' என்ற புத்தகம். பட்டினப் பாலை என்ற நூலை கலைஞர் வெளியிட அதைப் பெற்றுக் கொண்டவர் கனிமொழி. "புத்தகத்தை பெற்றால் மட்டும் போதுமா? பணம் எங்கே?" என்று மகளிடம் கேட்டார் கலைஞர். சபையில் ஒரே சிரிப்பு! பின்னர் புத்தகங்களின் முதல் பிரதியைப் பெற வந்தோர் ஞாபகமாக பணத்தையும் எடுத்து வந்தனர்.

திரைப் பட மேதை அகிரா குரோசாவா பற்றிய புத்தகத்தைப் பெற்றுக் கொண்ட பி.ஸ்ரீ. ஸ்ரீராம் கலைஞர் கால்களைப் பற்றி வாழ்த்துக்களைப் பெற்றுக் கொண்டார். கல்யாண்ஜி, அப்துல் ரகுமான், ஞானக்கூத்தன், இன்குலாப், கலாப்ரியா கனிமொழி என்று அன்று மேடையில் கவிஞர்களின் அணிவகுப்பு! அந்த நீண்ட வரிசையைப் பார்த்தபோது "சரி... இன்று நள்ளிரவு வரை கச்சேரி நீளும்" என்று பயந்து போய் விட்டோம். ஆனால் கலைஞர் நீண்ட நேரம் உட்கார முடியாது என்பதால், எல்லோரும் மினியாக முடித்துக் கொள்ள, கூட்டம் எட்டே முக்காலுக்கே முடிந்து போனது. தாங்ஸ் டு கலைஞர்!

"திராவிட இயக்க எழுத்துக்களையும், எழுத்தாளர்களையும் இலக்கிய உலகம் ஏற்றுக் கொள்வதில் தயக்கம் காட்டியது, காட்டுகிறது'' என்று கலைஞருக்கு முன்பாகப் பேசிய அப்துல் ரகுமான் திரியைப் பற்ற வைத்தார். அவர் முதலிலேயே அது போன்று பேசியிருந்தால் பின் வந்த கவிஞர்கள் தீபாவளி கொண்டாடியிருப்பார்கள். ஆனால் ரகுமானுக்குக் கலைஞர் மட்டுமே பதில் சொல்ல வேண்டிய நிலை! "சிலர் ஒதுக்கி வைத்த காரணத்தால் திராவிட இயக்க எழுத்தாளர்கள் அறவே ஒதுக்கப்பட்டு விடுவதில்லை'' என்று பதிலடி கொடுத்தார் கலைஞர்.

கூட்டம் கலையும்போது, "கலைஞருக்கு ஓர் இலக்கியத் தோழர் வைரமுத்து. அது போன்றே ஸ்டாலினுக்கு இளையபாரதியா?" என்ற கேள்வி எழுப்பினார் ஒரு கவிஞர் - நண்பர்.

- கௌசி

படம்: மீடியா ராமு



# த்ரீ ரோஸஸ்

**நிறம் :** ஜேம்ஸ்பாண்ட் விடுமுறையில் போய்விடும் சென்டிமீட்டர் இடைவெளியில் புகுந்து அதிரடி டிடெக்டிவ் ஏஜெண்டுகளாக தூள் கிளப்பும் 'சார்லீஸ் ஏஞ்சல்ஸ்'. தமிழுக்குத் தகுந்தமாதிரி உல்டா பண்ண நினைத்திருக்கிறார் இயக்குனர்.

ஒரிஜினலில் பின்னணி இசை, கலை இயக்கம், 3டி கிராபிக்ஸ் மூன்றும் கலக்கல் ரகமாய் இருக்கும். இதில் மூன்றுமே மெகா மிஸ்ஸிங், குறிப்பாக யுவன் சங்கரின் இசை வெண்கலக் கடையில் புகுந்த பெருச்சாளி மாதிரி செம டார்ச்சர்.

**சுவை :** நாங்கள் மலர்களை ஏந்தி வரவில்லை, துப்பாக்கிகளை ஏந்தி வந்திருக்கிறோம் என்று தன்னிலை விளக்கம் தரும் மூன்று ரோஜாக்களும், ஹீரோக்கள் பின்னால் அலையாமல் காதல் ஜுரத்தில் வீழ்ந்து விடாமல், காரியத்தை மட்டும் கவனிப்பதில் அப்படியொரு ஆறுதல்.

**இடம் :** முதல் பாதியில் கூவம் மாதிரி தறி கெட்டுத் திரியும் கதை, தலால் ஆஸ்மி காதல் விவகாரம் வந்த பிறகுதான் சூடு பிடிக்கிறது. நடிகைகளுக்குக் கோவில் கட்டுவது, நாற்சந்தியில் சிலை வைப்பது எனச் சீரழியும் இரண்டும் கெட்டான் தமிழ் ரசிகப் பெருமக்களை வாங்கு வாங் கென்று வாங்கும் விவேக்கின் காமெடி, வில்லங்கம் ப்ளஸ் விழிப்புணர்வு!

**- விஷுவல்தாசன்**

● ஆவரெஜ்

# ஆன்லைனில்



பொருளை வாங்குபவர்கள் யாரென்று தெரியாது. தனியாகக் கடை ஏதும் இல்லை. பெயர்ப் பலகை இல்லை. விளம்பரம் இல்லை... ஆனால் இங்கே தயாரிக்கப்படும் 'செட்டி நாடு ஸ்நாக்ஸ்' வகைக்கு, உலகமெங்கும் சுவைஞர்கள் இருக்கிறார்கள்.

அதுவும், கார்த்திகை, தீபாவளி, கல்யாணம் போன்ற விசேஷங்களின் போது, ஈ-மெயிலிலும் ஆர்டர்கள் குவிகின்றனவாம்.

சிவகங்கை, காரைக்குடிக்கு அருகில் உள்ள ஓ.சிறுவயல் என்ற கிராமம். "இங்கே முறுக்கு, சீடை" என்று சொல்லி முடிப்பதற்குள், "ஓ... சௌந்தரம் ஆச்சி வீடுங்களா?" என்று அடையாளம் காட்டுகிறார்கள்.

திண்ணை, முற்றம் என பழங்காலத் தூண்களுடன், பழைமைப் பூச்சுடன் இருந்த வீட்டுக்குள் நுழைந்தால்... சுமார் பத்துப் பெண்கள், உலக்கை, கரண்டி சகிதம் அன்போடு வரவேற்கிறார்கள்.

உளுந்து மாவு வாசனை ஒரு பக்கம் தூக்க, பூத்த வெல்லப்பாகின் வாசனை

## அதிரசம் செஞ்சு பாருங்க!



**தேவையான பொருட்கள்**

பச்சரிசி: 1½ கிலோ

அச்சு வெல்லம் : 1 கிலோ

நெய் (அ) டால்டா 1 கிலோ

**செய்முறை**

பச்சரிசியை சுமார் அரை மணி நேரம் நனைய வைத்து இடித்து புட்டு மாவு பதத்தில் மாவாக்கவும்.

அச்சு வெல்லத்தை இடித்துத் தூளாக்கிக் கொண்டு

• சௌந்தரம் ஆச்சி

சேர்ந்து அள்ள, பொரித்த எண்ணெயின் கம...கம... சூழ்ந்து கொள்ள, வந்த விஷயமே மறந்து போனது.

"ஐந்து வருஷத்துக்கு முன்னாலே, நான் செய்த பலகார வகையை ஏ.எம்.எம் குருப்ஸ் மெய்யம்மை ஆச்சி ஒருமுறை



ருசி பார்த்தார்கள். உடனே "ரொம்ப ருசியா இருக்கே... நீ இதை ஏன் தொழிலாகவே செய்யக் கூடாது"ன்னு உற்சாகப்படுத்தினாங்க. அப்ப ஆரம்பிச்சதுதான்...!" என்று இந்த உலகுக்கு மீண்டும் அழைத்து வந்தார் சௌந்தரம் ஆச்சி.



அச்சு முறுக்கு, கை முறுக்கு, மகிழம்பூ முறுக்கு, சீப்பு சீடை, ரிப்பன் பக்கோடா, மணகோலம், அதிரசம் என பாரம்பரிய செட்டிநாட்டு நொறுக்ஸ் மட்டுமே இங்கு தயாரிக்கப்படுகின்றன.

'செட்டிநாடு ஸ்நாக்ஸின்' தனிச் சுவைக்குக் காரணம் என்ன?

''அரிசியின் தரம் மற்றும் ரகத்தை நாங்கள் ஒருபோதும் மாற்றுவதில்லை. எந்த நிலையிலும் இயந்திரங்களைப் பயன்படுத்த மாட்



# அச்சு முறுக்கு!

டோம். உரலில் இடித்து, அம்மியில் அரைத்துத்தான் பயன்படுத்துகிறோம். சுத்தமான தேங்காய் எண்ணெய்,

---

ஒரு தம்ளர் தண்ணீர் விட்டு அடுப்பில் வைத்துப் பாகு காய்ச்சவும். (வெல்லப் பாகை சிறிது எடுத்து குளிர்ந்த தண்ணீரில் விட்டால், கரையாமல் உருண்டையாக இருக்க வேண்டும்)

ஏற்கெனவே தயாரித்து வைத்துள்ள பச்சரிசி மாவில் பாதியளவை எடுத்து வெல்லப் பாகில் கொட்டிக் கிளற வேண்டும். மீதமுள்ள அரைப் பங்கு மாவை கொஞ்சம் கொஞ்சமாக அடுப்பில் வறுத்து, இளம் சூட்டுடன் வெல்லப் பாகில் கொட்டி, கிளறி, ஆற வைக்க வேண்டும்.

அதிரச மாவை அப்படியே வைத்து விடவும். மறுநாள் தேவையான அளவு டால்டா அல்லது நெய்யை வாணலியில் ஊற்றி நன்றாகக் காய விடவும்.

ஒரு பிளாஸ்டிக் தாள் அல்லது வாழை இலையில் எண்ணெயைத் தடவி, அதிரச மாவைத் தட்டிப் போட்டு பொன்னிறமாகப் பொரிக்கவும். சுவையான அதிரசம் தயார்!





"செத்துப் போன பிச்சம்மா ஆவியா வந்து உன்னோட பேசினாளாமே... என்ன கேட்டா?"

"செத்துப் போன தினத்திலிருந்து இன்றுவரை மெகா சீரியல்களில் நடந்த கதையைத்தான்!"

- ராஜி ராதா



"போர் இல்லாத சமயங்களில் உங்கள் அரசர் என்ன பண்ணுவார்?"

"புறமுதுகிட்டு ஓடி வர பயிற்சி மேற்கொள்வார்!"



"சாமி! நூறு ரூபாய் தருமம் பண்ணுங்க, ஐயா.."

"என்னப்பா இது? நூறு ரூபாயா பிச்சை கேட்கறே?"

"உயரிய இலக்குகள் இருக்கணும்னு சொற்பொழிவிலே கேட்டேங்க; அதான்!"

- யமுனா ரெங்கநாதன்

நெய்தான் பயன்படுத்தப்படும். ஒருமுறை பயன்படுத்திய எண்ணெயை, மறுபடி உபயோகப்படுத்துவதில்லை. அன்று மாலையே, ஒரு கிலோ பதினைந்து ரூபாய் என உள்ளூரில் விற்பனை செய்து விடுவோம். எண்ணெயில் பொரித்தவுடன் முதலில் ருசி பார்ப்போம். சிறிது ருசி மட்டுப்பட்டாலும், புதிய மாவு தயார் செய்து விடுவோம்" என்கின்றனர் கோரஸாக!

சௌந்தரம் ஆச்சியின் தயாரிப்புகள், அவருக்குத் தெரியாமலேயே சிங்கப்பூர், அமெரிக்கா, லண்டன் என பயணம் செய்கின்றன. ருசித்தவர்கள் பாராட்டும் போதுதான் தம்முடைய கைவண்ணம் பயணித்த தூரம் தெரிய வருமாம்.

"பெரும்பாலும் வெளியூர் ஆர்டர்கள் ஃபோனில்தான் வரும். அவர்கள் கேட்கும் தேதிக்கு, ஒரு நாள் முன்னதாகவே தனியார் பேருந்துகள் மூலம் அனுப்பி விடுவோம். சரக்கு போய்ச் சேர்ந்ததும், பணம் வந்துவிடும். இதுவரை யாரும் ஏமாற்றியதில்லை" என்கிறார் மனநிறைவுடன்.

தேசிய பார்வையற்றோர் கழகத்தின் தமிழ்நாடு கிளை சென்னையில் நடத்திய ஒரு கண்காட்சியில், 'செட்டிநாடு ஸ்நாக்ஸ்' என்று இவர் நடத்திய கடையில் ஒருநாள் வருமானமான ரூபாய் நான்காயிரத்தை, அந்த அமைப்புக்கே நன்கொடையாகத் தந்திருக்கிறார் சௌந்தரம் ஆச்சி.

"எப்படி வந்தது இவ்வளவு ருசியும்... கைப்பக்குவமும்?" என்று கேட்டால்...' என் மாமியார் கிட்டே கத்துக்கிட்டதுதாங்க" என்கிறார்!

இந்தத் தீபாவளிக்கு செட்டிநாடு ஸ்பெஷல் அதிரசம் செஞ்சு பாருங்களேன், ஓ.சிறுவயல் ஸ்வீட்டுக்கு ஓ போடுவீங்க!"

கட்டுரை, படங்கள்:
குன்றக்குடி சிங்காரவடிவேல்



## சுபா

## 1

# நான் வேண்டுமா?

### ஜெட் வேக காதல் தொடர் ஆரம்பம்!



ஜன்னல் கண்ணாடியில் குருவிகள் மூக்கால் கொத்திக் கொத்திக் கூப்பிட்ட போது வெளியே வெளிச்சம் வெள்ளமாகியிருந்தது. கூந்தலை விரித்துப் போட்ட காலேஜ் யுவதி மாதிரி, குல்மோஹர் மரம் ஜன்னலுக்கு நெருக்கமாகக் கிளைகளை விரித்திருந்தது. பட்சிகள் தத்தம் அபார்மெண்ட்களை விட்டு ஜோலிக்குப் புறப்பட்டுப் போயிருந்தன.

நிவேதனா போர்வையைக் களைந்தாள். தன்னை முன்னே தள்ளி ஒயிலாக சோம்பல் முறித்தாள். கண்ணாடியில் இன்னொரு நிவேதனா அதே போல் முறித்தாள். கன்னத்தில் தீற்றிக் கொண்டிருந்த முடிகளை விரலால் தட்டினாள். நைட்டியின் கைகளை ஸ்லீவ்லெஸ் போலச் சுருட்டிதாள் பகுதித்துணிக்கடியில் அடக்கிக் கொண்டாள். கிழித்த தேதியை கோலியாகச் சுருட்டிக் குறி பார்த்து குப்பைக் கூடையில் எறிந்தாள். பிரஷ்ஷையும், பேஸ்ட்டையும், கதவுக்கு வெளியேயிருந்து ஆங்கில தினசரியையும் திரட்டிக் கொண்டு பாத்ரூமிற்குள் போனாள்.

வெளியே வர, குறைந்தது நாற்பத்தைந்து நிமிடம் பிடிக்கும். ரூம் மேட் அவசரப் படுத்தினாள் என்றுதான் லேடீஸ் ஹாஸ் டலை உதறிவிட்டு, இந்தத் தனிபோர்ஷனைப் பிடித்திருந்தாள். கூடுதல் காரணம், அங்கே விடுதிப் பொறுப்பாளரின் சில கேள்விகள் :

ஆபீஸ் ஆறு மணிக்கெல்லாம் முடிஞ்சு திரும்பி வர ஏன் இவ்வளவு லேட்? டிஸ்கோ டான்ஸ்க்குப் போயிருந்தியாமே? உன் தலைமுடில சிகரெட் வாசனை வருதுன்னு சரோஜா சொல்றாளே? காலைல பம்புல



தண்ணி அடிச்சுப் பிடிக்க நீ வரதில்லையாமே? ரூம்ல பிளவுஸ் போட்டுக்காம கண்ணாடிக் கெதிர்ல ரொம்ப நேரம் நிக்கறியாமே?

எல்லாவற்றுக்கும் சேர்த்து ஒரே 'கோடு ஹெல்' சொல்லிவிட்டு அறையைக் காலி செய்து நான்கு மாதமாகிறது. இந்தத் தனி போர்ஷனில் அவள் தான் ராணி, சேவகி, வார்டன், காப்பாளர், மேய்ப்பாளர். அவளுக்கு அவளே தான் ரூம்மேட். எங்கும் சுதந்திரம் என்பதே பேச்சு. குறுக்கில் நின்றதெல்லாம் வெளியே போச்சு. அவள் எழுந்திருக்க விரும்பாத போது அலாரம் அடித்தது என்று டிஜிட்டல் கடிகாரத்தை ஓனிக்ஸ் தொட்டியில் தூக்கிப் போட்டு விட்டாள்.

குருவிகள் பாத்ரூம் ஜன்னலுக்கும் அவளைத் தேடி வந்தன. அவற்றுக்குக்



"புது ஸ்டெனோகிட்ட நான் எள்ளுன்னு சொன்னா எண்ணெயா நிற்கணும்னு பேசினது தப்பாப் போச்சு!"

"ஏன், என்ன ஆச்சு?"

"மறுநாள் உடம்பு சரியில்லைன்னு சொன்னப்ப மலர் வளையத்துடன் வந்து நிக்கறாள்!"

- எம். அசோக்ராஜா

காற்றில் முத்தங்களைப் பறக்க விட்டாள்.

தினசரியில் கறுப்பு சருமத்தைக் கல்யாணத்திற்குள் வெள்ளையாக ஆறு வாரத்தில் மாற்ற வற்புறுத்திய விளம்பரத்தை, அப்படியே பிய்த்துக் கிழித்து ஃபிளஷ் செய்தாள். மணமேடைக்கு வரும் முன் இந்த ஆண்களையும் ஆஸிட் ஊற்றிக் குளிப்பாட்டிக் கொண்டு வந்தால் என்ன?

என்ன விளம்பர யுக்தி இது? பெண்கள் சொல்கிற பிளேடுகளைத் தான் வாங்குவார்களாம். பெண்கள் ரசிக்கும் அண்டர்வேர்களைத் தான் போடுவார்களாம். பல் தேய்ப்பதிலிருந்தே ஆரம்பித்து ஒவ்வொரு ஆணும், ஒவ்வொரு பெண்ணும் படுக்கையறையை உத்தேசித்தே செருப்பு வாங்குகிறார்கள், ஸெல்போன் வாங்குகிறார்கள், பிட்ஸா சாப்பிடுகிறார்கள், மோட்டார் சைக்கிள்களைப் பயன்படுத்துகிறார்கள்.

முகம் தெரியாத விளம்பரகர்த்தாக்களை பர்வர்ட்ஸ் என்றும், இன்னொரு அச்சிட முடியாத வார்த்தையாலும் திட்டினாள்.

குறுக்கெழுத்துக் கட்டங்களில் சில வார்த்தைகளை மானசீகமாகத் தேடிக் கொஞ்ச நேரம் வீணடித்தாள்.

ஷவருக்குக் கீழ் சில அபிநயங்கள் செய்தாள். வாஷ்பேஸினுக்கு மேலே இருந்த முட்டை வடிவக் கண்ணாடியில் தவணை தவணையாகத் தன்னைப் பார்த்துப் பழித்தாள். பாத்ரூமில் ஒரு சுவர் முழுவதும் கண்ணாடி பொருத்த வேண்டும் என்று எப்போது சட்டத் திருத்தம் கொண்டு வரப் போகிறார்கள்?

வளைந்த நீளமான புருவங்கள். திருட்டுத்தனங்களை ஒளித்து, அப்பாவித்தனமான பெரிய கண்கள். வடிவமைப்பான நாசி. இயல்பிலேயே சற்றே ரோஸ் நிற உதடுகள். அளவெடுத்துக் கோத்தது போல் வெண்பற்கள். இரண்டு பள்ளங்களாகக் கன்ன மேடுகள். கழுத்து தான் இன்னும் கொஞ்சம் நீளமாக அமைந்திருக்கலாம்.

அழகாய்த் தானடி இருக்கிறாய். அதனால் தான் ரவி அப்படி நாக்கைத் தொங்கப் போட்டுக் கொண்டு உன் பின்னால் அலைந்தான்.

அடர் வயலட்டில் உயர் பருத்திப் புடைவை. மஞ்சள் நிறத்தில் ரிப்பன் பார்டர். வயலட் வரி போட்ட மஞ்சள் ரவிக்கை. செயற்கை முத்துக்கள் கோத்த மணிமாலை. வாட்ச் அணிந்து, ஹீல்ஸ் அணிந்து, ஹேண்ட் பேகைக் கவர்ந்து கொண்டு, கதவைத் தாளிட்டுப் பூட்டிய போது அவனைக் கவனித்தாள்.

இன்றைக்கும் தெருவின் எதிர்த் திசையில் போஸ்ட் பாக்ஸ் அருகே நின்றிருந்தான். வளர்ந்த வாழை போல் உயரமாய் இருந்தான். நீளம் நீளமாய்க் கைகள். இஸ்திரி மொடமொடப்புடன் முழுக்கைச் சட்டை. தங்கப்பேனா. பித்தளை சிங்க மூஞ்சியோடு லெதர் பெல்ட். ரிங்கிள் ஃப்ரீ பேன்ட். அப்போது தான் தீட்டி அணிந்ததுபோல் ஷூக்கள்.

இவனுக்கு என்ன வேண்டுமாம்? எதற்கு ஏழெட்டு நாட்களாய் அவளையே நிழலாகத் தொடர்ந்து கொண்டிருக்கிறான்? தமிழ் சினிமாக்களைப் பார்த்துவிட்டு, ஒரு பெண்ணை ஒரு வாரம் பின்னாலேயே துரத்திப் போனால் காதலிக்க ஆரம்பித்து விடுவாள் என்று பைக்கை எடுத்துக் கொண்டு வந்து விடுகிறானா?

கூலிங் கண்ணாடி அணிந்தாள். கறுப்பு நிழலாக அவனை நேராகப் பார்த்தாள். பின்னாலேயே வாடா. இன்றைக்கு சிக்னலில் நிறுத்தி கன்னத்தில் அறைந்து, நான் வேறு இனம் என்று தெளிவுபடுத்திவிடப் போகிறேன்.

ஃபோனை பாக்கெட்டில் போட்டு மோட்டார் சைக்கிளை அவன் உதைத்தான்.

நிவேதனா ஸ்கூட்டியைக் கிளப்பிய வேகத்தில் அடுத்த தெருவில் நேரே டிராபிக் போலீஸ் அருகில் கொண்டு நிறுத்தினாள். சட்டென்று இறங்கி, பின்னால் வரும் அவனை கை காட்டி நிறுத்தச் சொன்னாள். கலவரத்துடன், அவன் நிற்காமல் தாண்டி வலதுபுறம் திரும்புவதைக் கண்டு புன்னகை

செய்தாள்.

போலீஸ் விசாரிப்பதற்குள் வண்டியைக் கிளப்பினாள். போக்குவரத்தில் கலந்தாள். அவனை மறந்தாள்.

எழும்பூரின் பிரதான சாலையில், ஏழாவது மாடியில் அவள் வேலை பார்க்கும் டிராவல் ஏஜன்ஸி இருந்தது. கட்டடத்தின் சிமென்ட் நிழலில் தாயிடம் பால் குடிக்கும் பன்றிக் குட்டிகள் போல, நெருக்கமாய் நின்றிருந்த இரண்டு சக்கர இயந்திர வாகனங்கள். அவள் வண்டியை நுழைத்து நிறுத்த வழக்கம் போல் நேபாள இளைஞன் உதவி செய்தான். ஒரு புன்னகை போதும். லிப்ட் வரை சாமரம் வீசிக் கொண்டு வருவான்.

லிப்டின் சொர்க்க வாசல் திறக்க ஏற்கெனவே சிலர் காத்திருந்தனர். பரிச்சயமானவர்களின் பரஸ்பரப் புன்னகை உதிர்த்து, அக்டோபரில் கூட வெயில் இப்படி இருந்தால் ஏன் ஏரிகள் வற்றாது என்று பொதுவாகக் கவலைப்பட்டு, தத்தம் மாடிகளில் உதிர்ந்தனர்.

ஏழாவது மாடியில் வெளிப்பட்டது அவள் மட்டுமே. கிரானைட்டில் வழுக்காமல் வேகமாக நடக்கும் சாமர்த்தியம் அவளிடம் இருந்தது. வெனிஷியன் தகடுகளால் மறைப்பட்டிருந்த கண்ணாடிச் சுவர்களில் ஐரோப்பா, சிங்கப்பூர், மலேஷியா வரச் சொல்லி, சப்பை மூக்கு நங்கைகள் வண்ணப் போஸ்டர்களில் சபலப்படுத்தினர். ஜன்னல்களுக்கு வெளியே, கம்பெனியின் நியான் அறிவிப்பு பகலில் தூங்கிக் கொண்டிருந்தது.

சில ஹாய்களைச் செலவு செய்து, தன் சின்ன சதுரச் சிறைக்குள் நுழைந்தாள். அவளை எதிர்பார்த்து இன்டர்காமின் விளக்கு ஒளிர்ந்தது.

''ரூமுக்கு வாயேன்'' என்றான், தீபக் மிஷ்ரா. சம்பளம் கொடுக்கும் பார்ட்னர்களில் ஒருவன்.

தீபக் மிஷ்ராவின் அறையில் காலையிலிருந்தே குளிரூட்டப்பட்ட காற்று சிலீரென்று கடித்தது. சுவரில் ஆறு வெவ்வேறு தேசங்களின் நேரத்தைக் காட்டும் கடிகாரங்கள். காந்த போர்டில் அயல் தேசத்து கரன்ஸியின் அன்றைய மதிப்புப் பட்டியல். வாடிக்கையாளர்களுக்குப் போட்டுக் காட்ட சி.டி.ப்ளேயர். பட்டைத் திரையுடன் டெலிவிஷன். லாப் டாப்.

"இன்னிக்கு ஈவ்னிங் நீ ஃப்ரீதானே?'' என்றான், உட்கார சைகை காட்டி.

இருபத்து நான்கு வயது. செழிப்பான நிறம். தினப்படி ஷேவின் மழமழப்பு. கருமீசை. ஃப்ரூட் மஸ்க் வாசம். வைரப் பொட்டுகள் பதித்த கைகடிகாரம். எண்பது கிலோ மனைவியும், இரண்டு கைக் குழந்தைகளும் வெளியே புலப்படாத இளமை.

"ஹாலிடே ட்ரிப் ஏதாவது குருப் புக்கிங் வருதா?" என்றாள், உட்காராமல்.

''இல்ல. போன வருஷம் புக்கிங்ல ரெக்கார்டு பிரேக் பண்ணியிருக்கோம். ஸ்டாஃபுக்கு நன்றி சொல்ல ஒரு சின்ன பார்ட்டி. எட்டு மணிக்கு."

"எங்கே?"

"மித்ரு கிளப். நீ வரே" என்றான்.

அவள் கதவு திறந்து கிட்டத்தட்ட வெளியேறி விட்ட நேரம், "ஹேய், நிவேத். இந்த வயலட் கலர் உனக்கு ரொம்ப நல்லா எடுக்குது" என்றான்.

மலேஷியாவின் கிராண்ட் ஹோட்டலி விருந்து புக்கிங் கன்ஃபர்மேஷனுக்காக ஆன்லைனில் அவள் காத்திருந்த மதிய நேரத்தில், இருக்கைக்கு எதிரில் மணவாளன் வந்து புன்னகைத்தார். கம்பெனியின் அதிமுக்கிய வாடிக்கையாளர். பூந்தமல்லி சாலையின் பிரபல ஹோட்டலின் பி.ஆர்.ஓ.

அறுபதின் நெருக்கத்தில் இருந்தார். இரண்டு வருடங்களில் நெற்றி பெரிதாகி விட்டது. கன்னங்களில் இருபுறமும் பிராக்கெட் வரிகள் தங்கிவிட்டன. பற்களுக்கிடையில் இடைவெளி அதிகரித்துவிட்டது.

''பெண் பார்க்க வந்த பையன்ட்ட என் மகள் கேட்ட ஒரு கேள்விக்கு அவர் சொன்ன பதிலால் இந்த இடம் ஓகே. ஆயிடுச்சு."

''அது என்ன கேள்வி - பதில்?"

'''வீட்ல சிக்கனமா இருக்க ஒரு உதாரணம் சொல்லுங்க'னு கேட்டதுக்கு 'இன்றைய இட்லி, நாளைய உப்புமா'னு சொல்லி மாப்பிள்ளை அசத்திட்டார்!"

- வசந்தி வள்ளுவன்





## வி.ஐ.பி ஷாப்பிங் அனுபவம்

**அனுராதா கிருஷ்ண மூர்த்தி :** சமீபத்தில் என்னுடைய சின்ன மாமனார் அமெரிக்காவிலிருந்து வந்திருந்தார். தீபாவளி ஷாப்பிங் செய்ய நல்லி நூறு கிளம்பினோம். நாங்கள் வீட்டை விட்டுக் கிளம்பியதிலிருந்தே, எங்கள் காரை மிக நெருக்கமாகத் தொடர்ந்து கொண்டிருந்தது அந்த வண்டி.

கையில் நிறைய பணம் வேறு... காலம் இருக்கிற இருப்பில், பட்டப்பகலில் கொள்ளை எல்லாம் சர்வ சாதாரணமாச்சே! மனசுக்குள் சின்னக் கலவரம்!

பனகல் பார்க் அருகே சிக்னலில் நின்றபோது, அந்த வண்டியிலிருந்த ஒரு தாடிக்காரர் என்னுடன் பேச முற்பட்டார். "எதுக்கு வம்பு?" என்று கண்டு கொள்ளவில்லை.

'நல்லி' புடைவைக் கடைக்குள் நுழைந்தோம். அந்தப் பெண்ணும் தாடிக்கார இளைஞனும் என்னைப் பின் தொடரவே எனக்கு இருப்பே கொள்ளலை.

"வொய் ஆர் யூ ஃபாலோயிங் மீ" என்று கேட்டுவிடலாம் என்று திரும்பினால் அந்தப் பெண், ஆட்டோகிராபை நீட்டினாள்.

"உங்கள் இசைக்கும், நடிப்புக்கும் நான் விசிறி" என்றாள் ஆர்வம் மின்ன...

அதைத் தொடர்ந்து நல்லி கடையிலும் ஏகப்பட்ட ஆட்டோகிராப்கள் இட்டேன்.

"சஹானா ஏற்றிவிட்ட புகழா? ஐயாம் ஹைலி ப்ரிவிலெஜ்ட் டு ஷாப் வித் எ செலிப்ரிடி" என்று என் சின்ன மாமனார் கிண்டல் செய்ய.. மறக்க முடியாத ஷாப்பிங் அனுபவம்!

ஆனாலும், அவரிடம் ரசிப்பதற்கு நிறைய விஷயங்கள் இருந்தன. மீசையில் கம்பீரமான நரை. பொருத்தமான வட்டக் கண்ணாடி. துல்லியமான ஆங்கிலம். தூய்மையான உடைகள்.

"பிஸியா இருக்கியா?" என்றார், விரல்களை அவள் மேஜை மீது வைத்து. பிசிறு இல்லாமல் வெட்டப்பட்ட நகங்கள்.

"டூ மினிட்ஸ், சார்" என்று புன்னகையால் மன்னிப்புக் கோரி, நாற்பது நொடிகளிலேயே முடித்து நிமிர்ந்து, "யெஸ், சார்?" என்றாள்.

"என்னோடு காஃபி சாப்பிட வருவியா?"

புருவங்களை உயர்த்தினாள். கிழத்திற்கு என்னவாம்? ஆனாலும் மறுக்காமல், லீலாவிடம் கேன்டீனிற்குப் போவதாகச் சொல்லிவிட்டு அவருடன் லிப்டிற்கு நடந்தாள்.

வெங்காய பக்கோடாவைக் கொறித்துக் கொண்டே, "உங்க வீடு எங்கே இருக்கு?" என்று ஆரம்பித்தார். "அப்பா என்ன பண்றாரு?"

"அப்பாவா?" உலர்ந்து சிரித்தாள். "அம்மாவோட ஹனிமூன் போயிருக்கார்..." என்று ஆகாயத்தைக் காட்டினாள்.

"ஸாரி..!" என்று தயங்கினார். "கூடப் பொறந்தவங்க?"

கேன்டீனில் உட்கார்ந்திருந்த அத்தனை பேரையும் காண்பித்து "இவங்க தான்" என்றாள். "அஞ்சு வயசுலேர்ந்து நான் தனி ஆளு. ஹாஸ்டலுக்கு சித்தப்பா பணம் அனுப்பிட்டிருந்தாரு, காலேஜ் முடிக்கற வரைக்கும். இப்ப சொந்தக் கால்."

"உன் சித்தப்பா அட்ரஸ் கொடு. போய்ப் பார்க்கிறேன்."

"கனடாவுல இருக்கார். என்னையே டிஜிட்டல் போட்டோவுல தான் பார்த்திட்டிருக்கார்... என் கிட்டயே நீங்க பேசலாம்."

"நேர விஷயத்துக்கு வரேன். ரொம்ப நாளா உன்னை வாட்ச் பண்ணிட்டிருக்கேன். ஐ லைக் யூ... எனக்கு மயிலாப்பூர்ல ரெண்டு கிரவுண்டுல வீடு இருக்கு. பெண்டாட்டி செத்து நாலுவருஷம் ஆகுது."

அவருடைய வார்த்தைகளிலிருந்து அவள் கவனம் பிசகியது. காரணம், கேன்டீனிற்குள் பிரவேசித்த அவன், செல்போனை வழக்கம் போல் நிரடிக் கொண்டே, அவளை வசதியாகப் பார்க்கும் ஒரு நாற்காலியில் வந்து அமர்ந்து கொண்டான். அவளைப் பார்த்து முதல் தடவையாக தைரியமாகப் புன்னகைத்தான்.

(தொடரும்)



''எதுக்கு சார் பாரா சூட்டுடன் ஷாப்பிங் கிளம்பிட்டீங்க?''

''கடைக்காரரோட வாக்குவாதம் வந்து திடீர்னு பத்தாவது மாடியிலிருந்து தள்ளிவிட்டால் கூட பாரா சூட்டை பிடிச்சுட்டுத் தப்பிச் சுடலாமில்லே. அதுக்குதான்.''

பாஸு

''டெலிஷாப்பிங் என்பதை என் கணவர் தப்பாப் புரிஞ்சுட்டு இருக்காருடி.''

''எப்படிச் சொல்றே?''

''அங்கே பாரு! ரெண்டு கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கற சூப்பர் மார்க்கெட்டை டெலிஸ்கோப் வழியா பார்த்து, ஏதேதோ ஆர்டர் செய்துட்டு இருக்காரு.''





''எதுக்காக ஸ்விம்மிங் டிரெஸ்ஸில்தான் அந்த ஜுவுளிக்கடைக்குப் போவேன்னு அடம் பிடிக்கிறே பங்கஜம்?''


'' 'இது துணிக் கடையல்ல. துணிக்கடல்'னு விளம்பரம் தர்றாங்களே! அதனாலதாங்க!''



92ம் பக்கம் இடம் பெற்றுள்ள சிறுகதை கமல்ஹாசனுக்குப் பிடிக்குமா?

# பீஷ்மர்

"சினிமா என்பது டாகுமெண்டரி அல்ல. ஆனால் மறைமுக நூலிழைபோல் டாகுமெண்டரித் தன்மையைப் பின்னிக் கொண்டிருப்பதுதான் சினிமா" - இது புதிய பிரெஞ்சு சினிமா இயக்கத்தை வழி நடத்திய பிரான்சுவா ட்ரூஃபோவின் சினிமாக் கோட்பாடு.



இந்த கோட்பாட்டைத் தீவிரமாய் வழிபட்டது போல பீஷ்மரைப் படைத்திருக்கிறார் ரஞ்சித். நல்ல நடிகனாக நிலை நிறுத்திக் கொண்ட பின் இயக்குனரான பலரும், தம்மை, தமது ஹீரோ பராக்கிரமத்தை முன்னிறுத்தும் மசாலாக் கதைகளைத்தான் கையிலெடுத்திருக்கிறார்கள்.

ஆனால், ரஞ்சித் சொந்தப் பணத்தில், உலுக்கும் யதார்த்தத்துக்கு உயிர் கொடுத்திருக்கிறார்.

டூயட் இல்லை; காமெடி இல்லை; நேர்மையான போலீஸ் இன்ஸ்பெக்டரின் வாழ்க்கை மட்டுமே இருக்கிறது. அவரது ஒண்டுக் குடித்தன வீட்டுக்குப் பக்கத்தில் நாமும் வாழ்ந்து கொண்டிருக்கும் உணர்வு வருகிறது. அவரது நேர்மைக்கு வரும் சோதனைகளில், சினிமாத்தனம் இல்லாததால் சோகம் நம்மை அழுத்துகிறது.

கணவனைக் காப்பாற்ற சிறுநீரகம் விற்று, வறுமையின் பிடியில் மனைவி தேவயானி, சாகும்போது உயரதிகாரி என்று கூடப் பார்க்காமல், இன்ஸ்பெக்டரின் கன்னத்தில் அறையும் கான்ஸ்டபிள் அனுமோகனின் அதே கோபம் நமக்கும் வருகிறது.

வீச்சரிவாளைத் தூக்கிப் போய் எதிரிகளை வெட்டிச் சாய்க்காமல், தமது மகளை எண்ணி, மீண்டும் கிடைத்த வேலையை விட்டுவிட்டு, விரக்தியோடு வெளியேறும்போது, நடிகர் ரஞ்சித் மறைந்துபோய், இயக்குனர் ரஞ்சித் பிரம்மாண்டமாய்ப் புலப்படுகிறார்.

"நான் போலீஸ் இல்லே, பொறுக்கி" - போன்று ஏக மலிவான வசனங்களோடு காக்கி உடைகளை அவிழ்த்துவிட்டுத் திரியும் சினிமாப் போலீஸ்காரர்களுக்கு மத்தியில், பீஷ்மர், வணக்கத்திற்குரிய போலீஸ்!

- விஷ்ணுவல்தாசன்

அபல் ஆவரெஜ்

# தீவிர ஒரு தீபாவளி ரிலீஸ்

தீபாவளி முதல் 'தீவிர வாதம்' திரையிடப் படும் என்று விளம்பரம் வந்ததிலிருந்து, தி.இக தலைவர் திரைமுறைச்செல்வனின் சினம் சிறப்புப் பார்வை பெற்றது.

"உருட்டுக் கட்டை ரெடியா?"

"கெரசினைக் கொண்டு போய் ஊத்திக் கொளுத்துங்கடா"

"எவனாவது குறுக்கே வந்தா அரிவாள்லே ஒரே போடு."

தவிர்க்கப்பட வேண்டிய மேற்படி வசனங்கள் 'தீவிர வாதம்' படத்தில் இருக்கக்கூடுமென்று பயந்துதான் தமது போராட்டத்தைத் தொடங்கியிருந்தாலும், அதே மேற்படி வசனங்களையே தமது தொண்டர்களுக்கு செல் மூலம் திரைமுறைச்செல்வன், கட்டளையாகச் சொல்லிக் கொண்டிருந்தார். நாடெங்கிலும் தீபாவளியன்று 'தீவிரவாதம்' திரையிடப்படும் தியேட்டர்களில் படப்பெட்டி கடத்தல், படச் சுருள் எரித்தல் போராட்டங்களுக்காக, அந்தந்த மாவட்டப் பிரதிநிதிகளுக்கு வன்முறை விநியோக உரிமையை ஃபோன் மூலம் வழங்கிக் கொண்டிருந்தார்.

"மவனே... என்னை மீறி படமெடுத்து ரிலீஸ் பண்ணிடுவியா... நாட்லே நடக்கற பயங்கரவாதம் போதாதுன்னு நீ வேற படமெடுத்து சமுதாயத்தைக் கெடுக்கப் போறியா... படம் ரிலீஸ் ஆகுதான்னு பாத்துடுவோம்... மீறி ரிலீஸ் பண்ணா தியேட்டரே இடிஞ்சு வுழும்..."திரைமுறைச்செல்வனின் கோபம் 70 எம்.எம் பட விஸ்தீரணத்தை எட்டியது.

பாவம் திரைமுறைச்செல்வனின் சமூக நல அக்கறை பற்றி யாரும் அக்கறைப் படுவதாகத் தெரியவில்லை. தாம் நடத்தி வந்த அரசியல் கட்சியின் கொள்கை இத்யாதிகளை சப்ஜாடாகத் தியாகம் செய்துவிட்டு அக் கட்சியை அப்படியே 'திரைப்பட சீர்த் திருத்தக் கழகம்' எனப் பெயர் மாற்றி, சமுதாயத்தைச் சீரழிக்கும் சினிமாப் பெயர்களை மாற்றும் இயக்கமாகக் கடந்த இரண்டு ஆண்டு

அகிலா கார்த்திகேயன்

களாக இயக்கிக் கொண்டிருக்கிறார் திருநிறைச் செல்வனாக முன்பு பெயர் பெற்றிருந்த தலைவர். தயாரிப்பாளர்களோ, வசனகர்த்தாக்களோ, இயக்குநர்களோ, பாடலாசிரியர்களோ, ஒத்துழைப்புக் கொடுப்பதாகப் படவில்லை. சமூகம் சீர்கெடக் கூடாதே என்று இவரிடம் சுமுகமாகக் கலந்தாலோசித்து படத்தின் பெயரை வைப்போம். திரைக்கதை அமைப்போம், பாட்டு எழுதுவோம், காட்சிகள் எடுப்போம், எடிட் செய்வோமென்றில்லாமல், அவரவர்கள் தான்தோன்றித்தனமாக தத்தம் இஷ்டத்துக்குப் படமெடுப்போமென்று அலைந்தால் பொறுத்துக் கொள்ளவா முடியும்?

இருந்தாலும் திரைமுறைச் செல்வனின் முயற்சியால் பல படங்கள் பெயர் மாற்றமடைந்து தயாரிப்பாளர்களை மாரடைப்புக்குள்ளாக்காமலில்லை. 'ஒருவன் முறைக்கிறானடி' என்று கவித்துவமான தலைப்பில் ஒரு படம் காதல் கதைக்காக உருவானது. திரைமுறைச் செல்வனையா ஏமாற்ற முடியும்? 'படத்தின் பெயரிலேயே வன்முறை' பொதிந்திருக்கிறது, மாற்றியே தீர வேண்டும்' என்று படபிடிப்பு தொடங்கிய அன்றே ரகளையை ஆரம்பித்தார். தயாரிப்பாளர் பெயரை மாற்றச் சொல்ல, இயக்குநர் மாட்டேன் என்று சொல்ல, இருவருமே முறைத்துக் கொண்டு மெய்யாலுமே வன்முறையிலிறங்க 'ஒருவன் முறைக்கிறானடி' பிராஜக்டே கைவிடப்பட்டு விட்டது.

அடுத்து ஒரு தயாரிப்பாளர் 'கோபால் ஜெயபால்' என்று நட்பைப் பிரதானமாக வைத்து ஒரு படப் பெயரைப் பதிவு செய்துவிட்டு வர, படத்தில் 'பால்' இயல் காட்சிகள் பல வருவதற்கான அறிகுறிகள் படத்தின் பெயரிலேயே தெரிவதாக திரைமுறைச் செல்வன் படுத்த ஆரம்பித்தார். 'சரி, எதற்கு வம்பு' என்று படத்தின் பெயரை 'இரு நண்பர்கள்' என்று அரதப்பழசாய் வைத்தும் இவர் விடவில்லை. கதை வசனங்களை தமக்குக் காட்டியே ஆக வேண்டும். அதில் பாலியல் வசனங்கள் இருக்கிறதா என்று தாம் பார்த்த பிறகே படம் பண்ண வேண்டுமென்று அடம் பிடித்தார். பாவம், தயாரிப்பாளரும் தலையெழுத்தே என்று பட வசன நோட்டை (அப்பால், நினைப்பால் போன்ற வார்த்தைகளைக்கூட அகற்றி) இவரிடம் காட்டி அப்ருவல் பெறும் அவலத்துக்குத் தள்ளப்பட்டார்.

இவரையே ஏமாற்றுமளவுக்கு ஓரிரு படங்கள் வராமலில்லை. முதலில் 'அரிவாள்' என்றுதான் அந்த வன்முறைப் படத்துக்குப் பெயர் வைத்திருந்தனர். இவர் பலமாக எதிர்க்கவே, 'அவள் அறிவாள்' என்று பெயரை மட்டும் மாற்றி இவரைச் சமாதானப்படுத்திவிட்டு, கதையை என்னவோ 'அவன் அரிவாள் வீசவும் அறிவாள்' என்ற ரீதியில் எடுத்து வெளியிட்டுவிட்டனர்.

இதன் பிறகு சற்றே தீவிரமாக தமது திரைப்படப் பெயர் எதிர்ப்பை திரைமுறைச்செல்வன் செய்ய ஆரம்பித்தும் 'தொப்புள் கொடி' எப்படியோ தப்பிவிட்டது. தாம் தயாரிக்கும் முதல்



படமாயிற்றே. இதைத் தம் தாயாருக்குச் சமர்ப்பணம் பண்ணும் வகையில் தாய்ப் பாச சப்ஜெக்டாக எடுக்க நினைத்துதான் அந்தத் தயாரிப்பாளர் 'தொப்புள் கொடி' பெயரைத் தேர்வு செய் திருந்தார்.

"தலைவா, தொப்புள்லே பம்பரம் விட்டாச்சு, பரோட்டா சுட்டாச்சு. இப்ப இந்த பேமானி தொப்புள்ல மண் எருவெல்லாம் போட்டு கொடியை வளக்கப் போறானோ, இல்லே, காதலி தொப்புளிலே காதல் கொடி நாட்டறா மாதிரி எடுக்கப் போறானோ, இப்படியே வுட்டா என்ன ஆவறது?" என்று ஒரு தொண்டன் திரைமுறைச் செல்வனைக் கிளப்பி விட்டதில் ஆர்ப்பாட்டம் தொடங்கப்பட்டது.

ஆனால், தயாரிப்பாளரோ, இயக்குநரோ அசரவில்லை. மாறாக இப்படி ஒரு கிளுகிளுப்பு ஐடியா கிடைத்ததில், அம்மா சென்டிமெண்டைத் தூக்கி எறிந்துவிட்டு தொப்புளில் கொடி என்ற 'நாட்'டை நீட்டி ஒரு 'நாட்டி' படத்தை எடுத்து பெயரை மட்டும் 'தோப்பில் கொடி' என்று சாதுவாக வைத்து வெளியிட்டனர். படம் வெளி வந்து சக்கைப் போடு போட்டது.

இதனால் இப்போதெல்லாம் பெயரோடு நிற்காமல் கதை, வசனம், பாடல், காட்சிகள் என விலாவரியாக தம்மிடம் சொல்லி அங்கிகாரம் பெற்றால்தான் ஆயிற்று, என்று திரைமுறை அடாவடியாக ஆரம்பித்து விட்டார். ஸ்டோரி டிஸ்கஷனுக்கு இவருக்கும் ஸ்டார் ஹோட்டலில் ரூம் போட வேண்டியிருந்தது. காதல் காட்சிகளுக்காக கனடா, ஜப்பான் போக இவருக்கும் டிக்கட் எடுக்கும் இக்கட்டில் தயாரிப்பாளர்கள் தள்ளப்பட்டனர். கதாநாயக நாயகி கால் ஷீட்டோடு இவர் கால் ஷீட்டும் கிடைத்தால்தான் ஷூட்டிங் என்றாகி விட்டது. இத்தனைக்குப் பிறகும் சென்சார் போய் தப்பித்து வந்த படங்களை தாமும் மறுசென்சார் பண்ணுவேன் என்று கத்திரியும் கையுமாக அலையும் ஆகாத்தியம் வரை நிலை முற்றிபோனது.

போதாக்குறைக்கு, சென்ற இரண்டு ஆண்டுகளாக 'ஃபிலிம் அன்ஃபேர்' அவார்டான 'திரைப்பட எதிர்ப்பு விருது' வேறு இவருக்கே கொடுக்கப்பட்டு விட, இவருடைய ஆர்ப்பாட்டத்தினால் தமிழ்த் திரைப்பட உலகமே படாபேஜாருக்குள்ளானது.

இந் நிலையில்தான் எப்படியோ 'தீவிரவாதம்' இவருக்கே தெரியாமல் காஷ்மீரில் எடுக்கப்பட்டு, அங்கேயே சென்சார் சான்றிதழ் பெறப்பட்டு, இப்போது தீபாவளி ரிலீஸாக வந்துமாயிற்று.

"பொடா சட்டம், கிடா சட்டம்னு அரசாங்கம் எங்கேயும் தீவிரவாதம் இருக்கக் கூடாதுன்னு சட்டம் போடற போது, எத்தனை துணிச்சல் இருந்தா இப்படி ஒரு படத்தை எடுத்து எனக்கே தெரியாம ரிலீஸ் பண்ற அளவுக்குப் போவானுங்க? படத்தைத் தடை செஞ்சே ஆகணும்" என்று தமது போராட்ட அறிக்கையைத் திரைமுறை வெளியிட்டார்.

ஆனால் தயாரிப்பாளரோ தீவிரவாதத்தால் ஒரு குடும்பம் எப்படியெல்லாம் சீரழிந்து போகின்றது என்பதை படத்தில் சொல்லியிருப்பதாகவும், கடைசியில் தீவிரவாதத்தை தடுக்கும் உபாயத்தையும் மக்கள் நன்மைக்காக விளக்கியிருப்பதாகவும், தங்களுக்கும் சமூக நல உணர்வு உண்டென்றும் அறிக்கை விட்டனர்.

"ஆமாம், படம் பூரா தீவிரவாதம் வன்முறைகளைக் காட்டிட்டு, கடைசிக் காட்சியில் கதாநாயகன் ரெண்டு பாரா

## வி.ஐ.பி. ஷாப்பிங் அனுபவம்!

**த்ரிஷா :**

இரண்டு வருஷத்துக்கு முன்பு, நான் அம்மா பொண்ணு. என்னோட டிரஸ், பர்ஃப்யூம், ஷூஸ், எல்லாமே அவங்கதான் செலக்ட் பண்ணுவாங்க. இப்ப, அப்பா, அம்மாவுக்கும் சேர்த்து நானே ஷாப்பிங் பண்றேன். சமீபத்தில் சிங்கப்பூர்

போயிருந்தேன். கை நிறைய, பை நிறைய ஷாப்பிங் செஞ்சுக்கிட்டேயிருந்தா? கொண்டு போன டிராவலர்ஸ் செக் எல்லாம் தீர்ந்து போச்சு. பார்ஸல் ரெடி. ஆனால் பர்ஸில் பைசா இல்லை. தெய்வாதீனமாக ஏ.டி.எம். கார்டு இருந்தது. ஆனால் பதற்றத்தில் கோட் நம்பர் மறந்து போச்சு. அப்புறம் அம்மாவுக்கு போன் போட்டு, நம்பரை வாங்கி, எப்படியோ சமாளிச்சுட்டேன். வெளிநாட்டில், அதுவும் கையில் பைசா இல்லாமல் ஷாப்பிங் செய்தது புது அனுபவம்தான்!



வசனம் பேசிட்டா ஆவுமா...? படத்தை இன்னொரு தபா இங்கே சென்சார் பண்ணணும்'' என்று விடாமல் போராடினர்.

இதனால் இரண்டாம் முறையாக தமிழ்நாடு தணிக்கைக் குழுவினர் படத்தைப் பார்த்துவிட்டு சம்மதமும் கொடுத்து விட்டதில், திரைமுறைக்கு கொதிப்பு ஏற்பட்டது. 'விட்டேனா பார்' என்று வீச்சரிவாளையும், உருட்டுக் கட்டையையும் தீபாவளி அதுவுமாகத் தொண்டர்களை ஏந்த வைத்து, தீவிரவாதத் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆயத்தமானார்.

மிகவும் எதிர்பார்ப்பை 'திரைமுறை'யினால் ஏற்படுத்திக் கொண்ட 'தீவிரவாதம்' திரையிடப்பட்ட தியேட்டர்களில் ஒரு பக்கம் போலீஸ் கூட்டமும், மறுபக்கம் ரசிகர்கள் கூட்டமும், இன்னொரு பக்கம் தி.சீக தொண்டர்கள் படை கூட்டமுமாக 'ஜெஜெ' என்றிருந்தது. படத்தைப் பார்க்கும் ஆவலில் தொண்டர்களில் சிலர்கூட உருட்டுக் கட்டையைக் காண்பித்து மிரட்டி, டிக்கட் வாங்கிக் கொண்டு உள்ளே சென்றனர்.

மிச்சமிருந்த தொண்டர்கள் கூட்டம், போலீஸுக்கு அஞ்சி எதிர்ப்பு கோஷமிட்டபடி தியேட்டரின் வாசலில் உட்கார்ந்திருக்க, தீவிரவாதம் முதல் காட்சி ஆரம்பித்தே ஆகிவிட்டது.

"படம் சூப்பர்."

"தூள்!"

"ஒரு தடவை பார்க்கலாம்."

என்று டீ.வியில் காட்டுவது போல காட்சி முடிந்து வெளியே வந்த ரசிகர்கள் சொல்லாமல், '"பேமானி அந்த திரைமுறைச்செல்வனை உதைக்கணும்டா... பணத்தை வாங்கிக்கினு இப்படிப்பட்ட பாடாவதி படத்துக்கெல்லாம் பப்ளிசிடி பண்ற கணக்கா, போராட்டம் அது இதுன்னு பொழப்பை நடத்திகினுகிறான்... ஒரு குடும்பமாம்... அப்பன்காரன் பக்கவாதம் வந்து படுத்த படுக்கையா ஆயிடறானாம்... குடும்பமே அவதிப்படுதாம்... தீவிரமான வாத நோயைத் தடுக்க வழி சொல்றானுங்களாம்... இதெல்லாம் ஒரு படம்... இதுக்கெல்லாம் ஒரு ஆர்ப்பாட்டம்...! தி.சீக ஆளுங்க இருந்தா வுடாதிங்க. பிடிச்சு நாலு சாத்து சாத்துங்கடா... மவனே இனிமே போராட்டம் கிராட்டம்னு பண்ணிப் பாரு''

முதல் காட்சி முடிந்து ஆக்ரோஷமாக வெளியே வந்த ரசிகர்களிடமிருந்து இப்போது போலீஸ், தொண்டர் படைகளைக் காப்பாற்ற வேண்டியதாக சூழ்நிலை மாறியிருந்தது.

இப்போது தப்பித்தோம் என்று மறுபடியும் திருநிறைச்செல்வனாகவே ஃப்ளாஷ்பேக்கில் தமது ஒரிஜினல் அரசியலுக்கே இவர் போயிருந்தாலும், தீவிரவாதத்திற்கு சிறந்த டாகுமெண்டரி அவார்ட் கொடுத்த அதே கையோடு, சென்ற ஆண்டின் திரைப்பட எதிர்ப்பு விருதை, செல்வனுக்கே ஃபிலிம் அன்ஃபேர் நிறுவனத்தினர் கொடுத்து கௌரவிக்கத் தவறவில்லை!






# ஷாப்பிங் திருவிழா!

என்னென்ன ஐட்டங்கள் வாங்க வேண்டும் என்று லிஸ்ட் எழுதி எடுத்துக்கொண்டு, கடை கடையாக ஏறி இறங்கும் வழக்கத்துக்கு 'டாட்டா' சொல்லும் 'ஆல் இன் ஒன்' ஷாப்பிங் நிலையங்களுள் புகழ் பெற்றது, ஷாப்பர்ஸ் ஸ்டாப்.

சென்னை சேத்துப்பட்டில் மூன்று மாடிகளில் பிரம்மாண்டமான முறையில் இயங்கி வரும் ஷாப்பர்ஸ் ஸ்டாப்பில் ஏகப்பட்ட பிரிவுகள். புத்தகத்திலிருந்து பொம்மை வரை அது ஒரு தனி ஷாப்பிங் உலகம்.

"ஷாப்பிங் என்பது இனிய அனுபவமாக உணரப்பட வேண்டும். இந்த அனுபவம் அவர்களைக் குடும்பத்துடன் இங்கே வரும்படி உற்சாகப்படுத்த வேண்டும். இதுதான் எங்கள் கொள்கை" என்கிறார் இங்கே பணிபுரியும் சுமந்த்.

இதற்காக, இங்கே ஆண்டுதோறும் 'பாரிக்கிரமா' என்ற பெயரில் ஒரு திருவிழா நடத்துகிறார்கள். அப்போது, நவீனமும், பாரம்பரியமும் ஒருங்கிணைந்து அரங்கேறுகின்றன. தஞ்சாவூர் ஓவியக் கலைஞர்கள், மண் பாண்டம் மற்றும் டெரகோட்டா உருவங்கள் செய்யும் கலைஞர்கள், ஊஞ்சல்களில் கலைப் பொருட்கள் செய்பவர், பத்திக் ஓவியம் தீட்டுவோர் என்று பல்வேறு கலைஞர்களையும் நேரடியாக இங்கே வரவழைத்து, கலை மேளா நடத்துகிறார்கள்.

ஒரு தடவை, உலக அதிசயம் ஏழும் இங்கே மினி சைஸ் மாடல்

# வி.ஐ.பி.ஷாப்பிங் அனுபவம்!



செந்தில் குமார் :

முதன் முதலாக ஷாப்பிங் செய்யறேன். அதுவும் எங்கே? ஸ்பென்ஸர் ப்ளாஸாவில்! என்ன வாங்க? கோட்டு, சூட்டு வாங்க! தில்லாக உள்ளே நுழைந்து, பளபள கடையாகப் பார்த்துப் போய்விட்டேன்.

''ஸ்பென்ஸர் ப்ளாஸாவில் விலையெல்லாம் டயனாஸர் விலை, அனகோண்டா விலையாயிருக்கும்! பார்த்து வாங்கு'' என்று நண்பர்கள் ஏற்கெனவே எச்சரிக்கை செய்திருந்தது நினைவில் இருந்ததால், ஜா– ஜாக்கிரதையாக லுக்கு விட்டேன்.

ஒரு ஆண் பொம்மை அணிந்திருந்த கோட்டு, சூட்டை பார்த்தேன். ஆயிரத்து இருநூறு ரூபாய் என்றிருந்தது. ''அட... சீப்பா இருக்கே?'' என்று பாக் செய்யச் சொல்லிவிட்டேன்.

பில் போடப் போகும்போது, ''பன்னிரண்டாயிரம்'' என்றார்கள். ஆயிரத்து இருநூறு ரூபாய் என்பது வெறும் ஷர்ட்டுக்கு மட்டும்தானாம்! ஆயிரம் வாட்ஸ் மின்சார வயரைத் தொட்டது மாதிரி ஷாக்கடித்து நின்றேன்.

''விலை எல்லாம் ஓ.கே. ஆனா மஞ்சள் கலரில் கோட்டும். ஆரஞ்சுக் கலரில் சூட்டும் வேணுமே'' என்று கேட்டதும், ''அதெல்லாம் ஆந்திராவில் துணி எடுத்து தைக்கணும் ஸார்'' என்று கும்பிடு போட்டு அனுப்பி விட்டார்கள்.

களாக உருப் பெற்றன. அவற்றைப் பார்க்கவே ஏராளமான கூட்டம் கூடியதாம்.

இரண்டாண்டுகளுக்கு முன் வாலன்டைன்ஸ் டே சமயம் , ரொமான்டிக்கான காதலர் குகை அமைத்தபோது, இளைஞர்களுக்கு உற்சாகம் கரை புரண்டதாம்.

'ஷாப்பர்ஸ் ஸ்டாப்'புக்கு வந்து ஒரு சுற்று சுற்றி வந்த இளமை புதுமை அர்ச்சனா, ரொம்பவும் குதூகலித்தது பொம்மைகள் பிரிவில்தான் 'ஓ! பாப்பை!' என்று கார்ட்டூன் நெட் ஓர்க் புகழ் கார்ட்டூன் கேரக்டரான 'பாப்ஐ'யைத் தாவி எடுத்தார். 'இது என் பாய் ஃப்ரெண்ட்' என்று தூக்கி அணைத்துக் கொண்டார்!

அர்ச்சனாவிடம் ஷாப்பிங் அனுபவங்களைக் கேட்டபோது, ''நான் ஷாப்பிங் போனது என்றால் அது என் ரொம்ப குளோஸ் ஃப்ரெண்டுடன்தான்! இரண்டு பேர் டேஸ்ட்டும் ஒரே மாதிரி. எனக்கு வேண்டியதை என் ஃப்ரெண்டும், ஃப்ரெண்டுக்கு வேண்டியதை நானும் தேர்ந்தெடுப்போம். தலை கிளிப் முதல் செருப்பு வரை, எங்கள் பாலிஸி இதுதான்.

அந்த ஃப்ரெண்ட் யார் தெரியுமா? என் அம்மாதான்!''

- மௌலி

அட்டை, படங்கள்: யோகா









**புரசைவாக்கம் :**
**பிரபல ஜவுளிக் கடையில்...**

“எங்கே சார் இவ்வளவு தூரம்? தனியா நின்னுக்கிட்டு சோகமா ஏதோ யோசிச்சுட்டு இருக்கீங்க?”

“சேச்சே! அதெல்லாம் ஒண்ணுமில்லே! உள்ளே என் ஒய்ஃப் இரண்டு மணி நேரமா புடைவையை செலக்ட் செஞ்சுட்டே இருக்கா. போரடிக்குதுன்னு வெளியே வந்துட்டேன்!”

“சொல்றேனேன்னு தப்பா நினைச்சுக்காதீங்க! இந்தக் காலத்து பொம்பளைங்க வீட்டுல இருக்கற நேரமெல்லாம் நைட்டிதான் போடறாங்க. வெளில வந்தாலோ சுடிதார்தான். அப்புறம் எதுக்குத்தான் புடைவை, புடைவையா வாங்கி பீரோவை நிரப்பறாங்களோ, தெரியலை?”

(நண்பரின் முகம் மேலும் இறுகுகிறது)

**- ஞானசுந்தர், சென்னை**



# காதல்

**சேலம் அக்ரஹாரத் தெரு. புடைவைக் கடையைத் தலைகீழாகப் புரட்டிக் கொண்டிருந்த ஒரு பெண்மணியிடம் அவருடைய மகன் :**

“அம்மா! சீக்கிரம் கிளம்பு. அப்பாவைப் பார்க்கணும்.”


“சும்மா இருடா! உங்க அப்பா அவரோட ஃப்ரெண்டுங்க கூட அரட்டை அடிச்சுட்டு ஆடி அசைஞ்சு வரதுக்குள்ள, ராத்திரி மணி பதினொண்ணு ஆயிடும்.”

“ஐயோ! டாடி இல்லைமா! டி.வி.யில் வருதே மெகா சீரியல் ‘அப்பா’! அது வர்ற டயமாச்சு.”

“அடடே! மறந்தே போச்சு. நல்ல வேளை ஞாபகப்படுத்தினியே, என் ராசா!”

(புடைவைகளை ஓரம் தள்ளிவிட்டு வெளியே பாய்கிறார் மகனுடன்)

**- என்.கே.பி., சேலம்**



# விழுந்துச்சு!



**தஞ்சாவூர்**
**தெற்கலங்கம்**
**தெருவில்**
**கணவன் - மனைவி**

"ஏங்க! புடைவைக்குப் பதிலா ஏதாவது நகையா வாங்கிக்கட்டுமா? சும்மா புடைவையில போயி பணத்தைப் போடறதுக்குப் பதிலா, நகை வாங்கினாலாவது ஒரு இன்வெஸ்ட்மெண்ட் மாதிரி ஆயிடும். என்ன சொல்றீங்க?"

"என்னது? நகை வாங்கறது இன்வெஸ்ட்மெண்டா? யாருகிட்டேடி காது குத்தற? நகை வாங்கறப்பவே செய்கூலி, சேதாரம்னு தண்டம் அழறோம். அப்புறம் அது பத்திரமா இருக்கணும்னு பாங்க் லாக்கரில் வைக்க, பணம் அழ வேண்டியிருக்கு. பழைய நகையை கடையில் திருப்பிக் கொடுத்தாலும் அடிமாட்டு விலைக்குத் தான் எடுத்துக்கறான். இதைப் போயி இன்வெஸ்ட்மெண்டுன்னு சொல்றியே?"

"பணமுடைன்னு சொல்லி எங்கப்பா போட்ட இருபது சவரன் நகையை பாங்க்கில் வைச்சு கடன் வாங்கிட்டு, எப்படித்தான் இப்படி வாய் கூசாமப் பேசறீங்களோ?!"

*(கணவர் கப்-சிப்!)*

**- விஜய், தஞ்சாவூர்**



**கரூர் மார்க்கெட்டில் இளநீர் விற்பவரும், வாங்க வந்தவரும் :**

"ஏமாத்திட்டியேப்பா! இளநீரில் கொஞ்சம்தான் தண்ணீர் இருந்துச்சு. நிறைய தண்ணீ இருக்காப்ல தரக் கூடாதா?"

"என்ன சார் செய்யறது? அதுக்காக நான் ஒவ்வொரு தென்னை மரத்திற்கும் மழைநீர் சேகரிப்புத் தொட்டியா கட்டி வைக்க முடியும்?"

"நல்லாப் பேசக் கத்துக்கிட்டிருக்கிங்க! சத்தமா சொல்லாதே! அம்மா காதுல விழுந்தால் அதுக்கும் அவசரச் சட்டம் போட்டாலும் போட்டுடுவாங்க!"

**- சேது, கரூர்**



# நகங்களுக்கும் நகையா?



ஷாப்பிங் போகும்போது, மொட்டை நகத்தோடு போன இளம் மனைவி, வரும் போது அரை இஞ்ச் நகத்தோடு, அழகிய டிராகுலாவாகத் திரும்புவதும், கணவன் குழம்புவதும் பெங்களூரில் சகஜம்! குழப் பத்துக்குக் காரணமாக இருப்பவர், நெயில் டிஸைனர் ஷெர்னாஸ் லாலா!

நகங்களை வெட்டி, சீர் செய்து, வண்ணம் தீட்டி, ஓவியம் வரைந்து, கல், முத்து, கிரிஸ் டல் எல்லாம் பதித்து... நாம் சும்மா கடித்துத் துப்பும் நகத்துக்காக ரொம்பவே மெனக் கெடுகிறார், ஷெர்னாஸ். ஆரோக்கியமான நகங்கள் இல்லாதவர்களுக்கு, ஒட்டு நகங்கள் வைத்து அழகு செய்கிறார்.

"'ஓபிடி' என்பது லண்டனில்

மிகப் பெரிய காஸ்மெடிக் கம்பெனி. இந்த நிறுவனம் இந்தியாவிலிருந்து ஐந்து பேரைத் தேர்ந்தெடுத்து, 'நெயில் டெக்னீஷியன்' பயிற்சி தந்தார்கள். அதில் நானும் ஒருத்தி. 'ஏபிஎஸ்' எனப்படும் இந்த இயற்கையான நகங்கள் மிக மென்மையானவை. அக்ரிலிக் ஜெல் தடவி நகத்தை ஒட்டி விட்டால், வித்தியாசமே தெரியாது. 'டெமான்டேஸ்' எனப்படும் உயர்ரக கற்கள் ஆஸ்ட்ரியாவிலிருந்து வருகின்



றன. நான் பயன்படுத்தும் 'கொலான்ஸ்கி' பிரஷ் ரொம்ப காஸ்ட்லி. சுமார் இருநூறு டாலர்கள். நகத்தைச் சிராக்கி வெட்டி, பெயின்ட் செய்து, கல், முத்து பதித்து அலங்கரிக்க அரை நாள் ஆகிவிடும். அதனால் முறையாக அப்பாயின்மெண்ட் பெறாமல் ஸ்டூடியோவுக்கு வர முடியாது'' என்கிறார் ஷேர்னாஸ்!

பிரபல மாடல்களும், நடிகைகளும், வசதி மிக்க இளம் பெண்களும் இவரது வாடிக்கையாளர்கள் என்றாலும், யாருடைய பெயரையும் தெரிவிக்க மறுத்து விட்டார்.

''எதற்குச் சொல்லணும்?... அது தொழில் ரகசியம். 'விக்' வைத்திருப்பவர்கள், வெளிப்படையாகச் சொல்கிறார்களா? அது போலத்தான் நகங்களும். பல கணவன்மார்களுக்கே தெரியாது, தன் மனைவி டூப்ளிகேட் நகம் வைத்திருக்கிறாள் என்று... எதற்குச் சொல்லணும்? நம்ப விரல்! நம்ப நகம்! அதெல்லாம் ரொம்பப் பர்ஸனல்'' என்கிறார் ஷேர்னாஸ்!

பேட்டி, படங்கள்: லதாசேகர்

* ஷேர்னாஸ் லாலா



# சிரித்து வாழ வேண்டும்-12

நண்பர் ராதாகிருஷ்ணனுக்கோ காணாமல் போய்விட்ட மனைவியைத் தேடிக் கண்டுபிடிக்க அவசரமாய்ப் பணம் தேவைப் பட்டது. அவர் கையிலோ பணமில்லை. அவருக்கு உதவும் அளவுக்கு எனக்கு வசதியில்லை.

ரயில்வே ஆபீசுக்குப் பக்கத்தில் ரோடு நிறைய ஈட்டிக்காரர்கள் இருந்தார்கள்.

"எனக்குத் தனியாகப் போய், பத்தானிடம் கடன் வாங்க ஒரு மாதிரியாக இருக்கிறது. நீயும் என்கூட வாயேன்!" என்று வற்புறுத்தி அழைத்துக் கொண்டு போனார்.

தமது மனைவி காணாமல் போன சோகத்தைச் சொல்லிக் கடன் கேட்டார். பத்தான், நண்பரைப் பற்றி நிறைய விவரங்களைக் கேட்டுத் தெரிந்து கொண்டு, ஒரு புரோ நோட்டை எடுத்து நீட்டினான். அதில் நண்பர் தமது கையெழுத்தைப் போட்டார்.

அடுத்து, அந்தப் பத்தான் கடன் பத்திரத்தை வாங்கி, என்னிடம் நீட்டினான்.

"இதெல்லாம் ஒரு ஃபார்மாலிடிக்காகத்தான். நீங்க பயப்படாமல் கையெழுத்துப் போடலாம்!" என்று பத்தான் சொல்ல ராதாகிருஷ்ணனோ,

"நாகேஸ்வரா! வாங்கின கடனை நான் அசலும், வட்டியுமா கட்டமாட்டேனா? என் மேல் நம்பிக்கை இல்லையா உனக்கு?" என்று நேரடியாகவே கேட்டுவிட்டார். வேறுவழியில்லாமல், கையெழுத்தைப் போட்டேன்.

"மாதம் பத்து ரூபாய் வீதம் பத்து மாதங்களில் நூறு ரூபாய் கடனை அடைத்துவிட வேண்டும்" என்று பத்தான் கண்டிப்பான குரலில் சொல்ல, "அப்படியே செய்கிறேன்" என்றார் ராதாகிருஷ்ணன்.

ஒரு வாரம்போல ஓடியிருக்கும். ராதாகிருஷ்ணனைப் பற்றி ஆபீசில் கிசுகிசுப்பாக ஒரு விஷயம் உலவியது. ஆபீசுக்கு லீவு லெட்டர் அனுப்பிவிட்டு மனைவியைத் தேடிக் கொண்டு போயிருக்கிறார் ராதாகிருஷ்ணன் என்பதே அதன் சாரம்.

ஒண்ணாம் தேதியை நடுக்கத்துடன் எதிர்பார்த்துக் காத்திருந்தேன். முதல் தேதி கரெக்டாய், ஆபீசுக்கு வந்துவிட்டான் பத்தான்.

ராமகிருஷ்ணன் லீவில் போயிருக்கும் விஷயத்தைச் சொன்னேன்.

பத்தான் ரொம்ப கூலாக, "அவர் இல்லாது போனால் பரவாயில்லை! நீ பத்து ரூபாயைக் கொடுத்துவிடு! அவரிடம் நீ வசூல் பண்ணிக்கோ!" கறார் குரலில் சொன்னான் பத்தான்.

"இரண்டு நாள் டைம் குடுங்க, தவணையைத் தந்திடறேன்" என்றேன். பத்தான் ஒப்புக் கொண்டான்.

நானும் இரண்டு நாளில், பத்து ரூபாயை பத்தானுக்கு அழுதேன்.

இப்படிப் பத்து மாதமும், பத்து பத்து ரூபாயாகக் கட்டி, கடனைத் தீர்த்தேன். ராதாகிருஷ்ணன் அப்புறம் என்ன ஆனார் என்றே தெரியவில்லை.

• 'அன்பே வா' படத்தில்
உதவி : ஃபிலிம் நியூஸ் ஆனந்தன்



ஒரு நாள் நாடகம் சம்பந்தப்பட்ட சில வேலைகள் இருந்ததால், ஆபீசுக்கு லீவு போட விரும்பினேன். என்ன காரணம் சொல்லலாம் என்று யோசித்தபோது, என் குறும்புத்தனம் எட்டிப் பார்த்தது.

லீவு லெட்டரில் "வெளிப்படையாகத் தெரிவிக்க முடியாத காரணத்தால், நான் நாளை ஆபீசுக்கு வர இயலாது. எனவே எனக்கு லீவு தர வேண்டும்" என்று எழுதி,

கையெழுத்துப் போட்டு, என் மேலதிகாரி யான அய்யங்காரிடம் கொடுத்துவிட்டேன்.

என்னுடைய விடுப்பு விண்ணப்பத்தைப் படித்துப் பார்த்த அவர் சுடுப்பானார்.



✱ படம் : யோகா

# "குட் ஷாட்!"

## நாகேஷ்

"அது என்ன வெளியில் சொல்ல முடியாத காரணம்?" என்று கேட்டார்.

"லெட்டரிலேயே ரொம்பத் தெளிவாகச் சொல்லி இருக்கிறேனே. சொல்லக் கூடிய காரணமாக இருந்தால், நானே சொல்லி இருக்க மாட்டேனா?" என்றேன்.

அவருக்குக் கோபம் வந்துவிட்டது.

'லீவு தர முடியாது" என்றார்.

"சார்! என் நிலைமையைப் புரிஞ்சிகிட்டு, லீவு கொடுங்க சார்!" என்றேன்.

'லீவு கிடையாதுன்னா, கிடையாதுதான்!" என்றார் கண்டிப்பான குரலில்.

லீவு தர மறுத்த அய்யங்காரை மறு நாள் ஒரு வழி பண்ணுவது என்று முடிவு செய்தேன். "என்ன செய்யலாம்?" சீரியஸாக யோசித்தேன்.

**ம**று நாள், வழக்கம்போல ஆபீசுக்கு வந்தவன், ஸ்னூக்கர் ஆட்ட அறைக்குச் சென்றேன்.

அன்றைய தினம், ஆபீசுக்கு வந்தவுடன் என் பேண்ட், சட்டை இரண்டையும் கழற்றி, மடித்து ஒரு பைக்குள் வைத்து பத்திரப்படுத்தினேன். பனியன், அண்டர்வேர் சகிதம் நேரே செக்ஷனை நோக்கி நடக்க ஆரம்பித்தேன்.

என் சீட்டுக்குப் போய் உட்கார்ந்தேன். என்னைப் பார்த்த அய்யங்காருக்கு அதிர்ச்சியோ அதிர்ச்சி!

"என்ன, இப்படி அலங்கோலமாக வந்திருக்கிறாய்? இது ஆபீஸ்!" படபடத்தார் அய்யங்கார்.

"என் கிட்டே இரண்டே இரண்டு செட் டிரஸ்தான் இருக்கு. இன்னொன்று துவைக்கப் போட்டிருக்கேன். மழைக்காலமாச்சே. சரியா காயலை. எனக்கோ, ஈர டிரஸ் போட்டுக் கொண்டால், ஜலதோஷம் வந்திடும். பேசாமல் லீவு போட்டுவிடலாம் என்று நினைத்தேன். உங்க புண்ணியத்துல அதுவும் கிடைக்கலை. இப்படி ஆபீசுக்கு வருவதைத் தவிர வேற வழி தெரியலை!" என்றேன்.

"இப்போதே லீவு சாங்ஷன் பண்ணிட்டேன். நீ வீட்டுக்குப் போகலாம்" என்றார் ஐயங்கார்.

வெற்றிப் புன்னகையுடன் நடந்து, மறைத்து வைத்திருந்த ஆடையை அணிந்து கொண்டேன்.

லீவு நாளைக் கொண்டாட வேண்டாமா? 'இரண்டு ஆட்டம் ஸ்னூக்கர் ஆடலாம்' என்று தீர்மானித்து ஒரு பந்தைக் குழிக்குள் தள்ள, "குட் ஷாட்" என்று ஒரு குரல் கேட்டது. தலையைத் தூக்கிப் பார்த்தேன்! ஐயோ! அய்யங்கார்!

(சிரிப்பு தொடரும்)

# ரங்கநாதன் தெருவில்...

முழங்கால் முடிச்சான மாம்பல ரயில் நிலைய மேம்பாலப் படிகளில் லட்டு மாதிரி முழுசாக இறங்கிய குடும்பம், ரங்கநாதன் தெரு கும்பல் மேளாவில் சங்கமமானவுடன், பூந்தியாக உதிர்ந்து சிதறி விடுவது இந்த ஸ்தலத்தின் பிரித்தாளும் மகிமையால்தான்.

'ரங்கநாதனிடம்' சரணடைந்த ஷாப்பிங் பக்தர்களுக்கு உடனே கிடைக்கும் பிரஸாதம் ஸ்தல விருட்சமான கரும்பிலிருந்து பிழியப்பட்ட ஜூஸ். 'கும்பலில் கரும்பு போலப் பிழியப்பட்டு சக்கையாகிவிடுவீர்கள், ஜாக்கிரதை' எனும் நுணுக்கமான உட்பொருளை இஞ்சி போல் 'சுள்'ளென்று உறைக்க வைக்கும் வெல்கம் ட்ரிங்க்.

அணுவைப் போட்டால் நொடித் துளிகளில் நியூட்ரான்,



எலெக்ட்ரான், ப்ரோட்டான்களாகப் பிரிந்து விடும் நெரிசல் உள்ள இந்தத் தெரு, கர்ப்பக் கிரகங்களில் இடித்து நின்று கொண்டு அருள் பாலிக்கும் கடவுள்களின் பெயர் ஒன்றைத் தாங்கி நிற்காமல், ஹாயாகக் காலை நன்றாக நீட்டி, அனந்த சயனமாகப் பாற்கடலில் பாம்பு பெட் மேல், ஹாலிடே ரிசார்ட்டில் ஓய்வெடுக்கும் சீஃப் எக்ஸிக் யூடிவ் போல் பள்ளி கொண்டிருக்கும் ரங்கநாதனின் பெயரைப் பெற்றிருப்பது, ஒரு பகிரங்கமான முரண்பாடு.

திருப்பதி பக்தர்களைப் போலவும், ஒன்றை ஒன்று இடித்துக் கொண்டு விமான நிலையக் கன்வேயர்களில் நகரும் லக்கேஜ் களைப் போலவும், மொபைல் தேனடைக் கூடுகள் போலவும் மக்கள் நகர்வது, டாப் ஆங்கிளில் பார்த்து ரசிக்க வேண்டிய ஸ்லோ மோஷன் ஷாட்.

பாச்சை உருண்டையைப் பேரம் பேசும் ஒரு சரிகை வேட்டி திடீரென்று பீதி அடைகிறது.

"எங்கேடி அம்மா?"

"காணோமா?" மருமகளின் கண்கள் விரிகின்றன. குரலில் விபரீத நம்பிக்கை.

"அதோ வராளே... எங்கம்மா போயிட்டே?"

"சவுரியும் கொண்டையும் வாங்கணும்னு பார்த்தேண்டா..."

"ரொம்ம்ம்ப தேவை... ஏற்கெனவே மண்டையிலே இருக்கிற கனம் போறா தாக்கும்..." மருமகளின் குறைந்த டெஸிபல் முணுமுணுப்பு.

ரெடிமேட் சட்டைப் பிரிவின் புதிய கடைப் பையன் முதலாளியின் வலது காதைக் கடிக்கிறான், கிச்சு மூச்சுக் குரலில்.

"அண்ணாச்சி, சட்டை சுருங்குமான்னு கஸ்டமர் கேக்கறாக."

"சட்டை பிடிப்பா இருக்கா? தொள தொளன்னு இருக்கா?"

"கொஞ்சம் தொளதொளன்னு, அண் ணாச்சி."

"அப்போ சுருங்கும்."

தெருவின் இரண்டு மூலைகளிலும் போலீஸ் பங்க்குகள் - அணைக்கரை மேலே

**ஜே.எஸ்.ராகவன்**

துவாரபாலகர்களாக நிற்கும் மதகுகளைப் போல, மக்கள் வெள்ளத்தைக் கட்டுப் படுத்த, களைப்புடன் அதன்மேல் சாய்ந்து கொண்ட ஒரு 'கறிகாய்ப்பை', தூண்டிலில் போட்டுப் பிடித்ததைப் போல் சிக்கிய 'இலைக்கட்டை' பேச்சுத் துணைக்குத் தக்கவைத்துக் கொள்கிறது.

"ராமசுப்பு, வீட்டிலே மழை நீர் சேகரிப்பு செஞ்சுட்டியா?"

"செஞ்சுட்டா? பாலைவன ஏரியாவிலே கட்டின வீட்டிலே மழை நீரைச் சேமிக்க முடியுமா? கானல் நீரை வேணா சேகரிக்க லாம்."

"போகட்டும். செட் டாப் பாக்ஸாவது





"இப்ப என்னால வேகமா ஓட முடியலைன்னு என்னை செலக்ட் பண்ணாமல் விட்டுடாதீங்க சார்... திருடனைத் துரத்திப் பிடிச்சாத்தான் மாமூல் கிடைக்கும்ங்கிற போது கண்டிப்பா நல்லா ஓடுவேன் சார்!"

– சீர்காழி வி. ரேவதி

---

வாங்கினியா?"

"செட்டாவது? பாக்ஸாவது? இருக்கிற நிதி நிலைமையிலே சோப் பாக்ஸ் கூட வாங்க முடியாது. ஆளை விடு!"

திடீரென்று அடிக்கப் போகும் மழை நீரைச் சேகரிக்கத் தயாராக இருப்பது போல, பிரித்து டிஷ் ஆன்டனாவாக வைக்கப்பட்ட குடைக்குள், ஒரு மைக்ரோ மினி சூப்பர் மார்க்கெட். விறுவிறுப்பான வியாபாரம். "அண்ணே போலீஸ்" என்ற ஒரு 'கறுப்பு - சிவப்பு - அரைஞாண் கயிற்றி'ன் அபாய அறிவிப்பு. டபக் என்று குடை-கம்-மைக்ரோ மினி சூப்பர் மார்க்கெட் மூடப்பட்டு, 'மனித மூளை பாரச்சூட் போன்றது, அது திறந்தால் தான் செவ்வனே வேலை செய்யும்' என்பதை மண்டையைக் குடையாமல் உணர வைக்கிறது.

"சார், இந்த நெரிசலைக் கட்டுப் படுத்த ஒரே வழி. சொல்லட்டுமா? ஸ்டேஷனிலிருந்து உஸ்மான் ரோட் வரை ஒரு சுரங்கப் பாதையை செலவைப் பாக்காம கட்டிடறது. பழம் பெருச்சாளிகள் ஒண்ணுகிட்டே இந்த சுரண்டல் கான்டிராக்டை விட்டுடறது. மேலே ரங்கநாதன் தெருங்கிற பெயருக்கு மாட்ச்சிங்கா, கீழே போடப் பட்ட சுரங்கப் பாதைக்கு சுரங்கநாதன் தெருன்னு வெச்சுடறது. எப்படி சார் ஐடியா? 'ரங்கம்'னா தீவுன்னு அர்த்தம். இந்த ஜனத் தீவிலே நெரிசலைத் தவிர்க்க இது தான் தீர்வு."

எவர்சில்வர் பாத்திரக் கடையின் ஸீலிங்கில் வௌவால்களைப் போல் தொங்க விடப்பட்டிருக்கும் தூக்குகள். பக்கத்துக் கடையில் எட்டும் உயரத்தில் தங்க நெக்லஸ்கள். இஞ்சி, மற்றும் சுக்கு இடுப்புகளுக்கு எடுப்பான ஒட்டியாணங்கள். வாங்கிய கையோடு வங்கியில் தூங்கப் போகும் வங்கிகள். தெரு இரைச்சலால் தாக்கப்பட காதுகளை சர்வீஸ் செய்யக் கலர்கலரான இயர் பட்ஸுகள். அறுபது நிமிடங்களில் இருபதுகளுக்கு 'சிக்'கென கூடிதார் தைத்துத் தர, கத்திரியுடன் ரெடியாக டெய்லர்கள். ரிஸப்ஷனில் பொக்கேயுடன் நிற்கும் மணமகளைப் போல கையில் கீரைக் கட்டுடன் அணி வகுத்து நிற்கும் பெண்கள்.

"அட! சுந்தரேசன் சார்தானே? சௌக்யமா? பாத்து ரொம்ம்ம்ப நாளாச்சே?"

"அதான் சௌக்யமா இருக்கேன். வரட்டுமா?" சுந்தரேசன் சட்டென்று கும்பலில் கரைகிறார்.

சாயம் போய் காயமும் பட்டுக் கொண்ட பட்டுப் புடவைகளுக்கு மறு வாழ்வு தரும் கடைக்காரர்கள். கே.பி. சுந்தராம்பாள் விரும்பிய ஞானப் பழம் நீங்கலாக மற்ற பழங்களைப் பிழிந்து ரசமெடுத்து குடிக்கத் தரும் 'பலரச'க்கடைகள், அரைத்த மாவையே அரைக்கும் எழுத்தாளர்கள் பாணியில், அரைத்த கல்லையே அரைத்து சந்தனம் வழங்கும் சிவல் கடைகள். கால்களின் விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்ப செருப்புகள் விற்கும் மினி பாட்டாக்கள். ஆயன சிற்பியின் ரேஞ்சில், பளபளக்கும் புதிய எவர்சில்வர் அண்டாமேல் கே.ஆர்.பி. போன்ற இனிஷியல்களை கல்வெட்டாகச் செதுக்கும் கலைஞர்கள். ஷாப்பிங் செய்ய அல்லது ஷாப்பிங் செய்வது போல பாவலா செய்ய இதைவிட அருமையான இடம் உண்டோ மேதினியில்?

அடிபட்டு, மிதிபட்டு, அவதியுற்று, சில தருணங்களில் சந்தோஷித்து, பிறவிப் பெருங்கடலில் எதிர்நீச்சல் போட்டுக் கரையேறும் ரீதியில், ரங்கநதான் தெருவின் அடர்த்தியைத் தாண்டி, ரயில் எஞ்சினின் 'உஸ்' என்ற கனத்த பெருமூச்சுடன், மிரண்ட மானைப் போலத் தப்பி, தஞ்சமடையும் சாலை... வேறெதுவாக இருக்க முடியும்? 'உஸ்' மான் ரோடு தான்!

# அன்பான வேண்டுகோள்!



சிவானந்த குருகுலத்தில் இருக்கும் சுமார் 300 ஆதரவற்ற குழந்தைகளும், 60 முதியோர்களும் தீபாவளியை மகிழ்ச்சியுடன் கொண்டாட பொது மக்களிடம் உதவிக்கரம் நீட்டுகிறோம். பொது மக்கள் அளிக்கும் நன்கொடை பணம், பொருள் எதுவாக இருந்தாலும் இக் குழந்தைகளின் நலனை முன்னிட்டு ஏற்றுக் கொள்ளப்படும். பொது மக்கள் தங்களால் இயன்ற உதவியை பணமாகவோ அல்லது புத்தாடைகள், பட்டாசுகள், இனிப்பு, எண்ணெய், சீயக்காய், அரிசி, கோதுமை போன்ற தானிய வகைகளாகவோ நன்கொடை கொடுக்கலாம்.

**அனுப்ப வேண்டிய முகவரி :**

பொது செயலர் அவர்கள்,
சிவானந்த சரஸ்வதி சேவாஸ்ரமம்,
எண்.20, கம்பர் தெரு, கிழக்கு தாம்பரம்,
சென்னை - 600 059.

தொலைபேசி எண்கள் : 22391078, 22392444
பேக்ஸ் : 22791017
Email : sivanand@md2.vsnl.net.in
Website : www.buildhope.org

பின் குறிப்பு :

1. காசோலையாகவோ / டிராப்டாகவோ 'சிவானந்த சரஸ்வதி சேவாஸ்ரமம்' என்ற பெயரில் தான் அனுப்ப வேண்டும் என்பதை கேட்டுக் கொள்கிறோம்.
2. நன்கொடைகளுக்கு வருமானவரி விலக்கு உண்டு.
3. இந்தியன் வங்கி அனைத்து கிளைகளிலும் ஆசிரமத்திற்கு கமிஷன் இல்லாமல் இலவசமாக வங்கி வரைவோலை வழங்கப்படுகிறது.

17

குழந்தைகளின் சரணாலயம் போலிருந்தது அந்தப் பெரிய மரத்தடி. வெள்ளைச் சட்டையிலும் நீலப் பாவாடையிலுமாக அவர்கள் உச்சிப் பொழுதில் அங்கே பூத்திருந்தார்கள்.

பிளாஸ்டிக் கூடைகளும் பகலுணவும், அவரவர் தாய்மார்களின் அண்மையில் மதிய உணவுடன்சேர்த்து, அன்றைய முற்பகல் வகுப்பு நிகழ்வுகள் அசைபோடப்பட்டன. என்ன பாடம் இன்று நடந்தது? யாரையாவது கிள்ளினாயா? சட்டையில் ஏன் அழுக்கு? இன்னும் ஒரே ஒரு வாய்தான். சாப்பிட்டுவிடு.

பள்ளி வளாகத்தில் இப்படியொரு பெரிய மரம் இருப்பதும் உட்கார்ந்து இளைப்பாறவாகாக வட்ட வடிவில் மேடை போல் கட்டிக்கொடுத்திருப்பதும், பெரிய சௌகரியம். கூடிய சீக்கிரம் சாந்திநிகேதன் மாதிரி ஆக்கிவிடுவோம் என்று சொல்லி வாங்கிய கேபிடேஷன் ஃபீஸுக்கு, இந்த மரத்தடி மேடைதான் அச்சாரம் போலும். மேல் வருமானத்துக்கென்று சினிமாக்களின் பஞ்சாயத்துக் காட்சிகளுக்கு அனுமதி தராமலிருக்க வேண்டும் பள்ளி நிர்வாகம்.

குழந்தைகள் சாப்பிட்டுவிட்டு, குழாயடியை நோக்கி ஓடிய விநாடி இடைவெளிகளில் நிர்மலாவைப் பார்த்து நட்புடன் சிரித்தாள் ரஞ்சனாவின் அம்மா. தினசரி பார்க்கிறதுதான். தினசரி புன்சிரிப்பும் உண்டு. எப்போதாவது ஹோம் ஒர்க்குகளின் கனம் குறித்து ஓரிரு சொற்கள் பேசுவது தவிர முக்கியமாக ஏதும் பேசியதில்லை. நன்கு படிக்கிற குழந்தைகளின் பெற்றோருக்குக் கவலை கொண்டு விவாதிக்க விஷயங்கள் ஏதுமில்லை. விஷமக்காரக் குழந்தைகள் பேசுவதற்கு நிறைய விஷயங்கள் தரும். கவலைப்படுவதுபோல சந்தோஷப்படவும், கடிந்து கொள்வதுபோல அனுபவிக்கவும்.



ஆனால் குட்டி அப்படி இல்லை. ரஞ்சனாவும் அப்படியில்லை. இரண்டுமே படிப்பில் கெட்டி. ஆசிரியர்களின் விருப்பத்துக்குரிய மாணவிகளாக முனையில் தெரிகிற முன்னணி நட்சத்திரங்கள், மதிய உணவு கொண்டு வரும் சராசரித் தாய்மார்

## பா.ராகவன்

களின் மத்தியில் பெருமையுடன் நடமாட ஒரு வாய்ப்புக் கொடுத்திருக்கிற குழந்தைகள். எந்தப் பாடத்திலும் தொண்ணூறுக்குக் குறையாத மதிப்பெண்களில், ஈன்ற பொழுதில் பெரிதுவக்கச் செய்திருக்கிறவர்கள். மேலும் இப்போதெல்லாம் நான்காம் வகுப்பிலேயே கல்வித்திட்டம் தன் சிக்கல் மிகுந்த இருட்டு மூலைகளைத் திறந்து காட்டத் தொடங்கிவிடுகிறது. அப்பப்பா, எத்தனை பெரிய பாடங்கள், கணக்குகள், குழந்தைகள் ரொம்பத்தான்



பாடுபடுகின்றன என்று சாங்கோபாங்கமாக ஆரம்பித்தாள் ரஞ்சனாவின் அம்மா.

'வாஸ்தவம் தான்' என்று ஆமோதித்தாள் நிர்மலா.

''விளையாடறதுக்கே நேரமில்லாமப் போச்சு. பாவம் எங்க ரஞ்சனா, ஸ்கூல் விட்டா ஹிந்தி டியூஷன். அப்புறம் பாட்டு க்ளாஸ், ஸ்லோக க்ளாஸ், முடிச்சிட்டு வந்தா ஹோம் ஒர்க். ஒம்போதரைக்கு மெட்டிஒலி போடறப்போதான் சாப்பிடவே முடியுது அவளால. பார்த்துண்டே சாப்பிட்டு அப்படியே தூங்கிடறா... பாக்கவே பாவமா இருக்கு."

''ஏதாவது ஒரு க்ளாஸை அவாய்ட் பண்ணிடலாமே?'' என்றாள் நிர்மலா.

''எதைன்னு நிறுத்தறது? எல்லாமே வேண்டியிருக்கே...'' என்று அலுத்துக் கொண்டாள். "அதெல்லாம் கூடப் பரவாயில்லை நிர்மலா. ராத்திரில ஒழுங்கா தூங்கவே மாட்டேங்கறா தெரியுமா? என்னத்தையானா நினைச்சுக்கிட்டு ஒன்னு அலறிடறா. என்னடின்னு விசாரிச்சா பேய், பூதம், பிசாசுன்னு என்னமோ உளர்றா, ஒழுங்கா படிக்கிற பொண்ணுக்கு எங்கேருந்து இதெல்லாம்னு என் ஹஸ்பெண்ட் என்னைக் கோச்சுக்கறார்."

''அச்சச்சோ?'' என்றாள் நிர்மலா.

ரஞ்சனாவின் அம்மாவுக்கு முதலில் அந்த விஷயத்தை எப்படி ஆரம்பிப்பது என்பதுதான் குழப்பமாக இருந்தது. நேரடியாக ஒருபோதும் தொடங்க முடியாது. அது நிச்சயம். சுற்றி வளைத்துத்தான் மூக்கைத் தொட வேண்டும். ஆனால் சுற்றி வளைப்பது தெரியாமல் சுற்ற வேண்டும். என்ன செய்யலாம் என்று உள்ளுக்குள் யோசித்தபடியே தான் பேச்சை ஆரம்பித்தாள். ஒரு தொடர்பு இல்லாவிட்டாலும் வந்து நிற்க வேண்டிய இடத்தில் தான் மிகச் சரியாக வந்துவிட்டதாக அவளுக்குத் தோன்றியது. தன்னைத்தானே பாராட்டிக் கொண்டாள்.

"...அதான் சொல்ல வரேன். ஏண்டி, எங்கேருந்து இதெல்லாம் கத்துக்கறே? யார் சொன்னா உனக்கு பேய், பூதமெல்லாம் இருக்குன்னு கேட்டா, மொழ நீளத்துக்குக் கதை கதையா சொல்றா!"

"சரியாப் போச்சு! என்னவாம்?" நிர்மலா ஆர்வமுடன் கதை கேட்கத் தொடங்கி விட்டாள். பிற்பகல் வகுப்பு தொடங்குவதற்கான

மணியடித்து, குழந்தைகள் வகுப்பறைகளுக்கு ஓடியதும், இருவரும் காலியான கேரியர்களைத் துடைத்து எடுத்துக் கூடையில் வைத்துக் கொண்டு கிளம்ப ஆயத்தமானார்கள். இன்றைய பொழுதுக்குப் பேசிக் கொண்டே போக ஒரு துணை ஆச்சு என்று நிர்மலா நினைத்துக் கொண்டாள்.

ரஞ்சனாவின் அம்மா நிதானமாக, மிக கவனமாகத்தான் ஆரம்பித்தாள். எடுத்த எடுப்பில் உன் பெண்ணைக் கொஞ்சம் கவனித்து வை என்று சொன்னால் எந்த அம்மாவுக்குத்தான் பிடிக்கும்? போடி சர்தான் என்று சொல்லி விடக் கூடும். ஒன்றுமில்லாத விஷயம் ஒரு பூகம்பத்தையேகூட உண்டாக்கிவிடலாம். எதற்கு வம்பு? ஆகவே அவள் மீண்டும் தலையைச் சுற்றி மூக்கைத் தொடலாம் என்று முடிவு செய்தாள்.

"...இல்லே நிர்மலா, தப்பு இவ பேர்ல தான். என்னிக்கோ க்ளாஸ்ல டீச்சர் வர லேட்டாயிருக்கு... டீச்சர் வராட்டா என்ன? படிச்சிட்டிருக்கலாமில்லே? உங்க குட்டியைத் தொணப்பு தொணப்புன்னு தொணப்பி, ஏதாவது பேய்க்கதை சொல்லுன்னு கேட்டிருக்கா போலிருக்கு. அது என்ன பண்ணும் பாவம்? தனக்குத் தெரிஞ்ச என்னத்தையோ சொல்லியிருக்கா. என்னமோ ரத்தக் காட்டேரியாம். ராத்திரி பன்னென்டு மணிக்கு அவ ஃபரெண்டு யாரோ ஒரு பையனாமே? அவன் வீட்டுக்கு வருமாம். வழியெல்லாம் ரத்தம் கொட்டிண்டே, உன்னைச் சாப்டப் போறேன்னு பயமுறுத்துமாம்... உவ்வே. நீங்களே சொல்லுங்க. குழந்தைகள் மனசை எப்படியெல்லாம் கெடுத்து, பயமுறுத்தி வெச்சிருக்கு பாருங்க..."

கேட்டுக் கொண்டே வந்த நிர்மலாவுக்குச் சட்டென்று பொறி தட்டினாற் போலிருந்தது. "என்னது!" என்று வியப்புடன் கேட்டாள்.

"குட்டிக்கும் சரி, எங்க ரஞ்சுவுக்கும் சரி. இந்த மாதிரி கதையெல்லாம் தெரியவே தெரியாது. எவனோ ஒரு தடியன் இப்படியெல்லாம் சொல்லி குழந்தைகளை பயமுறுத்தியிருக்கான்... யாருன்னு எனக்குத் தெரியலை. எங்க ரஞ்சு நைட்டெல்லாம் ஒன்னு அலர்றா. பயம்மா இருக்கும்மா, பயமா இருக்கும்மான்னு இழுத்து இழுத்துக் கட்டிக்கறா. என்னடின்னு கேட்டா, ரத்தக் காட்டேரி வருதும்மாங்கறா..."

"ஐயோ...!" என்றாள் நிர்மலா. விஷயம் கொஞ்சம் பூடகமாகத்தான் அவளுக்குப் புரிந்திருந்தது. என்னவோ நடந்திருக்கிறது. ரஞ்சனாவுக்குக் குட்டி ஏதோ கதை சொல்லியிருக்கிறாள். நிஜமாக நடந்ததாக யாரோ கதை கட்டி விட்டிருக்கிறார்கள். அடக்கடவுளே, சின்னக் குழந்தையிடம் போய் ரத்தக் காட்டேரி அது இது என்று யார் சொல்லியிருப்பார்கள்?

"எனக்கு இந்த விஷயமே தெரியாதுங்க. நான் குட்டியை விசாரிக்கிறேன்" என்றாள் நிர்மலா.

"சேச்சே. நீங்க ஒண்ணும் அவளை மிரட்ட வேண்டாம். எங்க ரஞ்சு பயந்திருக்கான்னா, அதே மாதிரிதானே குட்டியும்? குழந்தைகளை யார் இந்த மாதிரியெல்லாம் பயமுறுத்தறாங்கன்னு விசாரிக்கணும். அவங்க வீட்டுல சொல்லி வெக்கணும். சரி, நான் வரவா?" என்று வேலை முடிந்த சந்தோஷத்தில் விடை பெற்றாள் ரஞ்சனாவின் அம்மா.

நிர்மலாவுக்குக் குழப்பமாக இருந்தது. ரொம்ப சாமர்த்தியமாக ஒரு புகாரை, புகார் தொனியில் அல்லாமல் நட்புணர்வுடன் செய்தி அறிக்கை போல் வாசித்துவிட்டுப் போயிருக்கிறாள் ஒருத்தி. ஆனால், புகார் புகார்தான். எந்தத் தொனியில் சொல்லப்பட்டால் என்ன? விஷயத்தைத் தெரியப்படுத்தியாகிவிட்டது. இனி தான்தான் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

'என்னமோ ரத்தக்காட்டேரியாம். ராத்திரி பன்னென்டு மணிக்கு அவ ஃப்ரெண்டு யாரோ ஒரு பையனாமே? அவன் வீட்டுக்கு வருமாம். வழியெல்லாம் ரத்தம் கொட்டிண்டே, உன்னை சாப்டப் போறேன்னு பயமுறுத்துமாம்...' - அவள் சொன்ன சங்கதியை மனதுக்குள் மீண்டுமொருமுறை சொல்லிப் பார்த்துக் கொண்டாள்.

'அவ ஃப்ரெண்டு யாரோ ஒரு பையனாமே...'

## டீ வண்டிக்கு மலர்க் கிரீடம்!

"சிறுசுறுப்புக்காக ஒரு டீ குடிக்கலாமே?" என்று ஸ்ரீரங்கம் பூச்சந்தையில் ஒரு தள்ளுவண்டியை நெருங்கியபோது, அட... டீ வண்டிக்கு



ஒரு மலர்க்கிரீடம்.

விஷயம் வேறொன்றுமில்லை. ஒரு கல்யாணத்துக்காக தயாரான பூ வேலைபாடு இது. உருவாக்கி முடித்ததும் தரையில் வைக்க இடைஞ்சலாக இருக்கவே, பார்த்தார்கள். தள்ளுமாடல் டீ வண்டி மீது வைத்து விட்டார்கள். பூ மண்டபத்தோடு, டீக்கடையை 'கிளிக்' செய்தபோது அதற்குப் பரிசாகக் கிடைத்தது டபுள் ஸ்ட்ராங் டீ!

- தகவல், படம்: **ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு**

---

யாராயிருக்கும்? குட்டியிடம் சொல்லி எச்சரிக்க வேண்டும். இந்த மாதிரி பேய்க் கதை சொல்கிற பையன்களுடன் பேசாதே. அவன் பேச்சு கா விட்டுவிடு. அதான் சமத்துப் பெண்ணுக்கு அழகு.

**அ**ன்றிரவு அவள் குட்டியிடம் இது குறித்துப் பேசத் தொடங்கியபோது எப்போதுமே இல்லாத வழக்கமாக அவள் மிகவும் கோபமுடன், ஆங்காரமுடன் முரண்டு பிடித்ததைக் கண்டு நிர்மலா சற்று வியப்படைந்தாள்.

"உதைபடுவே ராஸ்கல். யார் உனக்கு அந்தக் கதையெல்லாம் சொன்னது? மரியாதையா சொல்லிடு" என்று மிரட்டியபிறகுதான், அவள் ஜக்குவின் பெயரைச் சொன்னாள்.

"அந்தக் கிறுக்கனோட அதிகம் வெச்சுக்காதேன்னு சொல்லியிருக்கேனா இல்லியா?" கோபம் குறையாமல் கேட்டாள் நிர்மலா.

குட்டிக்கு அழுகை அழுகையாக வந்தது. இதென்ன அக்கிரமம்! உலகத்தில் ஜக்குவின் மேதைமையைப் புரிந்துகொள்ள தன்னைத் தவிர வேறு யாருக்குமேவா சக்தி இல்லை?

"அம்மா ப்ளீஸ். அவனை அப்படியெல்லாம் சொல்லாதே. அவன் நல்ல பையன். பைத்தியம் இல்லை. நீ இனிமே அதுமாதிரி சொல்லாதே!" என்று மிகவும் கெஞ்சுகிற தொனியில் கேட்டுக் கொண்டாள் குட்டி.

"நல்ல பையன்னா, ரத்தக்காட்டேரி கதையையெல்லாம் சொல்ல மாட்டான். பாரு, அவன் உங்கிட்ட என்னென்னவோ அளந்திருக்கான். நீ ரஞ்சனா கிட்ட சொல்லி, அவ, அவம்மாகிட்ட சொல்லி, இன்னிக்கு அவ உன்னைப் பத்தி கம்ப்ளைண்ட் பண்றா. குட்டியைக் கொஞ்சம் அதட்டி வைங்க. இல்லாட்டி நான் ஹெட் மிஸ்ட்ரஸ் கிட்ட சொல்லிடுவேங்கறா, வேணுமா உனக்கு?"

ஹெட்மிஸ்ட்ரஸ்! ஐயோ. யார் அந்த பூதத்தின் முன்னால் போய் நிற்பது? இந்த ரஞ்சனாவிடம் எத்தனை ப்ராமிஸ் வாங்கிக் கொண்டு சொன்னோம்? இப்படி அவள் அம்மாவிடம் விஷயத்தைச் சொல்லி, காரியத்தைக் கெடுத்தாளே, இனி அவளுடன் பேசுவதில்லை. காய்தான். நிச்சயமாக, நிரந்தரமாக காய்தான்.

**இ**ரவு விளக்கணைத்துப் படுத்ததும் குட்டியின் அம்மாவும் அப்பாவும் இந்த விஷயத்தைக் குறித்து விவாதிக்க ஆரம்பித்தார்கள். பேச்சுக்குரல் கேட்டதுமே குட்டி உன்னிப்பாகக் கேட்கத் தொடங்கினாள்.

"அந்தப் பையன் ஜக்குதாங்க நம்ம குட்டிகிட்ட இந்த மாதிரி கண்டகண்ட கதையெல்லாம் சொல்றான். குழந்தையை பயமுறுத்தி வெச்சிருக்கான். யார்டி சொன்னா உனக்கு இதையெல்லாம்னு கேட்டா [illegible]ல்ல மாட்டேங்கறா. சத்தியம் வாங்கி[illegible]க்கானாம், யார்கிட்டேயும் சொல்லக் கூடாதுன்னு! இத்துனூண்டு வயசுல என்னென்ன திரிசமன் பாருங்க. அவம்மாகிட்ட அவசியம் சொல்லிடணும் இதை. என்ன குழந்தை வளர்க்கறாளோ, சே."

அதற்குமேல் குட்டிக்குத் தாங்க முடியவில்லை. வெடித்துக் கொண்டு அழுகை பீறிட்டுவிட்டது.

"பார்த்தீங்களா? இப்படித்தான். தூக்கத்துல என்னமோ நினைச்சு பயந்துண்டு அழுறா பாருங்க. என் குலையே நடுங்குது. நாளைக்குக் காலைல முதல் வேலை, போய் அவன் வீட்டுல நீங்க பேசிட்டு வாங்க."

தீர்மானமாகச் சொன்னாள் நிர்மலா.

(தொடரும்)



தீபாவளி சமயமாச்சே! போனஸால், பாக்கெட்டும் பர்ஸும் கொஞ்சம் உப்பியிருக்குமே! உடனே வீட்டுப் பெண்கள், கலர் டீவி., வாஷிங் மிஷின், ஃபிரிஜ்னு விஸிட் போடுவதைத் தவிர்க்க முடியுமா என்ன? ஷாப்பிங் கிளம்பும் முன் 'ஈகிள் எலெக்ட்ரானிக்ஸ்' உரிமையாளர் என். தங்கவேல் பேட்டியைப் படிச்சுட்டுப் போங்க, ரொம்ப உதவியா இருக்கும்.

# ஷாப்பிங் யோகம் இருக்கா?

0% வட்டி, எக்ஸ்சேஞ்ச் மேளா, இலவச சலுகை, சிறப்புத் தள்ளுபடி, விழாக்கால விசேஷம் என கடைக்காரர்கள் ஏதேதோ முரசறைகிறார்களே! இதெல்லாம் உண்மையிலேயே பயனுள்ளவைதானா? இல்லை, வியாபாரத் தூண்டிலா?

தூண்டிலும் இல்லை. தந்திரமும் இல்லை. பிஸினெஸ் ப்ரமோஷன்தான்.

டீ.வி. என்று எடுத்துக் கொண்டாலே, அதில் இருபதுக்கும் மேற்பட்ட கம்பெனிகள் இருக்கின்றன. ஏகப்பட்ட போட்டா போட்டி! நிறைய விற்றால்தான் பிழைக்கவே முடியும். அதனால், சம்பந்தப்பட்ட



• என். தங்கவேல்




கம்பெனியே ஃபைனான்ஸ் நிறுவனம் வழியாக, எங்களைப் பாலமாகக் கொண்டு, வாடிக்கையாளர்களைக் கவர்ந்து, பொருள்களை விற்கிறார்கள்.


0% வட்டி என்பது, நிச்சயம் வாடிக்கையாளர்களுக்கு லாபமான விஷயம்தான். பொருள்களின் விலைகளை, கம்பெனி விளம்பரங்களில் தெளிவாக அறிவித்து விடுகிறார்கள். அதனால் இஷ்டத்துக்கு கூட்டிவிட முடியாது.

எக்ஸ்சேஞ்ச் மேளா, விழாக்கால தள்ளுபடி இலவசம் போன்றவையும் புதிய வாடிக்கையாளர்களைக் கவர, செய்யப்படும் வியாபார யுக்திதான். 'குறைந்த மார்ஜின். நிறைந்த விற்பனை' என்பதுதான் இன்றைய தாரக மந்திரம்.

**வாடிக்கையாளர்களை வசீகரிக்க என்ன செய்கிறீர்கள்?**

கஸ்டமர் ஈஸ் தி கிங் ஆஃப் தி ஷாப்! எனவே, அவர்களை எக்காரணம் கொண்டும் நழுவ விட மாட்டோம். "வாங்கம்மா.. வாங்க ஸார்." என்று உரத்த குரலில் தரப்படும் உற்சாக வரவேற்புக்கே, பாதிப் பேர் மயங்கி விடுவார்கள். "சேர் போடுப்பா... ஃபேன் போடுப்பா" என்ற உபசரிப்பிலும், உரிமையாளரே நேரடியாக கவனிக்கும் போதும், நிச்சயம் மனம் இளகி விடுவார்கள். சலிப்பே காட்டாமல் பொருள்களை எடுத்துப் போட்டு, டிஸ்கவுண்ட் தந்து, காம்ப்ளிமெண்ட் ஏதும் இருப்பின் அதையும் இன் முகத்தோடு கொடுத்தால், அவர்களுடைய நல்லெண்ணத்தை எளிதில் பெற்றுவிடலாம். பில் போடும் போது, "எங்கே வேலை, எங்கே இருக்கீங்க?" போன்ற நட்பு விசாரிப்புகளும் பர்ஸனல் டச் தரும். ஷாப்பிங்குக்கு ஆண்களை அழைத்து வருவதே பெண்கள்தாம் என்பதால், மிகுந்த கண்ணியம் காட்டிப் பழக வேண்டும். காபி,





கூல்டிரிங்ஸ் போன்ற உபசரிப்புகளுக்கும், கைப் பை, டைம்பீஸ் போன்ற சிறு அன்பளிப்புகளுக்கும் பெண்கள் சந்தோஷப்படுவது இயல்பு. தமக்குத்



''அந்த 'மெகா சீரியல்' ரொம்ப ரொம்ப சோகக் கதையாமே!''

''சந்தேகமே வேண்டாம்! வீட்டுக்கு வீடு 'கண்ணீர்' சேகரிப்புத் தொட்டி கட்டணும்னு அரசாங்கமே உத்தரவு போட்டிருக்கே!''

– கிரிஜா மணாளன்

---

தெரிந்த பெண்களிடமும் வாய்வழி விளம்பரம் பரவச் செய்வதும் பெண்களே என்பதால், மகளிர் மனம் கோணாமல் நடக்க வேண்டும். இதையெல்லாம் நாடகமாகச் செய்யாமல், உளமாரச் செய்யும்போது, நன்மை பல மடங்கு பெருகும்.

**ஷாப்பிங் செய்யக் கிளம்புபவர்களுக்கு நீங்கள் சொல்லும் யோசனை என்ன?**

வாஷிங் மிஷின் வாங்க இருக்கிறீர்கள் என்று வைத்துக் கொள்வோம். ஏற்கெனவே வாஷிங் மிஷினைப் பயன்படுத்திக் கொண்டிருக்கும் நண்பர்கள் அல்லது உறவினர்கள் வீட்டுக்கு ஒரு விஸிட் அடித்து, வெள்ளோட்டம் பார்த்து வையுங்கள். கடைக்கு வரும் முன்பே வாங்குவதா வேண்டாமா என ஓரளவுக்கு ஐடியா கிடைத்துவிடும்.

இந்தப் பொருள், இந்தக் கம்பெனி என்று முடிவான நிலையில் அருகிலிருக்கும் நடுத்தரக் கடையை அணுகுங்கள். மிகப் பெரிய ஷோரூம்களில் ஏகப்பட்ட ரேஞ்ச், விதவிதமான மாடல்களில் இருக்கும்தான். ஒவ்வொரு பொருளுக்கும் பிரத்யேகமாக கம்பெனி டெமான்ஸ்ட்ரேட்டர்கள் இருப்பார்கள். அவர்கள் தத்தம் கம்பெனிகளின் சிறப்பம்சங்களைச் சொல்லி, உங்களைத் திசை திருப்பி விடுவார்கள். 'அதுவா... இதுவா?' என்று மண்டையைப் பிய்த்துக் கொள்வீர்களே தவிர, ஒரு முடிவுக்கு வர மாட்டார்கள். அப்படியே ஒரு பொருளை வாங்கிவிட்ட பிறகு, ஒரு பிரச்னை என்று அணுகும்போது, கம்பெனி சேல்ஸ்மேனிடம் தீர்வு கிடைப்பது சிரமம் தான். வீணாக அலைய நேரும்.

நடுத்தரக் கடையில் அப்ரோச், ரெஸ்பான்ஸ் சுலபமாக இருக்கும். உரிமையாளரே கல்லாவில் இருப்பார். அவரிடம் புகார் சொன்னால், உடனே தீர்வு கிடைக்கும். பேரம் பேசலாம். 'இலவசம்' கேட்கலாம்.

பெரிய ஷோரூம்களில் மேனேஜர் இருப்பார். ஆனால் அவருக்கு இது போன்ற விஷயங்களில் முடிவு எடுக்கும் உரிமை இருக்காது.

**சரி, பொருளை வாங்கியாச்சு. அதற்குப் பின் செய்ய வேண்டிய விஷயங்கள் என்ன?**

• ஃப்ரீ டெலிவரி கேளுங்கள்.

• இலவச டெமோவுக்கு ஆளை அனுப்பச் சொல்லி, முழுமையாக இயக்கக் கற்றுக் கொள்ளுங்கள்.

• வீட்டிலிருக்கும் அனைவரும் இலவசக் குறிப்புப் புத்தகத்தை, முழுமையாகப் படிக்க வேண்டியது அவசியம்.

• சர்வீஸ் புத்தகம், விற்பனை பில், வாரண்டி கார்டு போன்றவற்றை பத்திரப்படுத்துங்கள்.

• நவீனமான டீ.வி. ஒன்றை வாங்குகிறீர்கள் என்று வைத்துக் கொள்வோம். அதில் ஏரோடோம் சவுண்டு சிஸ்டம், பிக்சர் இன் பிக்சர், கேம் மோடு, சைல்டு லாக், ஜூம் மோடு, ஆட்டோ சவுண்டு லெவல்லர், ஸ்லீப் டைமர், ஆன்-ஆஃப் டைமர் என ஏகப்பட்ட விஷயங்கள் இருக்கும். அதையெல்லாம் இயக்கக் கற்றுக் கொள்ளுங்கள்.

• வாஷிங் மெஷினில், வாஷ் கெபாஸிடி, வாஷ் புரோகிராம், பயோ மேஜிக் ஃபில்டர், பூமராங் பல்ஸேட்டர், டிஜிட்டல் டிஸ்ப்ளே, மெமரி பாக் அப், எரர் இன்டிகேட்டர், ஸ்பின் கன்ட்ரோல் என சகலத்தையும் துருவித் துருவி கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்.

• உங்கள் சாய்ஸ் மைக்ரோ அவனா?

ஓவன் கெபாஸிடி, பயோ செராமிக் டெக்னாலஜி, பவர் அவுட்புட் வாட்ஸ், கிரில் வாட்ஸ், கன்வெக்ஷன், காம்பினேஷன் வாட்ஸ், ஆக்ஸஸரிஸ், ஆட்டோ குக், ரீ ஹீட், டீ ஃப்ராஸ்ட், பவர் லெவல்ஸ், சைல்டு லாக் என பலவற்றையும் தெரிந்து கொண்டால்தான் மைக்ரோ அவனை முழுமையாகப் பயன்படுத்த முடியும்.

• ஏகப்பட்ட காசைக் கொட்டி, ஒரு பொருளை வாங்கிப் பயன்படுத்தவும் ஆரம்பிச்சாச்சா? முறையாகத் துடைத்து, அடிக்கடி சர்வீஸ் செய்து, பராமரிப்பதில்தான் உங்கள் சாமர்த்தியமே அடங்கியிருக்கிறது.

கையைக் கடிக்காததா, நல்லதா, தொழில் நுட்பத்திலே சிறந்ததா, பயனுள்ளதா, உழைக்கக் கூடியதா, குறிப்பா மனசுக்குப் பிடிச்சதா ஒரு எலெக்ட்ரானிக் பொருள் அமையறது அவ்வளவு சுலபமில்லைதான். அதுக்கும் ஜாதகத்தில் ஷாப்பிங் யோகம் இருக்கணுமே!

[illegible]

எழுதிய **வால்மீகி ராமாயணம்**

**மஹாபாரதம்**

[illegible]

அல்லயன்ஸ் நூற்றாண்டு சிறப்பு வெளியீடுகள்
என். ஸ்ரீநிவாஸன் எழுதியது

**100** தலைப்புகளில் **100** புத்தகங்கள்!

முதன்முறையாகத் தமிழில் வெளிவரும்

**என்சைக்ளோபீடியா**

1. நம்மவர் செய்த விந்தைகள் 100
2. அவர்கள் செய்த விந்தைகள் 100
3. உலக மகா கொடுங்கோலர்கள் 100
4. உலகப் புகழ் பெற்ற சொற்பொழிவுகள் 100
5. விந்தை உயிரினங்கள் 100
6. அரண்மனை ரகசியங்கள் 100
7. உலகப் புகழ் பெற்ற கட்டடங்கள் 100
8. நம்ப முடியாத உண்மைகள் 100
9. வியப்பூட்டும் உண்மைகள் 100
10. தாவர உலகிலே! 100
11. விந்தைத் தாவரங்களும் மூலிகைத் தாவரங்களும் 100
12. யார் என்ன சொன்னார்கள்? 100
13. நீருலகிலே! 100
14. பாலூட்டிகள் வரிசையிலே! 100
15. தமிழ் வளர்த்த பெருமக்கள் 100

தனிப்பிரதி ஒன்றின் விலை ரூ.100/-

**Dr. சுப்ரமண்ய ஸ்வாமி**

எழுதிய

**ராஜீவ் காந்தி கொலை**

விடை கிடைக்காத வினாக்களும் கேட்கப்படாத கேள்விகளும்

(தமிழாக்கம் - சுதாங்கன்)

பரபரப்பான அரசியல்வாதியின் பரபரப்பான புத்தகம்

விலை ரூ. 125/-

25000க்கும் மேற்பட்ட பழமொழிகளைக் கொண்டது 'வாகீச கலாநிதி' கி.வா. ஜகந்நாதன் தொகுத்த

**தமிழ்ப் பழமொழிகள்** (4 தொகுதிகள்) ரூ. 300/-

காஞ்சீ மஹா ஸ்வாமிகள் ஸ்ரீ சந்திர சேகரேந்த்ர ஸரஸ்வதி ஸ்வாமிகளின் திரு அவதாரத்தில் தொடங்கி - திரு அவதாரம் நிறைவு வரை - ஓவியர் சில்பியின் ஏராளமான படங்கள் - புகைப்படங்களுடன் - இரண்டு தொகுதிகள் - (ஸ்ரீ சாம்பமூர்த்தி ஸாஸ்த்ரிகள், குப்புஸ்வாமி ஐயர், பி.என். பரசுராமன் எழுதியது)

**பூஜ்யஸ்ரீ மஹா ஸ்வாமிகள் வரலாறு (ரூ.500/-)**

**'சொல்லின் செல்வன்' பி.என். பரசுராமன்** எழுதிய நூல்கள்

| | |
|---|---|
| விதுர நீதி | ரூ. 30/- |
| நீதி சதகம் | ரூ. 21/ |
| விபூதி ருத்ராட்சம் மகிமை | ரூ. 37/- |
| சித்தர்கள் சரித்திரம் | ரூ. 35/- |
| துணுக் துணுக் | ரூ. 21/- |
| அஷ்டாவக்ரர் உபதேசங்கள் | ரூ. 33/- |
| மஹரிஷிகள் வரலாறு A.V. சுகவனேஸ்வரன் | ரூ. 65/- |
| சனத்குமாரரின் உபதேசங்கள் | ரூ. 25/- |
| பீஷ்மர் சொன்ன தத்துவக் கதைகள் | ரூ. 60/- |
| வைராக்கிய சதகம் | ரூ. 16/- |
| யட்சப் பிரச்னம் ப்ரச்னோத்ர ரத்னமாலிகா | ரூ. 25/- |
| சித்ரகுப்தன் கதைகள் | ரூ. 18/- |
| வாரியார் சொற்பொழிவில் கேட்டவை | ரூ. 60/- |
| An Introduction to the Vedas (Ka.Sri.Sri) | ரூ. 60/- |

**அல்லயன்ஸ் கம்பெனி**

(நூற்றாண்டு கண்ட முதல் தமிழ்ப் புத்தக நிறுவனம்)
244, ராமகிருஷ்ணா மடம் சாலை, மயிலாப்பூர்
சென்னை - 6000 004. © 24941314

# அக்காவின் செலக்ஷன்

**அதெப்படி ஒவ்வொரு முறையும் கடையில் நுழைந்த பத்து நிமிடங்களுக்குள் அவளால் உடையைத் தேர்வு செய்ய முடிகிறது?**

புடைவைக் கடையிலிருந்த அத்தனை பேருமே சுசித்ராவை வியப்புடன் பார்த்தார்கள்.

"இன்னும் இரண்டு வெரைடி வேணா காட்டட்டுமா?" என்றார் கடைக்காரர்.

"இதுவே பிடிச்சிருக்கு. பேக் பண்ணிடுங்க" என்றாள்.

சற்றுத் தழைந்த குரலில் "முதலாளி கிட்ட கேட்டுப் பாருங்க. பத்து பர்சென்ட் டிஸ்கவுண்ட் குடுப்பாரு" என்றார். கடையில்



நுழைந்து வெறும் ஆறு நிமிடங்களில் சேலையைத் தேர்வு செய்யும் ஒரு இருபது வயது மதிக்கத்தக்க இளம்பெண்ணுக்கு இந்தச் சலுகை கூடக் கொடுக்காவிட்டால் எப்படி?

"தாங்ஸ்" என்று புன்னகைசெய்தபடி சுசித்ரா கிளம்ப, கூடவே சுகுமாரனும் கிளம்பினான்.

சுசித்ராவின் ஷாப்பிங்கை நினைக்கும்

## அருண் சரண்யா

போதெல்லாம் அவனுக்கு வியப்பாக இருக்கும். அதெப்படி ஒவ்வொரு முறையும் கடையில் நுழைந்த பத்து நிமிடங்களுக்குள் அவளால் உடையைத் தேர்வு செய்ய முடிகிறது? ஒவ்வொரு உடையும் அவளுக்கு மிகப் பாந்தமாக அமைவது மற்றொரு வியப்பு.

ஆக அக்காவோடு ஷாப்பிங் போவதென்பது, சுகுமாரனுக்கு அலுப்பூட்டும் காரியமில்லை. தவிர, அவனுக்கு ஏதாவது வேலை



யென்றால் அவளே கூடத் தனியாகப் போய் வந்துவிடுவாள்.

ஆனால் தனக்கு ஒரு சட்டை வாங்குவதென்றால்கூட, சுகுமாருக்கு அது பெரும் சவாலாக இருக்கும். சுசித்ராவும் கூட வருவதாகச் சொல்வாள். மறுக்க முடியாது. ரயில் விபத்தில் அப்பாவும் அம்மாவும் ஒரே நேரத்தில் இறந்துவிட, தன் கல்லூரிப் படிப்பைப் பாதியில் நிறுத்திக் கொண்டு வேலையில் சேர்ந்து, தன்னைக் கரை சேர்க்கிறவள். இன்று சுகுமாரன் கணிசமாக சம்பாதிக்கிறான் என்றால், அது சுசித்ராவின் உபயத்தில்தான்.

சுகுமாரனுக்கு ஷாப்பிங் என்றாலே குழப்பம். எந்தக் கடைக்குப் போகலாம் என்பதிலிருந்து சிக்கல் தொடங்கும். அவனுக்கே ஒரு கடை பிடித்திருக்கும். அவனது நண்பன் மற்றொரு கடையைச் சிபாரிசு செய்திருப்பான். வழியில் தென்படும் அலங்கார விளம்பரம், அவனை மூன்றாவது கடைக்குப் போகத் தூண்டும். மூன்றுக்குமே சென்று பார்க்கலாமே என்ற முடிவுக்கு வருவான்.

ஷாப்பிங்குக்குக்கூட வந்தாலும் சுசித்ரா அவனது உடைத் தேர்வுக்கு ஆலோசனை கூற மாட்டாள். தொடக்கத்தில் அவள் கூறிய ஒரு சில ஆலோசனைகளை அவன் ஏற்றுக் கொள்ளவில்லை என்பதனால் இருக்கலாம். அதற்காகக் கடை வாசலில் உட்காருவதா என்ன? சுகுமாரனுக்குக் கோபம் வரும்.

"நான் என்னடா நடைபாதையிலா நிக்கறேன்? வாசலிலே நாற்காலி போட்டிருக்காங்க. அதில் உட்காரப் போறேன். அவ்வளவுதானே? நீ போய்ட்டு வா. நான் மனுஷங்களைப் பாத்துட்டிருக்கேன். அது எனக்கு ரொம்பப் பிடிக்கும்."

இளம்பெண் ஒருத்தி கடைவாசலில் உட்கார்ந்து கொண்டு, ஆண்கள் உட்பட்ட மனிதர்களைப் பார்ப்பது சுகுமாரனுக்குப் பிடிக்கவில்லைதான். ஆனால் அக்கா வேறு ரகம். அவளோடு ஆரோக்கியமற்ற சிந்தனைகளை இணைத்துப் பார்க்க மனம் வராது. சுமார் ஒரு மணி நேரம் பொறுத்துதான் கடையிலிருந்து வெளிப்படுவான். பெரும்பாலும் உதட்டைப் பிதுக்கிக் கொண்டும், வேறொரு கடைக்குப் போக வேண்டும் என்ற அலுப்போடும். சில சமயம் நாலைந்து கடைகளுக்குச் சென்று தேர்வு செய்த உடை கூட, வீட்டுக்கு வந்தவுடன்






''கத்தாம ஒழுங்கா உன் பணத்தை எடு.''
''டேய்.. நான் அரசியல்வாதி!''
''அப்ப சரி, ஒழுங்கா என் பணத்தை எடு.''

- ரா. பிரபு

''என்ன... நடிகை கலாஸ்ரீ நேத்து உங்க காலனிக்குத் திடீர் விஸிட்டா?''
''ஆமா! சீரியலைப் பார்த்துட்டு அழுற கேரக்டர்ல நடிக்கப் போறாங்களாம். யதார்த்தமா இருக்கணும்னு நாங்கள்லாம் அழுற ஸ்டைலைப் பார்த்துட்டுப் போறாங்க.''

- பி.ஜி.பி. இசக்கி



பெரும் அதிருப்தியைத் தந்து தொலைக்கும்.

ஒருமுறை கடைவாயிலில் சுசித்ரா உட்கார்ந்திருந்தபோதுதான் முத்துராமன் அவளுக்கு அறிமுகமானார். அவர் பேச, இவள் பேச, சுகுமாரன் வெளியே வந்த போது, அவரை இவள் அறிமுகப்படுத்தினாள். 'இங்க உக்காந்துட்டிருக்கிறப்போ அறிமுகமானவர்' என்று அக்கா கூறியபோது, சுகுமாரனுக்கு எரிச்சல் வந்தது. 'என்ன சார் எதுவும் வாங்கல்லையா, கைய வீசிட்டு வரீங்களே?' என்று அந்த முத்துராமன் கேட்டபோது, எரிச்சல் மேலும் கூடியது. அவர் பார்வை அடிக்கடி சசித்ராவின் பக்கம் திரும்பியது அவனுக்குச் சற்றும் பிடிக்கவில்லை.

அன்று வீடு திரும்பியபோது சுசித்ரா ஒரு விசிட்டிங் கார்டை சுகுமாரனிடம் கொடுத்தாள். 'மிஸ்டர் முத்துராமனோடது' என்றாள். பின் மெல்ல "இன்னும் ரெண்டு வருஷம் கழித்துக் கூட நான் கல்யாணம் பண்ணிக்கலாம். ஆனால் நமக்கு ஏத்தமாதிரி சூழல் உள்ள ஒருத்தர் என்னைக் கல்யாணம் செய்துக்க விரும்புவதா சொல்றப்போ, அதை ஏத்துக்கறதுதான் புத்திசாலித்தனம். நீ அவங்க வீட்டுக்குப் போய்ப் பேசிப் பாருடா" என்றாள்.

சுகுமார் தன் அறையில் உட்கார்ந்து ஸென்ட்டை ஸ்ப்ரே செய்து கொண்டிருந்தான். அது அத்தானின் வீட்டில் அவனுக்கென்றே ஒதுக்கப்பட்ட அறை. சசித்ரா திருமணத்திற்கு முன்பே பேசிவிட்டிருந்தாள். 'என் தம்பிக்கு நான்தான் எல்லாமே. என்கூடத்தான் தங்குவான்.'

மீசையில் ஓரிரு நரைமுடிகள் எட்டிப் பார்க்கத் தொடங்கியிருந்தன. தேடித் தேடிக் கத்திரிக்கோலால் களையெடுத்தான்.

வெளியே ப்ரியங்காவின் குரல் கேட்டது. "அம்மா அம்மா, இன்னிக்கும் நான் உங்க கூட வருவேன்" மழலை மாறாத குரல். 'நீ இல்லாமலா?" என்று கூறிக் கொண்டிருந்தாள் சுசித்ரா.

பெருமூச்சு வெளிப்பட்டது. அன்று இருபதாவது முறையாக பெண் பார்க்கக் கிளம்பிக் கொண்டிருக்கிறான். என்ன செய்ய மனைவி என ஒருத்தியை ஏற்றுக் கொள்வதென்றால் பலவிதமாக யோசிக்க வேண்டியிருக்கிறதே. ஆனால் அக்காவால் எப்படித் தன் திருமண முடிவை உடனடியாக எடுக்க




**அனிதா ரத்னம் :** என் மகள் ஆர்யாம்பிகா அமெரிக்காவிலே பிறந்தா. அவளுக்கு இரண்டரை வயசா இருக்கும் போது, பி.ஜே. சூப்பர் மார்க்கெட்டுக்குக் கூட்டிட்டுப் போயிருந்தேன். அது கிறிஸ்மஸ் சமயம். ஜே.ஜே.னு கூட்டம் ஷாப்பிங் பண்ணிக்கிட்டேயிருக்கும்போது திடீர்னு ஆர்யாவைக் காணோம். அது ரொம்பப் பெரிய கடை. ஏகப்பட்ட ஃப்ளோர்ஸ். 'என்ன ஆச்சோ... எங்கே போச்சோ, ராஜா... கண்ணா'னு பதறியடிச்சுக்கிட்டே தேடினேன். யாரோ குழந்தையைக் கடத்திட்டதா நினைச்சு பயந்துட்டேன். அப்புறம் 'கெக்கே...'னு ஒரு சிரிப்பு. வண்ண விளக்கு, ஸ்டப்ட் பொம்மையெல்லாம் வைச்சு அலங்கரிச்சிருந்த சின்ன பார்க்கில், இதுவும் பொம்மையாட்டம் உட்கார்ந்திருந்ததாலே கடைக்காரருக்கே அடையாளம் தெரியலை. ஆர்யாவுக்கு இப்ப பதினேழு வயசு. இப்ப ஷாப்பிங் செய்யும்போது அவ காணாமல் போயிட்டா நான் ஆடிப் போகமாட்டேன். ஷாப்பிங் மால்தான் ஆடிப் போகும்!

முடிந்தது? அதுவும் மிகச் சரியான முடிவு என்று காலகாலத்துக்கும் உறுதி கூறத் தக்க முடிவு. அத்தான் இன்றுவரை அக்காவின் மேல் பாசமழையைப் பொழிந்து கொண்டு தானிருக்கிறார். கலகலப்பான குடும்பம். எப்படி அக்காவால் கடைவாசலில் உட்கார்ந்திருந்த ஒரே சந்தர்ப்பத்தில், தன் வருங்கால மணாளனைத் தேர்ந்தெடுக்க முடிந்தது?

இன்று அக்காவிடம் அந்த ரகசியத்தைக் கேட்டுவிட வேண்டும் போலிருந்தது. "என்னடா ரெடியாயிட்டியா?" என்றபடி அவள் உள்ளே நுழைந்ததும் கேட்டு விட்டான். "எப்படிக்கா நீ அவ்வளவு சீக்கிரம் செலக்ட் செஞ்சே?" என்றான்.

அக்கா வேறு ஏதோ புரிந்து கொண்டாள். "ரொம்ப சிம்பிள்டா. சுத்துமுத்தும் இருக்கறவங்களை நல்லாப் பாத்தாலே போதும். எவ்வளவு உயரமும் உடல்வாகும் கலரும் இருக்கற பொண்ணுங்க என்ன மாதிரி ட்ரஸ் போட்டுக்கறாங்க, அதில எது அவங்களுக்குப் பளிச்சுன்னு பொருந்துதுன்னு பார்த்து வைச்சுப்பேன். அந்த மாதிரி என்கிட்ட இல்லைன்றதும் உறுதியாச்சுன்னா, விஷயம் முடிஞ்சது. அதே சமயம் அந்த உடை எனக்குத் திருப்தி தருமான்றதையும் நம்ம பட்ஜெட்டுக்குள்ளே ஒத்து வருமான்னும் யோசிப்பேன். இதையெல்லாம் முன்னாலேயே யோசிச்சு வைச்சிக்கறதினாலே, கடைக்குப் போனதும் எந்த மாதிரி ட்ரஸ் வேணும்கிறதைத் தெளிவா சொல்லிடுவேன். மேட்டர் முடிஞ்சது. அதாவது என்னைப் பொறுத்தவரை, ஷாப்பிங் என்பது கடைக்குக் கிளம்புவதற்குப் பல நாள் முன்னாலேயே தொடங்கிடுது" என்றான்.


"நான் சொன்னதை சரியாப் புரிஞ்சுக்க" கூறத் தொடங்கியவன் வாயை மூடிக் கொண்டான்.

தெரிந்தோ தெரியாமலோ, சுசித்ரா தனது கேள்விக்கும் சேர்த்துதான் பதிலளித்திருக்கிறான். தீவிரமாக யோசிக்கத் தொடங்கினான். ●

# வணக்கத்துக்குரிய வயிறே... 15



● எண்டோஸ்கோப் செலுத்தப்படுகிறது




அந்தக் காலத்தில், எக்ஸ்ரே, ஸ்கேனிங் போன்ற விஷயங்களே அதிகபட்ச நவீனம்!

என் தந்தை டாக்டர் சுந்தர்ராமனைக் காண கிராமப் புறத்திலிருந்து நிறைய நோயாளிகள் வருவார்கள்.

“என்ன ஆயா? ஒரு ஃபோட்டோ புடிச்சுக்கிட்டு வந்துரு. அப்புறம் மாவு கொடுத்து குழாய் விட்டுப் பார்க்கலாம்.” என்று அவர்கள் மொழியிலேயே பேசுவதை ரசித்திருக்கிறேன்.

இப்போது நானும் படிப்பறிவு அதிகமில்லாத நோயாளிகளுடன் பழக நேருகிறது. ஆனால் எக்ஸ்ரே, ஸ்கேனிங், லேப்ரோஸ்கோபி, என்டோஸ்கோபி போன்ற வார்த்தைகள் அவர்களிடம் மிக சகஜமாகப் புழங்குகின்றன. மருத்துவ விஞ்ஞான வளர்ச்சி!

எக்ஸ்ரே, ஸ்கேனிங் தவிர, விதவிதமான ஸ்கோபிகள் தற்போது மருத்துவர்களின் வேலையைச் சுலபமாக்கும் வண்ணம் உபயோகத்தில் உள்ளன. அவற்றைப் பற்றி மிகச் சுருக்கமாகச் சொல்கிறேன்.

**என்டோஸ்கோப்பி என்றால் என்ன?**

அறுவைச் சிகிச்சை செய்யாமல், செரிமான மண்டல நோய்களைக் கண்டறியும் உள் நோக்கிக் கருவிதான் எண்டாஸ்கோப்பி.

‘எண்டோ’ என்றால் ‘உள் புறமாக’... ‘ஸ்கோபி’ என்றால் ‘பார்..’ பெயர்க் காரணம் புரிந்ததா?

என்டாஸ்கோபி மூலம் நமது உடம்பில் இயற்கையாய் அமைந்திருக்கும் வாய், மூக்கு, காது, ஆசனவாய் போன்றவற்றின் வழியாக, வயிறு மற்றும் உள் உறுப்புகளை ஆராய்ந்து பார்க்கலாம்.

செயற்கையாய் உடம்பில் சில துளைகள் செய்து, வயிறு முதலிய உள் உறுப்புகளைப் பார்ப்பது லேப்ரோஸ்கோப்பி.

என்டோஸ்கோபி என்பது பொதுப் பெயர். சில குறிப்பிட்ட பகுதிகளை, குறிப்பிட்ட இயற்கைத் துவாரங்கள் வழியாகப் பார்க்க உதவும் சில புதுமையான என்டாஸ்கோபி கருவிகளைப் பற்றித்

## நீங்க குரோர்பதியா?




டாக்டர் எஸ். அஷோக்

> "ஒரு துணையெழுத்தால் என் தலையெழுத்தே மாறிப் போச்சு"
>
> "எப்படி...?"
>
> "ஜமீன் பரம்பரைன்னு நினைச்சு அவரை கல்யாணம் பண்ணிக்கிட்டேன். கடைசியில பார்த்தா அவர் ஜாமீன் பரம்பரைன்னு இப்பத் தான் தெரியுது..."
>
> - இரா. சுப்புராஜ்

தெரிந்து கொள்ளுங்கள். நிச்சயம் உதவும்.

• வாய் வழியாக, இரைப்பை, சிறுகுடல் நோக்கும் முறை - அப்பர் ஜி.ஐ. எண் டாஸ்கோபி

• வாய்வழியாக, பித்த நீர்க் குழாய் வழியைப் பார்ப்பது - கோலெடோசோஸ்கோபி

• வாய்வழியாக, உணவுக் குழாயை நோக்குவது - யூஸோஃபேகோஸ் கோபி

• மூக்கு வழி - சைனோஸ்கோபி

• காதுவழியாக - ஆட்டாஸ்கோபி

• ஆசனவாய் வழியாக மலக்குடலைப் பார்க்கும் முறை - ப்ராக்டோஸ்கோபி

• ஆசனவாய் வழியாக சிக்மாய்டு பெருங்குடலை ஆராய்வது - சிக்மாய்டோஸ்கோபி

• ஆசனவாய் வழியாக பெருங்குடல் முழுவதும் பார்க்கும் முறை - கலனோஸ் கோபி

• பெண் பிறப்பு உறுப்பு வழியாக யோனிக் குழாய் பார்க்கும் முறை - வஜைனோ ஸ்கோபி

• பெண் பிறப்பு உறுப்பு வழி, கர்ப்ப வாய்க் குழாய் பார்க்கும் முறை - கால்போஸ்கோபி

• பெண் பிறப்பு உறுப்பு வழியாக கர்ப்பப்பை நோக்கும் முறை - ஹிஸ்டெரோஸ்கோபி

செயற்கையாக துவாரமிட்டு அதன் மூலம், உடம்பின் உள் உறுப்புகளைப்



பார்க்கும் லேப்ராஸ்கோபியிலும் பல வகை உண்டு.

வயிற்றில் துளையிடுவது - லேப்ராஸ்கோபி

மார்புக் கூட்டில் துளையிடுவது தொராக்கோஸ்கோபி

மூட்டுகளில் ஓட்டை போடுவது ஆர்த்தாஸ்கோபி

முதுகுவழியாக ஓட்டை போடுவது ரெட்ரோபெரிடொனியோஸ்கோபி

எண்டாஸ்கோபி மூலம் நோய் அறிவது சுலபம் மட்டுமல்ல. மிகவும் நம்பகமானதும் கூட.

நோயாளியானவர் சோதனைக்கு முன் (எட்டு மணி முதல் பன்னிரண்டு மணி நேரம் வரை) எதுவும் சாப்பிடாமல் வர வேண்டும்.

அவரது தொண்டைப் பகுதியை உணர் விழக்க வைக்க மருந்து தரப்படும். பிறகு எண்டாஸ்கோப் உள்ளே செலுத்தப்பட்டு, உணவுக் குழாய் வழியாக இரைப்பைக்குச் சென்று, முன் சிறுகுடலை அடைந்து அந்தந் தப் பகுதிகளின் அமைப்பு ஆராயப்படும். கட்டி, புண், அடைப்பு ஏதும் இருக்கிறதா, சுருங்கி விரியும் தன்மை இயல்பாக உள்ளதா போன்றவையும் சோதிக்கப்படும்.

பயாப்ஸி சோதனைக்காக, திசுக்களை சாம்பிள் எடுக்கவும் வசதி உண்டு.

தற்செயலாக விழுங்கிய நாணயம், கோலி குண்டு எடுப்பது போன்ற மைக்ரோ விஷயங்களிலிருந்து, புற்றுக்கட்டி அகற்றுவது போன்ற மேக்ரோ விஷயம் வரை, எண் டாஸ்கோபி பயன்படுகிறது.

வாயில் ஊறும் எச்சிலில் ஆரம்பித்து, மூலத்தில் முடித்து, வயிறு சம்பந்தப்பட்ட ஜீரண உறுப்புகளிடையே, வாசகர்களுடன் சிறு ரவுண்டு போய் வர ஏற்பாடு செய்து கொடுத்த 'கல்கி' ஆசிரியர் குழுவுக்கு நன்றி சொல்லிக் கொள்கிறேன்.

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் இல்லையா? அதை அடைய ஒரு சின்ன உபாயம். காலையில் எழும்போது மலச்சிக் கல் இருக்கக் கூடாது. இரவு படுக்கும்போது மனச்சிக்கல் இருக்கக் கூடாது. இந்த இரண்டையும் கடைப்பிடியுங்க. ஆரோக்கிய விஷயத்தில் நீங்கதான் கரோர்பதி!

(நிறைந்தது)

தொகுப்பு : **அனுராதா சேகர்**

அன்னபூரணியை ஆராதியுங்கள் ! அவள் அருளுக்கு பாத்திரமாகுங்கள் !

# அன்னம் கொடுக்கும் ஸ்ரீ அன்னபூரணி க்ஷேத்ரமான
# காசியில் தீபாவளி அமாவாசை நாளில்
# கங்கையில் தீபமேற்றி அன்னதானம் செய்வோம் வாருங்கள் !

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகளின் அருளாசியுடன் புண்ணிய க்ஷேத்ரமான **காசியில் தீபாவளி அமாவாசை நாளில் அன்னதானம்** செய்வதில் நீங்களும் பங்கேற்கலாம்...

**"ஸ்ரீ அன்னபூரணி அன்னதான சேவா டிரஸ்ட்" 5 ஆண்டுகளுக்கு மேலாக தொடர்ந்து நடத்தும் அன்னதான சேவை !**

**பேரன்புடையீர் ! வணக்கம். அருள்மிகு ஸ்ரீ அன்னபூரணி அன்னை தீபாவளித் திருநாளில் தங்களுக்கு அனைத்து நலன்களையும் தந்தருளப் பிரார்த்திக்கிறோம்.**

**கங்கைக்கு** நிகரான தீர்த்தமில்லை. **காசிக்கு** நிகரான ஊருமில்லை என்பது **இந்துக்களின் திருமந்திரம்.** பிரபஞ்சம் முழுமைக்கும் உணவு படைக்கும் தாயாக விளங்கும் **ஸ்ரீ அன்னபூரணி** மாதா கொலுவீற்றிருக்கும் புண்ணிய ஸ்தலமான காசியில் **தீபாவளி அமாவாசை** அன்று கங்கா மாதாவுக்கு மலர் மாலை அணிவித்து, கங்கையில் தீபமேற்றி, **அன்னதானம்** செய்யப்படுகிறது என்பதை தெரிவித்துக்கொள்கிறோம். அன்பர்கள் அனைவராலும் காசியில் கங்கைக்கு தீபமேற்றி அன்னதானமிட முடியும் என்ற இறை சிந்தனையோடு **"ஸ்ரீ அன்னபூரணி அன்னதான சேவா டிரஸ்ட்"** என்ற தனி அமைப்பின் மூலம் காசியில் அன்னதானம் நடைபெறுகிறது. இந்த அன்னதான இறை பணிக்கு தங்களால் இயன்ற நன்கொடையை வழங்கி இறையருளால் காசியில் ஏழைகளுக்கும், அடியார்களுக்கும், அன்னம் அளிப்பதில் நாமும் ஓரளவேனும் பங்கு கொண்டோம் என்ற ஆத்ம திருப்தியை அடைய இது ஒரு சிறந்த வாய்ப்பாகும். **தீபாவளி அமாவாசையன்று அன்னாபிஷேகம், லட்டு தேர், அன்னக்கூடு** போன்றவை காசியில் மிக விசேஷமாக நடத்தப்படுகிறது. ஸ்ரீ அன்னபூரணி அருளால் வாழ்நாள் முழுவதும் உணவு தட்டுப்பாடின்றி ஆரோக்கியமாக வாழ அனைவரையும் தீபாவளித் திருநாளில் **"ஸ்ரீ அன்னபூரணி அன்னதான சேவா டிரஸ்ட்"** மூலம் அன்னதானம் செய்ய அன்புடன் அழைக்கின்றோம்.

**தாங்கள் அளிக்கும் நன்கொடை எவ்வளவு சிறியதாக இருந்தாலும் அன்புடன் ஏற்றுக்கொள்ளப்படும்.**

- ரூ. 500 - அனுப்பும் அன்பர்களுக்கு, ஆன்மீகம் மாத இதழ் ஆறு மாதத்திற்கு அனுப்பி வைக்கப்படும்.
- ரூ. 1000 - அனுப்பும் அன்பர்களுக்கு, ஆன்மீகம் மாத இதழ் ஒரு வருடத்திற்கு அனுப்பி வைக்கப்படும்.
- ரூ. 5000 - அனுப்பும் அன்பர்களுக்கு, ஆன்மீகம் மாத இதழ் ஆறு வருடத்திற்கு அனுப்பி வைக்கப்படும்.

**காசி, கயா, பிரயாகை (திரிவேணி சங்கமம்) ஆகிய இம்மூன்று பித்ரு க்ஷேத்ரங்களிலும் புண்ணிய காரியங்கள், பித்ரு காரியங்கள், பிண்டம் போடுதல், தாமங்கள், சிரார்த்தம், திவசம், தர்ப்பணம் போன்றவற்றை அவரவர் விருப்பப்படி அன்னதானக் கைங்கர்ய அன்பர்களுக்கு செய்து தரப்படும்.**

குடும்பத்தில் தாய் தந்தையர்கள், மூதாதையர்களுக்கு பிண்டப்பிரதானம் மற்றும் தர்ப்பணம் காசியிலும், கயாவிலும், பிரயாகையிலும் நேரில் சென்று செய்ய முடியாதவர்களுக்காக, சாஸ்திரிகளைக் கொண்டு "ஸ்ரீ அன்னபூரணி அன்னதான சேவா டிரஸ்ட்" மூலம் செய்யப்படுகிறது.

பித்ருக்களுக்கு பிண்டப்பிரதானம் செய்ய காசி, கயா, பிரயாகை ஆகிய மூன்று பித்ரு க்ஷேத்ரங்களுக்கும் தனித்தனியாக ரூபாய் 1000-அனுப்பும் போது யாருக்கு சிரார்த்தம் செய்ய விரும்புகிறீர்களோ அவரின் பெயர், திதி மற்றும் கோத்ரம் போன்ற விபரங்களையும் அவசியம் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். பிண்ட பிரதானத்திற்காக ரூ. 5000- அனுப்பும் அன்பர்கள் சார்பாக தொடர்ந்து வருடத்திற்கு ஒருமுறை ஆறு ஆண்டுகளுக்கு மூன்று பித்ரு க்ஷேத்ரங்களிலும் எந்த இடத்தில் யாருக்கு சிரார்த்தம் செய்ய விரும்புகிறீர்களோ அவர்களுக்கு சிரார்த்தம் செய்யப்படும். பித்ரு காரியங்களுக்கு பணம் அனுப்பும் அன்பர்களுக்கு காசி, கயா, பிரயாகை ஆகிய மூன்று இடங்களிலும் உள்ள தெய்வீக ஆலமரமான 'அக்ஷய வடத்தின்' படமும், கயாவில் உள்ள விஷ்ணு பாதத்தின் படமும் அனுப்பி வைக்கப்படும். நம் வீட்டில் செய்யும் சிரார்த்தத்திற்கு தாய், தந்தையர், உறவினர்கள் மட்டுமே பங்குகொள்ள வாய்ப்புண்டு. மூன்று பித்ரு க்ஷேத்ரங்களில் ஏதாவது ஒரு அக்ஷய வடத்தில் (ஆலமரம்) பிண்டப்பிரதானம் செய்தால் ஏழு தலைமுறைக்கு பித்ருக்கள் கூட்டமே முக்தி அடைவதுடன் பித்ரு தோஷங்களும் நிவர்த்தியாகும்.

அன்னதானத்திற்கு நன்கொடையை அனுப்புவோர் தங்களுடைய வேண்டுதலையும், பிரார்த்தனையையும் தெரிவித்தால் அதற்கேற்ப நீங்கள் விரும்பும் அமாவாசை தினத்தில் காசியில் அன்னதானம் செய்கிறோம். அன்னதானத்திற்கு நன்கொடையாக ரூ.500, ரூ. 1000, ரூ. 5000 அனுப்பும் அன்பர்களுக்கு கங்கா தீர்த்தத்துடன் கூடிய காசி சொம்பும், காசியில் பூஜிக்கப்பட்ட ஸ்ரீ அன்னபூரணி அன்னையின் விக்கிரகமும் ஸ்ரீ அன்னபூரணி அன்னையின் வண்ணப்படமும், சிறிய அளவில் சிவபுராண புத்தகமும் அனுப்பி வைக்கப்படும்.

ரூ.5000 - அனுப்பும் அன்பர்கள் சார்பாக, ஒவ்வொரு மாதமும் அமாவாசை தினத்தில் காசியில் அன்னதானமும், கங்கையில் தீபமேற்றும் பணியும் செய்து ஆறு வருடங்கள் ஆன்மீகம் மாத இதழ் தங்களுக்கு அனுப்பி வைக்கப்படும். அன்பர்கள் ஒவ்வொருவரின் பூஜை அறையும் மங்கலம் பெற வேண்டும் என்ற எண்ணத்துடன் ரூ. 5000 செலுத்துபவர்களுக்கு 1024 பக்கங்களுடன் கூடிய பெரிய அளவில் உள்ள **ஸ்ரீமத் பகவத்கீதை** புத்தகத்தை (தமிழில்) அனுப்பி வைக்கிறோம்.

**அன்னதான சேவையிலும், கங்கைக்கு தீபமேற்றும் பணியிலும் ஈடுபட விரும்பும் அன்பர்கள் தங்கள் நன்கொடையை Cheque / D. D/ M. O. மூலம் Sri Annapoorani Annadhana Seva Trust, Chennai - 4 என்ற பெயருக்கு எடுத்து கீழ்கண்ட முகவரிக்கு அனுப்பி கங்கா மாதாவின் புண்ணியமும், அன்னபூரணி அன்னையின் அருளையும் பெறுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.**



**நன்கொடைகளுக்கு 80G பிரிவின் படி வரி விலக்கு உண்டு.**


Cheque / D. D/ M. O. அனுப்ப வேண்டிய முகவரி

## ஸ்ரீ அன்னபூரணி அன்னதான சேவா டிரஸ்ட்

**SRI ANNAPOORANI ANNADHANA SEVA TRUST (Regd.)**

68, Nadu Street,(Opp. Sri Kapaleeswarar Temple) Mylapore, Chennai - 600 004.

**TEL : 2495 9302, E-mail:siva siva @ vsnl.net**



"காசியில் தீபாவளி அமாவாசையன்று கங்கா மாதாவுக்கு தீபமேற்றி நிறைந்த ஆயுளையும் குன்றாத ஆரோக்கியத்தையும் பெறுவோம் "



# முதல் ரவுண்டில் சொக்குப் பொடி!

ஷாப்பிங் முடிஞ்சதும் அப்படியே ஏதாவது ஹோட்டல்ல குடும்பத்தோட சாப்பிட்டு வந்தால்தான், ஷாப்பிங் முடிச்ச திருப்தியே கிடைக்கும். ஆனா... பாருங்க... சென்னையிலே வெளியிலே சாப்பிடறதுக்காகவே, ஷாப்பிங் புரோகிராம் போட்டுக்கறாங்க. அதுவும் தி.நகர்லே பர்சேஸ் முடிச்சுட்டு, ஜி.என். சாலை 'முருகன் இட்லி கடை'யில் ('க்'... இல்லை) கையை நனைக்காமல், யாரும் நழுவிவிட முடியாது! அப்படியொரு சொக்குப் பொடி' போட்டிருக்காங்க!

தலைவாழை இலை விரிச்சு, பவ்யமா தண்ணீர் தெளிக்கறாங்க.

முதல் ரவுண்டிலேயே கறுப்பு நிற என்ளுப் பொடி வருகிறது! (வாடிக்ஙக



• மனோகரன்

யாளர்களுக்கு கிக்கு ஏற்றும் சொக்குப் பொடியும் இதுதான்.) அதைக் குழப்ப, முட்டைக் கரண்டி நல்லெண்ணெய்! (இந்த இட்லிப் பொடியை 'பேக்' செய்து விற்கக் கூடாதா என்று நிறையப் பேர் நச்சரிக்கிறார்களாம்) சிவப்பு நிறத்தில் தக்காளிச் சட்னி. இளம்பச்சை மல்லிச் சட்னி. கரும் பச்சை புதினாச் சட்னி. வெள்ளை வெளேர் தேங்காய்ச் சட்னி...

சைடு டிஷ்கள் வந்து சேர்ந்ததும், சுடச்சுட ஆவி பறக்க இட்லி...

எண்ணெய்ப் பொடி குளத்தில் இட்லியை ஒரு அமுங்கு அமுக்திவிட்டு, வேலையைத் தொடங்க வேண்டியதுதான். 'கமகம' சாம்பாரும் உண்டு. ஆனால் பொடி, சட்னி காம்பினேஷனே சூப்பரா ஓர்க் அவுட் ஆகிவிட்டதால், சாம்பார் நினைப்பே வருவதில்லை.

'அடடே... சாம்பார் இருக்கே?' என்ற ஞானோதயம் ஏற்பட்டால், எக்ஸ்ட்ரா இட்லி வாங்கி ஜமாய்ச்சுடுங்க!

இட்லியைச் சுற்றி கால் ஸ்பூன் சட்னிகளைத் தெறித்து, ஒப்புக்கு சாம்பார்க் கிண்ணம் வைத்து, இயந்திரத்தனமாக நகரும் சென்னை ஹோட்டல்களிலிருந்து 'முருகன் இட்லி கடை' வித்தியாசப்படுவதே... அருகில் நின்று உபசரிக்கும் மதுரை பாணியில்தான்! முருகன் இட்லி கடை சென்னைக்குப் புதுசு... மதுரையில் மேலமாசி வீதி, தளவாய் தெரு, ரெயில்வே ஜங்ஷன் எனப் பல இடங்களில் கிளை விரித்துள்ளது.

"எங்கப்பா சண்முக சுந்தரம் மதுரையிலே டீ ஸ்டால் வைச்சிருந்தாரு. எங்கம்மா நாயகம் ஒரு படி அரிசி போட்டு, இட்லி போட ஆரம்பிச்சாங்க. அன்னிக்கு ஆரம்பிச்சதுதான் இந்த பிஸினெஸ். அம்மாவோட கை மணம் ரொம்ப வகையா இருந்ததோட, அவங்க வீட்டு ஜனங்களுக்குப் பரிமாறுகிற மாதிரி சட்டினியும் சாம்பாரும் அள்ளி வைச்சு உபசரிப்பாங்க. அதனால சாப்பிட வந்தவங்க மனசும் நிறைஞ்சு போயிடும். அதற்கப்புறம் நாங்க குடியிருந்த வீடே ஹோட்டலா மாறிடுச்சு. கூடப் பிறந்தவங்க எல்லாரும் டாக்டர், இன்ஜினியர்னு ஆயிட்டாங்க. நானும் எம்.எஸ்ஸி பட்டதாரிதான். ஆனா, எனக்கு ஹோட்டல் பிஸினெஸ்லே ஆர்வம் வந்துட்டதனாலே, இப்படி இறங்கிட்டேன்" என்றார் உரிமையாளர் எஸ். மனோகரன்.

"சென்னை மக்கள் எல்லாம் ரொம்ப மாடர்ன். இலையை அழகா தட்டு சைஸுக்கே வெட்டி, சின்னச் சின்ன கிண்ணங்கள்லே, ஸ்பூன் வைச்சு, டீஸன்டா தரணும். தந்தூரி, சைனீஸ்னு தந்தாதான் சாப்பிட வருவாங்க. இட்லி, ஊத்தப்பமெல்லாம் ஓல்டு ஃபேஷன்! அதுவும் இலை விரிச்சு பரிமாறுவது எல்லாம் சரிப்படாது" என்று நிறையப் பேர் வேப்பிலை அடித்தார்களாம். அதனாலேயே ஓட்டலுக்காக





சென்னையில் இடம் பிடிக்க அலைந்த இரண்டு மாதங்களில் கடை கடையாக ஏறி, டிபன் சாப்பிட்டுப் பார்த்தாராம் மனோகரன்.

"உண்மையா சொல்றேன் ஸார்... நான் ஒரு இட்லிப் ப்ரியன். அந்த இரண்டு மாசமும் நல்ல இட்லி சாப்பிட முடியாமல் தவிச்சுப் போயிட்டேன். அரிசியை ரவையா உடைச்சு, உளுந்து மாவில் கலந்து, இன்ஸ்டென்டா இட்லி தயாரிக்கிறாங்க. அதுதான் வாசனையில்லாமல், தட்டையா இருக்கு. சரியா ஊற வைச்சு, பக்குவமா அரைச்சு, மிதமா புளிக்க வைக்கிற மாவுலேதான் இட்லி சுவையா இருக்கும். பஞ்சு பஞ்சா, அழகா உப்பலா வரும்" என்றார் மனேகரன்.

இந்தக் கடை சட்னி வகைகளின் ஸ்பெஷாலிடியே, இருபத்து நான்கு மணி நேரத்துக்குக் கெட்டுப் போகாது என்பது தான். வெளியூருக்குப் போகிறவர்கள்கூட பார்ஸல் வாங்கிச் செல்கிறார்களாம்.

மனோகரனுடன் பேசிக் கொண்டேயிருக்கும்போது ஒரு புகார். "சார்... அரை மணி நேரமா வெயிட் பண்றோம். இன்னும் ஒரு டேபிள்கூட காலி ஆகலை. சாப்பிட்டுட்டு அண்ணா நகர் போகணும்" என்று தவித்தார் அந்தக் குடும்பஸ்தர். அவருக்காக, ஒரு சின்ன ஏற்பாடு செய்து விட்டு வந்தவர், "சின்ன வெங்காய ஊத்தப்பம் தான் இங்கே ஸ்பெஷல் அயிட்டம். ஒரு அங்குலத்துக்கு கனமா ஊத்தி, சின்ன வெங்காயத்தைப் பதிச்சு, பக்குவமா சுட்டுத் தர நேரமாகும். அதை ரசிச்சு சாப்பிட, இன்னும் கொஞ்சம் நேரமாகுது. அதான் டேபிள் எல்லாம் இலேசில் காலியாறது இல்லை." என்று பெருமையுடன் சொன்னார் மனோகர்.

அடி நாக்கு சுண்டுற ருசிக்கு அரை மணி நேரம் காத்திருக்கக் கூடாதா என்ன?

படங்கள் : ஸ்ரீஹரி




**அனுராதா ரமணன் :** கன்னியாகுமரி கடற்கரையை ஒட்டிய பகுதியில் ஏராளமான கடைகள். ஏதாவது வாங்கலாம் என்று மெதுவாக நடந்து வந்தேன். ஒரு கடையில், நிறைய சங்குகள் இருந்தன. கடைக்காரர், சிறு சங்கை எடுத்துக் காட்டி, "இது வலம்புரிச் சங்கு. ரொம்ப விசேஷமானது" என்று ஆரம்பித்து, அதன் அருமை பெருமைகளை மினி லெக்சர் அடித்துவிட்டார். நூறு ரூபாய் என்றார்.

நான் பேரம் பேசினேன். விலை படியவில்லை. நான் புறப்பட்டபோது "மேடம்! நீங்க எழுத்தாளர் அனுராதா ரமணன்தானே!" என்றார்.

"நான் உங்களுடன் கொஞ்ச நேரம் பேச விரும்பினேன். அதனால்தான் நீங்கள் கேட்ட விலைக்குத் தர முடியாது என்று சொல்லி, பேரத்தை முடிக்காமல் நீட்டினேன். இந்தச் சங்கு என் அன்பளிப்பு. எடுத்துக் கொள்ளுங்கள்" என்றார்.


"நான் ஓசியில் வாங்கிக் கொள்ள மாட்டேன்" என்று சொல்லி, நான் பேரம் பேசிய விலையைக் கொடுத்தேன். அவரோ பணம் வாங்கிக் கொள்ள மறுத்து, ஒரு ரூபாய் மட்டும் என் ஆட்டோகிராபுடன் பெற்றுக் கொண்டார்.

வாசமிகு கதம்ப

மாலை தயார்!

சூடிமகிழ நீங்கள்

தயாரா...?



# கல்கி

## தீபாவளி மலர்-2003

விலை ரூ.80/- மட்டுமே

தபால் அல்லது கூரியரில் பெற ரூ.30/- சேர்த்து

110/- ரூபாயாக அனுப்பவும்.

வெளிநாட்டில் பெற US $ 15.95

மானேஜர், கல்கி,

கல்கி பில்டிங்ஸ், 47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,

ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097.



* 'தென்றல்' - உமா

# கவிதை தந்த கதை!


சினி டிரெண்ட் ஜுரமோ, பாக்ஸ் ஆபீஸ் பயமோ இல்லாமல், மக்களுக்கான சினிமாவை முனைப்புடன் முன்னிறுத்தும் தங்கர்பச்சான், தற்போது 'தென்றல்' படத்தை இயக்கிக் கொண்டிருக்கிறார். இந்த முறை இளையராஜாவைத் தவிர்த்துவிட்டு, களமிறங்கி இருக்கும் அவரை வம்புக்கிழுத்தோம்!

**சுற்றுச் சூழல் மாசுபடுவதை எதிர்க்கிறார்கள்! ஆனால் தமிழ் சினிமா மாசுபடுவதைப் பற்றி இங்கே யாரும் கவலைப்படுவதாகத் தெரியவில்லையே?**

யார் கவலைப்பட வேண்டும் என்று நினைக்கிறீர்கள்?

முதலில் மக்கள்! மக்களின் கருத்தைப் பிரதிபலிக்கக் கூடிய தொடர்புச் சாதனங்கள், சமூக அறிஞர்கள், சிந்தனையாளர்கள், முக்கியமாக சினிமாக்காரர்கள்!

மக்கள் இங்கே சுயநலமிகளாக இருக்கிறார்கள். ஒரு தீமையான படத்தை எதிர்த்துப் போராடி நிறுத்தியிருக்கிறார்களா இந்த மக்கள்? தணிக்கைக் குழு அலுவலகம் முன்பு தர்ணா செய்ய வேண்டாம்! இருக்கிற இடத்தில் இருந்து கொண்டு எதிர்ப்புக் குரல் தர முடியாதா? படம் வெளியாகிய முதல் நாளே திருட்டு விசிடியில் பார்க்கத் துடிக்கிறவர்களிடம் நீங்கள் என்ன எதிர் பார்க்க முடியும்? ஆபாசம், வக்கிரம் என்றால் மலிவானது என்பதை அறிந்தும் மந்தை மந்தையாய் மண்டுகிறார்கள். அழகி மாதிரி படங்களைப் போனால் போகிறதென்று பார்க்க வருகிறார்கள். பிறகெப்படி சமூக மாற்றம் வரும்?



* நலங்கிள்ளியாக பார்த்திபன்

**மலினமான சினிமாக்களையே கொடுத்து மக்களை இப்படிப் பழக்கப் படுத்தி வைத்திருப்பது சினிமாக்காரர்கள் தானே?**

உண்மைதான்.

வெற்றி என்பது மக்கள் பணத்தைக் கொள்ளையடிப்பது மட்டுமல்ல. மக்களின் மனங்களைக் கொள்ளையடிக்க வேண்டும். அது தான் வெற்றிப்படம். அதுதான் தரமான படம். ஆனால் இங்கே ரசிகனும் - படைப்பாளனும் ஒன்



• உமா - சுவாதி

ஆனால் தவறு எங்கே நிகழ்ந்தது?

பணம் சம்பாதிக்க ஏராளமான தொழில்கள் இருக்க, பேலன்ஸ் ஷீட்டை கக்கத்தில் இடுக்கிக் கொண்டு இங்கே முதலீடு செய்ய வந்துவிட்ட முதலாளிகள். டாக்டர், என்ஜினியர் ஆவதற்கு இங்கே தகுதிகள் உண்டு. ஆனால் சினிமாவில் ஒரு படைப்பாளியாகத் தகுதிகள் தேவையில்லை. யார் வேண்டுமானாலும் வரலாம். இப்படி வருகிறவர்கள் சினிமா என்பது பொழுதுபோக்கு என்கிறார்கள். இது கையாலாகாதவர்களின் வாதம். இது பொழுது போக்கிற்காகக் கண்டு பிடிக்கப்பட்ட மீடியம் அல்ல. சினிமா கண்டுபிடிப்பதற்கு முன் மக்களுக்குப் பொழுது போகவில்லையா? மக்கள் எதிர்பார்த்து வருவதை இவர்கள் தரவில்லை. நமக்கு ஐந்து முதல்வர்களைத் தந்த சினிமா, எப்படிப் பொழுது போக்காக இருக்க முடியும்? நமது மொழியில், பண்பாட்டில், அரசியலில் மாற்றத்தை உண்டு பண்ணுகிற சினிமாவை எப்படி பொழுது போக்கு என்கிறீர்கள்?

**ஆனால் ஒரு சினிமாவின் தலையெழுத்தை அதன் வெற்றி தீர்மானிப்பதாக ஒரு பாதை போட்டு வைத்திருக்கிறோம். அதை மறந்துவிட்டீர்களா?**



• தங்கர் பச்சான்

நாக இருக்கிறார்கள். ரசிகனுக்கு விழிப்புணர்ச்சி இல்லை. படைப்பாளனுக்குப் பொறுப்புணர்ச்சி இல்லை. இவனது நோக்கம் முழுவதும் மக்களின் பணத்தைப் பிடுங்குவதிலேயே இருக்கிறது.

**தமிழ் சினிமாவுக்குள் புழங்கிக் கொண்டே, சினிமாக்காரர்களை வசை பாடுவது குறித்து உங்களுக்குக் குற்ற உணர்ச்சி இல்லையா?**

எழுத்தாளனாகத்தான் எனது தார்மிக உணர்வுகளை வெளிப்படுத்துகிறேன். ஓர் எழுத்தாளனாகத்தான் எல்லோருக்கும் என்னைப் பிடிக்கிறது. சினிமாக்காரனாக அல்ல!

**சினிமாவுக்கு வெளியே ஒரு பொறுப்பான அரசியல் தலைவராக இருக்கும் கிருஷ்ணசாமி, பொத்தாம் பொதுவாக சினிமாவை எதிர்ப்பது எப்படிச் சரியாகும்?**

கிருஷ்ணசாமியை வெறும் அரசியல் தலைவராக மட்டும் பார்க்கக் கூடாது. கிருஷ்ணசாமியின் எதிர்ப்பு என்பது, ஜாதிய அமைப்பை வெளிப்படையாகவோ, மறைமுகமாகவோ நியாயப்படுத்தும் சினிமாக்கள் மீதான எதிர்ப்பு! ஒரு வேளை சாப்பாட்டுக்காகப் பண்ணை மாடாக உழைத்து, அடிபட்டு, மிதிபட்டு, வாழ்ந்து வரும் மக்களுக்குத் தான் அந்த வலி தெரியும்.

கிருஷ்ணசாமியைக் கண்டிக்கிறவர்கள் ஒரு மணி நேரம் தலித்தாக வாழ முடியுமா?

**புயல் வேகம் போதும்! இனி உங்கள் 'தென்றல்' படம் பற்றிச் சொல்லுங்கள்?**

'அழகி' படத்தைத் தயாரித்த உதய குமாருக்கு, தரமான ரசனை இருந்ததால் அது சாத்தியமானது. இப்போது 'தென்றல்' படத்தைத் தயாரித்துக் கொண்டிருக்கும் ஆஸ்கர் பிலிம்ஸ் ரவிச்சந்திரனுக்கு, தரமான சினிமா மீது நிறைய நம்பிக்கை இருக்கிறது. உண்மையான கற்பு என்பது மனசு சம்பந்தப்பட்டது. ஆனால் அதை உடல் ரீதியானதாக போதித்து வந்திருக்கிறோம். இந்தப் பழைய மதிப்பீட்டை 'தென்றல்' உடைக்கும். பெண்கள் பற்றிய பழைய பார்வையை மாற்றும். நிறையவே அதிர்ச்சி அலைகளைப் பரப்பும். 'நலங்கிள்ளி' என்ற உணர்ச்சிபூர்வமான எழுத்தாளன்தான் படத்தில் பிரதான பாத்திரம். 'நலங்கிள்ளி' சமூகம் போட்ட பாதையில் நடப்பவன் அல்ல. முற்போக்குப் பாதை அமைப்பவன். நலங்கிள்ளியாக பார்த்திபன் நடிக்கிறார்.

**இது ஏதோ தங்கர்பச்சான் வாழ்க்கையை ஓரளவு பிரதிபலிக்கிற நிஜக்கதை போல தெரிகிறதே?**

ஒரு வகையில் எனக்கு நேர்ந்த அனுபவங்கள்தான். திரைப் படக் கல்லூரியில் படிக்கும்போது, 'அம்மாவின் கவிதை' என்றொரு கவிதை எழுதினேன். அது அப்போது சிற்றிதழ் ஒன்றில் வெளியானது. அதன் திரைவடிவம்தான் 'தென்றல்'. ஒரு நல்ல கதை தனக்கான திரைக்கதையை நிர்ணயித்துக் கொள்ளும். இதில் அதையும் தாண்டி, திரைக்கதையில் புதிய உத்திகளைத் தனக்காகக் கண்டுபிடித்துக் கொண்டிருக்கும் உணர்ச்சி பூர்வ கதை.

**இந்த முறை இளையராஜாவின் இசை இல்லையே ஏன்?**

அதற்கு நான் காரணமல்ல! அதை அவரிடமே கேளுங்கள். இசையை வெறும் பொழுதுபோக்காகப் பார்ப்பதை விட, கதை சொல்லும் மீடியமாகப் பயன்படுத்த விரும்புகிறேன். இன்றைய சூழ்நிலையில் இது போன்ற இசையைத் தரும் ஒரு சிலரில் வித்யாசாகர் முக்கியமானவர். படத்தில் மொத்தம் எட்டுப் பாடல்கள். ஏழு கவிஞர்கள். எல்லாம் கதை சொல்லும் பாடல்கள்.

**- ஆர்.சி. ஜெயந்தன்**

படங்கள் : **டி.ஜி. சண்முகம்**

''இன்னிக்கு என்ன தேள் கடிச்சவங்களா டாக்டர் கிட்ட வர்றாங்க?''

''பணம் பல வழிகளில் கொட்டும்னு டாக்டரோட ராசி பலன்ல போட்டிருக்காம்!''

- அம்பை தேவா





# செவ்வாய்க்கிழமை திருடர்கள்!

வீட்டுக் காம்பவுண்டுக்கு உள்ளே தமது பஜாஜ் காலிபர் (TN-49 D5470) வண்டியை ஏற்றி, பூட்டி, மறக்காமல் காம்பவுண்டு, கதவையும் பூட்டி வைக்கிறார் ப. திருமுருகன். விடிந்து பார்த்தால், வண்டி மாயம்!

மணப்பாறை போலீஸ் ஸ்டேஷனுக்குப் போய், கர்ம சிரத்தையாகப் புகார் மனு எழுதிக் கொடுக்கிறார். அங்கே அதைக் கையால் வாங்கக் கூட மறுத்து விடுவதோடு, கன்னாபின்னா வார்த்தைகளால் அர்ச்சனையும் நடக்கிறது!

திருமுருகன் சும்மா விடுவதாக இல்லை! மணப்பாறை கோர்ட்டில் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்கிறார். ''மனுதாரரின் புகாரை ஏற்றுக் கொண்டு, பதிவு செஞ்சு, சட்டுபுட்டுன்னு நடவடிக்கை எடுங்கப்பா'' என்று நீதிமன்றமும் உத்தரவிடுகிறது. அதற்குப் பின் மூன்று வாரங்களாகியும், புகார் விஷயம் கப்... சிப்!

இது போல கடந்த ஓராண்டில் மட்டும், இரு சக்கர வாகனங்களைப் பறிகொடுத்துவிட்டு, திரு திரு என விழித்துக் கொண்டு நிற்கும் மணப்பாறை வாசிகள் நிறையப் பேர் என்கிறார்கள்.

நகரத்துக் கதை இப்படி என்றால், மாட்டுச் சந்தைக்குள் இன்னும் ஐயகோ! செவ்வாய்க்கிழமை பொழுது சாயும் நேரத்தில் சந்தைத் திடலில் வந்து தங்கும் வியாபாரிகளிடத்தில், அவர்கள் அசந்த நேரமாகப் பார்த்து பணம், பொருள் என களவாடப்படுவதால், சந்தை வியாபாரிகள் நொந்து போயிருக்கிறார்கள்.

'செவ்வாய்க்கிழமைத் திருடர்கள்' என்று அழைக்கப்படும் இவர்கள் ஒரு குழுவாகச் செயல்படுகிறார்கள். இக் குழுவில் பதினைந்து வயதிலிருந்து இருபது வயது வரை உள்ள இளைஞர்களே ஈடுபடுகிறார்கள் என்று ஊர் முழுக்கப் பேசிக் கொண்டாலும், இன்னும் ஒரு பொடியனைக் கூடப் பிடித்தபாடில்லை! காரணம்... மணப்பாறை போலீஸின் மர்ம மௌனம்!

"இது மாதிரியான கேஸ்களை எல்லாம் ஏற்று, பதிவு செய்து கொண்டால், தீர்வு காணப்படாத புகார் மனுக்கள் பட்டியல் நீண்டுக்கிட்டே போகும். அப்புறம் பேஜாரா யிடுமேன்னு தான் பெரும்பாலான புகார் மனுக்களை காவல் நிலையம் கண்டுக்கறதே யில்லை'' என்கிறார் மணப்பாறை உபயோகிப்பாளர் குழுத் தலைவர் என். முத்துகிருஷ்ணன்.

"என்ன ஸார்... மணப்பாறையிலே செவ்வாய்க்கிழமைத் திருடங்க தொல்லை தாங்க முடியலையாமே! கம்ப்ளைண்ட் கொடுத்தாக்கூட வாங்க மறுக்கறீங்களாமே..." என்றெல்லாம் கேட்டு விடத் தீர்மானித்து, மணப்பாறை காவல் நிலையத்துக்குப் போனால், ஆய்வாளர் இல்லை. ஒரு கிராமத்துக்கு கேம்ப் போயிருப்பதாக நிலைய எழுத்தர் தெரிவித்தார்.

எல்லா விவரத்தையும் முழுமையாகக் குறிப்பிட்டு, அதற்கான காவல்துறை நடவடிக்கை சார்ந்த விளக்கம் வேண்டும் எனக் குறிப்பிட்டு, நிலைய எழுத்தரிடம் கொடுத்து விட்டு வந்துள்ளோம்.

அதற்கான பதில் இன்னும் வரை வந்து சேரவில்லை!


கட்டுரை, படங்கள்:
**ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு**



• திருமுருகன்



• முத்துக் கிருஷ்ணன்



## அம்மாவின் அதிரடி ஷாப்பிங்!

நலத்திட்டங்களை அறிவிக்க மாவட்டம் தோறும் பயணம், 'மாண்புமிகு'க்களை மாற்ற கவர்னர் மாளிகை விஜயம், மெரீனாவை அழகுபடுத்த அக்கம்பக்கத்தில் இடிப்பது, தலைமைச் செயலகம் கட்ட புதுசு புதுசாக லொகேஷன்களைத் தேர்ந்தெடுப்பது, திடீர், திடீரென தில்லி, ஹைதராபாத் விசிட் என ஒரு வட்டத்திற்குள்ளேயே சுற்றி வருவது 'அம்மா'வுக்கே அலுத்து விட்டதால், வித்தியாசமாக ஒரு ஷாப்பிங் செய்தால் நன்றாக இருக்குமே என நினைத்தார்.

நம்பிக்கையான ஒரு 'மாண்புமிகு'வை அழைத்து தம் எண்ணத்தைச் சொல்ல, 'ஓ' போட்டு 'பன்னீர்' தெளித்து உற்சாக வரவேற்பளித்தார் அவர், இரு கரங்களையும் தலைக்கு மேல் உயர்த்திக் கூப்பியபடி!

"ஹெலிகாப்டரிலேயே போய் விடலாமா?" அம்மா வினவ,

"டெலிஷாப்பிங் என கேள்விப்பட்டிருக்கேன். ஹெலிஷாப்பிங் எல்லாம் இன்னமும் வரவில்லையே, தாயே! எனவே இதயதெய்வம் காரிலேயே புறப்பட்டு அருள வேண்டும்" என கெஞ்சலாகக் கேட்டார் மாண்புமிகு.

"ஹெலிஷாப்பிங்?! இதுவும் நல்ல யோசனையாகத் தெரிகிறதே! எனக்கு வோட்டுப் போட்ட தெய்வங்களான ஏழை எளிய தமிழ் மக்கள் பயனடைய இப்படி ஒரு திட்டம் தீட்ட உடனடியாக உத்தரவிடுகிறேன்."

மாண்புமிகுக்கள் புடை சூழ 'அம்மா' ஷாப்பிங் சென்றபோது, வழி நெடுக பேனர்கள், போஸ்டர்கள்.

'கடை வீதிக்கு பவனி வரும் காவிரித் தாயே வருக!'

'ஷாப்பிங்கிற்குப் புறப்பட்டு விட்ட டாக்டர் அம்மாவே வருக!' அதில் ஒரு போஸ்டர் 'வெல்கம் டு மம்மி, தி ஹார்ட் ஸ்பெஷலிஸ்ட்' என, அதைப் பார்த்து சிரிப்பும், கோபமும் ஒரு சேர, ''வாட் நான்சென்ஸ் இஸ் திஸ்?'' என அம்மா வெடிக்க,

"அது வந்து... ஏற்கனவே இதய தெய்வமாக இருந்த நீங்க எக்கச்சக்கமா டாக்டர் பட்டங்களையும் வாங்கிட்டீங்க, இல்லையா? அதைத்தான் ஆர்வக்கோளாறினால் ஒரு தொண்டர் அரைகுறை இங்கிலீஷில் இப்படி எழுதி வெச்சிருக்கார்" என பயத்துடன் விளக்கினார் ஒரு மாண்புமிகு.

ஷாப்பிங் போகும் வழியில்






ஏராளமான தாய், தந்தைக் குலங்கள், தத்தம் கைகளில் வைத்திருந்த குழந்தைகளை நீட்டி, பெயர் சூட்டச் சொல்ல, 'கிரெடிட் கார்டு', 'டெபிட் கார்டு', 'டிஸ்கவுண்ட்', 'ஆடிக் கழிவு' என அதிரடியான பெயர்கள் சூட்டப்பட்டன.

பனகல் பார்க் அருகே ஒரு துணிக் கடையைக் கண்டதும், "நிறுத்து காரை" என ஆணையிட்டார் அம்மா.

காரிலிருந்து இறங்கியதும், கடை வாசலில் மக்கள் கவனத்தைக் கவருவதற்காக யானை வேஷம் போட்டு ஆடிக் கொண்டிருந்த ஆசாமி, அம்மாவுக்கு பவ்யமாக சலாம் போட்டான்.

# இவர்கள் ஷாப்பிங் செய்தால்...?

## நேரடி உடான்ஸ் ரிப்போர்ட்



"யானையைக் கொடுமைப் படுத்தக் கூடாது என ஆணை பிறப்பித்துள்ளேனே! இதைக் கொண்டு போய் காட்டிலேயே விட்டு விடுங்கள்" என்றார் அம்மா சீற்றமாக.

"அம்மா! இது நிஜ யானை அல்ல! மக்களின் கவனத்தை இந்தக் கடையின் பக்கம் ஈர்க்க ஒரு மனிதன் யானை வேஷம் போட்டுள்ளான்" என விளக்கினார் ஒரு மாண்புமிகு.

"அப்போதுகூட எதற்கு யானை வேஷம்? வேறு மிருகங்களே கிடைக்கவில்லையா?"

'புலி வேஷம் போட்டால் பொடாவில் உள்ளே தள்ளிடுவீங்களே!' என தைரியமாக மனத்திற்குள் நினைத்துக் கொண்டார் ஒரு மாண்புமிகு.

விர்ரென கடைக்குள் நுழைந்த அம்மா, "பச்சைக் கலரில் ஒன்பது புடைவைகள் கொடுங்க" என ஆர்டர் செய்ய, கடை முதலாளி தலையைச் சொறிந்தபடி நெளிந்தார்.

பிறகு பக்குவமாக, பக்கத்திலிருந்த ஒரு மாண்புமிகுவிடம் "பச்சைக் கலர்ல ஒரு புடைவைகூடக் கிடையாதுங்க எங்களிடம். அதுவும் ஒன்பது வேண்டுமென்றால் நான் எங்கே போறது? வேணுமானால் மஞ்சள் கலரில்...'' என திக்கித் திணறி முன் மொழிய, அவர் அதை அப்படியே அம்மாவிடம் வழி மொழிய,

ஆத்திரம் அடைந்த அம்மா கர்ஜனை செய்தார். "உடனே நான் கவர்னரைச் சந்தித்தாக வேண்டும். இந்தக் கடை முதலாளியைப் பதவி நீக்கம் செய்துவிட்டு, பக்கத்துக் கடைக்காரரையே இதற்கும் முதலாளியாக நியமிக்கச் சொல்லி கவர்னரிட்டே சிபாரிசு செய்யப் போறேன்!"

"அம்மா! இவர் அமைச்சர் இல்லை! தம் சொந்த முதலீட்டில் கடை வைத்திருக்கும் தனி நபர்" என சற்றுத் தைரியமாக ஒரு மாண்புமிகு கருத்துக் கூற,

"அப்படியானால் இவரை எஸ்மாவில் கைது செய்ய உத்தரவிடுகிறேன்."

"எஸ்மா சட்டம் இவர் மீது பாயலாமா, கூடாதான்னு தெரியலையே?" என கவலையுடன் பதில் வர,

"சரி! மெரீனாவை அழகுபடுத்த இந்தக் கடையை இடித்து விடலாம்."

"மெரீனா சேப்பாக்கத்தில் இருக்கிறது. இந்தக் கடை தி.நகரில் இருக்கிறதே?" என பயபக்தியுடன் பதில் வர...

"சரி! கடைசியாக ஒன்று சொல்கிறேன். இந்தக் கடையின்

**பாஸு**

கட்டடம் ரொம்பப் பழையதாகிவிட்டதால் இதை இடித்து விட்டு புதிய கடையை மெரீனா பீச் அருகே கட்டச் சொல்லுங்கள். பிறகு மெரீனாவை அழகு படுத்த வேண்டுமென்பதற்காக, அதையும் இடித்துத் தள்ளுங்கள். இதை வருகிற மாதம் 31-ஆம் தேதிக்குள் நிறைவேற்றா விட்டால் நான் கவர்னரைச் சந்திக்க வேண்டி வரும்!''

''எதற்காக தாயே?''

''உம்முடைய பெயருக்கு 'முன்னாள்' என்ற அடைமொழியை சேர்க்கத்தான்...!''

விருட்டென காரில் ஏறி தோட்டத்திற்கு விரைந்தார் அம்மா.

## கலைஞரின் கடுப்பான அனுபவம்!

கலைஞர் தமது கட்சியினர் புடை சூழ கடைவீதிக்குப் புறப்பட்டார் ஷாப்பிங் செய்ய. எல்லாக் கடைகளிலும் பூட்டு தொங்குவதைக் கண்டு கழகத்தினர் கலக்கம் அடைந்தாலும், கலைஞர் மட்டும் தளரவில்லை. வார்த்தை ஜாலத்தில் வர்ணனை செய்யத் துவங்கினார்.

''மரமண்டைத் தமிழனும் மாறத்
துவங்கி விட்டானோ,
மறத்தமிழனாக?
அமைதிப் புரட்சி ஏற்படும் என்றேன்.
அதுதான்;
அரங்கேறுகிறதோ 'பந்த்' என்ற
வடிவில்?
இந்த பந்த் எந்த அரசுக்கு எதிராக?
மாநில அரசின் மக்கள் விரோத
செயல்பாடுகளை எதிர்த்தா?
அல்லது மத்திய அரசின் மைனாரிட்டிகளுக்கு எதிரான போக்கைக் கண்டித்தா?''

என அடுக்கிக் கொண்டே போன அவரிடம் கிசுகிசுத்த குரலில் சொன்னார் ஆற்காட்டார், ''தலைவரே! நீங்கள் ஷாப்பிங் என்ற போர்வையில் தேர்தல் நிதி திரட்டத்தான் வந்துள்ளீர்கள், என நினைத்துதான் இந்தக் கடைக்காரர்கள் கடையைப் பூட்டிக் கொண்டு போய் விட்டார்களாம்!''

சற்றே அப்செட் ஆனாலும் தொடர்ந்து ஏசத் துவங்கினார்... ஸாரி, பேசத் துவங்கினார் கலைஞர்.

''மழைநீர் சேகரிப்புத் தொட்டி கட்ட
மீட்டர் வட்டிக்காரனிடம் கடன்
வாங்கிய தமிழா!
செட்-டாப் பாக்ஸுக்காக
சேட்டுக் கடையில் அடகு வைத்த
தமிழா!
நீ கழகத்திற்காக சிறிது காசு ஈயக்
கூடாதா?
என்னிடம் கருணை உள்ளது.
நிதி இல்லை.
அதைத்தான் கேட்டேன். உன்னிடம்
நிதி இருந்தும் மதி இல்லை.
அதனால்தான் கெட்டாய்.
பணப் புழக்கம் வருமெனச் சொல்லி
மாற்றி வாக்களித்து
மனப்புழுக்கத்தில் மாட்டிக் கொண்ட
தமிழா!
உன்னை விடுவிக்கத்தான்
கோருகிறேன் நிதி!
நிதி மிகுந்தவர் பொற்கிழி தாரீர்!
நிதி குறைந்தவர் கிரெடிட் கார்டு தாரீர்!''
என கூறி முடித்தார்.

ஷாப்பிங் செய்ய வந்த கலைஞர் வெறும் கையுடன் திரும்புவது கண்டு வேதனையடைந்த ஒரு பத்திரிகை நிருபர், மூடியிருந்த ஒரு புக் 'ஸ்டால்' அருகே அவரை நிற்கச் சொல்லி ஒரு ஃபோட்டோ எடுக்க முற்பட்டார்.

கலைஞர் தமக்கே உரிய நகைச்சுவை உணர்வுடன் ''நான் ஸ்டாலின் அருகே இருப்பது போல பத்திரிகைகளில் படம் வந்தால், மீடியா அதைத் திரித்து 'கலைஞர் ஸ்டாலினுக்கு நெருக்கமாகவும், அழகிரிக்கு தொலைவாகவும் இருக்கிறார்'னு நியூஸ் போட்டுடுவாங்க. அதனால் இந்த ஃபோட்டோ வேண்டாமே!'' என்றார்.

## டாக்டர் அய்யா செய்த ஷாப்பிங்!

டாக்டர் ராமதாஸ் ஷாப்பிங் செய்ய வந்தபோது பஜாரே ஒருவித



ஓவியர் அரஸுக்கு திடீர் ஷாப்பிங் மூடு வந்துவிட்டதால் டாக்டர் ராமதாஸ், சுப்ரமணியம் சுவாமி கார்ட்டூன்களைத் தராமல் பர்சேஸுக்குக் கிளம்பி விட்டார்!



பரபரப்புடனும், படபடப்புடனும் அவரது ஒவ்வொரு நடவடிக்கையையும் அங்குலம் அங்குலமாக நோட்டமிட்டது.

இடது புறமுள்ள ஷாப்பிங் காம்ப்ளெக்ஸில் நுழைவாரா, அல்லது வலது புறமுள்ள ஷாப்பிங் மாலில் நுழைவாரா என்பது யாருக்குமே தெரியவில்லை. (டாக்டருக்கே அது தெரியுமா, தெரியாதா என்பது சில பார்வையாளர்களின் கருத்து.)

வேறொரு கடைக்குள் நுழைந்து பார்வையிட்ட டாக்டர் அய்யா, கடை பிரும்மாண்டமாக இருப்பதால் ஏகப்பட்ட குழப்பங்கள் வருவதாகக் கூறி, கடையை இரண்டாகப் பிரிக்க வேண்டுமென கடை முதலாளியிடம் கருத்துத் தெரிவித்தார். பாபா பட பாடல்கள் கேசட்டுகள் விற்றுப் போகாமல் அடுக்கடுக்காக இருப்பது கண்டு மனதிற்குள் மகிழ்ந்தவர், 'சந்தன மரம், யானைத் தந்தங்களால் செய்யப் படும் கைவினைப் பொருட்கள் நன்றாக விற்பனையாகிறதா' என பரிவுடன் கேட்டார் கடைக்காரரை!

## சுப்பிரமணியம் சுவாமி சூப்பர் மார்க்கெட் செல்கிறார்!

சுப்பிரமணியம் சுவாமி என்றாலே சுவாரஸ்யம்தான். சுவையான திடுக்கிடும் செய்திகள்தான். போன வாரம் பஜார் வீதியில் சுவாமி நுழைந்ததும் பரபரப்பு தொற்றிக் கொண்டது. சிறியதாக கடை வைத்து பிட்ஸா விற்றுக் கொண்டிருந்த பாட்டி ஒருத்தி சுவாமியிடம் முறையிட்டாள், 'தன்னுடைய கடையை மூடி சீல் வைத்து விட்டார்கள்' என.

தடாலடியாக சீலை உடைத்து கடையைத் திறந்து சுவாமியே பிட்ஸாவும் தயாரித்துக் கொடுத்தார். பிறகு புராதனப் பொருட்கள் விற்பனை செய்யப்படும் ஒரு கடைக்குள் நுழைந்து, இந்தியாவிலிருந்து இத்தாலிக்குக் கடத்தப்பட்டு மீண்டும் அங்கிருந்து இங்கு இறக்குமதி செய்யப் பட்ட பொருள்கள் ஏதேனும் இருக்கிறதா, என தீவிரமாக ஆராய்ந்தார்.

அவரை ஏளனமாகப் பார்த்த கடையில் வேலை செய்யும் பையனை நோக்கி, ''உனக்கும் சதாம் உசேனுக்கும் உள்ள தொடர்பை வருகிற மார்ச் 32 ஆம் தேதிக்குள் நிரூபிக்கிறேனா, இல்லையா பாரு!'' என சவால் விட்டார்.

## கடைத் தெருவில் டாக்டர் கிருஷ்ணசாமி!

டாக்டர் கிருஷ்ணசாமி இரும்பு, பித்தளை பொருள் விற்கும் கடைக்குள் நுழைவது தெரிந்ததுமே, கடைக்காரர் பையனிடம் சொல்லி வீச்சரிவாள், கத்தி, கபடா எல்லாவற்றையும் உள்ளே ஒளித்து வைக்கச் சொன்னார்.

''ஏழைகளின் வாழ்வில் ஒளியேற்றப் போகிறேன். நிறைய விளக்குகளைத் தாருங்கள்'' என்றார் டாக்டர்.

விளக்குகளைப் பார்த்த தொண்டர் ஒருவர், ''இதெல்லாம் பட்டிக்காட்டு விளக்கு சார். பக்கத்துக் கடையில சாண்டிலியர் விற்கறாங்க போவோம்..!'' என்றதும், அதை அரை குறையாகக் காதில் வாங்கிக் கொண்ட டாக்டர் கிருஷ்ணசாமி, ''என்னது சண்டியரா? இதோ ஆரம்பமாகி விட்டது போராட்டம்'' எனப் பாய்ந்தார் ஆவேசமாக.



(தேரடி வீதியில்
தேவதை வந்தால்
திருவிழான்னு
தெரிஞ்சுக்கோ...
மெட்டில் பாடவும்)

# ஷாப்பிங் பண்ணத் தெரிஞ்சுக்கோ!

தேரடி வீதியில் தேவதை வந்தா, ஷாப்பிங் ஸ்பெஷல் தெரிஞ்சுக்கோ
கடைவீதிக்கு தாதா வந்தால் மாமூல் கலெக்ஷன் தெரிஞ்சுக்கோ
ஐஸ்கிரீம் வாங்கி கிரெடிட் கார்ட் தந்தா பந்தா பொண்ணு
தெரிஞ்சுக்கோ

இன்னமும் சொல்றேன் தெரிஞ்சுக்கோ,
தட்சிணை கொடுத்து தெரிஞ்சுக்கோ
வாடா மச்சான், வயசுக்கு வந்துட்ட
ஆசை முளைச்சு ஷாப்பிங்கு வந்துட்ட!
டிஸ்கவுண்டில் வாங்கின புடைவையை நனைச்சா, கர்ச்சீஃப் ஆயிடும்
தெரிஞ்சுக்கோ
ஈ ஓட்டும் கடையில் பேய்க் கூட்டம் வந்தால் ஆடிக் கழிவுன்னு தெரிஞ்சுக்கோ
காசில்லாதவன் கடைத் தெரு வந்தால் சைட் அடிக்கன்னு தெரிஞ்சுக்கோ
(இன்னமும் சொல்றேன்...)
ரெண்டே நிமிஷத்தில் புடைவை எடுத்தால் மாமியாருக்குன்னு
தெரிஞ்சுக்கோ
எக்ஸிபிஷனில் ரேடியோ வாங்கினா எக்மோர் ஸ்டேஷன் கேட்கும்
தெரிஞ்சுக்கோ
'பந்த்' அன்னிக்கு ஷாப்பிங் போனா கஞ்சப் பயலுன்னு
தெரிஞ்சுக்கோ
(இன்னமும் சொல்றேன்...)
வாசல் வண்டியிலே வாழைப்பழம் வாங்கினா அதுவும்
ஷாப்பிங் புரிஞ்சுக்கோ
சீப்புக்கு விலை பேசி 'சீப்பா' வாங்கினா
சாதனைன்னு சொல்லிக்கோ
அப்பவும் அந்த வியாபாரிதான் பேரத்தில்
ஜெயிச்சார் புரிஞ்சுக்கோ...
(இன்னமும் சொல்றேன்...)



Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / PMG (CCR) 572 / 03 - 05*
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 358 * Registered as a Newspaper in Srilanka
Supplement to the Kalki issue Dated 19.10.2003